
தரம்

# 13

# கிறிஸ்தவ நாகரிகம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**தேசிய கல்வி நிறுவகம்**

மஹரகம, ஸ்ரீ லங்கா

**Web|** www.nie.lk **Email|** info@nie.lk

# கிறிஸ்தவ நாகரிகம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 13

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)


சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

**அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

கிறிஸ்தவ நாகரிகம்

தரம் 13

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2018

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு எஸ் & எஸ் பிரின்டஸ் தனியார் நிறுவனம்
இல: 49, ஜயந்த வீரசேகர மாவத்தை,
கொழும்பு 10.




# கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

இலங்கை மாணவர்களுக்குத் தரமானதொரு கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் எனும் இலக்கைக் கொண்ட கல்வி அமைச்சின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு மகத்தானதாகும். துரிதமாக மாற்றமுறும் ஒரு சமூகத்தில் நவீன மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியரின் பொறுப்பு மகத்தானதாகும்.

காலத்தின் தேவைகருதி இற்றைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அமுல்படுத்துவதில் ஆசிரியருக்குக் கைகொடுக்கும் ஆசிரியர் வழிகாட்டியானது கல்வியில் மிக முக்கியமானதொரு சாதனமாகும். உலகக் கல்வி நோக்கங்களை நிறைவுசெய்யும் நோக்குடன் அரசு கொண்டுசெல்லும் செயலொழுங்குகள் வெற்றியளிப்பது வகுப்பறைக்குள் ஏற்படுகின்ற விழிப்புணர்ச்சி மூலமேயாகும். இதற்காக ஆசிரியரை பலப்படுத்துவதற்கு கல்வி அமைச்சானது தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அறிவு மேலோங்கியுள்ள ஒரு சமூகத்தில், புதிய கல்வி ஆய்வுகளுக்குத் தூண்டுதல் வழங்கி, பாரம்பரிய அறிவு ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சரியான சமநிலை ஆளுமையுடன்கூடிய எதிர்கால சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் இலக்கை நோக்கிப் பயணிக்கும் ஆசிரியர்களுக்கு சிரம் பணிகிறேன். உலகின் ஏனைய பிரபல்யமிக்க நாடுகளுடன் போட்டியிடக்கூடிய மாணவர்களுக்கு, எமது தாய்நாட்டைச் சிறந்ததொரு களமாக்குவதில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாசிரிய வழிகாட்டியை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வளவாளர்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## முன்னுரை

சமுதாய முன்னேற்றத்துக்காகப் பெரும் சேவையாற்றுவோரில் ஆசிரியர்களே முன்னிலை வகிக்கின்றனர். சுயமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே.

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கிணங்க உயர்தரத்திலான கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இவ்வாசிரியர் வழிகாட்டியை அச்சிட்டு விநியோகிப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. தேசிய கல்வி நிறுவகம்மூலம் ஆக்கப்பட்டுள்ள இவ்வாசிரியர் வழிகாட்டியானது, மாணவர்களுக்குச் சிறந்ததொரு கற்றல் சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை ஆசிரியர்களாகிய உங்களுக்குப் பெற்றுத் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இம்முயற்சி, ஒரு சிறந்த பெறுபேற்றைத் தருவது இவ்வாசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திப் பெறும் அனுபவங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியின் மூலமேயாகும். இந்நற்செயலுக்காக அர்ப்பணிக்கக் கூடிய உங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

டபிள்யூ.டீ.பத்மினி நாளிகா
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல.

2018.03.28

## பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி மாபுல்கொட சுமனரதன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனை** : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர்** : அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.
அருட்பணி. N. காமினி பெரேரா இ.ச.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு** :

- கலாநிதி அருட்பணி. ஜெராட் டீ. ரொசய்ரோ அ.ம.தி.
  விரிவுரையாளர், அக்குவினாஸ் கல்வியல் கல்லூரி.
- அருட்பணி. எ.எ. நவரட்ணம், முதுதத்துவமாணி,
  கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை, மட்டக்களப்பு
- அருட்பணி. றமேஸ் கிறிஸ்டி, கலைமாணி,
  தொடர்பகம், யாழ்ப்பாணம்.
- திருமதி. அன்ரன் றெஜினோல்ட் மேரி றோசாறி பிகிராடோ,
  கல்வி முதுமாணி,
  பிரதி அதிபர், புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்,
  வங்காலை.
- திருமதி. ஐறின் நேவிஸ் யோசப் சிரிதரன் குரூஸ்,
  பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
  புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை.
- திருமதி. சுனீதா வெனாசியஸ்,
  பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
  புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம்.
- திரு. T.I. ரங்கநாயகம்,
  பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
  புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை, கொழும்பு -03
- திருமதி. சுரேந்தினி மணிவண்ணன்,
  பயிற்றப்பட்ட ஆசிரியை,
  புனித சூசையப்பர் தேசிய கல்லூரி,
  திருகோணமலை.
- செல்வி. பிரான்சிஸ்கா ராஜயோகினி,
  முதுமாணி,
  புனித ஜோசப் பெண்கள் பாடசாலை, கொழும்பு 14.
- திரு. பிரசாத் சமரதுங்க,
  முதுமாணி,
  பிரதி அதிபர், புனித ஜோசப் ஆண்கள் பாடசாலை,
  கொழும்பு -14.
- திருமதி. எஸ்தர் பத்மினி பெரேரா,
  முதுமாணி,
  ஆசிரிய ஆலோசகர், களனி கல்வி வலயம்.

## ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உப தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அதிவண. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர், கத்தோலிக்க பாடசாலைகள்.
- பேராசிரியர் ஞானமுத்து விக்றர் பிலேந்திரன்
  தலைவர்,
  மேற்கத்தேய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ, இஸ்லாம் கலாசார பீடம்,
  யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
- பேராசிரியர் திரு. ஷேலி விஜேசிங்க
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்
- கலாநிதி அருட்பணி. ஜெயலத் பலகல்ல O.P.
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்
- அருட்பணி. கிறிஸ்தோபர் பால்ராஜ் முதுமாணி,
  அதிபர், பரி. தோமையார் பாடசாலை, பண்டாரவளை
- அருட்பணி. எ.எ. நவரட்ணம், முதுதத்துவமாணி,
  கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை, மட்டக்ளப்பு
- அருட்பணி. பியல் ஜானக பர்னாந்து
  தேசிய பணிப்பாளர், திருவிவிலிய, மறைக்கல்வி, கல்வி ஆணைக்குழு
- அருட்பணி. கிறெகறி எல். பர்னாந்து O.S.B.
  உதவிக் கல்விப் பணிப்பாளர்,
  சமயப் பிரிவு – கல்வி அமைச்சு.

**அலுவலக உதவி** திரு. டயஸ் அமரசிங்க.
திருமதி. மங்கலிக்கா விஜேரத்ன.

**கணினி அமைப்பு** செல்வி. தயானா மோசேஸ், தேசிய மறைகல்வி நடுநிலையம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | iii |
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | vi |
| கலைத்திட்டக் குழு | vii - viii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | x |
| தேசிய இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | xi - xii |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xiii |
| பாட அறிமுகம் | xiv |
| பாடத்திட்டம் | xv - xxiii |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | 1 - 157 |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாடப் பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரித்துக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினைத் தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும், பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும், பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளைப் பிழையின்றிப் பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாகப் பெற்றோர்களுக்கும், முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை - கத்தோலிக்க திருமறை**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏறபடுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வார்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனைப் படைத்தவரை அறிந்து கொள்வார்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வார்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர்வார்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வார்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வார்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பார்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பைப் பரப்புவார்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவார்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவார்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவார்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வார்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவார்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வார்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வார்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வார்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வார்.

# பாட அறிமுகம்

கிறிஸ்தவ நாகரிகம், எனும் இக்கற்கைநெறி கிறிஸ்தவ கலாசாரம், கிறிஸ்தவ பண்பாடு அதன் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. தொன்மை நாகரிகங்களைத் தோற்றுவாயாகக் கொண்ட யூத நாகரிகம், இறைநம்பிக்கையை ஆணிவேராக் கொண்டு, காலப்போக்கில் மேற்கத்தேய நாகரிகங்களின் தாக்கங்களுடன், தனித்துவமான பண்புகளுடன் வளர்ந்துள்ளது. இந்நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகத்திற்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், படிப்பினைகளும், அடித்தளமாகின்றன. இவ்வடித்தளத்தில் அவரது மரணமும் உயிர்ப்பும் பற்றிய திருத்தூதர்களின் விசுவாச சிந்தனையும், படிப்பினைகளும், வாழ்க்கை முறையும், அரண்களாகின்றன.

வரலாற்றின் பாதையில் கிறிஸ்தவம் கிரேக்க- உரோமை ஆட்சி எல்லைக்குள் பரவி வளர்ந்தபோது அக்கலாசாரங்களில் வேரூன்றி, அக்கலாச்சாரப் பண்புகள் பலதைத் தழுவியமைத்து வளர்ந்தது. மேலும், கிறிஸ்தவ கோட்பாடுகளில் தோன்றிய சிந்தனைகளாலும், சமயச்சீர்திருத்த சிந்தனைகளாலும் பன்மைத்தன்மையுடன் வளர்ந்துள்ளது. மேலும், மறுமலர்ச்சிக் கால, நவீனத்துவ சிந்தனைத் தாக்கங்களுடன் கிறிஸ்தவக் கலை, சிற்பம், ஓவியம், இலக்கியங்கள் எனப் பல கலாச்சார வளங்களை உலகிற்கு அளித்துள்ளது. கல்வி, மானிட சமூக நலன், சமூக ஒன்றிப்பு, சமூக ஒப்புரவு, அமைதிக்கான பங்களிப்பைச் செய்வதோடு, பல்சமயச் சூழமைவுகளில் இணக்கத்துடனும், இசைவுடனும் செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய பரந்த தன்மைகொண்ட கிறிஸ்தவ நாகரிகத்தைக் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள் இலகுவாகக் கற்று, அறிந்து, கற்றலின் பேற்றை அடையும் வழியில், பத்துத் தேர்ச்சி மட்டங்களைக் கொண்ட பாடத்திட்டமாக அமைத்துள்ளோம். நாகரித்தினதும், பண்பாட்டினதும் தன்மை, கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையான நாகரிகங்கள், இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கையும், படிப்பினைகளும், திருத்தூதர்களின் படிப்பினைகள், தொடக்ககால கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை என்பன முதல் ஐந்து தேர்ச்சிகளில் காணப்படுகின்றன. இவற்றை 12ம் தரத்தில் கற்றுக் கொள்வோம்.

ஏனைய தேர்ச்சிகள் ஐந்தும் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த கீழைத்தேய, மேலைத்தேய துறவுச்சபைகள், கிறிஸ்தவ கோட்பாட்டுச் சிந்தனையாளர்கள், மத்தியகாலத்தில் கிறிஸ்தவம் பெற்ற இருண்டகால அனுபவங்கள், கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள், கிறிஸ்தவ கல்வி, கலை, என்பவற்றுக்குப் பங்களிப்புச் செய்த கிறிஸ்தவ சிந்தனையாளர்கள், ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவி வளர்ந்தமை, இன்றைய சூழமைவில் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு, பல்சமய உரையாடலின் தேவை, கிறிஸ்தவ நிறுவனங்களின் சமூக மேம்பாடு பற்றிய படிப்பினைகள் என்பவற்றை 13ம் தரத்தில் கற்றுக் கொள்வோம்.

இவற்றை மாணவர்கள் கற்பதனூடாகக் கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தம் அளிக்கும் ஒரு சமூகத்தை தாம் வாழும் சூழலில் உருவாக்க அல்லது கட்டியெழுப்புவதற்குப் பங்களிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 தொடக்ககால திருச்சபை எதிர்கொண்ட சவால்களை இனங்கண்டு திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த சிந்தனையாளர்களையும் துறவற வாழ்க்கை முறையையும் பின்பற்றி வாழ முற்படுவார். | 6.1 முதன் 5 நூற்றாண்டுகளில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களையும் அதன் விளைவுகளையும் தம் வாழ்விற்கு மாதிரியாகக் கொள்வார். | • யூத கலாபனை<br>- கலாபனைக்கான காரணங்கள், விளைவுகள்<br>• உரோமைக் கலாபனைகள்<br>- கலாபனைக்கான காரணங்கள் விளைவுகள்<br>• மிலான் அறிக்கையும் கிறிஸ்தவ மதச் சுதந்திரமும்.<br>• கிறிஸ்தவத்தின் அனைத்துலகத் தன்மை | • ஆரம்பகாலத்தில் திருச்சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலாபனைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• எமது விசுவாசத்திற்கு எதிரான சவால்களை வெற்றி கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• விசுவாசத்திற்கு தடையாக விளங்கும் சவால்களை வெற்றி கொள்வார்.<br>• திருச்சபையின் வளர்ச்சிக்கு சமூகத்தோடு இணைந்து செயற்படுவார். | 20 |
| | 6.2 தொடக்க கால கிறிஸ்தவ சபைகளில் தோற்றம் பெற்ற கோட்பாட்டு சிந்தனைகளையும் கலாச்சாரப் பண்புகளையும் அறிந்து செயற்படுவார். | • புதிய சிந்தனையின் தோற்றம்<br>• கிறிஸ்தவ இறையியல் கல்விக் கூடங்கள்<br>- அலெக்சாந்திரியா - அந்தியோக்கியா<br>• தப்பறையான போதனைகளும் சங்கங்களும்<br>- ஆரிய சிந்தனை - நிசேயா சங்கம்<br>- மசதோனிய சிந்தனை<br>- நெஸ்தோரிய சிந்தனை - எபேசு சங்கம்<br>- இயுக்திக்கேய சிந்தனை - கல்செடோன் சங்கம்<br>• ஆரம்ப கால கிறிஸ்தவ சிந்தனையாளர்களும் அவர்களின் பங்களிப்பும் புனித ஜஸ்ரின், புனித இரேனியுஸ் | • ஆரம்பகால கிறிஸ்தவ சபைகளில் காணப்பட்ட கிரேக்க - உரோமைய கலாச்சாரப் பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• கிறிஸ்தவம் சிறந்த கலாச்சாரப் பண்புகளை உள்வாங்கும் தன்மை கொண்டது என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• சிறந்த கலாசாரப் பண்புகளையும் மதித்து வாழப்பழகிக் கொள்வார்.<br>• திருச்சபையின் புதுப்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 26 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 கீழைத்தேய மேலைத்தேய துறவற சபைகளின் தோற்றத்தையும் பங்களிப்பையும் அறிந்து செயற்படுவார். | • கிறிஸ்தவ துறவற சபைகளின் தோற்றம்<br>- வனத்துத் துறவிகள்<br>• கீழைத்தேய துறவற சபைகளின் தோற்றமும் வளர்ச்சியும் (புனித பக்கேமியுஸ்,<br>புனித பசில்)<br>• மேலைத்தேய துறவற சபைகளின் தோற்றமும், வளர்ச்சிமும்<br>(புனித அத்தனாசியார், புனித பெனடிக்ற், புனித கண்டபரி அகுஸ்தீனார்) | • துறவறசபைகளின் தோற்றம் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• துறவற வாழ்வில் ஈடுபடுவோரை மதிக்க வேண்டும் என்பதை ஏற்பார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• துறவிகளின் வாழ்வைப் பின்பற்றி வாழ்வார்.<br>• துறவிகளின் மறைபணிக்கு உதவுவார். | 14 |
| 7.0 மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய பாங்கினை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 7.1. முன் மத்திய காலக் கிறிஸ்தவத்தின் பரப்புதலையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • கிறிஸ்தவ சபைகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்<br>– ஐரோப்பிய பழங்குடி மக்களின் மதமாற்றம்.<br>• ஐரோப்பிய பழங்குடி மக்களை நாகரிகப் படுத்தல்.<br>• புனித பெனடிக்ற் துறவற சபையின் பங்களிப்பு.<br>- கல்விப் பணி.<br>- உழைப்பு. | • ஐரோப்பிய பழங்குடி மக்களின் மனமாற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• புனித பெனடிக்ற் சபைத்துறவிகள் பழங்குடி மக்களின் மனமாற்றும், நாகரிகப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• புனித பெனடிக்ற் துறவற சபையினரின் பணிகளை பட்டியற்படுத்திக் காட்டுவார்.<br>• துறவற சபையினரால் மேற்கொள்ளப்படும் பணிகளை முன்மாதிரியாகக் கொள்வார்.<br>• துறவறத்தாரின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.2 மத்திய யுகத்தின் இருண்ட கால கிறிஸ்தவ வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த இரவலர் சபைகள் ஆற்றிய பங்களிப்பினைத் தெரிந்து செயலாற்றுவார். | • இருண்ட காலம்<br>• கீழைத்தேய, மேலைத்தேய கிறிஸ்தவ சபைகளின் பிளவுகளும் விளைவுகளும்.<br>• சிலுவைப் போர்<br>• இரவலர் சபை தோற்றம் - பங்களிப்பு<br>- பின்னணி<br>- வல்தேசியன் சபை<br>- பிரான்சிஸ்கன் சபை<br>- டொமினிக்கன் சபை | • மத்திய கால கிறிஸ்தவ சபையின் பிளவுகளுக்கான காரணிகளை திரட்டுவார்.<br>• திருச்சபையை சீர்படுத்தும் நோக்கில் இரவலர் சபைகள் ஆரம்பிக்கப் பட்டன என்பதை ஏற்பார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பபார்.<br>• திருச்சபையின் மறுமலர்ச்சிக்காக உழைப்பார்.<br>• குழுச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கெடுப்பார். | 16 |
| | 7.3 கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காரணிகளையும் விளைவுகளையும் அறிந்து உறுதியான விசுவாசத்தோடு வாழ்வார். | • கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கான சமய, சமூக, அரசியல், பொருளாதார, இறையியல் காரணிகள்<br>• மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கிறிஸ்தவ சிந்தனையாளர்கள்<br>- மாட்டின் லூதர்,<br>- ஸ்விங்லி,<br>- யோன் கல்வின்,<br>- தோமஸ் முன்சர்,<br>• அங்கிலிக்கன், மெதடிஸட், பப்படிஸட் திருச்சபைகள்,<br>• கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தம்<br>- திரிந்தெந்தின் பொதுச் சங்கம்<br>• கத்தோலிக்க மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகளின் பங்களிப்பு.<br>- இயேசுசபை,<br>- வின்செனசியன் சபை,<br>- கார்மேல் சபை,<br>- கப்புச்சின் சபை, | • கிறிஸ்தவத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டதற்கான சமய, சமூக, அரசியல், பொருளாதார காரணிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• திரிதெந்தின் சங்கத்தினூடாக கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்பதை ஏற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருச்சபையின் போதனைகளைப் பின்பற்றி வாழ்வார்.<br>• திருச்சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| 8.0 சமுதாய முன்னேற்றத்தி -ற்காக கிறிஸ்தவ சிந்தனைகள் கல்வி, கலைகள் அளித்த பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவர் | 8.1 கிறிஸ்தவத்தின் கல்விப் பணியை அறிந்து தமது அறிவை விருத்தி செய்து சமூக முன்னேற்றத்திற் -காக தம்மை அர்ப்பணிப்பார். | • கல்வி மேம்பாட்டிற்கு கிறிஸ்தவத்தின் பங்களிப்பு.<br>- பங்கு பாடசாலை,<br>- கத்தீட்டல் பாடசாலை<br>- பல்கலைக்கழகம் (பொலஞ்ஞா, பரிஸ், கேம்பிறிஜ், சலமன்கா)<br>• விஞ்ஞான வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு.<br>- தெயாரட் டே சார்டேன்,<br>- அலெக்சாண்டர் கிறகம்பெல்,<br>- சேர் ஐ சக் நியூட்டன்,<br>- அல்பேட் அயின்ஸ்ரைன்,<br>- அலெக்சாண்டர் பிளமிங். | • மத்திய காலத்தில் கல்வி முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• கல்வி முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவர்கள் உழைத்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• கல்வியறிவு குறைந்தவர்களுக்கு கல்வியை வழங்க முன்வருவார்.<br>• சமூக முன்னேற்றத்திற்காக மற்றவர்களோடு இணைந்து செயற்படுவார். | 14 |
| | 8.2 புதிய சிந்தனைக்கு வழிவகுத்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களை அறிந்து செயற்படுவார் | • புனித அகுஸ்தினாரின் வாழ்வும் ஆக்கங்களும்<br>• புனித அக்குவைனாசின் வாழ்வும் ஆக்கங்களும் | • திருச்சபையில் புதிய சிந்தனைகளுக்கு வழிவகுத்த சிந்தனையாளர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• புனித அகுஸ்தினார், தோமஸ் அக்குவைனாஸ் என்போர் புதிய சிந்தனைகளுக்கு வழிவகுத்தனர் என்பதை ஏற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருச்சபையின் புதிய சிந்தனை மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.<br>• குழுச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கெடுப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.3 கலை மேம்பாட்டிற்கு கிறிஸ்தவம் ஆற்றிய பங்களிப்பை அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார். | • கிறிஸ்தவ இலக்கிய நூல்கள்<br>• கிறிஸ்தவ இசை<br>• கிறிஸ்தவ கட்டிடக் கலை<br>• கிறிஸ்தவ சிற்பக் கலை<br>• கிறிஸ்தவ சித்திரக் கலை | • கிறிஸ்தவ இலக்கிய நூல்களால் எழுந்த புதிய சிந்தனைகளைக் கோவைப்படுத்துவார்.<br>• கலை மேம்பாட்டிற்கு கிறிஸ்தவம் பங்களிப்புச் செய்துள்ளது என்பதை ஏற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• கலை மேம்பாட்டிற்காக தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவார்.<br>• குழுச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கெடுப்பார். | 20 |
| 9.0 ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்ற வரலாற்றைக் கற்பதனூடாகச் சமய, சமூக, கலாச்சார மேம்பாட்டிற்குத் தம்மை அர்ப்பணிப்பார். | 9.1 ஆசிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் வரலாற்றை அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார். | ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம்<br>• இந்தியா<br>• சீனா<br>• பிலிப்பைன்ஸ்<br>• ஜப்பான்<br>• இலங்கை<br>– போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான ஆவணச் சான்றுகள்.<br>அகழ்வாய்வுகளும், கண்டுபிடிப்புக்களும | • ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய விதம் பற்றிய தகவல்களை சேகரிப்பார்.<br>• ஆரம்ப காலத்திலேயே ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவியுள்ளது என்பதை ஏற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• நற்செய்தியை ஏனையோருக்கு கொண்டு செல்வார்.<br>• குழுச்செயற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்குவார் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2 ஐரோப்பியரின் வருகையினால் இலங்கையில் கிறிஸ்தவம் வளர்ந்த வரலாற்றை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வார். | • போர்த்துக்கேயர் காலத் திருச்சபை<br>- போர்த்துக்கேயர் வருகை<br>- போர்த்துக்கேயர் கால மறைபணியாளர்கள்<br>- மன்னார் மறைசாட்சிகள்<br>- கல்விப் பணி<br>- கலைப் பணி<br>• ஒல்லாந்தர் காலத் திருச்சபை<br>- ஒல்லாந்த சீர்திருத்த மதம் - (பிலிப் பல்தேயுஸ்)<br>- கல்விப்பணி<br>- கலைப் பணி<br>- ஒல்லாந்தர் கால கலாபனையும் ஒறத்தோரியன் சபையின் மறைபணியும் (தூய யோசேவாஸ், கொன்சால்வஸ் அடிகளார்)<br>• ஆங்கிலேய காலத் திருச்சபை<br>- மறைப்பணி<br>- கல்விப்பணி<br>- கலைப் பணி<br>• கத்தோலிக்க துறவற சபைகளின் வருகையும் பங்களிப்பும்<br>• தேசிய கிறிஸ்தவ சபைகளின் பங்களிப்பு | • மேலைத் தேசத்தவர்களின் வருகையினால் இலங்கையில் கிறிஸ்தவம் பரப்பப்பட்ட தகவல்களைத் திரட்டுவார்.<br>• ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையை வளர்த்தவர் புனித யோசேவாஸ் என்பதை ஏற்பார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• குழுச் செயற்பாடுகளில் அர்ப்பணிப்போடு ஈடுபடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3 இலங்கை சமுதாயத்தின் மனித மேம்பாட்டிற்கான தேவைகளை அறிந்து தமது கடமைகளை நிறைவேற்றுவார். | • சுதந்திரத்தின் பிற்காலம்<br>- கல்விப்பணியில் முன்னேற்றம்<br>- கிறிஸ்தவ கல்வியியலாளர்கள்.<br>(ஆயர் பொன்ஜீன் அமதி,<br>அருட்பணி ஞானப்பிரகாசர் அமதி,<br>அருட்பணி பீட்டர் பிள்ளை அமதி,<br>ஆயர் எட்மன் பீரீஸ் அமதி,<br>அருட்பணி H.S. தாவீது,<br>அருட்பணி S.G. பெரேரா,<br>திரு.வில்லி விக்கிரமசிங்க,<br>திரு.R.S. D. சேரம்)<br>• பாடசாலைகள் அரசமயமாக்கலால் ஏற்பட்ட விளைவுகள்.<br>• இலங்கை சமுதாயத்தில் நலன்புரிச் சேவைகள்<br>– மருத்துவப் பணி (மரியாவின் பிரான்சிஸ்கன்<br>கன்னியர்சபை, திருச்சிலுவைக் கன்னியர் சபை, கிறீன் மருத்துவ மனை)<br>– சமூக நீதிப் பணி<br>(ஆயர் லியோ நாணயக்கார, ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க)<br>- அருட்பணி. மைக்கல் றொட்ரிகோ அமதி<br>அருட்பணி. மேரி பஸ்தியன் | • சுதந்திரத்தின் பின் இலங்கையில் கல்வி நிலை பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.<br>• இலங்கைச் சமூகம் கல்வி வளர்ச்சி வழியாக பெற்ற பயனை ஏற்பார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுவார்.<br>• தமது ஆற்றல்களை சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துவார். | 26 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள |
|---|---|---|---|---|
| 10.0 புதிய நாகரிகம் ஒன்றை உருவாக்கும் கிறிஸ்தவத்தின் பணியில் ஈடுபாட்டுடன் பங்கு கொள்வார் | 10.1 திருச்சபையின் சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளை அறிந்து ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுவார். | • திருச்சபையின் சமூக படிப்பினைகள் பற்றிய அறிமுகம்.<br>• 2ம் வத்திக்கான் சங்க ஏடு இன்றைய உலகில் திருச்சபை<br>- மனித மாண்பு<br>- குடும்ப வாழ்வு<br>- பண்பாடு<br>- சமாதானமும் - ஒருமைப்பாடும்<br>• ஆசிய ஆயர் மன்றத்தின் தோற்றம் - சமூக நோக்கம். (FABC) | • திருச்சபையின் சமுதாய முன்னேற்றம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• ஆசிய ஆயர் மன்றத்தின் சமூக சிந்தனைகளை ஏற்றுக் கொள்வார்.<br>• குடும்பத்தில் ஒவ்வொருவரினதும் கடமைகள், பொறுப்புக்கள், சமுதாயத்தின் கடமைகள் பொறுப்புக்கள் பற்றிக் கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருச்சபையின் மனித மாண்பு பற்றிய படிப்பினைகளை வாழ்வாக்குவார்.<br>• மனித மாண்பைப் பேணும் செயற்பாடுகளில் பிறரோடு இணைந்து ஈடுபடுவார். | 20 |
| | 10.2 கிறிஸ்தவசபை நிறுவனங்களின் சமூக படிப்பினை-களையும் வழிகாட்டல்-களையும் அறிந்து ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுவார். | • உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றம் - சமூக நோக்கம்(WCC)<br>• ஆசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றம் - சமூக நோக்கம் (CCA)<br>• தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றம் - சமூக நோக்கம். (NCC) | • கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றம், சமூக நோக்கம், பற்றிய விடயங்களை கோவைப்படுத்துவார்.<br>• கிறிஸ்தவ சபைகளின்சம்மேளனங்கள் சமூக முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கமொன்றினால் முன்வைப்பார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள |
|---|---|---|---|---|
| | | | • கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் சமூகக்கருத்துக்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ முயற்சிப்பார்.<br>• மற்றவர்களுடன் ஒத்துழைப்புடன் வாழ்வார். | |
| | 10.3 கிறிஸ்தவ சபைகளோடும் பல்சமயங்களோடும் உரையாடிப் புரிந்துணர்வுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இணைந்து வாழ முற்படுவார். | • கிறிஸ்தவ ஒன்றிப்பும் பல்சமய உரையாடலும்<br>– உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் (WCC) கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான படிப்பினைகளும் முயற்சிகளும்.<br>– இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான படிப்பினைகளும் முயற்சிகளும்.<br>• பல்சமய உரையாடல்<br>- இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினை - ஆசிய ஆயர்கள் மன்றப் படிப்பினை | • கிறிஸ்தவ சபைகளோடும், பிறசமயங்களோடும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வழி முறைகளைக் கோவைப்படுத்துவார்.<br>• கிறிஸ்தவ சபைகளோடும், பிறசமயங்களோடும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை ஆக்கமொன்றினால் முன்வைப்பார்.<br>• கிறிஸ்தவ சபையினரோடும் பிறசமயத்தவரோடும் ஒற்றுமையாக வாழ்வார்.<br>• பிறசமயத்தவர்களின் நல்ல செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 16 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள்

# கிறிஸ்தவ நாகரிகம்

## பொதுவான பாட அறிமுகம்

கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையும் மையமும் **இயேசு கிறிஸ்துவே**. இயேசுவின் படிப்பினைகள், பணிகள், பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றின் பிரதிபலிப்பில் இறையாட்சி சமூகத்தை உருவாக்குவதே இயேசு கிறிஸ்துவின் இலட்சியமாகும். இறையாட்சிச் சமூகத்தின் மதிப்பீடுகளின் வளர்ச்சியையும் பரம்பலையும் வரலாற்று நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற கற்கை நெறியே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்திற்கு இருநிலைகளில் பங்களிப்பு ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் வருகைக்குமுன், அண்ணளவாக 1800இல் நிகழ்ந்த ஆபிரகாமின் அழைப்புக்கு முன் தோன்றிய நாகரிகங்களாக யூப்பிரட்டீஸ்-ரைகிறீஸ், நைல்நதி நாகரிகங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக யூதமக்களின் அண்டைய நாடுகளின் நாகரிகங்களான சுமேரிய, எகிப்திய, அசீரிய, பபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோம நாகரிகங்கள் விளங்கின. இவை ஒருபுறம் யூதநாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்த, மறுபுறம் ஆபிரகாமின் அழைப்புடன் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்னும் நிலையில் குலமுதல்வர்கள் நீதித் தலைவர்கள் அரசர்கள் இறைவாக்கினர் வழியாக நெறிப்படுத்தப்பட்டு வழிப்படுத்தப்பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு நிலைகளின் பிரதிபலிப்பில் தோன்றியதே யூதநாகரிகமாகும். யூத, கிரேக்க, உரோம நாகரிகங்களின் முக்கிய கூறுகளைக் தன்னகத்தே கொண்டதே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகம் ஐரோப்பிய நாகரித்தின் தோற்றத்திற்குப் பலவழிகளில் பங்களிப்புச் செய்ததுடன், தானும் ஐரோப்பாவில் பாரிய வளர்ச்சியையும் பரம்பலையும் பெற்றது. கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சி வரலாற்றையும் அதன் முக்கிய கூறுகளையும் பற்றியதாகவே இப்பத்துத் தேர்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

இவை இங்கு வரலாற்று அடிப்படையில் அல்லாது விடயப்பொருள் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் தேர்சிகளுக்குள்ளும், தேர்ச்சிமட்டங்களுக்குள்ளும் நெருங்கிய தொடர்புண்டு. அவற்றைப் படிப்படியாக அறிந்து இப்பாடத்தைக் கற்கவேண்டும். அதனால் கிறிஸ்தவ நாகரிகத்தின் தன்மை, அதன் வளர்ச்சி, பங்களிப்புப் பற்றிய விடயங்களைப் புரிந்து கொள்வது இலகுவாகும். முதலில், ஒவ்வொரு தேர்ச்சியிலும் தரப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தைச் சுருக்கமாக அறிந்திருப்போம்.

**தேர்ச்சி 6**

முதல் ஐந்து நூற்றாண்டுகளில் கிறிஸ்தவம், பலஸ்தீனாவுக்கு வெளியே கீழைத்தேய நாடுகளில் பரவி வளர்ந்தது. அங்கு கிரேக்க கலாசார சூழலில் கிறிஸ்தவம் எதிர்கொண்ட சவால்களையும், கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பையும் இங்கு காண்போம்.

**6.1** கிறிஸ்தவ படிப்பினைகள், வாழ்க்கைமுறைக்கு எதிராக எழுந்த கலாபனைகள், கிறிஸ்தவம் சமய சுதந்திரம் பெற்றதால் அனைத்துலக தன்மையுடன் வளர்தல் பற்றிய தகவல்கள் இங்கு தரப்படுகின்றன.

**6.2** கிறிஸ்தவ கோட்பாடுகளில் கிரேக்க சிந்தனையின் தாக்கம் காணப்படுகின்றது. இக் கோட்பாடுகளின் விருத்திக்கு அலெக்சாந்திரியா அந்தியோக்கு சிந்தனைக் கூடங்கள், சிந்தனையாளர்கள், பொதுச்சங்கங்கள் பங்களிப்புச் செய்துள்ளன.

**6.3** இக்காலகட்டத்தில் கீழைத்தேய, மேலைத்தேய துறவறசபைகள் தோற்றம் பெற்றன. அவை கிறிஸ்தவ வாழ்வியல் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை இங்கு காண்போம்.

**தேர்ச்சி 7**

மத்திய காலத்தில் கிறிஸ்தவம் ஐரோப்பிய நாடுகளில் பரவி வளர்ந்தது. இதற்குத் துறவற சபைகளும், கிறிஸ்தவ சீர்திருத்த சிந்தனையாளர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

**7.1** மத்தியகால ஆரம்பத்தில் ஐரோப்பிய பழங்குடிமக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார்கள். அவர்களை நாகரிகப்படுத்துவதற்கு புனித பெனடிக் சபையினர் பங்களிப்புச் செய்தனர்.

**7.2** மத்திய யுகத்தின் இருண்டகால கிறிஸ்தவ வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த இரவலர் சபையினர் பங்களிப்புச் செய்தனர்.

**7.3** மத்தியகால உச்சப் பகுதியில் சமய சீர்திருத்த சிந்தனையாளர்களும், திருத்தெந்தீன் பொதுச்சங்கமும், திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகளும் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தன. இவை பற்றிய விடயங்களை இப்பகுதியில் காண்போம்.

**தேர்ச்சி 8**

ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய அறிவுசார் விழிப்புணர்வுக் காலத்தில் சமுதாய வளர்ச்சிக்கு கிறிஸ்தவ கல்வியியலாளர்களும், விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும், கலைஞர்களும் பங்களிப்புச் செய்தனர்.

**8.1** கல்வி மேம்பாட்டிற்குப் பங்கு, கத்தீட்டல் பாடசாலைகளும், பல்கலைக் கழகங்களும், கிறிஸ்தவ விஞ்ஞானிகளும் பங்களிப்புச் செய்தனர்.

**8.2** புனித அகுஸ்தீனார், புனித அக்குவைனா தோமஸ் ஆகியோரின் வாழ்வும் ஆக்கங்களும் கிறிஸ்தவ கலாசாரத்தில் புதிய சிந்தனைக்கு வழிவகுத்தது.

**8.3** கிறிஸ்தவ இலக்கிய நூல்கள், இசை, கட்டிட, சிற்ப, சித்திரக் கலைகள் கிறிஸ்தவ கலாசாரத்தை வளப்படுத்தின.

**தேர்ச்சி 9**

பதினாறாம் நூற்றாண்டில் மறைபரப்பாளர்களினால் கிறிஸ்தவம் ஆசிய நாடுகளில் பரவிவளர்ந்தது.

**9.1** தென்னாசிய நாடுகளான இந்தியாவில் திருத் தூதர் தோமையாரின் பணியாலும், இலங்கையில் நொஸ்தேரிய குருக்களின் வருகையாலும் கிறிஸ்தவம் அறிமுகம் செய்யப்பட்டது. கிழக்கு ஆசியாவில் சீனா, பிலிப்பைன் தீவுகள், யப்பான் ஆகிய இடங்களில் முறையே இயேசு சபையினரும், ஸ்பானிய மறைபரப்பாளர்களும், புனித சவேரியாரும் மற்றும் மறைசாட்சிகளும் தம் வாழ்வாலும், பணியாலும் கிறிஸ்தவ கலாசார மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்போடு செயலாற்றியுள்ளனர்.

**9.2** இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் வருகையால் கிறிஸ்தவம் பரவியதோடு, பல சவால்களுக்கு மத்தியில் அவர்களின் கல்வி, கலைப்பணிகள் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**9.3** சுதந்திரம் பெற்ற இலங்கையில் கல்வி மேம்பாட்டுக்காக ஆயர் பொன்ஜீன் அவர்களைத் தொடர்ந்து பல கல்வியியலாளர்கள் பணியாற்றி உள்ளனர். இலங்கை சமுதாயத்தில் நலன்புரிச் சேவை மற்றும், சமூகநீதிப் பணியில் திருச்சபை பணியாற்றி பாரிய பங்களிப்பு செய்துள்ளது.

**தேர்ச்சி 10**

புதிய நாகரிகம் ஒன்றைஉருவாக்கும் நோக்கத்துடன் கிறிஸ்தவ திருச்சபைகள் தங்கள் படிப்பினைகளையும்,வழிகாட்டல்களையும் தந்துள்ளன.

**10.1** இரண்டாம் வத்திக்கான் சங்கம் ‘இன்றைய உலகில் திருச்சபை’ இல் சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளைத் தந்துள்ளது. ஆசிய ஆயர்களது பேரவை (FABC) சமூகநலன், பண்பாடு பற்றிய தகவல்களைத் தந்துள்ளது.

**10.2** உலக கிறிஸ்தவ சம்மேளனம் (WCC), ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் (CCA), தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் (NCC) ஆகியவை சமூகநோக்கு, சமூகநலன் பற்றிய வழிகாட்டல்களைத் தந்துள்ளன.

**10.3** மேலும் இவை கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அதற்கான வழிகாட்டலையும் தருகின்றன. இதன்வழியாக புரிந்துணர்வையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியுமாதலால் இணைந்து வாழும் புதிய கலாசாரத்தை உருவாக்க ஊக்குவிக்கின்றன.

**தேர்ச்சி 6.0 :** தொடக்ககாலத் திருச்சபை எதிர்கொண்ட சவால்களை இனங்கண்டு திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த சிந்தனையாளர்களையும் துறவற வாழ்க்கை முறையையும் பின்பற்றி வாழ முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** முதல் 5 நூற்றாண்டுகளில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களையும் அதன் விளைவுகளையும் தம் வாழ்விற்கு மாதிரியாகக் கொள்வார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலாபனைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- எமது விசுவாசத்திற்கு எதிரான சவால்களை வெற்றி கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- விசுவாசத்திற்குத் தடையாக விளங்கும் சவால்களை வெற்றி கொள்வார்.
- கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்குச் சமூகத்தோடு இணைந்து செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம் :**

**6.1.1.1 - யூத கலாபனை**

- கிறிஸ்தவம் தன் வரலாற்றின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் பல எதிர்ப்புகளுக்கும் இடையூறுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.
- இக்காலங்களில் திருச்சபை வளர்ச்சி கண்டதைப்போல வேறு எந்த காலத்திலும் வளர்ச்சியடையவில்லை.
- எனவே தான் திருச்சபையின் முதல் மூன்று நூற்றாண்டுகளையும் திருச்சபையின் வீர வரலாற்றுக் காலம் என்றழைப்பர்.
- திருச்சபைக்கு எதிராக அதற்கு வெளியிலிருந்து முதலில் யூத கலாபனைகளும் அடுத்து உரோமைய கலாபனைகளும் எழுந்தன.

**யூத கலாபனை – காரணங்கள்**

யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்துப் பகைத்து அவர்களைத் துன்புறுத்தியமை யூத கலாபனை ஆகும்.

- யூதர்கள் தாவீது அரசனைப் போன்ற பலம் வாய்ந்த ஒரு பேரரசனை எதிர்பார்த்திருந்தனர். அவ்வரசன் தங்களுக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுத்தரும் ஓர் இலௌகீக அரசராக இருப்பார் என எதிர்பார்த்திருந்தனர்.
- இயேசுவின் போதனைகளும் செயற்பாடுகளும் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாகவிருந்தது. ஏழைத் தச்சனின் மகனாகப் பிறந்த இயேசுவை அவர்கள் மெசியாவாக ஏற்க மறுத்தனர்.
- சதுசேயரும் பரிசேயரும் தலைமைக் குருக்களும் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியால் தங்கள் செல்வாக்கு அற்றுப்போய் பதவி பறிபோய்விடுமென அஞ்சினர்.
- யூதர்கள் தாம் பல்வேறுப்பட்ட ஆதிக்கத்திற்கு உட்பட்டதற்கும் குறிப்பாக உரோமையரின் அதிகாரத்தில் இருந்ததற்குக் காரணம் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட பாவமே என அவர்கள் மேல் பழி போட்டனர்.
- யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தனர், அவர்கள் என்ன காரணத்திற்காக இயேசுவை வெறுத்து அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ அதே காரணத்திற்காகவே கிறிஸ்தவர்களையும் வெறுத்துப் பகைத்துத் துன்புறுத்தினர்.

**யூத கலாபனையின் விளைவுகள்**

- எருசலேமில் ஒழிந்திருந்த கிறிஸ்தவர்கள் சிதறுண்டு வெளியே வந்து தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்துத் திருச்சபையை வளர்த்தனர்.
- சவுல் தமது மனமாற்றத்தின் பின்பு கிறிஸ்தவத்திற்கு ஆற்றிய பணி கிறிஸ்தவத்தை வளர்ச்சியடையச் செய்தது.
- யூதர்களும் மனம் மாறிக் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர்.
- கிறிஸ்தவம் புறவினத்தார் மத்தியில் செல்ல வழி வகுத்தது. கீழைத்தேய நாடுகளிலும் கலாபனையின் மூலம் திருச்சபை பரவியது.

### 6.1.2 உரோமைக் கலாபனை

- யூத கலாபனையைத் தொடர்ந்து கிறிஸ்தவம் உரோமையக் கலாபனைக்கும் முகம் கொடுக்க வேண்டியதாகவிருந்தது.
- உரோமையரால் புதிய நெறியைப் பின்பற்றுபவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட துன்புறுத்தல்கள் உரோமைக் கலாபனை எனப்படும்.
- இது மூன்று வகைப்பட்டது:
    1) கொள்கைக் கலாபனை,
    2) சந்தர்ப்பவாதக் கலாபனை,
    3) அரச கலாபனை.
- இவை முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் இடம்பெற்றது.
- உரோமைக் கலாபனைகள் பத்து ஆகும். இவற்றுள் இறுதியான பத்தாவது கலாபனை மிகக் கொடூரமானது.
- இதனால் இவ்யுகத்தை மறைசாட்சிகளின் யுகம் என்பார்கள்.

**அ. கொள்கைக் கலாபனை**

- கிறிஸ்தவர்கள் உரோமையரினால் சமூக விரோதிகளாகக் கருதப்பட்டார்கள்.
- கிறிஸ்தவர்களின் அசாதாரண நடைமுறைகளால் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் புறவினத்தவர்களுக்குமிடையில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படுவதை அவதானித்த அரச அதிகாரிகள் குழப்பங்களை அடக்கத் தலையிட வேண்டியிருந்தது.
- இவ்வளவு காலமும் உரோமையில் நிலவிய மத அமைதி அழிக்கப்படுவதையும் பேரரசின் மதக் கொள்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையும் அறிந்திருந்தனர். கிறிஸ்தவர்களாக இருப்பதே குற்றமாகக் கருதப்பட்டுக் கலாபனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவே **கொள்கைக் கலாபனை** என அழைக்கப்பட்டது.

**ஆ. சந்தர்ப்பவாதக் கலாபனை**

- உரோமையில் கலாபனை வேளைகளில் கிறிஸ்தவர்களின் நிலை ஆளுநர்களின் தயவிலேயே தங்கியிருந்தது.
- அவர்களில் கிறிஸ்தவர்களுக்குச் சாதகமாயிருந்தவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவில்லை.

- அதே வேளை உரோமைய குழப்பக்காரர்கள் கிளர்ந்தெழுந்து கிறிஸ்தவர்கள் மேல் பழிசுமத்தி ஆளுநரின் கவனத்திற்குக் கொணர்ந்ததால் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள், எனவே, கலாபனை இடத்துக்கிடம் வேறுபட்டதால் இதனைச் **“சந்தர்ப்பவாதக் கலாபனை”** என்றழைப்பர்.

**இ. அரச கலாபனை**

- உரோமையில் கிறிஸ்தவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கவே அதனால் உரோமை அரச மதத்திற்கும் அத்தோடு இணைந்த உரோமைப் பேரரசுக்கும் ஆபத்து வரக்கூடும் எனப் பயந்து கிறிஸ்தவம் பரவுவது தடை செய்யப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பொதுச்சட்டம் கொண்டு வரப்பட்டது. கொள்கைக் கலாபனை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுப் பதிலாக **“அரச கலாபனை”** ஆரம்பமாகியது, இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பொதுப் பாதுகாப்பின் பெயரால் சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள்.

**உரோமையக் கலாபனை ஏற்படக் காரணங்கள்:**

- கிறிஸ்தவர்கள் தங்கள் ஒரே கடவுளைத் தவிர உரோமைத் தெய்வங்களுக்கு பலி செலுத்த மறுத்தமை.
- கிறிஸ்தவர்கள் அந்நியத் தெய்வச் சிலைகளை வழிபடுவதைப் பாவமாக கருதியதால் சிலை செய்பவர்களும் பலி ஒப்புக் கொடுக்கும் குருக்களும் கிறிஸ்தவர்களை தங்கள் பகைவர்களாகக் கருதியமை.
- கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடுகளை இரவில் இரகசியமாக ஒன்று கூடித் தனியார் வீடுகளிலும் நிலக்கீழ்க் கல்லறைகளிலும், சுரங்கங்களிலும் நடத்தியமையால் அவர்கள் துர் நடத்தைக்காகவே இவ்வாறு ஒன்று கூடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டமை.
- யூதர்கள், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உடல், இரத்தத்தில் பங்கு கொள்ளும் வழிபாட்டைப் பற்றிய தப்பான கருத்துக்களைப் பரப்பி, அவர்கள் குழந்தைகளைப் பலியிடுவதாகவும் அவர்களின் உடலையும் இரத்தத்தையும் உண்டு குடிப்பதாகவும் பழி சுமத்தப்பட்டமை.
- உலகில் நிகழும் அழிவுகளுக்கெல்லாம் கிறிஸ்தவர்களே காரணம் என்று கூறப்பட்டமை.
- உரோமைய பேரரசை விட இறையரசே முடிவில்லாதது என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கை உரோமையருக்கு எரிச்சலை மூட்டியமை.
- கிறிஸ்தவர்கள் உரோமைக் கடவுளுக்கும் பேரரசுக்கும் தூபம் காட்டவும் பலி ஒப்புக்கொடுக்கவும் மறுத்தமையால் அவர்கள் பேரரசுக்கும் பேரரசருக்கும் மனுகுலத்துக்குமே விரோதிகளெனக் குற்றம்சாட்டப்பட்டமை.
- கிறிஸ்தவர்களின் பிரிவினைப் போக்கும் நடைமுறைகளும் உரோமையர்கள் கிறிஸ்தவர்களைத் தங்கள் பண்பாடு, கலாசாரம், பேரரசு போன்றவைகளுக்கெல்லாம் எதிரானவர்களெனக் கருதி அவர்களை வெறுத்துப் பகைத்தமை.
- யூத மதத்தை விட்டுக் கிறிஸ்தவத்தைப் பின்பற்றிய யூதக் கிறிஸ்தவர்களைப் பொறுக்க முடியாத யூதர்களும் உரோமையரின் கோபத்தை மேலும் வலுப்படுத்தியமையால் கிறிஸ்தவர்களுக்கும் உரோமையருக்குமிடையே சந்தேகமும், வெறுப்பும், பகையும் நாளுக்கு நாள் வளர்ந்து கலாபனைக்கு வழிவகுத்தமை.

**உரோமையக் கலாபனைகள்**

| ஆண்டு | அரசர்கள் | துன்புறுத்திய காரணம் | மறை சாட்சிகள் | அரசர்கள் |
|---|---|---|---|---|
| 1. கி.பி. 64 - 65 | பேரரசர் நீரோ | பேரரசர் நீரோ உரோமை நகருக்குத் தீ வைத்து நெருப்பு எரிவதைப் பார்க்க அவருக்கிருந்த ஆசையை நிறைவு செய்து அப்பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் சுமத்தியமை. | • பல கிறிஸ்தவர்கள்<br>• பேதுரு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.<br>• பவுல் சிரச்சேதம் செய்யப்பட்டார். | • காட்டு மிருகங்களின் தோலால் போர்த்தப்பட்டு நாய்களுக்கு உணவாகப் போடப்பட்டார்கள்.<br>• உடல்களுக்குக் கந்தகம் பூசப்பட்டு இரவில் எரியும் வர்த்திகளாகப் பாவிக்கப் பட்டார்கள்.<br>• கிறிஸ்தவப் பெண்கள் சிறைகளில் அடைக்கப் பட்டு விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டார்கள். |
| 2. கி.பி. 95 - 96 | பேரரசர் தொமீசியன் | பேரரசர் தன்னை ஆண்டவரெனப் பிரகடனம் செய்து தன்னை எல்லோரும் ஆண்டவராக வணங்க வேண்டுமெனக் கட்டளையிட்டார். வணங்காதவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். | • புனித பெலவேந்திரர் X வடிவமான சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.<br>• புனித திமொத்தேயு | • கொலை செய்யப்பட்டார்கள்.<br>• நாடு கடத்தப்பட்டார்கள்.<br>• கிறிஸ்தவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். |
| 3. கி.பி. 106 - 117 | பேரரசர் திராயன் | • கிறிஸ்தவர்கள் குடிவெறி களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர் எனக்குற்றம் சாட்டப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள்<br>• கிறிஸ்தவர்களின் வழிபாட்டு முறையைத் தவறாகப் புரிந்து அவர்கள் குடிவெறி களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டனர். | புனித சிமியோன் அந்தியோக்கு ஆயர் இஞ்ஞாசியார். (இவர் 'கடவுளை சுமப்பவர்', "கடவுளை உடுத்தியர்" என அழைக்கப்பட்டார் 'கத்தோலிக்க திருச்சபை' எனும் பெயரை முதன்முதலில் பயன்படுத்தியவர் இவரே) | • மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டனர். |

| ஆண்டு | அரசர்கள் | துன்புறுத்திய காரணம் | மறை சாட்சிகள் | அரசர்கள் |
|---|---|---|---|---|
| 4. கி.பி. 161-180 | பேரரசர் மாற்குஸ் அவுரேலியன் | • கிறிஸ்தவர்கள் உல்லாசமாக வாழ வேண்டியது தானே? ஏன் அவர்கள் தங்கள் மதத்திற்காகத் தங்கள் உயிரைக் கொடுக்க வேண்டும்? இது அவர்களின் பிடிவாதமே? எனக்கூறி அவர்களை நாடு கடத்தினார். | • சத்தியத்தின் பாதுகாவலரான புனித யுஸ்தினார் <br> • இசையின் பாதுகாவலியான புனித சிசிலியம்மாள் <br> • புனித போதினுஸ் <br> • புனித பிளர்ந்தீனாள் <br> • புனித சிம்போரியன் | • கிறிஸ்தவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள். <br> • சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். |
| 5. கி.பி. 202-211 | பேரரசர் செப்திமுஸ் செவரஸ் | • மக்களைக் கிறிஸ்தவத்துக்கோ, யூதமதத்துக்கோ மனந்திருப்புவது சட்ட விரோதமாக்கப்பட்டது. எவரும் விருத்தசேதனம் செய்வது திருமுழுக்குப் பெறுவது தடை செய்யப்பட்டது. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பொதுப் பாதுகாப்பின் பெயரால் துன்புறுத்தப்பட்டார்கள் | • சத்தியத்தின் பாதுகாவலரான புனித இரேனியுஸ் <br> • புனித பெபபெத்துவா <br> • பெலிசித்தா | • தேடிப்பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். <br> • மரண தண்டனை விதிக்கப்பட்டது. |
| 6. கி.பி. 235-238 | பேரரசர் மாக்சிமின் திராசியன் | • திருச்சபை பரவுவதைத் தடைசெய்ய அதன் அமைப்பை அதிகாரிகளை, அழிப்பதே வழியெனக் கண்டு பாப்புவையும், ஆயர்களையும் குருக்களையும் கைது செய்து தண்டித்தார்கள். | • திருத் தந்தையர்களான புனித போன்சியன், அந்திரே | • கிறிஸ்தவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். <br> • நாடுகடத்தப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டது. <br> • கிறிஸ்தவர்களின் சங்கங்கள் நிறுவனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. |

| ஆண்டு | அரசர்கள் | துன்புறுத்திய காரணம் | மறை சாட்சிகள் | அரசர்கள் |
|---|---|---|---|---|
| 7. கி.பி. 249-251 | பேரரசர் தீசியுஸ் | • கிறிஸ்துவ மதத்தை அழிக்கக் கங்கணம் கட்டப்பட்டது. எல்லா குடிமக்களும் பேரரசுக்கு இறையாசீர் வேண்டி உரோமைத் தெய்வங்களுக்கு பலி செலுத்தக் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். மறுத்தவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள். | • அலெக்-சாந்திரியா புனித டயோனிசியஸ் <br> • புனித பபியன் ஓரிஜின் - சத்தியத்தின் பாதுகாவலர். | • சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. <br> • கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். |
| 8. கி.பி. 257-260 | பேரரசர் வலேரியன் | • மக்ரியனின் வேண்டுகோளுக்கு இணங்க இருகட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது. <br> 1. குருக்கள் விக்கிரங்களுக்குப் பலியிட வேண்டும். <br> 2. குருக்களும் கிறிஸ்தவர்களும் கடுமையாகத் துன்புறுத்தப்பட வேண்டும். | • திருத்தந்தை 2ஆவது சிக்ஸ்ரஸ் உட்பட ஆறு திருத் தொண்டர்கள். <br> • புனித லோறன்சியார் <br> • சத்தியத்தின் பாதுகாவலரான புனித சிப்பிரியன் | • நாடு கடத்தப்பட்டனர். <br> • மரண தண்டனை வழங்கப்பட்டது. <br> • நெருப்பிலிட்டுச் சுடப்பட்டார்கள். <br> • சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். |
| 6. கி.பி. 274-275 | பேரரசர் அவுறேலியன் | • பேரரசர் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பல சட்டங்களை இயற்றினார். <br> • கிறிஸ்தவர்கள் பொதுப் பாதுகாப்பின் பெயரால் துன்புறுத்தப் பட்டார்கள். | • திருத்தந்தை புனித பெலிக்ஸ் <br> • பாரீஸ் ஆயர் புனித தேனிஸ் <br> • புனித கோனோன் | • கொலை செய்யப்பட்டார்கள். |

| ஆண்டு | அரசர்கள் | துன்புறுத்திய காரணம் | மறை சாட்சிகள் | அரசர்கள் |
|---|---|---|---|---|
| 10. கி.பி. 303-305 | பேரரசர் டயக்-கிளேசியன் | • உரோமைய அஞ்ஞான வழிபாட்டில் கிறிஸ்தவர்கள் பங்கெடுக்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. | • புனித செபஸ்தியார் <br>• புனித தார்சியுஸ் <br>• புனித காஸ்மாஸ் <br>• புனித தமியான் <br>• புனித பெலிக்ஸ் | • இரும்புக் கட்டிலில் இடப்பட்டுச் சுடப்பட்டார்கள். <br>• உடல்கள் குறடுகளால் கிழிக்கப்பட்டன. <br>• சுரங்கங்களில் நிலவறைகளில் புதைக்கப்பட்டார்கள். |

## உரோமைக் கலாபனையின் விளைவுகள்

**சாதகமானவை :-**

- கிறிஸ்தவர்களின் விசுவாசம் உறுதிப்பட்டது.
- கிறிஸ்தவர்கள் மத்தியில் தாராள குணமும், தியாக வாழ்க்கையும் வளர்ந்தன.
- மறைசாட்சி மரணம் வழியாகக் கிறிஸ்தவர்கள் அளித்த சாட்சியம் மறை உண்மைகளின் உன்னதத்தையும் வலிமையையும் எடுத்துக் காட்டின.
- மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறித் திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவியது.

**பாதகமானவை :-**

- கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு அவர்கள் உயிர்கள் பறிக்கப்பட்டன.
- அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.
- சொத்துக்கள், உடமைகள் அழிக்கப்பட்டன, பறிக்கப்பட்டன.
- கிறிஸ்தவர்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேறினார்கள்.
- கிறிஸ்தவர்களின் வழிபாட்டு மையங்கள் தகர்க்கப்பட்டன.

### 6.1.3 மிலான் அறிக்கையும் கிறிஸ்தவ மதச் சுதந்திரமும்

- கிறிஸ்தவர்கள் கலாபனைகளால் துன்பப்பட்டார்கள். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதால் எவ்வித பயனும் இல்லை என்பதை உணர்ந்த கல்லேரியு கி.பி. 311ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தார். இக்கட்டளை **சகிப்புத் தன்மையின் சாசனம்** என அழைக்கப்பட்டது.
- கி.பி. 312ஆம் ஆண்டில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. சிற்றரசர் மாக்சென்சியுஸ் முழு பேரரசுக்கும் அரசராக வர விரும்பி மேற்குப் பேரரசை ஆண்ட கொன்ஸ்தாந்தினுக்கு எதிராகப் போர் தொடுத்தார். அதை அறிய வந்த கொன்ஸ்தாந்தின் உடனடியாக 25000 படைவீரருடன் அல்ப்ஸ் மலைத்தொடரைத் தாண்டி இத்தாலிக்குள் பிரவேசித்தார்.
- அவர் உரோமையை நெருங்கிய போது வானத்தில் ஓர் ஒளிமயமான சிலுவையையும் அதைச் சுற்றி வர ‘‘இந்த அடையாளத்தைக் கொண்டு நீ வெற்றி பெறுவாய்’’ என்று

எழுதப்பட்டிருப்பதையும் கண்டார். அக்காட்சியின் அர்த்தம் விளங்காமல் இருந்த பேரரசர் கொன்ஸ்தாந்தினுக்கு அன்றிரவு இயேசு கனவில் தோன்றிப் படைவீரரின் கேடயத்திலிருந்த கழுகுச் சின்னத்திற்குப் பதிலாகச் சிலுவைச் சின்னத்தைப் பயன்படுத்தும்படி கூறினார்.

- கொன்ஸ்தாந்தினும் அதற்கு பணிந்து படையினரின் கேடயத்தில் சிலுவைச் சின்னத்தை வரைந்து போர் புரிந்தார். மாக்சென்சியுசும் அவனது ஆயிரக்கணக்கான படைவீரரும் கொன்ஸ்தாந்தின் படைக்கு முகம் கொடுக்க முடியாமல் தப்பி ஓடிய பொழுது அனைவரும் தைபர் நதியில் மூழ்கி மாண்டனர்.
- இந்த அதிசய வெற்றி உரோமைய அரசில் ஒரு பரப்பரப்பை ஏற்படுத்தியது. தான் அடைந்த வெற்றி கிறிஸ்தவர்களுடைய கடவுளின் வலிய கரத்தைக் கண்ட பேரரசர் கொன்ஸ்தாந்தின் கிறிஸ்தவர்களின் இறைவனுக்கு அஞ்சி நன்றி செலுத்தினர்.
- உரோமையில் அவர் எழுப்பிய தன் சிலையின் கையில் சிலுவை சின்னத்தை வைத்தார். சிலுவையின் அடியில் ''சிலுவை அடையாளத்தால் நான் கொடுங்கோலன் பிடியிலிருந்து உங்கள் நகரை விடுவித்தேன்'' எனப் பொறித்து வைத்தார்.
- வெற்றி பெற்ற பேரரசர் உரோமையில் எல்லோராலும் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார்.
- பேரரசர் கொன்ஸ்தாந்தின் பேரரசின் மேற்பகுதி முழுவதற்கும் பேரரசர் ஆனார். பேரரசர் கொன்ஸ்தாந்தின் கீழ்பகுதியை ஆண்ட பேரரசர் லிசினியுசுடன் மிலான் நகரில் ஒரு மாநாட்டை கூட்டி கூட்டாலோசனை செய்து வரலாற்றுப் புகழ்மிக்க மிலான் அரச சாசனத்தைப் பிரகடனம் செய்தார்.
- இச்சாசனத்தின் படி பேரரசில் வாழும் ஒவ்வொருவருக்கும் தான் விரும்பிய மதத்தை அனுசரிக்க முழு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. திருச்சபைக்கு நன்மைகளை அளித்தது. உரோமை பேரரசில் அமுலிலிருந்து வந்த கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான தடை சட்டம் நீக்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

**மிலான் அரச சாசனத்தால் கிறிஸ்தவத்திற்குக் கிட்டிய நன்மைகள் :-**

- கிறிஸ்தவர்களுக்கு இச்சாசனம் முழு மத உரிமையை அளித்தது.
- துறவிகள், குருக்கள், வரி செலுத்தத் தேவையில்லை என்றும், நன்கொடைகளையும், சொத்துத் தானங்களையும் ஆலயங்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்றும், ஞாயிறு நாட்களில் ஊதியம் பெறும் எந்தவித வேலையும் செய்யக் கூடாதென்றும், அந்நாள் பொது விடுமுறை நாளென்றும் அறிவிக்கப்பட்டன.
- சிலுவையில் அறைந்து குற்றவாளிகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது.
- ஆயர்களின் அதிகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் கிறிஸ்தவர்களிடம் மீண்டும் கொடுக்கப்பட்டன.
- திருத்தந்தைக்கு இலாத்திரன் அரண்மனையும், உபகாரச் சம்பளமும் கிடைத்தன.
- கிறிஸ்தவரல்லாதோருக்கும் மத உரிமை அளிக்கப்பட்டது.
- பலவீனம், அங்கவீனமான சிசுக்களைக் கொன்றுவிடுவது தடைசெய்யப்பட்டது.
- அடிமை வியாபாரத்தையும், அடிமைகள் கொடுமைப்படுத்தப்படுவதையும் சாசனம் தடைசெய்தது.
- கடன்காரர்களைக் கசக்கிப் பிழியாதபடி சாசனம் பாதுகாப்பளித்தது.
- கி.பி 380இல் கிறிஸ்தவம் பேரரசர் தியோடோசியசில் காலத்தில் அரச மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

**தீமைகள் :-**

- உலகியல் போக்கு அதிகரித்தது.
- மறைசாட்சி வாழ்வு அற்றுப்போனது.
- விசுவாசத் தளர்ச்சி ஏற்பட்டது.
- சில பேரரசர்கள் தமது செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்தி திருச்சபை நிர்வாகத்திலும் ஆசிரியத்திலும், சங்கங்களிலும் தலையிட்டுப் பல தொல்லைகளைக் கொடுத்தார்கள்.
- தப்பறையான போதனைகளையும், தப்பறைக் கொள்கைக் காரர்களையும் ஆதரித்தார்கள்.
- தங்கள் அதிகார மோகத்தினால் உந்தப்பட்டு திருச்சபையின் தலைவரான திருத்தந்தைக்கு உரிய இடத்தை, மரியாதையை அளிக்க மறுத்துத், திருச்சபைக்கும் தாங்களே தலைவர்கள், திருச்சபை தங்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டது என்ற கருத்தில் செயற்பட்டார்கள்.
- ஆயர்களையும், திருச்சபையின் தலைவர்களையும் தாம் விரும்பியபடி பதவி நீக்கம் செய்து, நாடு கடத்தினார்கள். தகுதியற்றவர்களைத் திருச்சபையின் ஆயராகத், தலைவராக நியமித்து திருச்சபைக்குக் கேடு விளைவித்தார்கள். தாங்கள் நினைத்தமாதிரி திருச்சபையின் சங்கங்களைக் கூட்டினார்கள்.

**கிறிஸ்தவத்தின் அனைத்துலகத் தன்மை**

- திருத்தூதரான புனித பேதுரு பரிசுத்த ஆவியின் வழிநடத்தலின் கீழ் நூற்றுவத் தலைவனாகிய கொர்னேலியுவையும் அவரது குடும்பத்தினரையும் திருமுழுக்கு அளித்துத் திருச்சபையில் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து புறவினத்தவர்கள் பெருந் தொகையாகத் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தார்கள்.
- எருசலேம் சங்கத்தில் கிறிஸ்தவம் அனைத்துலக மறை என்ற கொள்ளை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால் புறவினத்தவர்கள் மத்தியில் கிறிஸ்தவம் அவர்களின் கலாசாரப் பின்னனிகளுக்கூடாக வளர்ச்சி அடைந்தது.
- கிறிஸ்தவ மறையுண்மைகளை விளக்குவதற்காகத் திருச்சபையின் தந்தையர்கள் கிரேக்க மெய்யியல் சிந்தனை முறைகளையும் இலக்கியவாதிகளின் சிந்தனைகளையும் கலாசார அம்சங்களையும், கிரேக்க சொற்பதங்களையும் உள்வாங்கி கிறிஸ்தவ சிந்தனைகளின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தனர்.
- தொடக்க காலக் கிறிஸ்தவச் சிந்தனைகளில் கிரேக்க மெய்யியல் தாக்கங்களை அதிகம் காணக் கூடியதாக உள்ளது.

**தேர்ச்சி 6.0 :** தொடக்ககாலத் திருச்சபை எதிர்கொண்ட சவால்களை இனங்கண்டு திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த சிந்தனையாளர்களையும் துறவற வாழ்க்கை முறையையும் பின்பற்றி வாழ முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2 :** தொடக்ககாலக் கிறிஸ்தவ சபைகளில் தோற்றம்பெற்ற கோட்பாடு சிந்தனைகளையும், கலாசாரப் பண்புகளையும் அறிந்து செயற்படுவார்.

**பாடவேளைகள் :** 26

**கற்றல் பேறுகள் :**

- ஆரம்பகால கிறிஸ்தவச் சபைகளில் காணப்பட்ட கிரேக்க உரோமைய கலாச்சாரப் பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.
- கிறிஸ்தவம் சிறந்த கலாசாரப் பண்புகளை உள்வாங்கும் தன்மை கொண்டது என்பதை ஏற்றுக் கொள்வார்.
- திரட்டியத் தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- சிறந்த கலாசாரப் பண்புகளை மதித்து வாழப் பழகிக்கொள்வார்.
- திருச்சபையின் புதுப்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்கம் :**

**புதிய சிந்தனையின் தோற்றம்**

- கிறிஸ்தவம் யூத சமயத்தின் ஒரு கிளைச் சமயமாக தோற்றம் பெற்றாலும் விரைவில் தனிச் சமயமாக வளர்ச்சியடைந்து, புறவினத்தவர்கள் மத்தியில் பரவிச் சென்றது.
- யூத சமயச் சமூகச் சிந்தனைகளின் அடிப்படையில் பிறந்த கிறிஸ்தவம் புறவினத்தவர்கள் மத்தியில் பரவியதும் அவர்கள் மத்தியில் நிலவிய சிந்தனைகளின் அடிப்படையில் வளர்ச்சியடைய வேண்டியதொரு தேவை ஏற்பட்டது.
- குறிப்பாகக் கிரேக்க மெய்யியல் சிந்தனைகளையும், கிரேக்க இலக்கியங்களில் இடம்பெற்ற கருத்துக்களையும் தழுவிப் புறவினக் கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்தவக் கோட்பாட்டு விளக்கங்களை கொடுக்க முயன்றபோது கிறிஸ்தவத்தில் புதிய சிந்தனைகள் தோற்றம் பெறத் தொடங்கின.

**கிரேக்க – உரோமைய நாகரிகங்களின் தாக்கம்**

- பாலஸ்தீன நாடானது தன் வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அன்னியப் பேரரசுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன் விளைவாக அது பல அந்நியப் பண்பாட்டுக் கலாச்சாரங்களின் செல்வாக்கிற்கு ஆளாகியிருந்தது. அவற்றுள் கிரேக்க, உரோமையப் பண்பாடு, கலாச்சாரங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.
- கிரேக்க நாடு மகா அலெக்ஸ்சாண்டரின் காலத்தில் பேரரசாக எழுச்சியுற்றபோது பாலஸ்தீனா நாடும் அதன் ஆளுகைக்கு உட்பட்டது.
- கிரேக்க மொழி, பண்பாடு, மெய்யியில் போன்றவை தாம் கைப்பற்றிய நாடுகளிலும் பரப்பப்பட வேண்டும் என்று மகா அலெக்ஸ்சாண்டர் விரும்பியதால் அவை யூதர்கள் மத்தியிலும் திணிக்கப்பட்டன.
- கி.மு. முதலாம் நூற்றாண்டில் உரோமை நாடு பேரரசாக வளர்ச்சியடைந்தபோது அவர்கள் கி.மு. 63இல் பாலஸ்தீனாவைக் கைப்பற்றினர்.
- உரோமையர் தாம் கைப்பற்றிய நாடுகளில் தொடர்ந்தும் கிரேக்க மொழி, பண்பாடு, கலாச்சாரத்தையே பேணி வளர்த்தனர். ஏனெனில் கிரேக்க மொழி, மெய்யியல், இலக்கியங்கள் உலகப்புகழ் பெற்றுத் திகழ்ந்தன. எனவே அக்காலகட்டத்தில் உரோமைய நாகரிகம், கிரேக்க – உரோமைய நாகரிகம் என அழைக்கப்பட்டது.
- இப்பின்னணியில் கிறிஸ்தவம் பாலஸ்தீனாவில் தோன்றி வளர்ந்தமையால் கிறிஸ்தவத்திலும் கிரேக்க – உரோமைய நாகரிகத்தின் தாக்கத்தினைக் காண முடிகின்றது.

**கிரேக்க நாகரித்தின் தாக்கம்**

- கிரேக்கர்கள் பாலஸ்தீனாவைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழிபெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் **'செப்துவாஜிந்து'** என அழைக்கப்படுகின்றது. புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் கிரேக்க மொழியிலிலேயே எழுதப்பட்டன.

- திருச்சபையின் தொடக்க காலத்தில் உரோமைப் பேரரசின் ஸ்தோயிக்கம், நோஸ்டிக்கம், பிளேற்றோனிசம் ஆகிய மூன்று முக்கியமான கிரேக்க மெய்யில் சிந்தனைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. இத்தகைய மெய்யியல் சிந்தனைகளை அறிந்திருந்த புறவினத்தவர்களே முதலாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து திருச்சபையில் சேரத் தொடங்கினர். இவர்களுக்கு கிறிஸ்தவ மறை உண்மைகளை விளக்க இத்தகைய மெய்யியற் சிந்தனைகளும், சொற்களும் பயன்படுத்தப்பட்டன.

- உதாரணமாகத் புனித யோவான் புற இனத்தவர்களுக்கு இயேசுவை வார்த்தையாக அறிமுகம் செய்கின்றார். அதாவது தொடக்கத்தில் கடவுளோடிருந்து உலகைப் படைத்த இறைவனின் வார்த்தையே இயேசு கிறிஸ்துவாக மனித உரு எடுத்ததெனக் கூறுகின்றார்.

- மேலும் கிறிஸ்துவை உண்மையான ஒளி, உண்மையான உணவு, உண்மையான திராட்சைச் செடியென்று அழைத்து, உண்மை உலகிற்கு வந்த அவரே உண்மை உலகை நமக்கு வெளிப்படுத்தக் கூடியவரெனவும் காட்டுகின்றார்.

- அதுமட்டுமன்றி நோஸ்டிக்க கருத்துக்களுக்கு ஒத்த ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு உலகு பற்றிய கருத்துக்களையும் யோவான் நற்செய்தியெங்கும் காணமுடிகின்றது. உ+ம்: ஒளி-இருள், ஊனுடல்-ஆவி, வாழ்வு-சாவு, உண்மை-பொய்மை, விண்ணகம்-மண்ணகம், மேலிருந்து- கீழிருந்து.

- புனித பவுலின் மறையுரைகளிலும், திருமுகங்களிலும் கிரேக்கத் தாக்கத்தைக் காணலாம். புனித பவுல் இரண்டாம் தூதுரைப் பயணத்தில் ஏதென்ஸ் நகர மக்களுக்கு எப்பிக்கூரம், ஸ்தோயிக்கரின் சிந்தனையைப் பயன்படுத்தி உரையாற்றியதோடு, கிரேக்க இலக்கிய வாதியான அரேடசின் "நாம் அவருடைய பிள்ளைகள்" என்ற சொற்றொடரையும் பயன்படுத்தியிருக்கின்றார்.

- புனித பவுல் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா நிகழ்வின் பலாபலன்களை விளக்கும் போது கிரேக்கப் பண்பாட்டில் இருந்து எடுக்கப்பட்ட இரட்சணியம் (மீட்பு), ஒப்புரவாதல், பரிகாரம் செய்தல் போன்ற எண்ணக் கருத்துக்ளைப் பயன்படுத்துகின்றார்.

- மேலும் கிரேக்க அரசியற் சொற்களையும், கிரேக்க விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் சொற்களையும், சட்ட, நீதித்துறைப் பதங்களையும், அடிமை வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் சொற்களையும், மனச்சான்று, இயல்பு போன்ற மெய்யியற் சொற்களையும் பயன்படுத்துகிறார்.

**உரோமை நாகரித்தின் தாக்கம்**

- உரோமையர் கி.மு. 63இல் பாலஸ்தீனாவைக் கைப்பற்றியதோடு, பாலஸ்தீனா கி.பி. 476 வரை உரோமையப் பேரரசின் ஆட்சியின்கீழ் இருந்தது. கிறிஸ்து பிறந்து வளர்ந்ததும், அவர் ஏற்படுத்திய திருச்சபை ஆரம்பமாகி வளர்ச்சியடைந்ததும் இக்காலத்திலேயே. இவ்வகையில் உரோமைய மொழி, கட்டிடக்கலை, படிமுறை அதிகார அமைப்பு, வழிபாட்டு மரபுகள் என்பன கிறிஸ்தவத்தில் தாக்கம் செலுத்தியுள்ளன.

- உரோமைப் பேரரசுக் காலத்தில் இலத்தீன் மொழியே ஆட்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் இருந்தது. எனவே திருவிவிலியத்தை இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே திருத்தந்தை டமாஸ்கஸின் வேண்டுகோளுக்கினங்க புனித ஜெரோம் இலத்தீன் மொழியில் திருவிவிலியத்தை மொழி பெயர்த்தார். இது '**வல்கேற்'** என அழைக்கப்படுகின்றது. **வுல்கத்தூஸ்** என்பது பொதுமை, எளிமை எனப் பொருள்படும்.

- உரோமையர் கட்டிடக்கலையில் சிறந்து விளங்கினர். அவர்களுடைய கட்டிடக்கலை முறை '**பசிலிக்கா**' முறை எனப்படுகின்றது. இம்முறையைத் தழுவியே கி.பி. நான்காம் நூற்றாண்டில்

இருந்து கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டன. மேலும் ஆலயத்தை அலங்கரிக்க அவர்களுடைய சிற்பக்கலை, ஓவியக்கலை என்பனவும் பின்பற்றப்பட்டன.

- உரோமையரின் அரசியல், சமூக, நிர்வாக அமைப்பு முறையானது படிமுறையாக இருந்தது. முக்கோண அமைப்புடையதாக இருந்ததோடு பொதுமக்கள் அடிமட்டத்தில் காணப்பட்டனர். பேரரசின் பிரதிநிதியாக ஆட்சி செய்வோருக்கு அரசர், குறுநில மன்னர், சிற்றரசர், ஆளுனர், ஆணையாளரென வெவ்வேறு பட்டங்கள் கொடுக்கப்பட்டன.

- உரோமையர் சமூக அடிப்படையில் இரு பிரிவினராக இருந்தனர். அவர்கள் பற்றிசியன் (Patrician), பிளேபியன் (Flavian) என அழைக்கப்பட்டனர். பத்து வீதமாகவுள்ள பற்றிசியனே ஆட்சி அதிகாரமுடையவர்களாகவும் விளங்கினர்.

- இந்தப் படிமுறை அதிகார அமைப்பின் தாக்கத்தை நாம் திருச்சபையின் அமைப்பிலும் காண்கின்றோம். திருச்சபையிலும் திருநிலையினர், பொதுநிலையினர் என்ற வேறுபாடு வளர்ந்தது. திருச்சபையின் உச்ச அதிகாரத்தைக் கொண்டவராக திருத்தந்தை விளங்குவதோடு முக்கிய நகரத் திருச்சபையை நிர்வகிக்கும் அதிகாரம் கொண்டவராகப் பேராயரும், ஏனைய நகரங்களுக்கு ஆயர்களும், பங்குகளுக்கு குருக்கள், திருத்தொண்டர், துறவிகளென்றும் காணப்படுகின்றனர்.

- கிறிஸ்தவ வழிபாட்டிலும் உரோமைய வழிபாட்டு மரபுகளைக் காணமுடிகின்றது. கிறிஸ்தவ ஆலயங்கள் உரோமையக் கட்டிடக் கலையைத் தழுவியே அமைக்கப்பட்டன. உரோமைய இலத்தீன் மொழியே வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டது. உரோமையர் தங்கள் தெய்வங்களுக்கும், வீரர்களுக்கும், அரசர்களுக்கும் விழா எடுத்ததைப் போல் கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்கு விழாக்கொண்டாடினர். உரோமையர் மார்கழி மாதம் 25ஆம் திகதி சூரியக் கடவுளுக்கு விழா எடுத்தனர். கி.பி 366ஆம் ஆண்டில் இருந்து அத்தினமே கிறிஸ்து பிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. உரோமைய அரச, நீதிமன்ற உடைகள் கிறிஸ்தவ வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டதோடு, உரோமையர் அரசர்களுக்கும், தளபதிகளுக்கும் முழங்காலில் இருந்து மரியாதை செலுத்தும் முறையைப் பின்பற்றி வழிபடத் தொடங்கினர்.

**கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்கள்**

- யூத சமயச், சமூகக், கலாச்சாரப் பின்னணியில் தோற்றம் பெற்ற கிறிஸ்தவத்தில் புதிய சிந்தனைகள் தோன்றுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. அலெக்ஸ்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்தையும், அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்தையும் இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தைத் தழுவிய யுஸ்ரின், ரற்சியன் போன்ற சிந்தனையாளர்கள் கல்விக்கூடங்களை அமைத்து, சிறுசிறு குழுக்களுக்குக் கிறிஸ்தவ நம்பிக்கையை விளங்கிக் கொள்வதற்கு வேண்டிய அடிப்படை அறிமுகங்களைச் செய்தனர். இவை தனிப்பட்ட முயற்சியால் அமைக்கப்பட்ட மறைக் கல்விக் கூடங்களே.

- இதனை அவதானித்த நோஸ்டிக்கரும், ஏனைய மாற்றுச் சிந்தனையாளர்களும் சிறியளவில் அத்தகைய கல்விக் கூடங்களை அமைத்து தங்கள் தப்பறைகளைக் கற்பித்துப் பரப்பினர்.

  இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உரோமைய ஆயர்கள் தனியார் கல்விக்கூடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தங்கள் நிர்வாகத்தினுள் கொணர்ந்து, அவற்றைக் கிறிஸ்தவத்தில் சேர விரும்புவோருக்கு மறைக்கல்வி வழங்கும் தாபனங்களாக மாற்றியமைத்தனர்.

- அதற்குத் தேவையான சூழலும், ஆட்பலமும் உரோமையிலோ, வேறு மேலைத்தேச நாடுகளிலோ கிடைக்கவில்லை. மாறாக அவை கிரேக்க கீழைத்தேச நாடுகளிலேயே கிடைத்தன. விஞ்ஞான மரபும், மதத், தத்துவ விடயங்களில் ஆர்வமும் கொண்ட கல்வியறிவுள்ள மேற்தர வகுப்பினரைக் கொண்ட எகிப்தின் தலை நகராகிய அலெக்சாந்திரியாவும், கிரேக்க உலகின் முக்கிய நடுநிலையமாக விளங்கிய சீரியா, அந்தியோக்கியாவும் கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்களை அமைப்பதற்கு ஏற்ற இடங்களாக அமைந்தன.

**அலெக்சாந்திரிய மறைக்கல்விக் கூடம்**

- இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மறைக்கல்விக்கூடம் ஒன்று அலெக்சாந்திரியாவில் அமைக்கப்பட்டது.
- பன்ரைனஸ், அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ட், ஒறிஜின் போன்றவர்கள் இக்கல்விக் கூடத்தின் சிந்தனையாளர்களே.
- இவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக் கோட்பாட்டு விளக்கங்களுக்கு, கிரேக்க மெய்யியல் சிந்தனையின் அடிப்படையில் விளக்கங்களைக் கொடுத்தனர்.
- இம்மறைக் கல்விக் கூடத்தின் முதல் அதிபரான பன்ரைனஸ் என்பவர் 180 ஆம் ஆண்டளவில் உலகம் பற்றிய கிறிஸ்தவக் கோட்பாடுகளைக் கிரேக்க மெய்யியல் அடிப்படையில் ஆதரித்து வாதிட்டதாகக் கூறப்படுகின்றது.
- இக்கல்விக் கூடத்தின் இரண்டாம் ஆசிரியராக அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ற் பணிபுரிந்தார். அலெக்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்திற்குத் திருச்சபையால் நியமனம் பெற்ற முதல் அதிபரும், ஆசிரியருமாக ஒரிஜன் விளங்குகின்றார்.
- இவர்கள் அனைவரும் அக்காலத்தில் அலெக்சாந்தியாவில் இருந்த கல்வியறிவுள்ள சிலருக்கும், உயர்தர மாணவர்களுக்கும் தத்துவ அறிவையும் கிறிஸ்தவ மறையறிவையும் ஒருங்கே அளித்தனர்.
- இம்மறைக்கல்விக் கூடமானது சிறந்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களையும், கிறிஸ்தவ எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளது.

**அலெக்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்**

- இம்மறைக்கல்விக் கூடத்தினர் இயேசுவின் இறை இயல்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை யோவான் நற்செய்தி நூலின் அடிப்படையில் முன்வைத்தனர்.
- வாக்கு மனிதரானார், நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14) என்பது இவர்களது தத்துவக் கோட்பாடு.
- இவர்கள் இறையியலை விளக்க பிளேற்றோவின் மெய்யியல் சிந்தனைகளைப் பயன்படுத்தினர்.
- இக்கல்விக் கூடத்தினர் கிறிஸ்துவின் இறையியல்பை வலியுறுத்தி அவரை **"மனித அவதாரமெடுத்த கடவுள்"** எனக் கூறினர். இதனால் இவர்கள் கிறிஸ்துவின் மனித இயல்பைக் குறைத்துப் போதித்தனர்.
- திருவிவிலியத்திற்கு விளக்கமளிக்க உருவக முறையைப் பயன்படுத்தினர்.
- ஒரிஜன், அலெக்சாந்திரிய கிளமென்ற், தூய சிறில், டயோனிசியுஸ், அற்புதரான கிரகோரி ஆகியோர் இக்கல்லூரியைச் சேர்ந்த இறையியல் சிந்தனையாளர்கள்.

**அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடம்**

- கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்களை ஆரம்பிப்பதற்குரிய சிறந்த சூழல் அலெக்சாந்திரியாவைப் போல் அந்தியோக்கியாவிலும் காணப்பட்டது.
- அந்தியோக்கியக் குருவான லூசியன் என்பவரே இம்மறைக் கல்விக் கூடத்தின் நிறுவனர் என்பது திருச்சபைப் பாரம்பரியக் கருத்தாகும். இவர் அந்தியோக்கிய ஆயரின் அனுமதியுடனேயே இக்கல்விக் கூடத்தை ஆரம்பித்தார். இவர் எபிரேய விவிலியத்தின் உதவியுடன் கிரேக்க விவிலியமாகிய செப்துவாஜிந்தை மறுபதிப்புச் செய்தார்.

**அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்**

- இக்கல்விக் கூடத்தினர் இயேசுவின் மனித இயல்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
- இறையியலை விளக்க அரிஸ்ரோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்தினர்.
- திருவிவிலியத்தை விளக்கச், சொல்லுக்குச் சொல் விளக்கும் முறையைப் பின்பற்றினர். (நேர்ப்பொருள் உட்கருத்து)

- இறையியலில் மூவொரு கடவுளின் மூன்று ஆட்கள், கிறிஸ்துவின் தெய்வீக, மனித இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
- தார்சுசைச் சேர்ந்த ரியூடோர், மொப்சுவெஸ்ரியா எயுசேபியஸ், எருசலேம் சிறில் போன்றவர்கள் இக்கல்விக் கூடத்தினால் உருவாக்கப்பட்ட சிறந்த இறையியல் சிந்தனையாளர்கள்.
- இக்கல்லூரியைச் சேர்ந்த ஆரியுஸ் என்பவரே ''வார்த்தை கடவுளிலும் கீழானவர்'' எனக்கூறி ஆரியத் தப்பறைக்கு வழிவகுத்தார்.

**ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனைகயாளர்களும் அவர்களின் பங்களிப்பும்**

- எந்தவொரு நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் முற்போக்கான செயற்பாடுகளுக்கும் சிந்தனை பெரும் பங்காற்றியுள்ளது. உதாரணமாக கிரேக்கச் சிந்தனையாளர் பலரும் கிரேக்க நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அவ்வாறே கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் பலரும் பங்களிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- கிறிஸ்தவச் சிந்தனையின் ஆரம்பமாக புதிய ஏற்பாட்டு நூல்களைக் குறிப்பிடலாம். தூய பவுல், புனித யோவான் போன்றவர்கள் சிறந்த கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள். இவர்களுடைய ஆழமான இறையியற் சிந்தனைகளும் எழுத்தாக்கங்களுமே அனைத்து இறையியற் சிந்தனைகளுக்கும் அடிப்படையாக அமைந்தன. அவை பெரும்பாலும் கிறிஸ்துவின் வாழ்வு, போதனை, பாடுகள், மரணம், உயிர்ப்பை யூத மறையின் விசுவாசப் பின்னணியில் விளக்குவதாய் அமைந்தன.
- புனித யோவான், புனித பவுல் ஆகியோர் கிரேக்க சிந்தனைகளைப் பயன்படுத்தி இறையியல் விளக்கங்களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக:
- புனித யோவான் நற்செய்தி நூலை எழுதிய காலத்தில் கிறிஸ்தவத்தில் அதிகமான புறவினத்தவர்கள் சேர்ந்திருந்தார்கள். எனவே அவர்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் நற்செய்தி நூலை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது.
- ஆகவே கிறிஸ்துவை வாக்கு, ஒளி போன்ற கிரேக்க மெய்யியற் சொற்களையும் கருத்துக்களையும் பயன்படுத்தி அறிமுகம் செய்வதோடு, இரு உலகு போன்ற கருத்துக்களைப் பயன்படுத்தி உண்மையான உணவு, உண்மையான திராட்சைச் செடி என கிறிஸ்துவை அழைத்து உண்மை உலகிலிருந்து வந்த கிறிஸ்துவே உண்மை உலகை எமக்கு வெளிப்படுத்தக் கூடியவர் எனக் காட்டுகின்றார்.
- புனித பவுலும் தனது எழுத்துக்களிலும், மறை உரைகளிலும் கிரேக்க மெய்யியற் சிந்தனைகளையும், சொற்களையும், எண்ணக் கருத்துக்களையும் பயன்படுத்துகின்றார்.
- அவர் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பாஸ்கா நிகழ்வின் பலாபலன்களை விளக்கும் போது, கிரேக்க பண்பாட்டில் இருந்து எடுக்கப்பட்ட ஒப்புரவாதல், பரிகாரம் செய்தல், மீட்பு போன்ற எண்ணக் கருத்துக்களைப் பயன்படுத்துகின்றார்.
- மேலும் அவர் கிரேக்க அரசியற் சொற்களையும், கிரேக்க விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் சொற்களையும், சட்ட, நீதித்துறைப் பதங்களையும், அடிமை வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் பதங்களையும், மனச்சான்று, இயல்பு போன்ற சொற்களையும் பயன்படுத்துகின்றார்.
- எருசலேமில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை மிக விரைவில் உரோமையப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் எல்லாம் பரவியவேளையில் கிறிஸ்தவர்கள் உரோமையர்களால் துன்புறுத்தப்பட்டனர். இக்கலாபனைக் காலத்தில் அறிவும், பேச்சுத்திறனும் நிறைந்த பல கிறிஸ்தவச் சிந்தனையாளர்களை இறைவன் அவர்கள் மத்தியில் அனுப்பிவைத்தார்.
- அவர்கள் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுடன் கலாபனைக்காரர்கள் முன்சென்று, கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை சரியென்பதையும், அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவை என்பதையும் நியாயம் காட்டி, விளக்கி எண்பித்து அவர்கள் சார்பாகக் காப்புரைத்தனர்.
- பேரரசர்களையும், ஆளுநர்களையும், திருச்சபை மட்டிலும், கிறிஸ்தவர்கள் மட்டிலும், பொறுமையும், சகிப்புத்தன்மையும் உடையவர்கள் ஆக்கலாம் என்ற நம்பிக்கையுடன் கிறிஸ்துவேத உண்மைகளை அவர்கள் முன் தெளிவாக எடுத்துக் காட்டினர்.

- அக்காலத்தில் உரோமைய அறிஞர்கள், கல்விமான்கள் கிறிஸ்தவர்கள் நம்பும் மறையுண்மைகளை எதிர்த்துத் துண்டுப்பிரசுரங்களையும், சிறு நூல்களையும் எழுதி வெளியிட்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பொய்ப் பிரச்சாரம் செய்தனர்.
- அவர்களின் பொய்ப் பிரச்சாரத்திற்குத் தக்க பதிலளிக்கும் முறையில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் நம்பிக்கை உண்மைகளைக் காரணம் காட்டி, நியாயப்படுத்தி, நிலைநிறுத்திப் பல நூல்களை எழுதினார்கள். தப்பறைகளுக்கு எதிராகக் கிறிஸ்தவ நம்பிக்கைக் கோட்பாடுகள், படிப்பினைகளைச் சரியாக விளக்கி நிலைநிறுத்தினார்கள்.
- இவர்கள் நம்பிக்கைக் கோட்பாடுகளை நியாயம் கூறி, ஆதரித்துப் பாதுகாத்தமையால் ''**சத்தியத்தின் பாதுகாவலர்கள்**'' என அழைக்கப்பட்டனர். இவர்களுள் அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ட், ஒரிஜின், யஸ்ரின், தேர்த்தூலியன் போன்றோர் முக்கியமானவர்கள்.

**அலெக்ஸ்சாந்திரிய புனித கிளமென்ட் (கி.பி. 150-216)**

- கிறிஸ்தவத்தை அறிந்து அதைத் தழுவிய கிளமென்ட் தன் கல்வித் திறமையாலும், போதனையாலும் அதை ஆதரிப்பவரானார்.
- அலெக்ஸ்சாந்திரிய மறைக் கல்விக் கூடத்தைச் சேர்ந்த இவர் ''கிரேக்கருக்கு அறிவுரை'', ''கிறிஸ்தவ அறிமுகம்'', ''ஆன்மீக வாழ்வின் இரகசியம்'' ஆகிய மூன்று முக்கியமான நூல்களை எழுதினார்.
- இவற்றில் பல தெய்வ வழிபாட்டு முறை தவறென்பதை எடுத்துக்காட்டிக், கிறிஸ்தவம் அனைத்து மதங்களிலும் மேன்மையானது என்பதை எண்பித்து மக்களைக் கிறிஸ்தவ நம்பிக்கையில் வழி நடத்திச் சென்றார்.
- அவர்களுக்குக் கிறிஸ்தவ ஆன்மீக, ஞான வாழ்வை அறிமுகம் செய்து, நல்ல கிறிஸ்தவர் தான் ''உண்மையான அறிவாளி'' என எடுத்துரைத்தார்.

**புனித ஒரிஜன் (கி.பி. 185-254)**

- அலெக்ஸ்சாந்திரியாவில் பிறந்த ஒரிஜன் அலெக்ஸ்சாந்திரிய மறைக்கல்விக் கூடத்தில் கற்று அக்கல்லூரியின் அதிபரானார்.
- **''இரும்பு மனிதன்''** என அழைக்கப்படும் இவர் திருவிவிலியம், இறையியல், ஞான வாழ்வு போன்ற விடயங்கள் பற்றி 800 க்கும் அதிகமான நூல்களை எழுதி கிறிஸ்தவ அறிஞராக விளங்கினார்.
- பேரரசர் செப்தமூஸ் செவருஸின் கலாபனையின் போது, கிறிஸ்தவர்களைச் சிறையில் சந்தித்து, அவர்களோடு நீதிமன்றங்களுக்குச் சென்று, அவர்களைத் தைரியப்படுத்தி ஊக்குவித்தார்.
- புதிதாகச் கிறிஸ்தவ மறையைத் தழுவியவர்களை அதைரியப்படுத்துவதற்காக யூதர்களும், புற மதத்தவர்களும் கொண்டு வந்த பல்வேறு தர்க்கங்களையும் எதிர்த்து, அறிவுள்ள தர்க்கங்களை முன்வைத்தார்.
- இவர் எழுதிய நூல்களில் ''கிறிஸ்து வேத ஆதாரம்'', ''பிரமாணங்கள்'', ''ஆறு வரிசையில் வேதாகமம்'' என்பவை முக்கியமான நூல்களாகும்.
- 'கிறிஸ்து வேத ஆதாரம்' என்ற நூல் செல்சஸ் என்ற தப்பறையாளரின் நூலுக்கு எதிராக எழுதப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை நூலாகும்.
- 'பிரமாணங்கள்' என்ற நூல் முக்கியமான கிறிஸ்தவ விசுவாச உண்மைகளை விளக்கும் ஒரு இறையியல் கைநூலாகத் திகழ்ந்தது. இதில் இறைவன், பிரபஞ்சம், மனித சுதந்திரம், இறை வெளிப்பாடு பற்றிய ஆழமான கருத்துக்கள் தரப்படுகின்றன.
- 'ஆறுவரிசையில் வேதாகமம்' என்ற நூல் திருவிவிலியத்தின் ஆறு மொழி பெயர்ப்புக்கள் ஆறு சமாந்திரப் பந்திகளில் நிரல்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூல் திருவிவிலிய ஆய்வுக்கு மிகவும் உதவியாகவிருந்தது. திருவிவிலியத்தை விளக்க சொற்கருத்து முறை, உளவியல் முறை, ஆன்மீக முறை என்ற மூன்று நுட்பமுறைகள் இந்நூலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**புனித ஜஸ்ரின் (கி.பி. 100-165)**

- கிரேக்கப் பின்னணியில் வளர்ந்து ஸ்தோயிக்கச் சிந்தனைகளையும் பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் என்போரின் தத்துவக் கருத்துக்களையும் அறிந்திருந்த ஜஸ்ரின் பல ஆண்டுகளாக உண்மையைத் தேடியலைந்து இறுதியில் கிறிஸ்தவத்தில் அமைதி கண்டார்.
- மனிதரை மீட்பதற்கான உண்மை மிக்க தத்துவம் கிறிஸ்தவம் தான் என்பதை உணர்ந்தார். சிறந்த கிரேக்க அறிவாளியான ஜஸ்ரின் உரோமையில் ஒரு பிரபலமான கிறிஸ்தவ மெய்யியல் கல்லூரியை நிறுவினார். கிறிஸ்தவத்திற்கு விரோதமாகக் கூறப்பட்ட மாற்றுக் கருத்துக்களை மறுத்தும், கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் காட்டப்பட்ட பாரபட்சங்களைக் கண்டித்தும், கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும் வாழ்க்கை முறைகளும் சரியெனத் தர்க்க ரீரியாக எண்பித்தும் பல நூல்களை எழுதி, முதன்மையான பெரிய கிறிஸ்தவ எழுத்தாளர் என்ற பெயரைப்பெற்றார்.
- அன்ரோனினஸ், பியுஸ், மார்க்கஸ் அவுரேலியுஸ் என்ற பேரரசர்களுக்கு எழுதிய **"அப்போலொஜியா"**, உரோமை செனற்சபைக்கு எழுதிய ஆவணம், யூத இனத்தவருக்கு எதிராக எழுதிய **"திரைபோவுடன் உரையாடல்"** என்பன இவரின் முக்கியமான நூல்களாகும்.
- அன்ரோனியஸ், பியுஸ், மார்க்கஸ் அவுரேலியுஸ் என்ற பேரரசர்களுக்கு எழுதப்பட்ட அப்போலொஜியா என்ற நூல் கிறிஸ்தவர்களுக்கான காப்புரை நூலாகும். இந்நூலில் உரோமைய தத்துவக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் பயன்படுத்தி, உரோமையரின் பல தெய்வ வழிபாட்டை எதிர்த்துக் கிறிஸ்தவத்தின் ஒரே தெய்வ வழிபாட்டை வலியுறுத்தினார்.
- **அப்பலோஜியா** எனும் நூலில் இரு பகுதிகள் உண்டு. முதற் பகுதி கிறிஸ்தவ மறை, அதன் மதிப்பீடுகள், கிறிஸ்தவ மக்களின் நன்மைத்தனம், நம்பிக்கை பற்றிக் கூறுகின்றது. கிறிஸ்தவர்கள் கடவுள் நம்பிக்கையற்ற மக்களோ கலகக் காரர்களோ அல்லர். மாறாக அவர்கள் சமூகத்திற்குக் பெறுமதி வாய்ந்தவர்கள், பேரரசின் நன்மை கருதியே எப்பொழுதும் செயற்படுகின்றனர் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது.
- இரண்டாம் பகுதி கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைப் படிப்பினைகள், வழிபாடுகள், அருளடையாளங்கள் பற்றிப் பேசுகின்றது. இறுதியாக உரோமை அதிகாரிகள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த முன், அவர்களின் தவறுகளை நன்றாக ஆராய வேண்டுமெனவும், அநீதியான முறையில் அவர்களைத் துன்புறுத்துவதைத் தவிர்க்க வேண்டுமெனவும் அறிவுரை வழங்குகின்றது.
- **உரோமைய செனற் சபைக்கு எழுதிய ஆவணம்** என்னும் நூல் அக்காலத்தில் மூன்று பேர் தாம் கிறிஸ்தவர்கள் என்று கூறியதற்காகச் சிரச்சேதம் செய்யப்பட்ட பின்னணியில் எழுதப்பட்டது. இதில் அத்தகைய அநீதியான செயற்பாட்டை எதிர்த்து, அவ்வாறான கடும் தண்டனைகள் அளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேலும், அக்காலத்தில் அஞ்ஞானிகளால் கிறிஸ்தவர்களின் உயிர்த்தியாக வாழ்வு தொடர்பாக எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பதிலளிக்கப்படுகிறது. உயிர்த்தியாக வாழ்வு என்பது இறைவனை அடையும் மனிதருடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதல்ல. மாறாக, கலாபனைக் காலம் இறை விருப்பத்தின் பெறுபேறு, அது கிறிஸ்துவின் மறைக்குச் சான்று பகர வழங்கப்பட்ட சந்தர்ப்பமெனக் குறிப்பிட்டுக் கிறிஸ்தவ மதம் ஏனைய மதங்களை விட உயர்ந்ததென எடுத்துக்காட்டப்படுகிறது.
- **"திரைபோவுடன் உரையாடல்"** என்ற நூல் புனித ஜஸ்ரின் ஒரு யூத ராபியுடன் நடத்திய நீண்ட உரையாடலாகும். இதுவே யூத இனத்தவருக்கு எதிராக எழுதப்பட்ட முதல் காப்புரை நூலாகும். இதில் ஜஸ்ரின் யூத மதத்தில் காணப்பட்ட சில தவறான கருத்துக்களை எடுத்துக்காட்டி, இயேசு கிறிஸ்துவே எதிர்பார்க்கப்பட்ட மெசியாவென்றும், அவருடைய வருகையோடு பழைய மோசேயின் சட்டங்கள் செல்லுபடியற்றவை ஆகிவிட்டன என்றும் எடுத்துக்காட்டுகிறார். மோசேயின் சட்டம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரியது. ஆனால் கிறிஸ்துவால் அளிக்கப்பட்ட சட்டம் நித்தியமானது. அனைவருக்கும் பொதுவானது. கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பவர்களே இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட புதிய இஸ்ரயேல் மக்களாவர் என விளக்கப்படுகிறது.

- ஜஸ்ரினுடைய நூல்களில் கிறிஸ்தவ சிந்தனைகளில் ஏற்பட்ட பெரும் வளர்ச்சியைக் காணமுடிகின்றது. கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்கள் சார்பாக காப்புரைத்து கிறிஸ்தவ உண்மைகளை எடுத்துரைத்த ஜஸ்ரின், மார்க்கஸ் அவுரேலியுசின் ஆட்சிக்காலத்தில் உரோமைய தெய்வங்களுக்குப் பலிசெலுத்த மறுத்தமையால் கைது செய்யப்பட்டு கி.பி 165இல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**புனித தேர்த்தூலியன் (கி.பி. 160-240)**

- வட ஆபிரிக்காவில் கார்தேஜ் என்னுமிடத்தில் பிறந்த தேர்த்தூலியன் கிரேக்க, இலத்தின் மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, பல ஆண்டுகள் உரோமையில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார்.
- கி.பி. 195இல் கிறிஸ்தவத்தை தழுவிய இவர் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அக்காலத்தில் வட ஆபிரிக்காவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்ற கலாபனையில் கிறிஸ்தவர்கள் கொடூரமாகத் துன்புறுத்தப்படுவதை நேரில் கண்டார்.
- சுறுசுறுப்பும், ஒழுக்கமும் கொண்ட அவர் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க, அவர்களை உற்சாகப்படுத்த, கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்படுவதைக் கண்டித்து, பல நூல்கனை எழுதினார்.
- முதன்முதலில் இலத்தீன் மொழியில் கிறிஸ்தவ நூல்களை இவர் எழுதிமையால் **"இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை"** என அழைக்கப்படுகின்றார்.

**புனித இரனேயுஸ் (கி.பி. 135-202)**

- புனித இரனேயுஸ் துருக்கியில் சிமிர்னா பிரதேசத்தில் கிறிஸ்தவ குடும்பத்தில் கி.பி. 135ஆம் ஆண்டில் பிறந்தவர். இளைஞரானபோது சிமிர்னா நகர ஆயரும், திருத்தூதர் தூய யோவானின் சீடர் புனித பொலிக்காப்பை அறிந்து அவரின் சீடரானார். பின்னர் ஒரு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டு பிரான்சிலுள்ள லயன்ஸ் நகரில் பணிபுரிய அனுப்பப்பட்டார்.
- கி.பி. 177இல் லயன்ஸ் நகர ஆயராகி 25 வருடங்கள் பணிபுரிந்தார். சிறந்த அறிவும், விவேகமும் உடைய இரனேயுஸ் பலரை மனந்திருப்பி, பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையை மீண்டும் கட்டியெழுப்பினார்.
- விவிலியத்தையும், கிரேக்க மொழியையும், மெய்யியலையும் நன்கு கற்றதோடு கிரேக்க மெய்யியல் சிந்தனைகளின் அடிப்படையில் இறையியல் விளக்கங்களை முன்வைத்தார். இரனேயுஸ் கிறிஸ்தவத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட தப்பறைகளை எதிர்த்து பல நூல்களை எழுதினார். அவர் எழுதிய நூல்களில் மிக முக்கியமானது **"பேதக மறுப்பு"** ஆகும். ஐந்து பகுதிகளைக் கொண்ட இந்நூல் கிரேக்க மொழியில் நோஸ்டிக்க பேதகத்திற்கு எதிராக எழுதப்பட்டது.
- அதில் அவர் நோஸ்டிக்கத்தை விமர்சித்து, அதன் அடிப்படைக் கருத்துக்கள் தவறானவை என எண்பிக்கின்றார். கிறிஸ்தவ விசுவாச உண்மைகள் திருத்தூதர்களின் எழுத்தாக்கங்களில் இருக்கின்றனவெனக் கூறி, திருவிவிலியம், பாரம்பரியம் பற்றியக் கிறிஸ்தவ போதனைகளைத் தருகின்றார்.
- இரனேயுஸ் எழுதிய நூல்களில் ''**திருத்தூதரின் போதனையின் நிரூபணம்**'' என்ற நூலும் ஒன்று. இதன் நிமித்தம் இவரே முதல் கிறிஸ்தவ மறைக்கல்வி நூலின் ஆசிரியரெனக் கருதப்படுகின்றார். பேரரசர் செப்திமூஸ் செவரசின் கலாபனையின் போது கி.பி 203 இல் மறைசாட்சியாக மரித்தார்.

**தப்பறையான போதனைகளும் (பேதகம்) திருச்சங்கங்களும்**

- கிறிஸ்தவ நம்பிக்கைப் படிப்பினைகளுக்கு மாறான போதனைகள் பேதகமாகும்.
- திருச்சபையின் ஆரம்பத்தில் இருந்து கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு எதிராகச் சிறிய சிறிய தப்பறைகள் தோன்றின. உதாரணமாகத் தோற்றக் கொள்கை, சுவிகாரக் கொள்கை, மனிக்கேயவாதம், தோனாத்திய வாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை கிறிஸ்தவ கோட்பாட்டுப் போதனைகளைப் பெரியளவில் பாதிக்கவில்லை.

- ஆனால் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் தோன்றிய தப்பறைகளே கிறிஸ்வ நம்பிக்கைக் கோட்பாடுகளைப் பெரிதும் பாதித்தன. உதாரணமாக ஆரிய வாதம், நெஸ்தோரிய வாதம், இயுக்திக்கேய வாதம், மசதோனிய வாதம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- பாரம்பரியமான கிறிஸ்தவப் போதனையிலே மூவொரு இறைவன், மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளாகிய சுதனின் மனு உடலேற்பு, கிறிஸ்து மெய்யான இறைவனும் மெய்யான மனிதனுமாயிருக்கின்றார் என்ற மறையுண்மைகள் வலியுறுத்தப்பட்டன.
- இம்மறையுண்மைகளுக்கு எதிராக நான்காம் நூற்றாண்டில் பல தப்பறையான போதனைகள் முன்வைக்கப்பட்டன.
- இவ்வாறு கிறிஸ்தவ போதனைகளுக்கு எதிராக நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் தவறான போதகங்கள் முன்வைக்கப்பட்டபோது அவற்றை ஆராய்ந்து கிறிஸ்தவ கோட்பாடுகளை நெறிப்படுத்தத் திருச்சங்கங்கள் கூட்டப்பட்டன.
- ஆரிய தப்பறை பற்றி ஆராய்வதற்காக நிசேயா பொதுச்சங்கமும், நெஸ்தோரிய தப்பறை பற்றி ஆராயக் எபேசு சங்கமும், இயுக்திக்கேய தப்பறை பற்றி ஆராயக் கல்சடோன் சங்கமும் மசதோனிய தப்பறை பற்றி ஆராய கொன்சாந்துநோபிள் சங்கமும் கூட்டப்பட்டன.
- திருச்சங்கங்கள் திருத்தந்தையினால் கூட்டப்பட வேண்டும். திருத்தந்தை அல்லது அவரின் பிரதிநிதியே அதற்குத் தலைமை தாங்குவார். பொதுச்சங்கத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் திருத்தந்தையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**ஆரிய வாதம் - நிசேயா பொதுச்சங்கம்**

- ஆரிய வாதம் அந்தியோக்கிய மறைக்கல்வி கூடத்திலேயே உருவாகியது. அதன் தாபகரான லூசியன் **"வார்த்தை கடவுளிலும் கீழானவர்"** என்ற தப்பறையை முன்வைத்தார். அவருடைய தப்பறையை ஆதரித்தவர்களில் அலெக்ஸ்சாந்திரியாவின் குருவான ஆரியுஸ் முக்கியமானவர்.
- இவர் கிரேக்க மெய்யியலின் துணையுடன் "வார்த்தை கடவுளிலும் கீழானவர்" என்ற கோட்பாட்டை விளக்கி கிறிஸ்து கடவுள் அல்ல என்றார்.
- மேலும் கிறிஸ்து உண்மையாகவே கடவுளின் மகன் என்றால் மகன் இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். எனவே மகன் தந்தைக்கு சமமானவர் அல்ல, ஒரே பொருளானவர் அல்ல, நித்தியமானவர் அல்ல என்று போதித்து வந்தார்.
- ஆரிய வாதத்தை ஆராய கி.பி 325இல் **நிசேயா** எனும் இடத்தில் ஒரு திருச்சங்கம் கூட்டப்பட்டது. கோர்டோவா ஆயர் **கோசியசின்** தலைமையில் நடைபெற்ற சங்கத்தில் 318 ஆயர்கள் பங்குகொண்டனர்.
- திருச்சங்கத்தில் ஆரிய வாதம் கண்டிக்கப்பட்டு கிறிஸ்து கடவுள், தந்தைக்கு சமமானவர், நித்தியமானவர், ஒரே பொருளானவர் என வலியுறுத்தப்பட்டு அவை நம்பிக்கைக் கோட்பாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அத்துடன் ஆரியுசும் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டார்.
- ஆரிய வாதத்தைச் சங்கத்தில் முழுமூச்சுடன் எதிர்த்துப் போராடியவர்களில் திருத்தொண்டர் அத்தனாசியார் மிகமுக்கியமானவர்.

**நெஸ்தோரிய வாதம் - எபேசு பொதுச்சங்கம்**

- கொன்சாந்திநோபிளின் பிதாப்பிதாவான நெஸ்தோரியஸ் என்பவர் இயேசு கடவுள், மனிதன் என இரண்டு ஆட்களாக இருக்கின்றார் என்றும், மனித இயேசு கடவுள் அல்ல என்றும் கூறினார். அத்துடன் மனித இயேசுவைப் பெற்றெடுத்த தாயைத் தேவ தாய் எனக்கூற முடியாது எனவும் தப்பறையாகப் போதித்தார்.
- நெஸ்தோரியஸ்சின் தப்பறையை ஆராய்வதற்காக எபேசில் 431இல் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. இப் பொதுச்சங்கத்திற்கு ஆயர் சிரில் தலைமை தாங்கினார்.
- பொதுச்சங்கத்தில் நெஸ்தோரியசின் தப்பறை கண்டிக்கப்பட்டு அவர் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டதோடு பாரம்பரியக் கிறிஸ்தியல் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது.
- அதாவது கிறிஸ்து ஓர் ஆள், இறையாள் எனவும் அவருக்குத் தெய்வீகம், மானுடம் என்னும் இரு இயல்புகளும் ஒருங்கே உள்ளன என எடுத்துரைக்கப்பட்டதோடு மரியாள் தேவதாய் எனவும் வலியுறுத்தப்பட்டது.

**இயுக்திக்கேயவாதம் - கல்செடோன் பொதுச்சங்கம்**

- கொன்ஸ்தாந்திநோபிளில் உள்ள ஒரு சந்நியாச மடத்தின் மடாதிபதியான இயுக்திக்கஸ் ஆயர் சிறிலின் மாணவர் ஆவர். எபேசு சங்கத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஆதரித்து போதித்து வந்தார். காலப்போக்கில் கிறிஸ்துவில் ஒரு ஆள் மட்டுமல்ல ஒரு சுபாவம் மட்டுமே உள்ளது. அவருடைய மனித சுவாபம் தெய்வ சுபாவத்தில் மறைந்துவிட்டது எனப்போதித்தார்.
- கல்செடேனில் கி.பி. 451 இல் கூடிய பொதுச்சங்கம் இயுக்திக்கசைக் கண்டனம் செய்ததோடு இறைவனின் ஒரே சுதனாகிய இயேசு இறைத்தன்மையும் மனிதத்தன்மையும் கொண்டவர். இவ்விரு இயல்புகளையும் தன்னகத்தே கொண்ட இயேசு கிறிஸ்து ஆள்வகையில் ஒருவரே என எடுத்துரைக்கப்பட்டது.

**மசதோனிய வாதம் - கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம்**

- மசதோனியப் பேதகம் ஆரிய தப்பறையின் தொடர்ச்சி எனலாம். கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயரான மசதோனியுஸ் என்பவர் மகன் கடவுள் அல்ல என்றால் பரிசுத்த ஆவியும் கடவுள் அல்ல எனப் போதித்து வந்தார்.
- இத்தப்பறையைக் கண்டனம் செய்ய கொன்ஸ்தாந்திநோபிளில் கி.பி. 381இல் ஒரு திருச்சங்கம் கூட்டப்பட்டது.
- இதில் பரிசுத்த ஆவி கடவுள் என எடுத்துரைக்கப்பட்டு ‘‘பிதாவினின்றும் சுதனின்றும் புறப்படும் ஆண்டவரும், உயிர் அளிப்பவருமான தூய ஆவியையும் விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும், சுதனோடும் ஒன்றாக ஆராதனையும், மகிமையும் பெறுகின்றார். தீர்க்கதரிசிகள் வாயிலாக பேசியவர் இவரே’’ என்ற வார்த்தைகள் நிசேயா நம்பிக்கை கோட்பாட்டுடன் சேர்க்கப்பட்டன.
- தற்போது வழிபாட்டில் பயன்படுத்தப்படும் நம்பிக்கைக் கோட்பாடானது நிசேயா, கொன்ஸ்தாந்தி நோபிள் சங்கத்தீர்மானங்களை அடியொட்டி வடிவமைக்கப்பட்டது.

**தப்பறைகளால் ஏற்பட்ட விளைவுகள்**

- தப்பறைகள் கிறிஸ்தவ மறை உண்மைகளைப் பெலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதன் உள்ளார்ந்த முதிர்ச்சிக்கும் அதன் இறையியல் வளர்ச்சிக்கும் உதவியாக அமைந்தன.
- கிறிஸ்தவ நம்பிக்கைகள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்பட்டு, தெளிவாக விளக்கியுரைப்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.
- பொதுச்சங்கங்களைக் கூட்டி அனைத்து ஆயர்களின் அறிவையும், அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.
- தப்பறையான கருத்துக்கள் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தி மறையறிவை வளர்க்க உதவின.
- திருவிவிலியத்தைக் கிறிஸ்தவர்கள் ஆழமாகப் படிக்கத் தூண்டியது.
- கிறிஸ்தவ நம்பிக்கை, கோட்பாடுகள் உருவாக வழிசமைத்தன.
- கிறிஸ்தவ ஒன்றிப்புக்குச் சங்கக் கோட்பாடுகள் துணைபுரிகின்றன.

**தேர்ச்சி 6.0 :** தொடக்ககாலத் திருச்சபை எதிர்கொண்ட சவால்களை இனங்கண்டு திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த சிந்தனையாளர்களையும் துறவற வாழ்க்கை முறையையும் பின்பற்றி வாழ முற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.3 :** கீழைத்தேய மேலைத்தேய துறவறச் சபைகளின் தோற்றத்தையும் பங்களிப்பையும் அறிந்து செயற்படுவார்.

**பாடவேளைகள் :** 14

**கற்றல் பேறுகள் :**

- துறவறச் சபைகளின் தோற்றம் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- துறவற வாழ்வில் ஈடுபடுவோரை மதிக்க வேண்டும் என்பதை ஏற்பார்.
- திரட்டியத் தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- துறவிகளின் வாழ்வைப் பின்பற்றி வாழ்வார்.
- துறவிகளின் மறைபணிக்கு உதவுவார்.

**விடய உள்ளடக்கம் :**

- கிறிஸ்தவ துறவற வாழ்க்கை முறையின் தோற்றம் (வனத்துத் துறவிகள்)
- கீழைத்தேயத் துறவற சபையின் தோற்றமும் வளர்ச்சியும் (புனித பசில் , புனித பக்கோமியுஸ்)
- மேலைத்தேயத் துறவற சபைகளின் தோற்றம், வளர்ச்சி (புனித அத்தனாசியுஸ், புனித பெனடிக்ற்)

## கிறிஸ்தவ துறவற வாழ்வின் தோற்றம்

- கிறிஸ்துவின் படிப்பினைக்கேற்ப, ஆரம்பத்தில் அனேக கிறிஸ்தவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றப் போவதாகவும், பரிசுத்த தனத்தை நிறைவாக வாழப் போவதாகவும் வாக்களித்து, தத்தம் வீடுகளில் இருந்துகொண்டே திருமண வாழ்வைத் துறந்து, விரதத்துவத்தை அனுசரித்து, ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் **தபோதனர்கள்** என அழைக்கப்பட்டனர்.
- 3ஆம், 4ஆம் நூற்றாண்டிலே பேரரசில் வேத கலாபனைகள், தப்பறையான போதனைகள், பல தெய்வ வழிபாடு, சிலை வழிபாடு, ஐரோப்பியப் பழங்குடி மக்களின் படையெடுப்புக்கள், ஒழுக்க வாழ்வில் ஏற்பட்ட சீர்கேடுகள் நிறைந்த குழப்பமான சூழல் நிலவியது.
- அத்தகைய சூழலில் தங்கள் குடும்பங்களுடன் இருந்து கொண்டு கிறிஸ்தவத் தூய்மையைப் பிரமாணிக்கமாய் வாழ்தல் கடினம் என உணர்ந்த கிறிஸ்தவர்கள் உலக சுகபோக வாழ்விலிருந்து விலகித் தமது ஆன்மீக வாழ்வில் ஊட்டம் பெறத் தங்கள் குடும்பங்களையும், வீடுகளையும், நகரங்களையும், கிராமங்களையும் விட்டு விலகி எகிப்து, சீரியா போன்ற நாடுகளிலிருந்து வனாந்தரங்களுக்கும், பாலைவனங்களுக்கும் சென்றனர்.
- அங்கு அவர்கள் சிறிய கொட்டில்கள், குடிசைகள் அமைத்தும், குகைகளில் தங்கியும் எவருடனும் எத்தொடர்புமின்றி தனித்தனியே ஏகாந்தத்தில் வாழ்ந்தனர்.
- இவ்வாறு வனாந்தரத்தில் தனிமையில் வாழ்ந்தவர்கள் “**ஏகாந்திகள்**” அல்லது “**வனத்துப் பிதாக்கள்**” என அழைக்கப்பட்டனர்.
- துறவற வாழ்வின் வளர்ச்சியிலே பல்வேறு படிகள் காணப்பட்டன. அவை: **தபோதனர், ஏகாந்திகள்** அல்லது **வனத்துப் பிதாக்கள், துறவிகள், துறவற குழுக்கள்** என்பனவாகும்.
- கிறிஸ்து பாலைநிலத்தில் நோன்பிருந்து உண்ணாமல் குடியாமல் செலவிட்ட காலத்தையும் திருமுழுக்கு யோவான் பாலைநிலத்தில் வாழ்ந்த காலத்தையும், இறைவாக்கினர் எலியாசின் வாழ்க்கை அம்சங்களையும், அன்றைய துறவிகள் தமது வாழ்க்கைக்கு முன்மாதிரிகையாக்கிக் கொண்டனர்.
- திருமுழுக்கு யோவானின் பாலைநில வாழ்க்கையைப் போன்று (மத் 3:14) உடல் இச்சைகளைத் துறந்து எளிய உடைகளை அணிந்து தப வாழ்வை வாழ்ந்தனர்.

- தொடக்ககாலத்தில் தனித்து வாழ்ந்த துறவியர் கீழ்படிதல், ஏழ்மை, கற்பு ஆகிய நெறிகளைக் கடைப்பபிடித்தனர். ஆனால் சட்டத்தினால் அல்ல மாறாக, இயேசுக் கிறிஸ்துவை முழுமையாகவும் பிளவுப்படா இதயத்தோடும் பின்பற்ற விரும்பினர். ஏனெனில் இயேசு ஏழையாக இருந்தார். கீழ்படிந்து வாழ்ந்தார், கற்பைக் கடைப்பிடித்துக் காட்டினார்.
- துறவிகள் கிறிஸ்தவ வாழ்வை முழுமையாக வாழ முயற்சித்தனர். எனவே துறவிகள் கிறிஸ்தவர்களைக் கவர்ந்தார்கள்.
- துறவிகள் கிறிஸ்தவத்திற்கு அளித்த புதிய போக்கு கீழைத்தேய, மேலைத்தேயக் கிறிஸ்தவ துறவற வாழ்வின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் துணையாக இருந்தது.
- வனத்துப் பிதாக்களில் தேப்ஸ் சின்னப்பர், எகிப்திய அந்தோனியார் என்பவர்கள் முக்கியமானவர்கள்.
- திருச்சபையின் பாரம்பரியத்தின்படி **தேப்ஸ் சின்னப்பர்** முதல் துறவியாகக் கருதப்படுகிறார். சிறந்த கல்விமானும், செல்வருமான அவர் அக்காலத்தில் நடைபெற்ற கலாபனையால் பாதிக்கப்பட்டுத் தன்னுடைய உடமைகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு இறைபராமரிப்பில் நம்பிக்கையுடன் செங்கடலுக்கு அருகிலிருந்த ஒரு வனாந்தரத்திற்குச் சென்று இறக்குமட்டும் அதாவது 90 வருடங்கள் ஒரு குகையில் வாழ்ந்தார். தனது 113ஆவது வயதில் இறந்தார்.
- தேப்ஸ் சின்னப்பரின் சீடரான **எகிப்து அந்தோனியார்** கிறிஸ்தவத் துறவற வாழ்வின் நிறுவுனராகக் கருதப்படுகின்றார். பதினெட்டு வயதில் பெற்றோரை இழந்து அனாதையானார். துறவறத்தால் கவரப்பட்டு தன் சொத்துக்களையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து 269ஆம் ஆண்டு பாழடைந்த கல்லறைக்குச் சென்று கடும் தபத்திலும், வேதாகம வாசிப்பிலும், கைவேலையிலும் ஈடுபட்டு வாழ்ந்தார். ஏகாந்திகளின் ஆன்மீக வாழ்வை ஒழுங்கமைத்து அவர்கள் பொது வாழ்வில் ஐந்து வருடங்களாக உதவி செய்து 105 வயதில் இறந்தார்.

## கீழைத்தேய துறவற வாழ்வின் தோற்றமும் வளர்ச்சியும்

### புனித பக்கோமியுஸ்

- வனத்து துறவறத்தார் மத்தியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. அதாவது தனித்து வாழ்ந்தவர்கள் குழுமமாக வாழ ஆரம்பித்தனர். இக்கூட்டு வாழ்வு சேர்ந்து செபிக்கவும், நோன்பு கடைபிடிக்கவும், கூடி உழைக்கவும் உதவியது.
- போர் வீரராயிருந்த பக்கோமியுஸ் முதன் முதலாக துறவறக் குழும வாழ்வை கி.பி. 320இல் தொடங்கினார்.
- கடவுளின் திட்டத்தை ஆழ்ந்து அறிந்தார். இவ்வேளையில் தான் துறவறக் குழும வாழ்வு பற்றிய உள்ளுணர்வு ஏற்பட்டது. அருகிலிருந்த சக ஏகாந்திகளை ஒன்று சேர்த்து எகிப்திலிருந்த தபன்னிசி என்ற கிராமத்தில் ஒரு துறவறக் குழுவாழ்வை ஆரம்பித்தார்.
- அத்துறவிகளுக்கு ஒழுங்கு விதிகளை எழுதி வேலை, வேதாகம வாசிப்பு, தியானம், செபவாழ்வுக்கு அவர்களை அழைத்தார். துறவற வாழ்வின் வரலாற்றிலே அதுவே துறவற வாழ்வுக்கென எழுதப்பட்ட முதல் ஒழுங்கு நூலாகும்.
- எகிப்து வனாந்திரத்திலே வாழ்ந்த ஏகாந்திகள் அனைவரையும் ஒன்று சேர்த்து நைல் நதிக்கரையில் எட்டு மடங்களை அமைத்து அவர்களைத் துறவறக் குழுக்களாக வாழவைத்தார்.
- தன் சகோதரியின் வேண்டுகோளுக்கிணங்க பெண்களுக்கும் ஒரு மடத்தை அமைத்துக் கொடுத்தார். இதுவே துறவறமட (ஆச்சிரம்) வாழ்வின் ஆரம்பமாகும்.
- புனித எகிப்து அந்தோனியார், பக்கோமியுஸ் முறையிலான துறவற வாழ்வு எகிப்து புனித கிலேரியன் வழியாக முதலில் சீரியாவுக்கும் பின்னர் சின்ன ஆசியா, மெசபத்தேமியா, கிரீஸ், பலஸ்தீனா போன்ற கீழைத்தேய நாடுகளுக்கும் பரவியது.
- புனித பக்கோமியுஸ் கி.பி 345ல் இறந்த பொழுது அவரோடு ஏற்கனவே இணைந்து கொண்ட பல நூற்றுக்கணக்கான துறவிகளுடன் பெண்களுக்கான துறவற மடமும் ஆரம்பிக்கப்பட்டது.

**புனித பசில்**

- கீழைத்தேய நாடுகளுகளில் துறவற வாழ்வுக்கான ஒழுங்குகளை எழுதிக் கொடுத்து உதவியவர் புனித பசில் ஆவார்.
- புனித பசில் துறவறக் குழும வாழ்வைச் சரியானது என்று உணர்ந்தார். அவருடைய பார்வை இறையியல் சார்ந்தது. மனிதர் ஒருவர் சமூகத்திலேதான் தங்களை முழுவதும் நிறைவுபடுத்த முடியும் என்பதை உணர்ந்திருந்தார்.
- கப்பதோசியா பிதாக்களில் ஒருவரான புனித பசில், செசாரையாப் பட்டணத்தில் கி.பி. 339ஆம் ஆண்டு பிறந்தார்.
- அவர் எகிப்து, சீரியா, பாலஸ்தீனாவில் உள்ள வனாந்தரங்களுக்குச் சென்று அங்கிருந்த சந்நியாசமடங்களைத் தரிசித்து தானும் தனிமையில் வாழ்ந்து செபத்திலும் வேதாகமப் படிப்பிலும் வேலையிலும் காலத்தைக் கழித்தார்.
- அவர் கப்பதோசியாவில் அயிரிஸ் ஆற்றங்கரை ஓரத்தில் பொன்ரஸ் என்ற இடத்தில் ஒரு துறவற மடத்தை ஆரம்பித்தார்.
- வேதாகமப் படிப்பிற்கும் துறவியர் குழுவுக்கும் பயன்படக்கூடிய கைத்தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- அவரின் சீடர்களின் தொகை பெருகவே அவர்களைக் குழுக்களாக பிரித்து சிறிய துறவறக் குழுக்களை அமைத்தார்.
- துறவற வாழ்வுக்குரிய ஒழுங்கு விதிகளை எழுதிக்கொடுத்து அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். 35 சட்டங்களை கொண்ட ஒரு சிறிய சட்டத் தொகுப்பையும், 313 சட்டபிரிவுகளையும் கொண்ட பெரிய சட்டத் தொகுப்பையும் இத் துறவிகளுக்கு எழுதிக் கொடுத்தார்.
- போதிப்பதிலும், மக்களை மனம் திருப்புவதிலும், திருச்சபையைத் தாபிப்பதிலும் முன்னின்று உழைத்தார். இவர்கள் வழியாகவே திருச்சபை இன்று உலகெங்கும் பரவி ஒரு பெரிய விருட்சமாக காட்சியளிக்கின்றது
- மேலும் அவர் தூய ஆவியானவரையும், திருச்சபையையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்துள்ளார். இதனால் துறவிகளின் வரங்களைப் பற்றிக் கூறியுள்ளார். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வரங்கள் கொடுக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் பொதுப் பணிக்காக வழங்கப்படுகின்றது என்ற உண்மையும் வலியுறுத்தினார்.
- புனித பசில் முதல் துறவி இறையிலாளராக விளங்கினார் என்பதைக் குறிப்பிட வேண்டும். அவருடைய பார்வையில் உண்மையான துறவறமடம் கிறிஸ்தவ வாழ்வின் மையம் ஆகும். ஏனெனில் கீழ்படிதலோடு ஒழுங்கு முறையாக வாழும் ஒரு துறவி கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கின்றார் என்பதை உணரச் செய்தார். புனித பசில் கீழைத்தேய துறவறத்திற்குத் தந்தையாக இருந்தார்.
- 'படைப்பின் ஆறு நாட்கள்', ''தூய ஆவியானவர்'', ''ஆரிய பேதகர் யூனோமியசிற்கு எதிராக'' என்ற நூல்களை எழுதினார்.
- இவர் கப்பதோசியாவின் ஒளி மட்டுமல்ல உலகின் ஒளி எனவும் போற்றப்படுகின்றார். திருச்சபை இவர் திருநாளை ஜனவரி 2ஆம் திகதி கொண்டாடுகின்றது.

**மேலைத்தேய துறவறச் சபை**

- கீழைதேயத்தில் ஆரம்பித்த துறவற வாழ்வு எகிப்து அந்தோனியாரின் சீடரான புனித அத்தனாசியுஸ் வழியாக மேலைத்தேய நாடுகளுக்கும் பரவியது. கி.பி 335இல் திரேவ் நாட்டுக்கு நாடு கடத்தப்பட்ட போது மேல் நாடுகளில் துறவற வாழ்க்கையை அறிமுகம் செய்தார்.
- மேல் நாட்டில் துறவற வாழ்வைப் பரப்பியவர்களுள் புனித பெனடிக்ற், இங்கிலாந்தில் கன்ரபறி எனும் இடத்தை சேர்ந்த அகுஸ்தினார், கசியன் போன்றோர் முக்கியமானவர்கள்.

**புனித பெனடிக்ற்**

- இவர் இத்தாலியில் ஒரு பிரபுக் குடும்பத்தில் கி.பி 480ல் பிறந்து உரோமையில் கல்வி பயின்றார். உரோமையின் சீர் குலைந்த நிலையைக் கண்ட அவர் பயந்து தனது 16 ஆவது வயதில் அப்பென்னிலுள்ள ஒரு குகையில் வன வாசம் சென்றார்.
- இவர் துறவற வாழ்க்கைக்கென சட்ட ஒழுங்குகளை எழுதிக் கொடுத்தார்.
- புனித பெனடிக்ற் மேலைத்தேய துறவற வாழ்வுக்குரிய சட்ட ஒழங்குகளை எழுதிக் கொடுத்தவர். அதில் 73 சிறிய அதிகாரங்கள் இருந்தன. அவை கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்வை இவ்வுலகில் வாழ்வதற்குரிய ஆன்மீக அறிவுரைகளையும் துறவற குழுமத்தைச் சிறப்பாக நடத்தவது பற்றிய நிர்வாக அறிவரைகளையும் கொண்டுள்ளது.
- உரோமையிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால் உள்ள சுபியாக்கோ என்ற இடத்தில் 12 துறவற அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றின் பொது கண்காணிப்பாளராகச் செயற்பட்டார். கெசினோ மலையிலுள்ள அவரது துறவற மடம் உலகப் புகழ் பெற்றது.
- அவருடைய சபைத் துறவிகள் செபத்திலும், வேதாகமப் படிப்பிலும் கை வேலையிலும் தங்கள் நேரத்தைச் செலவிட்டனர். ''**செபமும் வேலையும்**'' அவர்களின் விருது வாக்காகும்.

**புனித அத்தநாசியுஸ்**

- இவர் எகிப்தில் உள்ள அலெக்சாந்திரியாவில் கி.பி 296இல் பிறந்தார். அலெக்சாந்திரிய ஆயரான அலெக்சாந்திரின் கீழ் முதலில் திருத்தொண்டராகவும் பின்பு செயலாளராகவும் கடமையாற்றினார். அவர் ஒரு திருத்தொண்டராக இருந்த காலத்திலே ஆரியப் பேதகத்திற்கு எதிராக முழுமூச்சாகப் போராடித் திருச்சபையின் மரபுப் போதனையை நிலைநாட்டினார்.
- கி.பி 325இல் இடம்பெற்ற நிசேயா பொதுச்சங்கத்தில் தம் ஆயருடன் சென்று பங்கெடுத்தார். அங்கு அவர் இன்னும் ஒரு திருத்தொண்டராக இருந்த போதிலும் நிசேயா சங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இறை வல்லுனராகத் திகழ்ந்தார்.
- தமது நாடுகடத்தலின் போது புனித எகிப்து அந்தோனியாருடன் தங்கியிருந்து ஆரியருக்கு எதிராக கிறிஸ்தவ மரபுக் கொள்கைகளை ஆதரித்துப் பல நூல்களை எழுதினார். இவற்றுள் அவர் பேரரசர் கொன்ஸ்தாந்தினுக்கு எழுதி அனுப்பிய ''இறைவார்த்தை மனுவுருவாதல்'', ''கொன்ஸ்தாந்தினுக்கு அறிவுரைகள்'', ''ஆரிய பேதகத்திற்கு எதிரான உரையாடல்'', ''வேத விளக்கம்'', ''ஆரியரின் வரலாறு'',''புனித வனத்து அந்தேனியார் வரலாறு'' என்பன முக்கியமானவை.
- அவர் திருச்சபையின் விசுவாசத்தின் தூணாகவும், கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும், கிறிஸ்தவ உண்மைகளின் கலங்கரை விளக்காகவும் திகழ்ந்தார்.

**ஐரோப்பாவில் ஏற்படுத்திய தாக்கம்**

- வனத்துப் பிதாக்களின் வழியாக ஆரம்பிக்கப்பட்ட துறவற வாழ்க்கை முறைகள் கிறிஸ்தவத்திற்கு அளித்த புதிய நோக்கு கீழைத்தேய மேழைத்தேய கிறிஸ்தவத்தின் மறுமலர்ச்சிக்குப் பெருந்துணையாக அமைந்தது. முதலில் துறவற வாழ்வினால் கிறிஸ்தவத்தின் தூய்மை பாதுகாக்கப்பட்டது. தூய வாழ்வுக்கு அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு துறவிகளின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாகவும், தூண்டுகோலாகவும், சவாலாகவும் அமைந்தது. எப்படியும் வாழலாம் என்றிராமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.
- அவர்கள் மக்களை நாகரிகப் படுத்துவதிலும் மனம் திருப்புவதிலும் ஆர்வத்துடன் உழைத்தனர். சுயநலம் அற்ற பிறர்நல வேலைகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்கள் நலனுக்காக அயராது உழைத்தனர்.
- ஏழைகளுக்கு உணவளித்துத் துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்தார்கள். பாடசாலைகளை அமைத்து அவை வழியாக மாணவர்களுக்குக் கல்வி அறிவு அளித்தார்கள். வைத்தியசாலைகளில் நோயாளிகளைப் பராமரித்து ஆதரவற்றவர்களுக்கு உதவினார்கள். அநாதை மடங்களையும் வயோதிப மடங்களையும் அமைத்து உதவியற்றோர்க்கு உதவி செய்தனர். திருவிவிலிய

ஆராய்ச்சியிலும், ஆழமாகக் கற்பதிலும், கற்பிப்பதிலும் ஈடுபட்டு மக்களுக்கு நற்செய்தியைப் போதித்தார்கள்.

- ஐரோப்பிய பழங்குடி மக்களை (மிலேச்சரை) மனம் திருப்புவதிலும் அவர்களை சீர்திருத்துவதிலும் மகத்தான சேவை செய்தனர். பிற நாடுகளுக்குச் சென்று மறைபரப்பும் பணியில் ஈடுபட்டு நற்செய்தி போதிப்பதிலும் மக்களை மனந்திருப்புவதிலும் கிறிஸ்தவத்தைத் தாபிப்பதிலும் முன்னின்று உழைத்தார்கள். இவர்கள் வழியாகவே கிறிஸ்தவம் இன்று உலகெங்கும் பரவி ஒரு பெரிய விருட்சமாகக் காட்சியளிக்கின்றது.
- மிலான் சாசனத்தால் அழிந்து போன ஆன்மீக வாழ்வு துறவற வாழ்வினால் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. கிறிஸ்தவத்திற்கு ஒரு புதிய துறவற வாழ்க்கை முறையைக் கொடுத்து அதனூடாகப் புதிய வாழ்க்கை முறைமை ஆரம்பிக்கப்பட்டது. மறைசாட்சிகளின் வாழ்வின் மாற்றுவாழ்வு முறையாகத் துறவற வாழ்வு காணப்பட்டது.

**உசாத்துணை நூல்கள்**


- FR. P.C. Thomas, ***A Compact History of the Popes,*** Panta, Bompay, India.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***புளிப்பு மாவு,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***விதையொன்று வளர்கிறது,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
- ஞா.பிலேந்திரன், ***கிறிஸ்தவமும் நாகரிகங்களும்,*** நல்லாயன் நிலையம், திருநெல்வேலி 2008.

**தேர்ச்சி 7.0 :** மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய பாங்கினை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** முன் மத்திய காலக் கிறிஸ்தவத்தின் பரம்புதலையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- ஐரோப்பியப் பழங்குடி மக்களின் மனமாற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- புனித பெனடிக்ற் சபைத் துறவிகள் பழங்குடி மக்களின் மனமாற்றம், நாகரிகப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- புனித பெனடிக்ற் துறவற சபையினரின் பணிகளைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- துறவற சபையினரால் மேற்கொள்ளப்படும் பணிகளை முன்மாதிரியாகக் கொள்வார்.
- துறவறத்தாரின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்கம் :**

**7.1.1 முன் மத்திய காலக் கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் (5 – 8ஆம் நூற்றாண்டு வரை)**

- மிலான் அரச சாசனப் பிரகடனத்துடன் (313) திருச்சபை சுதந்திரம் பெற்றிருந்தாலும் அக்காலத்தில் தோன்றிய தப்பறைகள், ஐரோப்பியப் பழங்குடி மக்களின் படையெடுப்புக்கள் திருச்சபையின் வளர்ச்சியைத் தாமதப்படுத்தின. எனினும் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் சிறந்த மறைபரப்பாளரின் அயராத உழைப்பினால் திருச்சபை ஐரோப்பிய நாடுகளில் பரவியது.
- இக்காலத்தில் திருச்சபையானது ஐரோப்பாவில், பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற பல நாடுகளில் பரவியமை பற்றி விரிவாக நோக்குவோம்.

**5ஆம் நூற்றாண்டில்...**

- மத்திய காலத்தில் திருச்சபை ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் பரவிய அதேவேளையில் அதன் வாழ்விலே பல நிகழ்வுகளும் மாற்றங்களும் நடைபெற்றன.
- ஐந்தாம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசின் ஆட்சிச் செயற்பாடுகள் அரசியல் ரீதியாகக் கிழக்கு, மேற்கு எனும் வகையில் இரண்டாகப் பிளவுபடத் தொடங்கியது.
- பேரரசின் கிழக்குப் பகுதி கிரேக்க மொழி, கலை, கலாசாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த வேளையில் மேற்கில் இலத்தீன் மொழி, கலை, கலாசாரம் முக்கியத்துவம் பெற்றது.
- பேரரசர் கொன்ந்தாந்தின் கொன்ந்தாந்திநோபிளைத் தலைநகரமாக்கினார். பேரரசரும், நிர்வாகமும் கொன்ந்தாந்துநோபிளில் இருந்தமையால் கொன்ந்தாந்துநோபிள் பேராயர் அரசியல் செல்வாக்கு உடையவராக மாறினார்.
- இவ்விதமான சுதந்தரப் போக்கு கீழ் நாடுகளில் பலவிதமான தப்பறைகள் உருவாகுவதற்கு வழி வகுத்தன. எனினும் அவற்றை எதிர்கொள்ளத் திருச்சபையினால் கூட்டப்பட்ட பொதுச்சங்கங்கள் இறையியல் எண்ணக்கருக்களிலும், போதனைகளிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தின.

**6ஆம் நூற்றாண்டில்....**

- அக்காலக் கட்டத்தில் பேரரசின் மேற்குப்பகுதி ஐரோப்பியப் பழங்குடியினரின் படையெடுப்புகளுக்கும், கிழக்குப் பகுதி இஸ்லாமியரின் ஆக்கிரமிப்புக்களுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.
- அக்காலத்தில் புனித பெனடிற் துறவற சபையினர் சிறந்த மறைத் தூதுவர்களாகவும், கிறிஸ்தவ விசுவாசத்தின் போதகர்களாகவும், மேற்குக் கலாசார வளர்ச்சியின் முன்னோடிகளாகவும் செயற்பட்டு நாகரிக வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்தினர்.
- இச்சபையைச் சேர்ந்த திருத்தந்தை பெரிய கிரகோரியார் "**இங்கிலாந்தின் திருத்தூதர்**" என்று புகழ் பெற்றவர். இவர் சேலியன் மடத்தின் தலைமைத் துறவியான அகுஸ்தீனாரையும் 40 துறவியரையும், இங்கிலாந்தில் திருமறையைப் போதித்திட கி.பி. 596இல் உரோமாபுரியிலிருந்து அனுப்பினார்.
- இவர்கள் **கால்நாடு** சென்ற போது திருத்தந்தையின் கட்டளைப்படி அகுஸ்தீனார் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- பின் அவர்கள் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து தானெட் என்ற தீவில் இறங்கினர். அக்காலத்தில் கென்ற் பகுதியை எதல்பர்ட் என்ற அரசர் ஆட்சி செய்தார்.
- அவரது மனைவி பெர்தா ஆர்வமுள்ள கிறிஸ்தவப் பெண். எனவே எதல்பர்ட் அரசர் அவர்களை வரவேற்று, தன் நாட்டில் கிறிஸ்தவத்தைப் போதிக்க அவர்களுக்கு அனுமதி அளித்தார். அதுமட்டுமன்றி அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து கொடுத்தார்.
- கான்டர்பரி பட்டணத்திற்கு வெளியேயிருந்த புனித மாட்டின் ஆலயத்தையும் அவர்களுக்கு அளித்தார். 597ஆம் ஆண்டு தூய ஆவியானவரின் திருநாளன்று அரசர் எதல்பர்ட் திருமுழுக்குப் பெற்றார். அவரைப் பின்பற்றி பெரும்பாலான மக்களும் திருமுழுக்குப் பெற்றனர்.
- தொடர்ந்து பெரிய கிரகோரியார் அகுஸ்தீனாரை இங்கிலாந்து நாட்டின் ஆயராக நியமித்தார். அத்துடன் இன்னும் பல துறவிகளை இங்கிலாந்தில் பணிபுரிய அனுப்பி வைத்தார்.
- **புனித பற்றிக்** அயர்லாந்து சென்று கிறிஸ்தவ வாழ்க்கை முறையை வளர்த்தார். அவரே அயர்லாந்தை மனந்திருப்பியமையால் "**அயர்லாந்தின் திருத்தூதர்**" என்று அழைக்கப்படுகின்றார்.
- அவர் திருத்தந்தை செலஸ்தீனின் அனுமதியுடன் ஆயர் ஜெர்மானுசால் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு மறைப்போதகப் பணிபுரிய அயர்லாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு அலஸ்த்தர் பட்டணத்தில் மிகப்பலம் படைத்த தலைவனாயிருந்த திக்சுவை மனந்திருப்பினார்.
- சாபால் ஆலயத்தை அமைத்தார். மியாத் என்ற இடத்தில் அயர்லாந்து அரசரின் உறவினரான கோனாவிற்குத் திருமுழுக்கு அளித்தார். தனது கோட்டைக்கருகாமையில் பத்திரிசியார் ஆலயத்தையும் அமைத்தார்.
- திருச்சபை விரைவில் அயர்லாந்தில் பரவுவதற்குச் சுதேசக் குருக்களின் அவசியத்தை உணர்ந்து தகுதியானவர்களைத் தெரிந்தெடுத்து குருத்துவப்பயிற்சிக்கு அக்சேராவிற்கு அனுப்பினார். அவருடைய போதனையாலும், அயராத முயற்சியினாலும் திருச்சபைக்கு அங்கிருந்து பல குருக்களும், துறவியரும் கிடைத்தனர்.
- அவர் இறக்கும் போது அயர்லாந்தை ஒரு சிறந்த கத்தோலிக்க நாடாக விட்டுச் சென்றாரென்பது குறிப்பிடத்தக்கது.
- இக்காலத்தில் திருமறையைப் போதிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் நூற்றுக்கணக்கான துறவியர் அயர்லாந்திற்குப் புறப்பட்டனர். இவர்களுள் முக்கியமானவர் **"ஸ்கொட்லாந்தின் திருத்தூதர்**" என்று அழைக்கப்படும் **புனித கொலம்பா** ஆவார்.
- கொலம்பா பல துறவிகள் இல்லங்களின் அமைப்பாளராக விளங்கினார். இந்த இல்லங்களில் மிகவும் சிறந்து விளங்கியது டெரி துறவியர் மடமாகும்.
- தனது 42வது வயதில் இங்கிலாந்தின் வடபகுதியில் அஞ்ஞானிகளாய் வாழ்ந்த பிக்டுகளை மனந்திருப்ப அயர்லாந்தை விட்டு புறப்பட்டார். பிக்டுகளின் அரசன் ஸ்கொட்லாந்தின் மேற்குக் கடற்கரையிலிருந்த அயோனா தீவில் பணிபுரிய அனுமதியளித்தார்.

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் இவர் “கொலம்பாவின் குடும்பம்” என்று அழைக்கப்பட்ட ஒரு துறவியர் மட ஐக்கிய ஒன்றியத்தினை அமைத்துப் பல்வேறு இடங்களில் துறவற மடங்களைக் கட்டினார்.
- இன்வெர்னஸ் என்ற இடத்தில் ஆட்சி புரிந்த பிக்டு அரசன் புரூட் என்பவரின் அரச சபைக்கு சென்று அரசனைச் சுற்றியிருந்த டுரூயிட்ஸ் என்ற துன்மார்க்கக் குருக்களுடன் போட்டியிட்டு தனது தூய வாழ்வாலும், சாதுரியத்தாலும் பல புதுமைகளாலும் வெற்றி பெற்று புரூட்டையும் பல குடிமக்களையும் திருமறையில் சேர்த்தார். அவர் இறக்கும் போது வட ஸ்கொட்லாந்து முழுவதும் கிறிஸ்தவ நாடாக இருந்தது.
- இவர் இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து என்ற நாடுகளில் மட்டுமன்றி ஸ்பானியா, கால், இத்தாலி, உரோமாபுரி ஆகிய இடங்களிலும் வணக்கத்திற்குரியவராகப் போற்றப்படுகின்றார்.

**7ஆம் நூற்றாண்டில்....**

- இக்காலத்தில் திருச்சபைக்கும் பேரரசுக்குமிடையே சில மோதல்கள் ஏற்பட்டாலும் பொதுவாக நல்ல நெருங்கிய உறவு நிலவியது.
- அதன் விளைவாகக் கிறிஸ்தவ இராச்சியமொன்று (Christendom) உருவாகியது. இதனால் பல நன்மைகள் இடம் பெற்ற போதிலும் சில தீமைகள் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கன. (உதா. திருச்சபையின் தலைவர்கள் நியமனத்தில் பேரரசர்கள் அநாவசியமாகத் தலையிடுதல் போன்றன)
- இக்காலத்தில் பிரசித்தி பெற்ற பல தூயவர்களும், கல்விமான்களும் உருவாகினர். கிறிஸ்தவக் கலையில் (இலக்கியங்கள், கட்டிட நிர்மாணக் கலைகள்), இறையியலில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. புதிய கிறிஸ்தவர்கள் பலர் திருச்சபையில் இணைந்தனர்.
- இஸ்லாம் மதமும் அதனுடைய போர்களும் பேரரசுக்குப் பேரழிவை ஏற்படுத்தின. இது கிறிஸ்தவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமியர் வன்முறைகளைப் பயன்படுத்தி, பல நாடுகளைக் கைப்பற்றி மக்களை பலவந்தமாகத் தம் மதத்தில் சேர்த்தனர். அத்துடன் அவர்களது போர்ப்பலமும் உரோமைப் பேரரசில் அழிவை ஏற்படுத்தியது.
- பல கீழைத்தேய நாடுகள் அவர்களால் கைப்பற்றப்பட்டன. ஐரோப்பாவைக் கைப்பற்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்களால் முடியவில்லை.

**8ம் நூற்றாண்டில்....**

- எட்டாம் நூற்றாண்டில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த மக்களின் மனமாற்றப்பணிகள் இன்னும் அதிகமாக முன்னேற்றமடைந்தன.
- இக்காலத்தில் “**ஜேர்மனியின் திருத்தூதர்**” என்று அழைக்கப்பட்ட புனித பெனடிக்ற் சபையைச் சேர்ந்த **புனித பொனிபாஸின்** தலைமைத்துவத்தின் கீழ் ஜேர்மனியிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் திருச்சபை பரவி எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் முழு ஐரோப்பாவும் கிறிஸ்தவ நாடாக மாறியது.
- இவர் துறவியர் மடம் சென்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட போது அம்மடத்தின் பொறுப்பும் அவரிடம் வழங்கப்பட்டது, ஆனால் பிரிசியா நாட்டு மக்களை மனந்திருப்ப வேண்டுமென்ற பேராவலினால் அம்மடத்திலிருந்து வெளியேறி பிரிசியா நாட்டு அரசர் ராட்போர்ட்டின் அனுமதியுடன் மறைப் போதகப் பணியில் ஈடுபட்ட போது அப்பணி முழுதாய்ப் பயனளிக்காததால் தன் மறை மையத்தைத் தெரிவு செய்யவும், திருத்தந்தையின் ஒப்புதலையும் ஆசீரையும் பெறவும் 718இல் உரோமை சென்றார்.
- திருத்தந்தை 2ஆவது கிரகோரியார் அவரை அன்புடன் வரவேற்று வின்பிரட் (பொனிபாசின் இயற்பெயர்) உரோமைத் திருச்சபையுடன் கொண்டிருந்த ஐக்கியத்தின் அடையாளமாக மறைசாட்சி பொனிபாசின் பெயரை அவருக்கு இட்டு துருங்கியர் மத்தியில் பணிபுரிய அனுப்பினார்.

- பிரிசிய அரசர் ராட்போட் இறந்ததைக் கேள்வியுற்ற பொனிபாஸ் மீண்டும் அங்கு திரும்பச் சென்று பணி புரிந்தபோது அங்கு பல கிறிஸ்தவ ஆலயங்கள் எழுப்பப்பட்டன. பெருந்திரளான பிரிசியர் திருச்சபையில் இணைந்தனர்.
- பின்னர் அவர் ஜேர்மனிக்குச் சென்று எஸீயர் என்ற இனத்தவரிடையே பணி செய்து பலரை மனந்திருப்பினார். மறைமாவட்டத்தின் முக்கிய நகரமாகிய அமோனோபரோவில் ஒரு துறவியர் மடத்தைக் கட்டினார்.
- அதன்பின் சாக்சேனியர் நாட்டு எல்லையை அடைந்து அங்கும் நூற்றுக்கணக்கானோரைத் திருமறையில் இணைத்தார்.
- பொனிபாசின் கடின மறைபரப்புப் பணியையும் அதன் வெற்றிகளையும் அறிய வந்த திருத்தந்தை 2ஆவது கிரகோரியார் 722இல் இவரை ஆயராகத் திருநிலைப்படுத்தினார். மீண்டும் சென்று பணியாற்றிய போது அஞ்ஞானிகள் கூட்டமாகத் திருமறையில் இணைந்தனர்.
- பிரிட்ஸ்லாரில் வேற்றுக் கடவுளொருவருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்த ஓக்கு மரத்தை மக்கள் முன்னிலையில் துணிவுடன் வெட்டி கிறிஸ்தவக் கடவுளே உண்மையான கடவுள் என்பதை மக்களுக்கு உணர்த்தினார். அதைக்கண்ட மக்கள் பெருமளவில் திருமறையில் இணைந்தனர்.
- மீண்டும் துருங்கியா சென்று ஒரு துறவற மடத்தைக் கட்டி அதை ஆயரின் பணித்தளமாக ஏற்படுத்தினார். அங்கு திருத்தந்தை 3வது கிரகோரியார் அவரைப் பேராயராக நியமித்து புதிய ஆயர்களைத் தேர்ந்தெடுத்து திருநிலைப்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கினார்.
- மறைபரப்பு வேலைகள் அதிகமாயிருந்தபடியால் தன் தாய் நாட்டிற்குக் கடிதம் எழுதியபோது பல துறவிகளும், கன்னியரும் அவருக்கு உதவி புரிய வந்தனர். அவர்களில் ஒருவராகிய பொனிபாசின் மருமகளான **லியோபா** மிக ஆர்வத்துடன் பணிபுரிந்தமையால் "**ஜேர்மனியின் பெண் திருத்தூதர்**" என்று அழைக்கப்பட்டார். அவருடைய உதவியுடன் மூன்று துறவியர் இல்லங்களையும் பாடசாலைகளையும் நிறுவினார்.
- பின்னர் பேராயர் பொனிபாஸ் திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமனம் பெற்று நியூஸ்திரியாவில் புதிய மறைமாவட்டங்களை ஏற்படுத்தி, அங்கு காணப்பட்ட சீர்கேடுகளை அகற்றி சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். இவ்விதம் பிரான்ஸ், ஜேர்மனிய திருச்சபை வெற்றிநடை போட வழிவகுத்தவர் புனித பொனிபாசே ஆவார்.
- அக்காலத்தில் திருத்தந்தைக்கும் பிரான்சிய அரசருக்குமிடையில் கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு பிரான்ஸ் நாட்டு அரசர் உரோமையில் திருத்தந்தையால் முடி சூட்டப்பட்டு, அபிஷேகம் செய்யப்படுவது வழக்கத்திற்கு வந்தது.
- பெரிய சாள்ஸ் மன்னன் திருச்சபையையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும், மக்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் பல முயற்சிகள் எடுத்தார்.
- இக்கால கட்டத்தில் வெளியிலும் மற்றும் உள்ளும் ஏற்பட்ட தாக்கங்களால் கிழக்கிலிருந்து வந்த வைக்கின்ஸ் கோத்திரத்திரத்தாரினதும், ஹங்கேரிய கிழக்கு, தெற்குத் திசைகளிலிருந்து வந்த இஸ்லாம் ஆக்கிரமிப்பாளர்களினாலும் பேரரசனின் பலம் நலிவடைந்து காணப்பட்டது.
- இதனால் பெரிய சாள்ஸ் மன்னன் காலத்தில் பேரரசில் நிலவிய அமைதியும் ஒற்றுமையும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இந்த மேற்குப் பேரரசின் வீழ்ச்சியானது மேற்குக் கிறிஸ்தவத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாயமைந்தது.

### 7.1.2 ஐரோப்பியப் பழங்குடி மக்களின் மதமாற்றம்

- ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் உரோமைப் பேரரசு எல்லாப் பக்கத்திலும் ஐரோப்பியப் பழங்குடியினரின் (ஜெர்மனிய கோத்திரங்களின்) படையெடுப்புகளுக்கும் மிரட்டல்களுக்கும் ஆளானது.
- உரோமைப் பேரரசிற்கு வெளியே வாழ்ந்த இனத்தினர்கள் அக்காலத்தில் ஐரோப்பியப் பழங்குடியினர் அல்லது ஜேர்மனியக் கோத்திரத்தினர் என்று அழைக்கப்பட்டனர்.
- இவர்கள் சீர்திருத்தம் அற்றவர்களாய், பண்பாடு அற்றவர்களாய், முரட்டுத்தனம் உள்ளவர்களாகவும், தங்கள் கோத்திர தெய்வங்களை வணங்குபவர்களாகவும் இருந்தனர். இவர்களின் வாழ்க்கை முறை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

- இத்தகைய சூழ்நிலையில் திருச்சபைக்கு இந்த நாகரிமடையாத மக்களை மனந்திருப்பி கல்வியறிவு ஊட்டி, நற்பழக்கங்களைப் பழக்கிப் படிப்படியாகச் சீர்திருத்தமடையச் செய்ய வேண்டிய தேவை இருந்தது.
- இந்நிலையில் புனித பெனடிக்ற் சபைத் துறவிகள் ஜெர்மானிய இனத்தவரை நாகரிகம் பெற்ற மக்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர்.
- துறவறமடங்கள் மறைத் தூதுப்பணியின் மையங்களாகத் திகழ்ந்தன.
- ஐரோப்பியப் பழங்குடியினரின் மதமாற்றம் கிறிஸ்தவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் மேற்கு ஐரோப்பாவின் பரம்பலுக்கும் வித்திட்டது.

#### 7.1.2.1 புனித பெனடிக்ற் துறவற சபையின் பங்களிப்பு

- புனித பெனடிக்ற் சபையினரின் துறவற வாழ்க்கையால் கிறிஸ்தவத்தின் ஆன்மீகம், பரிசுத்ததனம் பேணப்பட்டு ஊட்டம் பெற்றது. பரிசுத்த தனத்திற்கு அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்குத் துறவிகளின் வாழ்வு ஒரு முன் மாதிரிகையாய் அமைந்தது.
- குறிப்பாக ஐரோப்பிய பழங்குடி மக்களை மனந்திருப்பி, நாகரிகப்படுத்துவதில் பற்றுறுதியுடன் இருந்தனர்.
- துறவற இல்லங்களால் அளப்பரிய சமூக சேவைகள் ஆற்றப்பட்டன. சுயநலம் பாராமல் பிறர் நலப்பணிகளில் ஈடுபட்டனர். பசியாயிருப்பவர்களுக்கு உணவளித்தல், நோயாளிகள், வயோதிபர்களைப் பராமரித்தல், சிறுவர்களுக்குக் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். வேதாகமத்தை நன்கு ஆழமாக ஆராய்ந்து படித்து மக்களுக்குப் போதித்தார்கள்.
- கைத்தொழில் செய்வதில் மக்களுக்கு முன்மாதிரிகையாயிருந்து தொழிலின் மகத்துவத்திற்குப் புத்துயிர் கொடுத்தனர்.
- புனித பெனடிக்ற் எழுதிய துறவற வாழ்க்கைக்குரிய சட்ட ஒழுங்குகள் மிகக் கடுமையான செப, தப, ஒறுத்தல் முயற்சிகளைத் தவிர்த்து அளவானவையாக, நடுநிலையானவையாக, மனித இயல்பிற்கு ஏற்றவையாக, ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவையாக அமைந்தன.
- இவர் எழுதிய துறவற வாழ்க்கைக்குரிய சட்ட ஒழுங்குகள் மேற்கத்தேய நாடுகளில் மிகச் செல்வாக்குள்ள துறவற வாழ்க்கைக்குரிய சட்ட ஒழுங்குகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- புனித பெனடிக்ற் சபையின் முன்மாதிரிகையான உடல் உழைப்பு ஐரோப்பிய நாகரிகம் வளர்ச்சியடைவதற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.
- துறவற வாழ்வின் வரலாற்றில் துறவிகள் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழாது சமூகத்துடன் இணைந்து சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் மக்களின் ஆன்மீகத்திற்காகவும் தொண்டாற்றும் வகையில் துறவற முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.
- இவ்விதத் துறவற வாழ்வின் அமைப்பு முறைக்கு மேலைத் தேசத்தில் புனித பெனடிக்ற் துறவற சபையினர் பொறுப்பாக விளங்கினர்.

### 7.1.3 ஐரோப்பிய பழங்குடி மக்களை நாகரிகப்படுத்தல்

#### 7.1.3.1 கல்விப்பணி

- உரோமைப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு ஜேர்மனிய இனக் குழுவினர் அல்லது கோத்திரங்களின் படையெடுப்பு ஒரு காரணமாகவிருந்தது. இக்கோத்திரங்களின் மக்கள் நாடோடிகளாகவும், நாகரிகமடையாதவர்களாகவும் வாழ்ந்தனர்.
- உரோமைப் பேரரசின் வீழ்ச்சியுடன் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று உரோமை நகரைக் காப்பாற்றிய ஆயர்களும், துறவிகளும் ஐரோப்பியப் பழங்குடி மக்களைச் சீர்ப்படுத்துவதிலும் நெறிப்படுத்துவதிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.
- ஐரோப்பியப் பழங்குடியினரின் மன்னர்கள் இவ் ஆயர்களின் தலைமைத்துவத்தை ஏற்றதோடு ஆயர்களைத் தங்கள் சமாதானத் தூதுவர்களாகவும், ஆலோசகர்களாகவும் ஏற்றுக்கொண்டனர்.
- இம்மக்களுக்கு நாகரிக வாழ்வைக் கற்றுக் கொடுப்பது, கிரேக்க உரோமைய நாகரிகத்தின் நற்கூறுகளை அளிப்பது, அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது ஆயர்களின் முக்கிய பணியாக விளங்கியது.

- ஆயர்களின் இப்பணியில் துறவிகளும் பெரும் பங்களிப்புச் செய்தனர். இதில் புனித பெனடிக்ற் துறவிகளின் பணிகள் வரலாற்று ஆசிரியர்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன.
- பழங்குடி மக்களைச் சீர்திருத்தவும் கிறிஸ்தவ மறையில் உருவாக்கவும் கல்வி இன்றியமையாத ஊடகமாக இருந்தது.
- இம்மக்களுக்குக் கல்வி அளித்து நாகரிகப்படுத்தும் பணியை துறவறச் சபையினர் மேற் கொண்டனர். துறவிகள் மடங்களால் நடத்தப்பட்ட பாடசாலைகள் மூலமாகக் கல்வி வழங்கினர்.
- நாகரிகமடையாத மக்களின் இளம் வயதினருக்குத் துறவிகள் இலத்தீன் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக் கொடுத்தனர்.
- துறவிகள் தங்கள் முயற்சியில் பொறுமையுடனும், அர்ப்பணிப்புடனும் சோர்வின்றி உழைத்திடாவிடின் இம்மக்கள் நாகரிகமடைதல் கேள்விக்குரிய விடயமாக அமைந்திருக்கும். மேலும் கிரேக்க உரோமைய நாகரிகங்களின் பல சிறப்பம்சங்கள் அழிந்து போயிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.
- அடிப்படையில் துறவிகள் "என்னைப் பின் செல்" என்ற வார்த்தையும், கிறிஸ்துவின் மேல் தாங்கள் கொண்டுள்ள அன்பையும், அவர் தம் அயலவர் மேல் காட்டுவதாக உணர்த்துவதற்கே இவ்வாறு வாழ்ந்தனர்.
- துறவற மடங்களின் பாடசாலைகளில் விவிலியம், பண்டைய இலத்தீன் சிறப்பு இலக்கியங்கள், திருச்சபைத் தலைவர்களின் ஆக்கங்கள் பாடநூல்களாகக் கற்பிக்கப்பட்டன.
- புனித பெனடிக்ற் தமது துறவிகள் நன்கு கற்றவர்களாக இருக்க வேண்டும் என விரும்பினர். இளம் வயதில் துறவற மடங்களில் சேர்ந்து துறவற வாழ்வு மேற்கொள்பவர்கள் சிறிதளவாவது துறவற மடப்பாடசாலைகளில் கற்க வேண்டியது அவசியமானதாக இருந்தது.
- இப்பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களைக் கையெழுத்துப் பிரதியெடுப்பதில் துறவிகள் பெரும் பங்களிப்புச் செய்தனர்.
- அச்சியந்திரங்கள் இல்லாத காலத்தில் துறவிகள் கையெழுத்தினால் பிரதியெடுத்தார்கள். மேலும் இவற்றை எழுதும் தோலையும் இவர்களே பதனிட வேண்டியிருந்தது.
- பிரதியெடுக்கும் வேலையை மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். தவறுகள் இல்லாமல், உள்ள விடயங்களை விட்டுவிடாமல், புதிதாக ஒன்றையும் இணைத்துக் கொள்ளாமல் இதை நுட்பமாகமேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாக இருந்தது.
- கசியோடோறஸ் எனும் மடாலயச் சிந்தனையாளர் துறவிகள் கடுமையான வேலைகளை வயல்களில் செய்வதிலும் பார்க்க பண்டைய இலக்கியங்கள், பழைய ஏட்டுச் சுவடிகளை பிரதியெடுத்தல், பொருத்தமான உடல் உழைப்பாகத் துறவிகளுக்கு அமையும் எனத் தெரிவித்தார்.
- இக்கருத்தை ஏற்றுக்கொண்ட புனித பெனடிக்ற் துறவற மடப்பாடசாலைகள் பல நூற்றாண்டுகளாக போட்டியாளர்களே இல்லாத அறிவுத்துறை மையங்களாகப் பிரதியெடுக்கும் நிலையங்களாகத் திகழ்ந்தன. பிற்காலத்தில் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கும் புனித பெனடிக்ற் துறவிகளே வழிவகுத்தனர்.

### 7.1.3.1 உழைப்பு

- புனித பெனடிக்ற் துறவற சபையினர் செபமும் வேலையும் என்னும் கருத்தைத் தமது விருதுவாக்காகக் கொண்டிருந்தனர்.
- உரோமானியர்கள் உடல் உழைப்பை இழிவான செயல் எனவும் அடிமைகளே இவற்றை செய்ய வேண்டும் எனவும் கருதினார்கள்.
- இந்நிலையில் வேலை பற்றிய சரியான உளப்பாங்கை மக்கள் மத்தியில் உருவாக்குவதும், உழைப்பின் மேன்மையைப் பற்றி உணர்த்துவதும் துறவிகளின் முக்கிய பணியாகக் கொள்ளப்பட்டது.

- புனித பெனடிக்ற் தாம் தயார் செய்த துறவிகளுக்கான ஒழுங்குகளில் துறவிகள் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் முறையில் சட்டங்களை எழுதியிருந்தார். இதனால் துறவிகள் கடும் உழைப்பை மேற்கொண்டனர். இவ்வாறாகத் துறவிகள் செயற்பட்டமை உடல் உழைப்பின் மேன்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.
- இக்கருத்தியல் மேலைத் தேசமெங்கும் உடல் உழைப்புப் பற்றி உயர்ந்த மதிப்பை உருவாக்கியுள்ளது.
- செபமும் வேலையும் என்பது துறவிகளுக்கு அவர்கள் தம் வாழ்வில் ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் செயற்பாடுகள் உடல் உழைப்பையும் மறைபரப்புதலை ஏற்படுத்தும் பணியையும் கொண்டிருந்தன.
- ஐரோப்பாவின் விவசாயத்துறைக்கு புனித பெனடிக்ற் சபைத் துறவிகள் வழங்கிய மற்றுமோர் பங்களிப்பு நாகரிமடையாத மக்களை விவசாயிகளாக மாற்றியமையாகும்.
- நாடோடிகளாக வாழ்ந்த மக்களை நாகரிகப்படுத்தி துறவற மடங்களுக்கு அண்மித்த பகுதிகளில் குடியமர்த்தி தங்கள் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியாளர்களாக அமர்த்தினர்.
- நாடோடி வாழ்விலும் மேலாக நிரந்தரக் குடிசைகளை அமைத்து விவசாயம் செய்வது உயர்ந்த வாழ்வு என்பதை ஐரோப்பியப் பழங்குடி மக்களுக்கு உணர வைத்தனர்.
- துறவிகள் பெரும்பாலான காடுகளை அழித்து அவற்றைச் சிறந்த விவசாய நிலங்களாக மாற்றியுள்ளனர். இவர்கள் ஐரோப்பாவில் விவசாயத்தை வளர்த்தவர்கள் என்பது பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.
- விவசாயத்துடன் தொடர்புடைய எல்லா வேலைகளையும் கற்றுக் கொடுத்தனர். மேசன் வேலை, தச்சு வேலை என்பவற்றுடன் ஏனைய சிறு கைத்தொழிலையும், உலோக வேலையையும் கற்றுக் கொடுத்தனர். துறவிகளின் மடங்கள் ஐரோப்பிய பழங்குடி மக்களுக்குத் தொழில்நுட்பப் பாடசாலைகளாக மாறின.
- துறவிகள் எல்லாத் தொழிலையும் சமமாகக் கருதினர். இவர்கள் கால்நடை வளர்த்தல், பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல், உழுதல், சூடடித்தல், பட்டறைகளில் வேலை செய்தல், நெசவு செய்தல், திராட்சை ரசம் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர்.
- இவ்விதம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவர்கள் தம்மைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தனர்.
- மக்களால் உயர்ந்தவர்களாகக், கல்விமான்களாகக் கருதப்பட்ட துறவிகள் இவ்வாறு உடல் உழைப்பில் ஈடுபட்டமை பெரும் எடுத்துக் காட்டாகக் கொள்ளப்பட்டது.
- புனித பெனடிக்ற் சபையினர் ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன் மாற்றுப் பயிர்ச்செய்கை போன்ற புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தினர்.
- ஐரோப்பியப் பழங்குடி மக்களுக்கு உழைப்பின் மேன்மையை உணர்த்தியது துறவிகளின் பெரும் சாதனையாகும்.
- இத்துறவியர் ஐரோப்பிய நாகரிகத்திற்கு ஆற்றிய பாரிய பணியை வரலாற்று ஆசிரியர் ‘‘அல்பிரட் லப்பிள்’’ மூன்று சின்னங்கள் வழியாகக் குறிப்பிடுகின்றார்.

  **சிலுவை** : இத்துறவிகள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், நற்செய்தியின் விழுமியங்களையும், இம்மக்களுக்கு வழங்கி ஆன்மீக நிலையில் இவர்களை வளப்படுத்தியவர்கள்.

  **நூல்** : இம்மக்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொடுத்ததுடன் கல்வி வழங்கி இவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தியவர்கள்

  **ஏர்** : நாடோடிகளாக அலைந்து திரிந்த மக்களை ஓரிடத்தில் தங்கி வாழ்வதற்கும் நிலத்தைப் பயிரிட்டு நாகரிகத்தைக் கற்றுக்கொள்ளவும் வழி செய்தவர்கள்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. மேற்கு ஐரோப்பிய கோத்திரங்களின் தாக்கம் பற்றிக் கலந்துரையாடலை நடத்துவார்.
2. இக்கலந்துரையாடலில் மேலெழுந்த விடயங்களின் வழியாக அறிக்கை ரீதியான வெளியீடொன்றினை ஆக்குவார்.
3. நாகரிகமயமாக்கலுக்குத் துறவற சபைகள் ஆற்றிய பங்களிப்பை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்.
4. புனித பெனடிக்ற் சபையினரால் மேற்கொள்ளப்பட்ட கல்விப்பணி, உழைப்பு என்பன பற்றி தேடியறிந்து ஆக்கம் ஒன்று வெளியிடுவார்.

**உசாத்துணை நூல்கள்:**


- ஞா.பிலேந்திரன், ***கிறிஸ்தவமும் நாகரிகங்களும்,*** நல்லாயன் நிலையம், திருநெல்வேலி 2008.
- சேவியர் இருதயராஜ், ***துறவற வாழ்வின் வரலாறு,*** அருட்கடல், சென்னை, 2008.
- M.S.J. தங்கசாமி, ***திருச்சபை வரலாறு,*** நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- John Laux, ***Church History,*** The Book and Publishers Illinois, 1989.
- Alfred Lapple, ***The Catholic Church,*** A Brief History, Munchen, 1982.

**தேர்ச்சி 7.0 :** மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய பாங்கினை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** மத்திய யுகத்தின் இருண்ட கால கிறிஸ்தவ வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த இரவலர் சபைகள் ஆற்றிய பங்களிப்பைத் தெரிந்து செயலாற்றுவார்.

**பாடவேளைகள் :** 16

**கற்றல் பேறுகள் :**

- மத்திய கால கிறிஸ்தவ சபையின் பிளவுகளுக்கான காரணிகளைத் திரட்டுவார்.
- திருச்சபையைச் சீர்ப்படுத்தும் நோக்கில் இரவலர் சபைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதை ஏற்பார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருச்சபையின் மறுமலர்ச்சிக்காக உழைப்பார்.
- குழுச்செயற்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கெடுப்பார்.

**விடய உள்ளடக்கம் :**

**7.2.1 இருண்டகாலம்**

- கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி இருண்ட காலம் என்று அழைக்கப்படுகிறது.
- இக்காலத்தில் திருச்சபை கத்தோலிக்க திருச்சபை, உரோமைப் பேரரசு என இரண்டு சமூக நிறுவனங்களால் ஆட்சி செய்யப்பட்டது. இவ்விரண்டு நிறுவனங்களின் போட்டிகளினால் பல்வேறு முரண்பாடுகளும் யுத்தங்களும் ஏற்பட்டன.
- இக்காலத்தில் மேலைத்தேயத் திருச்சபையானது மத்திய யுகத்தில் ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர்களை நியமித்தல், வரி வசூலித்தல், போர்வீரர்களைப் பலப்படுத்தல், பணம் சொத்துக்களைத் திரட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டது.
- இப்பின்னணியில் கீழைத்தேய, மேலைத்தேய திருச்சபைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்து பிளவுகளுக்கு வழி வகுத்தன.
- இஸ்லாமியரின் எழுச்சியும், மோதல்களும் வளர்ந்து சிலுவைப் போர்கள் இடம் பெற்றன.
- திருத்தூதர் காலத்திலிருந்த புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு, மறைந்து ஆயர்கள், குருக்களின் ஆடம்பரமான வாழ்வு, பணப் பேராசை, சுயநல வாழ்வு, திருச்சபையின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக இருந்தன. ஆதலால் இக்காலம் திருச்சபையின் இருண்ட காலமாகக் கருதப்படுகிறது.
- திருச்சபையின் தலைவர்களின் நியமனத்தில் அரசர்களின் தலையீட்டினால் சில பிரச்சினைகள் எழுந்தன. அவையாவன:
    - மறை தொடர்பான அதிகாரம், அரசருக்கு உரியதா? திருத்தந்தைக்கு உரியதா?
    - திருத்தந்தையர் சமயத் தலைவர்களா அல்லது நாட்டின் அரசர்களா?
- மேலும் திருச்சபையின் அதிகார, உயர் பதவிகள் பணத்திற்கு விற்கப்பட்டு, வாங்கப்பட்டன. சில வேளைகளில் ஒரு மறைமாவட்டத்திற்கு மூன்று ஆயர்களும், அல்லது ஒரு ஆயருக்கு மூன்று மறைமாவட்டங்களும் இருந்தன. ஆயர்கள் தங்கள் மறை மாவட்டங்களுக்களுக்கு ஒரு முறையேனும் செல்லாது வெளியேயிருந்து அதை நிர்வகித்தார்கள். அதன் விளைவாக மக்களின் மதவாழ்வு, மறை அறிவு, ஒழுக்கம் இல்லாமல் போயின.
- பரிபூரண பலன்கள் விலைக்கு விற்கப்பட்டன.
- திருச்சபையின் உயர் பதவிகள் பணத்திற்கு விற்கப்பட்ட படியால் அதிகமான பதவிகள் பணம் படைத்த பிரபுக்கள் வசமே இருந்தன.

- குருக்களில் பலர் போதிய குருமடப்பயிற்சி பெறாதவர்களாகப், போதிய இறையியல் பயிற்சி இல்லாதவர்களாகக் காணப்பட்டார்கள்.
- திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுத் திருத்தந்தையர் ஆயர்கள், குருக்கள், துறவிகளில் தூய ஆன்மீக வாழ்வு உருவாகுமென விசுவாசிகள் எதிர்பார்த்தனர். ஆனால் திருத்தந்தையிடமோ, ஏனைய தலைவர்களிடமோ ஆழமான ஆன்மீகம், புனிதத் தன்மை, அப்போஸ்தலிக்க ஆர்வம் இல்லாததால் அவர்களால் மற்றவர்களைக் கட்டுப்படுத்தவோ, தவறுகளைக் கண்டிக்கவோ, குற்றங்களைத் தண்டிக்கவோ முடியாதிருந்தது.
- திருச்சபையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென உருவாகிய துறவற சபைகள்கூடத் துறவறத்தையும் விசுவாசத்தையும் கைவிட்டுப் பணம் சேகரிப்பதிலும் அரசியல் இலாபத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.
- மக்கள் மத்தியில் தோன்றிய மறுமலர்ச்சி பல புதிய கருத்துக்கள், சிந்தனைகளைத் தோற்றுவித்தன. அதன்படி பிறர் கூறும் கருத்துக்களை மற்றவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை, தாங்களே சிந்தித்து முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து மேலோங்கியது. அதனால் மதக் கோட்பாடுகள், படிப்பினைகள் சர்ச்சைக்குரியவையாயின.
- இக்காலக் கட்டத்தில் விசுவாசிகள் திருச்சபை மட்டில் பெரும் அதிருப்தி அடைந்திருந்தனர். தங்கள் ஆன்மீகத் தலைவர்களில் அவநம்பிக்கை கொண்டிருந்தனர்.
- அதேவேளை திருச்சபையில் நிலவிய பலவிதமான அலங்கோலங்களையும், சீர்கேடுகளையும் திருத்தி ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த சில குருக்கள், துறவியர் எழுந்த போதும் அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.
- அதற்கெனக் கூட்டப்பட்ட சங்கங்களும் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் அதற்கு வேண்டிய திருத்தந்தையர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 7.2.2 கீழைத்தேய, மேலைத்தேய கிறிஸ்தவ சபைகளின் பிளவுகளும் விளைவுகளும்

- திருச்சபையின் வரலாற்றிலே கி.பி. 1054இல் கிழக்கு மேற்கு சபைகளுக்கிடையே பிளவு ஏற்பட்டு திருச்சபை கீழைத்தேய, மேலைத்தேயச் சபை என இரண்டாகப் பிரிந்தது. இப்பிரிவினைக்கு
  - கிறிஸ்தவ சபையின் தலைமைத்துவம் பற்றிய கருத்து வேறுபாடும்
  - நம்பிக்கைக் கோட்பாடுகளும் முக்கிய காரணங்களாயின.
- உரோமைய திருத்தந்தையின் தலைமைத்துவம் முழுத் திருச்சபைக்கும் பொதுவானதென மேற்கு சபையினரும், உரோமைய ஆயரும், கொன்தாந்திநோபிள் பிதாப்பிதாவும் சமமான தலைமைத்துவம் உடையவர்கள் எனக் கீழ்ச் சபையினரும் கருதினர்.
- மேலும் கொன்ந்தாந்துநோபிள் பிதாப்பிதா நிசேயா விசுவாச அறிக்கையில் "பீலியோ குவே" (Filioque- மகன்) என்னும் சொற்றொடரைச் சேர்த்துக் கொண்டது இன்னொரு காரணமாகும்.
- தூய ஆவியானவர் பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படும் ஆவியானவர் என்ற அத்தனாசியாரின் கருத்தை மேற்கத்தேய திருச்சபையினர் ஏற்றுக் கொண்டனர்.
- தூய ஆவியானவர் பிதாவினின்று புறப்பட்டுச் சுதனூடாக வருபவர் (Perfilium–பெர்விலியம்) என்ற கருத்தைக் கீழைத்தேயத் திருச்சபையினர் ஏற்றுக் கொண்டனர்.
- இத்தகைய முரண்பாடுகளால் திருச்சபையில் பல பிரச்சனைகளும் பிளவுகளும் ஏற்பட்டபோது திருத்தந்தை 9ஆம் லியோ காலத்தில் கொன்ந்தாந்திநோபிள் பிதாப்பிதாவான மைக்கல் செருலாரியஸ் என்பவர் திருப்பலியில் திருத்தந்தையின் பெயர் சொல்லி மன்றாடுவதை நீக்கினார். திருத்தந்தையைப்போல் தானும் சரிநிகர் என்று உரிமை கோரினார். அத்துடன் நகரிலுள்ள எல்லா இலத்தீன் முறை ஆலயங்களையும் மூடினார்.
- திருத்தந்தை தனது இரண்டு பிரதிநிதிகளை ஒப்புரவை ஏற்படுத்துவதற்குக் கொன்ஸ்தாந்திநோபிள் அனுப்பினார். ஆனால் ஒப்புரவு முயற்சி கைகூடாததால் பிரதிநிதிகள் 1054 யூலை 16ஆந் திகதி பிதாப்பிதா செருலாரியசை திருச்சபையிலிருந்து புறம்பாக்கினார்.
- இதிலிருந்து தான் கீழைத்தேயத் திருச்சபை இறுதியாக உரோமைத் திருச்சபையிலிருந்து பிரிந்தது.

**விளைவுகள்**

- திருச்சபையானது கீழைத்தேயம், மேலைத்தேயம் எனப் பிளவுற்றதால் கிறிஸ்தவ கலாசாரத்தில் பல தாக்கங்கள் ஏற்பட்டன அவையாவன:
  - தொடர்பாடலுக்குரிய தனிமொழி பயன்பாடு அதிகரித்தது.
  - கலாசார தனித்துவங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. (கிரேக்க, லத்தீன் கலாசாரம்)
  - கீழைத்தேயத்திலும், மேலைத்தேயத்திலும் கிறிஸ்தவம் வேறுபட்ட வரலாற்றுப் பின்புலங்களில் வளர்ந்தன.
  - கீழைத்தேய, மேலைத்தேயக் கலாசாரப் பின்னணியில் வேறுபட்ட வழிபாட்டு முறைமைகள் வளர்ந்தன. வேறுபட்ட இறையியல் கோட்பாடுகள் தோன்றி வளர்ந்தன.

**7.2.3 சிலுவைப் போர்**

- இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்பானப் புனிதத்தலங்களான ஜெருசலேமையையும் அதனைச் சுற்றியுள்ள நகரங்களையும் துருக்கியடமிருந்து மீட்பதற்கு மேற்குலக கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளே சிலுவைப் போர்களாகும்.
- காலிப் ஓமாரும் அவரது வாரிசுகளும் புனித நாட்டில் கிறிஸ்தவர்கள் இயேசுவின் வாழ்க்கையால் புனிதமடைந்த தலங்களைத் தரிசித்திட தடை விதிக்கவில்லை.
- இவர்கள் இயேசுவின் திருக்கல்லறையையும் இதர புனிதத்தலங்களையும் கண்காணிக்கும் பொறுப்பினைக் கிறிஸ்தவர்களிடமே அளித்திருத்திருந்தனர்.
- எருசலேம் பலஸ்தீனா போன்ற இடங்களுக்குத் திருப்பயணம் செய்வது பாவப்பரிகாரத்திற்கு ஏற்ற நற்செயலாகக் கருதப்பட்டமையால் ஐரோப்பிய மாநிலங்களிலிருந்து புனித பூமிக்குத் திருப்பயணம் செய்ய ஏராளமான திருப்பயணிகள் வந்த வண்ணம் இருந்தனர்.
- இக்காலகட்டத்தில் காலிப்களின் ஆட்சி வீழ்ச்சி கண்டது. செல்ஜுக் துருக்கியர்கள் 1075 இல் எருசலேமைக் கைப்பற்றினர். இவர்கள் அரேபியர்களைப் போலக் கிறிஸ்தவர்களை வெறுத்துப் பகைமை பாராட்டினர்.
- எருசலேமின் பிதாப்பிதாவை (ஆயர்) சிறையிலடைத்துப் பெருந்தொகைப் பணத்தினை அவருக்குப் பிணை ஈடாகப் பெற்ற பின்னரே அவரை விடுதலை செய்தனர்.
- விடுவிக்கப்பட்ட எருசலேம் பிதாப்பிதா பலஸ்தீனாவில் கிறிஸ்தவர்களின் அவலநிலையையும் தமக்கு ஏற்பட்ட அவமதிப்பையும் பற்றி ஒரு விரிவான கடிதம் எழுதித் திருத்தந்தை 2ஆம் ஊர்பனுக்கு அனுப்பி வைத்தார்.
- இது தொடர்பாகப பைசாந்தியப் பேரரசர் அலெக்சும் தனக்கு உதவ வேண்டுமெனத் திருத்தந்தையைக் கேட்டுக் கொண்டதால் பிரான்சில் திருச்சங்கம் ஒன்று கூட்டப்பட்டது. திருத்தந்தை 2ஆம் ஊர்பன் உரையாற்றிய போது பைசாந்தியப் பேரரசும் இதற்காக ஆதரவு வழங்குவதாக வாக்களித்தது.
- எனவே வீரமிக்க பிரபுக்கள் (பணம் படைத்தவர்கள்) தலைமையில் படை திரட்டப்பட்டது. இப்படையணியினர் தங்கள் மார்பில் சிலுவைச் சின்னத்தை அணிந்து போரிடச் சென்றமையால் இவை சிலுவைப்போர் என்று அழைக்கப்பட்டது.
- பிரான்ஸ் நாடு முழுவதும் திருத்தந்தை 2ஆம் ஊர்பனும் பேதுரு துறவியரும் திருப்போருக்கு மக்கள் தயாராக வேண்டியதன் அவசியத்தை வலிபுறுத்தினர்.
- கொலை, கொள்ளை போன்ற தீய பாவங்களைச் செய்த பெரும்பாவிகளுக்கு இப்போர் கழுவாயாக அமையும் என்றும், போருக்கு செல்பவர்களுக்கு பரிபூரணபலன் கிட்டுமெனவும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.
- எனவே மக்கள் இத்திருப்போரில் திரள்திரளாகச் சேர்ந்தனர். இப்போர் பல்வேறு கட்டங்களில் 11ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு இறுதிவரை ஏறக்குறைய 176 வருடங்கள் நிகழ்ந்தன.
- எட்டு சிலுவைப் போர்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. பிரான்சில் தான் அதிகம் வீரர்கள் இப்போரில் பங்குபற்றினர். இதனால் ஐரோப்பியர் அனைவரையும் பிராங்கர் என்று கீழ்நாட்டார் அழைக்கலாயினர்.

### 7.2.3.1 சிலுவைப் போர் இயக்கம் வளர்ச்சியடையத் துணை நின்ற காரணிகள்

- கி.பி. 11ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி
- மத்தியதரைக் கடல் வர்த்தகத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி
- இத்தாலிய வர்த்தக நகரங்களின் எழுச்சி
- கப்பல் கட்டும் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தி
- எருசலேம் நகரம் பலகாரணங்களால் முக்கியத்துவம் பெற்றிருந்தமை
- இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த செல்ஜுக் துருக்கியரின் ஆதிக்கத்தால் தீவிர முஸ்லிம் எதிர்ப்புணர்வு கிறிஸ்தவர்களிடையே ஏற்பட வழிவகுத்தமை.

❖ **இவ்விதம் நடைபெற்ற சிலுவைப் போர்களாவன:**

| சிலுவைப் போர் | காலம் | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|
| 1 | கி.பி.1096-1099 | • மன்னன் கலந்து கொள்ளவில்லை.<br>• 600 000 போர்வீரர்கள், வீரப்பிரபுக்கள் தலைமையில் பங்கேற்றனர்.<br>• சிலுவைப்போர் வீரர்கள் ஜெருசலேமின் தலைவராக காட்பிரேயைத் தெரிந்து கொண்டனர்.<br>• பக்தியுள்ள இவர் திருத்தலத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். |
| 2 | கி.பி.1147-1149 | • திருத்தந்தை யூஜின் 2ஆம் சிலுவைப்போருக்கு வேண்டுகோள் விடுத்தார்.<br>• புனித பெர்நர்தும் இப்போருக்கு ஆதரவாக இருந்தார். ஜேர்மன் அரசன் 3ஆம் கோர்ராட், பிரான்ஸ் அரசன் 7ம் லூயிஸ் கலந்து கொண்டனர்.<br>• 50 000 படைவீரர்கள் பங்கேற்றனர்.<br>• இப்போர் முழுத் தோல்வியில் முடிந்தது. |
| 3 | கி.பி.1189-1192 | • திருத்தந்தை 8ம் கிரகோரியார் சிலுவைப்போருக்கு அறைகூவல் விடுத்தார்.<br>• இப்போரில் பிரெடிக் பார்பரோசோ, பிரான்ஸ் மன்னன் 2ஆம் பிலிப்பு, இங்கிலாந்து மன்னன் 1ம் ரிச்சர்ட் கலந்து கொண்டனர்.<br>• ஜெருசலேமைப் பிடிக்க முடியவில்லை. 1199இல் ரிச்சர்ட் சாலடீனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.<br>• இதன்படி திருப்பயணிகள் திருநாட்டினைச் சந்திக்க அனுமதிக்கப் பட்டனர். |
| 4 | கி.பி.1201-1204 | • திருத்தந்தை 3ஆம் இன்னோசென்டின் வேண்டுகோளின்படி இப்போர் தொடர்ந்தது<br>• பிளாண்டர்ஸ், சாம்பெயின், வெனிஸ்நாட்டினர் இப்போரில் ஈடுபட்டனர்.<br>• 1204இல் கொன்ந்தாந்தினை வெனிஸ் நாட்டினர் பிடித்தனர்.<br>• இங்கு அவர்கள் இலத்தீன் பேரரசை நிறுவினர்.<br>• இது பைசாந்தியச் சபைக்கும், இலத்தீன் சபைக்கும் இடையில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியது. |

| சிலுவைப் போர் | காலம் | முக்கிய அம்சங்கள் |
|---|---|---|
| 5 | கி.பி.1217-1221 | • பிரான்ஸ், ஜேர்மன் நாட்டு வீரர்கள் இதில் பங்கேற்றனர்.<br>• ஜோண் பிரியன், ஹங்கேரி அரசன் 2ம் ஆன்டிரு என்போரால் இப்போர் நடத்தப்பட்டது.<br>• நைல் நதியின் அருகாமையிலுள்ள தாமித்தா நகரம் 1219இல் பிடிபட்டது.<br>• இது வீரர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.<br>• நைல் நதி நீர் கரை புரண்டு ஓடியதால் போர் இடைநிறுத்தப் பட்டது.<br>• 8 ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் போர் முடிவடைந்தது. |
| 6 | கி.பி.1228-1229 | • ஜேர்மன் அரசன் 2ஆம் பிரடரிக் செய்த ஒப்பந்தத்தின்படி ஜெருசலேம் ஐரோப்பியரிடம் கொடுக்கப்பட்டது.<br>• 1224இல் எகிப்தியரின் உதவியுடன் மங்கோலியரும், துருக்கியரும் ஜெருசலேமைச் சூறையாடினர். |
| 7 | கி.பி.1248-1254 | • லூயிஸ் அரசன் திருத்தந்தை 4ஆம் இன்னோசென்டினால் தூண்டப்பட்டுப் போரில் இறங்கினார்.<br>• அவிசுவாசிகளால் கைது செய்யப்பட்டு பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாகக் கொடுத்து, விடுதலை பெற்று எருசலேம் சென்றார்.<br>• அங்கு 4 ஆண்டுகள் தங்கி கிறிஸ்தவர்களுக்கு உதவிகள் செய்தார்.<br>• சாந்ஷாப்பேல் ஆலயத்தைக் கட்டி இயேசுவின் முள்முடியையும் வேறுபல திருப் பண்டங்களையும் ஸ்தாபகம் செய்தார்<br>• புகழ்பெற்ற சோர்போன் கலாசாலையும் இவராலேயே கட்டப்பட்டது. |
| 8 | கி.பி. 1270 | • பிரான்ஸ் 9ஆம் லூயிஸ் அரசனின் தலைமையிலே இப்போர் நடைபெற்றது. இப்போரில் பல படைவீரர்கள் தொற்றுநோயால் மடிந்தனர்.<br>• இங்கிலாந்து மன்னன் 1ஆம் எட்வேட் இப்போரில் பங்கு பற்றினார்.<br>• பலஸ்தீனக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதால் திருத்தலங்களைத் தக்கவைக்க முடியவில்லை.<br>• ஜெருசலேம் நகரின் கடைசிச் சின்னமான ஏக்கரும் கிறிஸ்தவர்களின் ஆட்சியிலிருந்து விடுபட்டது. |

**7.2.3.2 சிலுவைப் போர் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்**

- ஒழுங்கற்ற மேற்பார்வை.
- தனித்துவமான தலைமைத்துவமின்மை.
- சிலுவைப் போரில் பங்கு பற்றியவர்களிடையில் காணப்பட்ட முரண்பட்ட நோக்கங்களால் அடிக்கடி தமக்குள் போரிட்டமை.
- 4ஆம் சிலுவைப் போரில் கிறிஸ்தவ உலகைப் பாதுகாக்கச் சென்றவர்கள் கொன்ஸ்தாந்திநோபிளைக் கொள்ளையிட்டமை.
- கைப்பற்றியப் பிரதேசங்கள் ஐரோப்பாவில் இருந்து அதிக தூரத்தில் இருந்தமையால் தொடர்ந்து அவற்றைப் பாதுகாக்க முடியாமை.
- இதில் பங்குபற்றிய மானியப் பிரபுக்களின் நோக்கம் பொருளாதார நலன்களைச் சார்ந்தவையாக இருந்தமை.

### 7.2.3.3 சிலுவைப் போரினால் ஏற்பட்ட விளைவுகள்

**நன்மைகள்**

- மக்களிடையே மீட்பு எண்ணம் புத்துயிர் பெற்றது.
- திருச்சபையின் ஒற்றுமைக்கு உரோமையே மெய்யான மூலகாரணம் என்பது வெளிப்படலாயிற்று.
- இஸ்லாமியருடையவலிமை குறைந்தது.
- கிறிஸ்தவக் கோத்திரங்களுக்கிடையே காணப்பட்ட தனிச் சண்டைகள் ஒழிந்தன.
- மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து அன்பு செய்ய வழி உண்டானது.
- அடிமை வியாபாரம் ஒழிந்தது.
- பலவீனரையும் ஒடுக்கப்பட்டோரையும், விதவைகளையும், அநாதைகளையும் பாதுகாப்பது அதி உன்னத செயல், என்ற எண்ணம் திருச்சபையில் உதித்தது.
- கருணைவீரர் சபைகள், சிறைமீட்புச் சபைகள், படைத்துறவியர் சபைகள் தோன்றின.

**தீமைகள்**

- புனித பூமிக்குத் திருப்பயணிகள் சுதந்திரமாகச் செல்லக் கூடிய பயணத்தடையை நீக்குவதற்கான நோக்கம் நிறைவேறவில்லை
- கீழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் ஆதரவற்றவர்களாயினர்
- சிலுவைப் போரில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் உத்தமமானவர்கள் அல்லர், ஆதலால் அவர்களால் திருச்சபைக்கும் அதன் ஒழுக்கத்திற்கும் களங்கம் ஏற்பட்டது.
- போர்களுக்குத் தலமை தாங்கிய அரசர்கள் திருச்சபை மேல் தங்கள் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, ஆன்ம விடயங்களிலும் தலையிட்டார்கள்
- தப்பறையான பேதகமும், கடவுள் மறுப்புக் கொள்கைகளும் பரவ ஆரம்பித்தன.
- இப்போர்கள் கிறிஸ்தவ வாழ்வியலில் ஒரு பின்னடைவைத் தோற்றுவித்தது.

### 7.2.4 இரவலர் சபைத் தோற்றம்:- பங்களிப்பு – பின்னணி

### 7.2.4.1 துறவற மடங்களில் சீர்திருத்த இயக்கங்கள்

**9ஆம், 10ஆம் நூற்றாண்டுகள்**

- 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் திருச்சபை முகங்கொடுத்த சீர்கேடுகள் துறவற மடங்களிலும் நிலவின.
- மடாதிபதிகள் அரசர்களுக்குப் பணி செய்பவர்களாக மாறிப் பிரபுக்களாகும் நிலை உருவாகியது. இதனால் துறவற மடங்களில் நிலவிய ஒழுங்கமைப்பான வாழ்வில் தளர்ச்சி ஏற்பட்டது.
- துறவிகள் உலகியல் போக்கில் வாழத் தொடங்கினர். துறவிகளின் மடங்கள் அரசர்களின் கரங்களுக்குக் கைமாறின.
- எனினும் துறவற வாழ்வின் உள்ளுயிர்(Charism) மடிந்து விடவில்லை. ஒரு சிலர் தமது துறவற வாழ்வின் உள்ளுயிரைக் காத்துத் துறவற மடங்களில் புத்துணர்ச்சியும் புதுப்பித்தலும் உருவாகுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.
- புனித பெனடிக்றின் ஒழுங்குகள் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட குளுணி, சிஸ்ரேஷியன் துறவறமடங்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்தன.
- ஆரம்பகால ஏழ்மை, வேலை, செபம், திருவிவிலிய வாசிப்பு, பிறர்நலப் பணிகளில் பிரமாணிக்கமாக இருந்து துறவற வாழ்வின் விழுமியங்களுக்கும் புனிதத்தன்மைக்கும் புத்துயிர் வழங்கினர்.

- அன்றாட வாழ்க்கையில் இறைவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- துறவிகளின் வாழ்வில் மனித உழைப்பு குறிப்பாக வயல், தோட்ட வேலைகள் முக்கியத்துவம் பெற்றன.
- கட்டிடக்கலை, தொழினுட்பம், பொறியியல் என்பவற்றிற்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது.
- கோவில்களிலும், மடங்களிலும் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.
- தனியாகச் சொத்துக்கள் வைத்திருப்பது தடைசெய்யப்பட்டது.
- இவ்வாறு குளுனி, சிஸ்ரேஷியன் சபையினர் சீராகச் செயற்பட்டுத் திருச்சபையின் ஆன்மீக மறுமலர்ச்சிக்காக உழைத்தனர்.

**12ஆம், 13ஆம் நூற்றாண்டுகள்**

- திருச்சபையின் வரலாற்றில் ஆரம்பத்தில் துறவிகள் உலகத்தைத் துறந்து தனிமையில் இறைவனுடன் நெருங்கி வாழ்வதை இலக்காகக் கொண்டு ஏகாந்திகளாக வாழ்ந்தனர்.
- ஆனால் 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதாரச் சமூக மாற்றங்களுக்கு முகங் கொடுப்பதற்காகத் திருச்சபை தனது மேய்ப்புப் பணியை முறைப்படுத்த வேண்டியிருந்தது.
- அக்காலத்தில் ஏற்பட்ட நகரமயமாக்கல், வர்த்தகத் தொடர்புகளால் மக்கள் கிராமங்களை விட்டு நகரங்களில் குடியேறினர்.
- அக்கால கட்டத்தில் திருச்சபையானது மறை, ஆன்மீக விடயங்களுக்கு அப்பால் சென்று லௌகீகக் காரியங்களில் ஈடுபட்டது.
- திருச்சபைத் தலைவர்கள் சிலுவைப் போர்கள், பேரரசுடன் மோதல்கள் போன்ற பிரச்சனைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர்.
- இன்னும் பலர் சொத்துக்களைப் பேணுவதிலும் அவற்றின் வருமானத்தை அதிகரிப்பதிலும் மும்முரமாய் ஈடுபட்டிருந்தனர்.
- இவ்விதம் லௌகீகப் பற்று அதிகரித்தமையால் திருச்சபைத் தலைவர்களின் ஆன்மீக வாழ்வு சீர்குலையக் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வும், அறநெறி வாழ்வும் சீர்கெடத் தொடங்கின.
- சீர்குலைந்திருந்த உலகினில் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய அவசரத் தேவை இருந்தது.
    - கிறிஸ்துவின் தூய ஏழ்மை வாழ்வை நடைமுறைச் சமுதாயத்தில் உருவாக்க வேண்டிய தேவை.
    - அதற்காகத் தலைமைத்துவம் வகிப்போர் சமுதாயத்தை நல்வழிப்படுத்தித் திருச்சபையை நல்வழிப்படுத்தும் பாதையைத் தெரிவு செய்து செயற்படல்.
    - இயேசுவின் ஏழ்மையின்படி சென்று லௌகீகச் செல்வம் எதையும் எதிர்பாராது சேவை புரிதல்.
    - தனியுடமையாக எதையும் உரிமையாக்கிக் கொள்ளாதிருத்தல்.
    - தமது நாளாந்த தேவையை இரந்து பெற்றுக் கொள்ளல்.
    - லௌகீக இன்பங்களை விடுத்து ஆன்மீக இன்பத்தைத் தம்வசம் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டல்
- இந்த ஆன்மீக மறுமலர்ச்சியைத் திருச்சபையிலும் அதன் வழியாக சமுதாயத்திலும் உறுதியான முறையில் கொண்டு செல்ல 13ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மக்கள் மத்தியிலிருந்தே சில தலைவர்கள் வழிகாட்டினர். அவர்களுள் **பீற்றர் வால்டோ, பிரான்சிஸ் சவேரியார், டோமினிக்** என்பவர்கள் முக்கியமானவர்கள்.
- இவர்கள் உலகத்திலிருந்து கொண்டே துறவற வாழ்வின் இலட்சியமான உலகத்தைத் துறந்த பற்றற்ற வாழ்வு, ஏழ்மை, தூய்மை, செபம், தபம், சுயபரித்தியாகம் போன்ற இயேசு கற்பித்த விழுமியங்களை வாழ முனைந்தனர்.

- தம் வாழ்க்கையாலும், வார்த்தையாலும் மக்களுக்குப் போதனை செய்து அவர்களை மனந்திருப்புவதே அவர்களது நோக்கமாக இருந்தது.
- இவர்கள் தங்களுக்குச் சொந்தமாக எதையும் வைத்திருக்காது பொதுப் பொருளாகவே கொண்டு வாழ்ந்தனர்.
- அவர்கள் நாளாந்தத் தேவைகளை வீடுவீடாகச் சென்று இரந்து மக்கள் கொடுக்கும் தானதருமத்தைக் கொண்டு தங்களைத் தாபரித்து வாழ்ந்தமையால் **இரவலர் சபையினர்** என்று அழைக்கப்பட்டனர்.
- இவ்வாறு தோன்றிய இரவலர் சபைகளுள் பின்வரும் சபைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

  # வல்தேசியன் துறவற சபை

  # பிரான்சிஸ்கன் துறவற சபை

  # டொமினிக்கன் துறவற சபை

### 7.2.4.1 வல்தேசியன் துறவற சபை

**வல்தேசியன் சபை உருவாக ஏதுவான சூழ்நிலை**

- பிரான்சின் லியோன்சில் பீட்டர் வால்டோ என்பவரால் கி.பி. 1176ல் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இவரது ஆடம்பர வாழ்வை மத்தேயு 19:21 நற்செய்தி வசனம் மாற்றியமைத்தது.
- தனக்கு இருந்த அனைத்தையும் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு ஓர் ஏழ்மை வாழ்வை ஆரம்பித்தார்.
- இறைவார்த்தையின் படி தமது ஆன்மீக வாழ்வை வளம்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தினார்.
- இவரைப் பின்தொடர்ந்து பலர் அவரோடு சேர்ந்து கொண்டதன் காரணமாக அவர்கள் வல்தேசியன் சபையினர் (லயன்சின் ஏழைகள்) என்னும் பெயருடன் மக்கள் மத்தியில் சேவையில் ஈடுபட்டனர்.

**இச்சபையினரின் வாழ்க்கை முறை**

- இச்சபையினர் ஏழ்மையான ஆடை அணிந்தவர்களாக, மரத்தால் செய்யப்பட்ட செருப்புடன் சென்று ஏழை மக்களிடையே இறைவார்த்தையைப் போதிக்க இருவர் இருவராக அனுப்பப்பட்டனர்.
- பீட்டர் வால்டோவின் ஏழ்மை, உலகப் பற்றற்ற தூய்மையான வாழ்க்கை, அவர் முன்னெடுத்துச் சென்ற மறைப் போதகப்பணி என்பன திருச்சபையின் நன்மதிப்பைப் பெற்றன.
- காலப்போக்கில் திருச்சபையின் தலைவர்கள், ஆயர்கள், குருக்களின் லௌகீகக் சுகபோகம் தேடும் ஆடம்பர வாழ்க்கையை விமர்சனம் செய்தனர்.
- 1184இல் கூடிய 3ஆவது இலத்திரன் சங்கம் இவர்களின் பணியைப் பாராட்டியது.

### 7.2.4.2 பிரான்சிஸ்கன் துறவற சபை

**பிரான்சிஸ்கன் சபை உருவாக ஏதுவான சூழ்நிலை**

- கி.பி. 1182இல் இத்தாலியில் அசிசி நகரைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் அசிசி இச்சபையை ஆரம்பித்தார்.
- தனது இளமைப்பருவத்தில் எதுவித குறைபாடும் இன்றி சுகபோக வாழ்வு ஒன்றினை வாழ்ந்த பிரான்சிஸ் ஏழைகளுக்கு உதவ ஒருபோதும் மறுக்கவில்லை.
- இக்காலக் கட்டத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக தனது பதவிகளையும் துறந்து யுத்தத்திற்குச் சென்றார்.
- சிறையிலிருந்து விடுதலையாகிய பின்னரும் மீண்டும் யுத்தத்திற்குப் போகும் வழியில் ஸ்பெளோடோ என்னுமிடத்தில் பிரான்சிஸ் கண்ட கனவு அவரின் வாழ்வின் பாதையை மாற்றி வாழ்வின் வளர்ச்சிக்கு வழிகாட்டியது.
  - நடாத்திய வினோத வாழ்க்கை முறையிலிருந்து பிரிதல்

- தனிமையான இடங்களுக்கு சென்று செபித்தல்
- நற்செய்திப் படிப்பினைகளின் படி வாழ்க்கை நடாத்த முயற்சித்தல்
- தனது குற்றங்களுக்காக மனம் வருந்துதல்
- தனது வினோத வாழ்வு, பெற்றோர், நண்பர்களிடமிருந்து பிரிதல்
- ஏழைகளுக்கு உதவ முன்வருதல்
- ஒரு ஏழையாக வாழ முற்படுதல்

- அவர் வாழ்ந்த நற்செய்தியின் அடிப்படையில் கட்டியெழுப்பட்டதும் கிறிஸ்துவின் வாழ்க்கை முறையுமான வாழ்வை கண்ணுற்ற பலர் அவரது வாழ்க்கை முறையை விரும்பி அவருடன் சேர்ந்து கொண்டதன் பிரதிபலனாக பிரான்சிஸ்கன் துறவற சபை ஆரம்பிக்கப்பட்டது.
- முதலில் பின் தொடர்ந்தவர் பென்ராட் குவிந்தவான் என்பவராவார். பின்னர் 12 பேர் வரை தொகை அதிகரித்தது.
- 1209ஆம் ஆண்டில் பிரான்சிஸ்கன் துறவறச் சபையை உருவாக்கினார்.

**இச்சபையினரின் வாழ்க்கை முறை**

- இச்சபையினர் உலகெங்கும் பரந்து சென்று தங்கள் வாழ்வாலும், வார்த்தையாலும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்துத் திருச்சபையின் தலைவர்களின் வாழ்வில் ஒரு ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.
- அவர்களின் லௌகீகப் போக்கையும், தவறுகளையும், பாவங்களையும் உணர்த்தி அவர்களை மனந்திரும்ப அழைத்துப் பாவமன்னிப்பின் அவசியத்தை வலியுறுத்தினர்.
- மறைபோதகப் பணியிலும், விவிலியப்படிப்பிலும், கல்விக் கலாசாரத் துறையிலும் பெரும் சேவை ஆற்றினர்.
- பெண்களுக்கான "**ஏழையின் கிளாரா சபை**"யினையும், துறவற நிலையினை மேற்கொள்ள இயலாத இல்லறத்தவர்களுக்கென "**தவத்தின் சகோதரிகள்**" என்ற மூன்றாம் சபையையும் அமைத்து திருச்சபையின் இருள் நிறைந்த காலத்தில் அதன் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு இச்சபையினர் பெரும் சேவை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

### 7.2.4.3 டொமினிக்கன் துறவற சபை

**டொமினிக்கன் சபை உருவாக ஏதுவான சூழ்நிலை**

- இச்சபை டொமினிக் டி கூஸ்மான் (புனித சுவாமிநாதர்) என்பவரால் 1216இல் ஆரம்பிக்கப்பட்டது.
- இவர் ஒஸ்மா நகர பேராலயத்தில் குருவாகப் பணியாற்றிய போது தென்பிரான்சில் வாழ்ந்த மக்கள் பல அபாயங்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்தனர்.
- அம்மக்கள் பலவிதமான தப்பான போதனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.
- அங்கு பணியாற்றிய சிஸ்ரேஷியன் துறவறச் சபையினர் சொத்துக்களை உரிமையாக்கிப் பணி செய்தமையால் மக்கள் அவர்களை வரவேற்கவில்லை
- இத்தகைய சூழ்நிலையிலே டொமினிக் இச்சபையை ஆரம்பித்தார்.

**இச்சபையினரின் வாழ்க்கை முறை**

- தப்பறைகளைப் போதிப்பவர்களுக்கு உண்மையைப் போதிப்பதே இவர்களின் முக்கிய பணியாக அமைந்தது.
- டொமினிக்கும் அவரது உடன்பணியாளர்களும் ஏழ்மையை மையப்படுத்தி மறையுரைகளை ஆற்றி மக்களை உண்மை விசுவாசத்தில் தக்க வைத்தனர்.
- ஆழ்தியானத்தையும் செயலையும் ஆன்மீகத்தையும், அப்போஸ்தலிக்கப் பணியையும், கல்வியையும், செபத்தையும், குழுவாழ்வையும் பரவலாக்கலையும், முடியாட்சி முறையையும் குடியாட்சி முறையையும், உள்வாங்கி ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொண்டனர்.

- டொமினிக் பெண்களுக்கென இரண்டாம் சபையையும், ஆண்பெண் பொது நிலையினருக்கான ***கிறிஸ்துவின் படையமைப்பு*** என்ற மூன்றாம் சபையையும் உருவாக்கி தமது சபையின் பணிகளை விரிவாக்கினார்.
- டொமினிக்கன் சபை பல இறையியலாளாகளையும் கல்விமான்களையும், புனிதர்களையும் உருவாக்கியுள்ளது. அவர்களுள் பெரிய அல்பர்ட், புனித தோமஸ் அக்குவினாஸ், கொங்கார், லக்றான்ஞ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**இரவலர் சபையினரின் ஏழ்மை வாழ்வு**

- இச்சபையினர் அடிப்படையில் உண்மையாகவே அடுத்தவரின் உதவியில் தங்கி வாழ்ந்தவர்கள். தமது உணவு, உடை, தங்குமிடங்கள் ஆகியவற்றிற்கு அடுத்தவரின் உதவியை நாடியவர்கள். இவர்கள் நிலபுலன்களை உரிமையாக்கிக் கொள்ளவில்லை. தமக்கெனப் பணம் வைத்திருக்கவில்லை.
- ஆன்மீகப் பணியில் முழுமையாக ஈடுபடுவதற்குச் சுதந்திரமாக வாழ வேண்டும் என்னும் நோக்குடன் ஏழ்மை எனும் துறவற வார்த்தைப்பாட்டு அர்ப்பணத்தை மேற்கொண்டனர்.
- இவர்கள் நற்செய்தி அறிவிப்பதற்கும் ஏழைகளுக்குப் பணிசெய்வதற்கும் தமது வாழ்வை அர்ப்பணித்தனர்.
- இவர்கள் மறையுரைகளை ஆற்றினர்.
- ஒப்புரவு அருளடையாளம் வழங்கினர்.
- நோயாளருக்குப் பணி செய்தனர்.
- கைவிடப்பட்டவர்களுக்கு உதவினர்.
- பிறநாடுகளுக்குச் சென்று பணியாற்றினர்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. இருண்ட காலம் பற்றியும், கீழைத்தேய மேலைத்தேய கிறிஸ்தவச் சபைகளின் பிளவுகள் பற்றியும் கலந்துரையாடலை நடாத்துவார்.
2. சிலுவைப் போர் ஏற்பட்டதற்கான காரணங்களையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் ஆராய்ந்து அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பார்.
3. திருச்சபையின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஏதுவான துறவற சபைகளையும், பணிகளையும் பற்றிக் கலந்துரையாடுவார்
4. ''காலத்திற்குரிய பிரச்சினைகளை எதிர்கொண்ட தலைமைத்துவத்தின் பொறுப்புக்கள்'' என்னும் தலைப்பின் கீழ் மேலே கற்ற துறவறச் சபைகளின் துணையுடன் ஆக்கம் ஒன்றினை முன்வைப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**


- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, ***திருச்சபை வரலாறு,*** நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***கிறிஸ்தவ வாழ்வு,*** அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***கடுகுமரம்,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***புளிப்பு மாவு,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***விதையொன்று வளர்கிறது,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
- FR. P.C. Thomas, ***A Compact History of the Popes,*** Panta, Bompay, India.

**தேர்ச்சி 7.0 :** மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய பாங்கினை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 7.3 :** கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காரணிகளையும், விளைவுகளையும் அறிந்து உறுதியான விசுவாசத்தோடு வாழ்வார்.

**பாடவேளைகள் :** 40

**கற்றல் பேறுகள் :**

- திருச்சபையில் மறுமலர்ச்சி ஏற்பட்டதற்கான சமய, சமூக, அரசியல் பொருளாதாரக் காரணிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- திரித்தெந்தின் சங்கத்தினூடாகக் கத்தோலிக்க திருச்சபையில் சீர்திருத்தம் மேற்கொள்ள-ப்பட்டது என்பதை ஏற்பார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருச்சபையின் போதனைகளைப் பின்பற்றி வாழ்வார்.
- திருச்சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்கம் :**

### 7.3.1 கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கான சமய, சமுக, அரசியில், பொருளாதார, இறையியல் காரணிகள்

#### 7.3.1.1 கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கான சமயப் பின்னணி

- கி.பி. 800–1500 வரையிலான காலப் பகுதி மத்திய யுகம் என அழைக்கப்படுகிறது. இக்காலம் திருச்சபையின் வரலாற்றிலே இருள் சூழ்ந்த காலமாகக் கணிக்கப்படுகிறது.
- இக்காலத்தில் திருச்சபையில் சமய பேதம், திருச்சபைப் பேதம், குருக்களின் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் தோன்றி, திருச்சபையின் தூய வாழ்வையே சீர்குலைத்தன.
- திருத்தூதர் காலத்திலிருந்த புனித வாழ்வு, பகிர்வு வாழ்வு, ஏழ்மை, எளிய வாழ்வு, விசுவாச வாழ்வு என்பனவையெல்லாம் மறக்கப்பட்டு, திருத்தந்தையர், கருதினால்கள், ஆயர்கள், குருக்கள் துறவிகள் என்ற பல தரப்பினரும் உலக போக்கில் நடந்து, ஆடம்பரமான, சுயநலம் தேடும், சொத்து, பணப் பேராசை கொண்ட, ஒழுக்கக் கேடான சீர்குலைந்த வாழ்க்கை நடத்தினர்.
- அக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் திருச்சபை, உரோமைப் பேரரசு என இரு சமூக தாபனங்களால் ஆட்சி செய்யப்பட்டனர். இவ் இரண்டு தாபனங்களுக்குமிடையில் அதிகாரப் போட்டிகளும், பூசல்களும், எழுந்து பல்வேறு முரண்பாடுகளுக்கும், யுத்தங்களுக்கும் வழிவகுத்தன.
- திருச்சபையின் தலைமைத்துவம் அரசியலில், அரசியல் விவகாரங்களில் தலையிட்டு, தம் செல்வாக்கைச் செலுத்த முனைந்த வேளையில், அரசர்கள் திருச்சபையின் நிர்வாகத்தில், அதன் பணி, பொறுப்புகள், நியமனங்களில் குறுக்கிட்டு, தம் அதிகாரத்தைக் காட்ட முனைந்தனர்.
- மத்திய யுகத்தில் ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர்களை, அரசர்களை நியமித்தல், யுத்த நடவடிக்கைகளில் பங்கெடுத்தல், வரி வசூலித்தல், போர் வீரர்களைப் பலப்படுத்தல், பணம், சொத்துக்களைத் திரட்டுதல், அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற இலௌகீக விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிறிஸ்தவ விசுவாசிகள் மட்டில் தங்கள் கடமைகளில், பொறுப்புகளில் அசமந்தமாகவிருந்தனர்.
- மேலும் திருச்சபையின் தலைவர்களின் நியமனத்தில் அரசர்களின் தலையீட்டினால் சில பிரச்சினைகள் எழுந்தன. அதன் விளைவாக பாப்புக்கள் (Popes) 70 ஆண்டு காலம் (1309-1377) உரோமையிலிருந்து விலகி, பாதுகாப்புக் காரணங்களுக்காக பிரான்சில் அவிஞ்ஞோனில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த 70 ஆண்டு அஞ்ஞான வாசத்தை பாப்புவின் 70 ஆண்டு பபிலோனிய அடிமைத்தனமென அழைப்பர்.

- 40 ஆண்டுகளாக (1378-1417) இரு பாப்புமார்கள், ஒருவர் உரோமையிலும், மற்றவர் பிரான்சிலுமாகக் திருச்சபையை ஆட்சி செய்தனர் ஒரு கட்டத்தில மூன்று பாப்புமார்கள் கூட இருந்தனர். அவ்வாறாகப் பாப்புவின் தலைமைத்துவம் சீரழிந்தது.
- மேலும் திருச்சபையின் அதிகார, உயர் பதவிகள் பணத்துக்கு விற்கப்பட்டு, வாங்கப்பட்டன.
- ஆயர் பதவி பெறச் செலவழித்த பணத்தைத் திரும்பப் பெற, ஆயர்களால் மக்கள்மேல் அதிக வரிகள் சுமத்தப்பட்டன, பரிபூரண பலன்கள் விலைக்கு விற்கப்பட்டன. திருச்சபை வாணிபத் தலமாக மாறியது.
- திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு, திருத்தந்தையர், ஆயர்கள், குருக்கள், துறவிகளில் தூய ஆன்மீக வாழ்வு உருவாகுமென விசுவாசிகள் எதிர்பார்த்தனர்.
- ஆனால் திருச்சபையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென உருவாகிய துறவற சபைகள்கூட துறவறத்தையும், விசுவாசத்தையும் கைவிட்டு, பணம் சேகரிப்பதிலும், அரசியல் இலாபத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.
- இக் காலகட்டத்தில் விசுவாசிகள் திருச்சபை மட்டில் பெரும் அதிருப்தி அடைந்திருந்தனர். தங்கள் ஆன்மீகத் தலைவர்களில் அவநம்பிக்கை கொண்டிருந்தனர்.
- அதைப் பயன்படுத்தி, சிலர் பாப்புவின் அதிகாரம், திருவருட்சாதனங்கள், பரிபூரண பலன் பற்றிய பல விதமான தப்பறைகளைப் போதித்துப் பரப்பினர்.
- அதேவேளை திருச்சபையில் நிலவிய பலவிதமான அலங்கோலங்களையும், சீர்கேடுகளையும் சீர்திருத்தி, ஆன்மீக மறுமலர்ச்சயை ஏற்படுத்தப் போகிறோம் எனச் சொல்லிக்கொண்டு. சில குருக்களும், துறவிகளும் எழுந்தனர். அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள் அதிக பயனளிக்கவில்லை.

### 7.3.1.2 திருச்சபையின் சீர்திருத்தத்தின் சமூக, அரசியல், பொருளாதாரப் பின்னணி

- 15ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக, அரசியல், பொருளாதார, மெய்யியல், இறையியல் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் திருச்சபையின் வாழ்விலே பல மாற்றங்களை, சீர்கேடுகளை விளைவித்தன.
- மத்திய யுகத்தில் 1490-1600 ஆண்டு காலப் பகுதியில் மக்களுடைய புவியியல் கருத்துக்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டது.
- முற்காலத்தில் உலகில் பண்பாடு ஆற்றங்கரை சார்ந்ததாக இருந்தது. ஆனால் மத்திய காலத்தில், கிறிஸ்தோப்பர் கொலம்பஸ், வாஸ்கோடகாமா என்பவர்களின் புதிய கண்டுபிடிப்புகளினால் பண்பாடு கடற்கரையைச் சார்ந்த ஒன்றாக மாறியது.
- இத்தாலிய கத்தோலிக்க மாலுமியான கொலம்பஸ் 1492ம் ஆண்டளவில் கடல் வழிப் பயணம் செய்து, அமெரிக்காவையும், இன்னும் பல புதிய நாடுகளையும் கண்டுபிடித்தார். போர்த்துக்கேய கத்தோலிக்க மாலுமியான வாஸ்கொடகாமா 1498 இல் இந்தியாவிற்கு ஒரு புதிய கடல் வழியினைக் கண்டுபிடித்தார். அவர் வழியாகக் கிறிஸ்தவம் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- நாடுகளிடையே வர்த்தக வாணிபம் விருத்தி அடைந்து, பொருளாதாரம் செழிப்புற்று வளர்ந்தது. அவை மக்களின் மதச் சிந்தனைகளிலும், பழக்க வழக்கங்களிலும், பண்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தின.
- பதினைந்தாம் நூற்றாண்டில் அரசியல் கருத்துக்களிலும் மாற்றம் ஏற்பட்டது.
- மிலேச்சரின் படையெடுப்புகள், முற்றுகைகளினால் உரோமைப் பேரரசு சிதறுண்டு, பல நாடுகளாகப் பிரிந்தது.
- திருச்சபையானது மறைபோதகர்களையும் துறவிகளையும் அந்நாடுகளுக்கு அனுப்பி, மிலேச்சர்களைச் சீர்திருத்தி, மனந்திருப்பி, கிறிஸ்தவர்களாக்கி அந்நாடுகள் கிறிஸ்தவ நாடுகளாக ஒன்றிக்கப்பட்டு திருத்தந்தையின் கட்டுப்பாட்டின் கீழ் ஒற்றுமையாக வாழ்ந்தன.
- மத்திய காலத்தில் மக்கள் மத்தியில் தேசிய உணர்வு உருவாகியது. உலக அரசியல் என்ற கருத்து மறைந்து, தேசிய அரசியல் என்ற கருத்துப் பரவத் தொடங்கியது.

- அதன் விளைவாக கிறிஸ்தவ நாடுகளுக்கிடையில் போட்டியும், பொறாமையும், சண்டையும் வளர்ந்தன.
- நாட்டுத் தலைவர்கள் தம் நாட்டு மத விடயங்களிலும், நிர்வாகத்திலும் தலையிட்டு தங்கள் நாட்டுத் திருச்சபையைத் தாங்களே நிர்வகித்து, தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைந்தனர். அதனால் திருச்சபைக்கும் அரசுகளுக்குமிடையே பிரச்சினைகள் தோன்றின.
- திருத்தந்தையர் கிறிஸ்தவ திருச்சபையைக் காப்பாற்ற நாட்டு அரசர்களுடன் ஒப்பந்தங்கள் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.
- இவை ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரமான புரட்டஸ்தாந்து சபைகள் தோன்ற வழி சமைத்தன.
- ஐரோப்பாவின் பொருளாதாரம், நில உரிமையையும் விவசாயத்தையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- மத்திய யுகத்தில் பொருளாதாரத் துறையிலும் மாற்றம் ஏற்பட்டது.
- புதிய நாடுகள் கண்டுபிடிக்கப் பட்டபடியால் வியாபாரத்துக்குப் பொருத்தமான புதிய நகரங்கள் தோன்றின. அவை வழியாகப் புதிய மூலவளங்கள் ஐரோப்பாவிற்குக் கிடைத்தன. நாடுகளிடையே வியாபாரமும், வாணிபமும் துரித வளர்ச்சி கண்டன.
- மத்திய காலப் பகுதியில் கீழ் மட்டத்தில் பிறந்த ஒருவருக்கு சமூகத்தில் உயர் நிலைக்கு தம் உழைப்பினால் முன்னேறக் கூடிய நிலை உருவாகியது.
- மத்திய காலத்தில் இத்தாலி, மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மெய்யியல் மாற்றங்களும் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு உதவின. இலக்கியம், சரித்திரம், சிற்பம், ஓவியம், இசை, நாடகம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன.
- இப் புராதன நாகரிக, கலாச்சார மறுமலர்ச்சி பல புதிய கருத்துக்களையும், சிந்தனைகளையும் உருவாக்கின. தேசிய உணர்வுக்கும், பகுத்தறிவாத இயக்கத்திற்கும் அடிகோலின.
- மக்கள் எபிரேயம், கிரேக்கம், லத்தீன் போன்ற பழைய மொழிகளைக் கற்பதில் ஆர்வம் காட்டினர். புராதன இலக்கிய, மற்றும் சித்தாந்த நூல்களை அதிக அளவில் வாசித்துப் படித்தனர். அவற்றில் காணப்பட்ட உலகியல் போக்கினால் கவரப்பட்டனர்.
- மறு சீரமைப்புக் காலத்தில் மனிதன் சுயமாக வெவ்வேறு சமூகத்தின் சேவையின் பெறுமதியை மதித்தான். இக் காரணங்களால் சீர்திருத்தக் கொள்கையில் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இத்தாலியில் ஏற்பட்ட மெய்யியல் சீர்திருத்தத்தில் மத சார்பற்ற கொள்கைகள் காணப்பட்டன. ஐரோப்பாவின் வட பிரதேசத்தில் அக் கருத்துக்கள் பரவியதால், சமய உண்மைகளைத் தேட முயற்சித்த அறிவாளிகளுக்கு இத்தாலிய மதச் சார்பற்ற கொள்கைகளைப் பயன்படுத்த முடிந்தது. வேதாகமத்தை மக்களின் சுய விசுவாசத்தின் அடித்தளமாக ஏற்றுக்கொள்ள அது சந்தர்ப்பமாக அமைந்தது.
- இறையியலைத் பொறுத்த வரையில், மத்திய காலத்தில் திருச்சபையில் ஒற்றுமை காணப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை மறுக்க மக்களால் முடியாமல் இருந்தது.
- ஆனால் பின்-மத்திய காலத்தில் நிலைமை மாறியது. மாற்றத்திற்குப் பொருத்தமான முறைகள் தோன்றின.
- 16ஆம் நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய சமய (புரட்டஸ்தாந்து) சபைகள் அந் நாட்டு மக்களின் அரசுக்கு உட்படுத்தப்பட்டவை. உதாரணமாக, இங்கிலாந்து சபை இங்கிலாந்து அரசின் ஒரு பகுதியாகவும், லூதரின் சபை ஜேர்மனிய அரசின் ஒரு பகுதியாகவும் அமைந்தன.
- இக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரத்திற்குப் பதிலாக வேதாகமத்தின் படிப்பினைகள் முக்கியமாயின. வேதாகமத்தைப் படிக்க மக்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்தது.

### 7.3.2 மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயச் சிந்தனையாளர்கள்

#### 7.3.2.1 மார்ட்டின் லூதரின் (1483-1546) சீர்திருத்தம்

- இவர் ஜேர்மனியைச் சேர்ந்த இறையியலாளராவார். புரட்டஸ்தாந்து சீர்திருத்த முன்னேற்றத்தை தொடங்கியவரும் இவரே ஆவார். கி.பி. 1483ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ஆம் திகதி பிறந்த இவர் 1501இல் எர்பர்ட் (Erfurt) பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று கி.பி.1505இல் முதுமாணி பட்டத்தைப் பெற்றார். கி.பி. 1507இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் கி.பி.510இல் உரோமைக்குச் சென்றார். இப்பிரயானத்தின் போது உரோமையில் அப்போது நிலவிய திருச்சபையின் ஊழல்கள் பற்றியும் சுகபோக வாழ்க்கை முறை பற்றியும் அவரால் தெரிந்துகொள்ள முடிந்தது. கி.பி 1512இல் இறையியலில் கலாநிதி பட்டத்தைப் பெற்ற லூதர் கற்பித்தலில் ஈடுபட்டிருந்த வேளையில் புதிய ஏற்பாட்டில் விசுவாசமும் இறையியலும் பற்றி அதிக கவனம் செலுத்தினார்.
- கி.பி. 1517ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் திகதி திருச்சபையின் முறையற்ற செயற்பாடுகளை வெளிக்கொணரும் பத்திரம் ஒன்றை வெளியிட்டார். இதில் முக்கிய கோட்பாடுகள் 95 அடங்கியிருந்தன.
- இதன் பேறாக கி.பி. 1520ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி லூத்தரின் போதனைகள் கண்டனத்துக்குள்ளாயின. பின்னர் 1521 தை மாதம் அளவில் அவரை திருச்சபையிலிருந்து வெளியேற்றினர்.
- திருவிவிலியம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படாததால் அதனை இலத்தின் மொழியிலிருந்து ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்தார்.
- தம்முடைய இறையியல் கருத்துக்களையும் ஜேர்மன் நாடு எங்கும் பரப்ப, கேள்வி\பதில் முறையில் தம் மறைக்கல்வி நூலை அச்சிட்டார். மேலும் ''ஜேர்மன் நாட்டு பிரபுகளுக்கு ஓர் அறிக்கை'', ''கிறிஸ்தவ மனிதனின் உரிமை'', ''பபிலோனிய அடிமைத்தனத்தைப் பற்றி'' என்ற பிரசுரங்களை வெளியிட்டார்.
- திருச்சபை தனது போதனைகளுக்கும், இறையியல் விளங்கங்களுக்கும் திருவிவிலியத்தையும், பாரம்பரியங்களையும் முக்கியமான மூலகங்களாக பயன்படுத்தியது. ஆனால் லூத்தர் திருவிவிலியம் மட்டும்போதும் எனக் கூறினார்.
- உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் புனித பவுல் குறிப்பிடும் ''ஒருவர் நம்பிக்கையால் மீட்படைய முடியும்'' (3:22) என்ற கருத்தை லூத்தர் ஒருவர் நம்பிக்கையால் மட்டுமே மீட்படைய முடியும் என வலியுறுத்திப் போதித்தார்.
- அருளடையாளங்கள் ஏழு எனும் திருச்சபையின் கருத்தை நிராகரித்து திருமுழுக்கு, நற்கருணை ஆகிய இரண்டுமே அருளடையாளங்கள் என்றார்.
- திருமுழுக்கு, நற்கருணை ஆகிய அருளடையாளங்களை ஏற்றுக் கொண்டாலும் அவை தொடர்பிலும் கத்தோலிக்கத் திருச்சபையின் கருத்திலிருந்து வேறுபட்டார்.
- குருத்துவ, ஆயர் பணிகள் தேவையில்லை என வாதிட்டார்.
- சென்ம பாவத்தால் மனித இயல்பு முற்றாக அழிந்து விட்டது எனவும், அதன் விளைவாக மனிதன் பாவம் செய்யவே தூண்டப்படுகிறான் என்றார்.
- திருச்சபையின் பரிபூரண பலன் (Indulgences) உத்தரிப்புஸ்தலம், திருச்சபையின் வழுவாவரம், புனிதர்கள் பற்றிய கருத்தக்களையும் எதிர்த்துப் போதித்தார்.

### 7.3.2.2 சுவிங்ளியின் (1484-1531) சீர்திருத்தம்

- ஹுல்ரிச் சுவிங்ளி சுவிற்சலாந்திலுள்ள வில்டோஸ் என்ற ஊரிலிருந்த ஒரு உழவர் குடும்பத்தில் 1484ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி பிறந்தார்.
- சுவிங்ளி தன் ஆரம்ப கல்வியை மாமனரான பார்தலோமேயு என்ற குருவின் கீழ் வெஸ்ஸன் என்ற இடத்தில் பயின்றார். பின்னர் தன் கல்வியைப் பாசேலில் தொடர்ந்து, நடுவர் கிரகோரியின் கீழ் இலத்தீன் மொழியைக் கற்றார்.
- 1506இல் பாசேல் பல்கலைக் கழகத்திலிருந்து முதுமாணிப் பட்டம் பெற்றார். சிறிது இறையியல் கற்றபின், 29.9.1506இல் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, கிளாறுஸ் என்ற பங்கில் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார்.
- பின்னர் சுவிற்சலாந்து படை வீரர் மத்தியில் ஆன்மீகக் குருவாக பணியாற்றினார்.
- சீர்திருத்த சிந்தனையுடைய அவர் லூத்தரின் எழுத்தாக்கங்களை பெரிதும் விரும்பிப் படித்தார். காலப் போக்கில் பிரிவினை மதத்தைப் பற்றிப் போதிக்கத் தொடங்கினார். படிப்படியாக சுவிற்சலாந்தில் பிரிவினை மத இயக்கத்தின் தலைவராக மாறினார்.
- முதலில் 1516இல் தேவதாய்க்கும், திருப்பயணத்துக்கும் எதிராகப் போதிக்கலானார்.
- தவக் காலத்தில் கிறிஸ்தவர்கள் நோன்பு இருக்கும் பழக்கத்தை விமர்சித்தார்.
- திருவிவிலியமே விசுவாசத்தின் ஒரே சட்டம் என கூறியதோடு, திருவிவிலியத்தால் உறுதிப்படுத்தப்படாத சமயக் கோட்பாடுகளை நிராகரித்தார்.
- துறவற வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, உத்தரிப்புத் தலம் பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை எதிர்த்தார்.
- எந்த ஒரு அருளடையாளமும் அருட்கொடைகளை வழங்குவதில்லை, அவை வெறும் அடையாளங்கள் மட்டுமே.
- சென்ம பாவம் மனிதனின் சுய விருப்பத்தை அழித்து, அவனைத் தீமை மீது நாட்டம் கொள்ளச் செய்கின்றது.
- நற்கருணையில் கிறிஸ்துவின் பிரசன்னம் இல்லை. அது ஒரு நினைவுகூரும் அடையாளம் மட்டுமே.

### 7.3.2.3 கல்வினின் (1509-1564) சீர்திருத்தம்

- லூத்தரின் மதத்தைச் சர்வதேச மதமாகப் பரப்பி, அதற்கு மறைக் கல்வியையும், ஆட்சி முறையையும் வகுத்துக் கொடுத்தவர் கல்வின் ஆவார்.
- யோண் கல்வின் பிரான்ஸ் நாட்டில், நோயன் பட்டணத்தில் 1509ஆம் ஆண்டு ஆடி மாதம் 10ஆம் நாள் பிறந்தார். அவருடைய தந்தை ஜெராட் கோவின் (லத்தீன் மொழியில் கல்வின்) ஒரு நொத்தாரிசு. அவருடைய தாய் ஜான் லெபிரேன் ஆவார்.
- அவர்கள் நடுத் தரக் குடும்பத்தவர்கள். திருச்சபையின் ஆதரவுடன் பாரிசிலுள்ள குருமடத்தில் சேர்ந்து, ஒரு குருவாக வரும் நோக்குடன் இறையியல் கற்றார். ஆனால் பின்னர் தம் மனதை மாற்றிக் கொண்டு, போர்ஜே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, மொழி, சட்டப் படிப்பை மேற்கொண்டார்.
- லூத்தரின் படிப்பினைகளால் மிகவும் கவரப்பட்ட கல்வின், அவற்றைப் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டார்.
- கல்வின் "கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்" (The Institutes of the Christian Religion) என்னும் நூலை இலத்தின் மொழியில் எழுதி வெளியிட்டார். அது புரட்டஸ்தாந்து படிப்பினைகளின் கைநூலாக அமைந்தது. இந்நூல், படைத்தவரான இறைவன், கிறிஸ்துவில் இறைவன் வழங்கும் மீட்பு, தூய ஆவி, திருச்சபை என்ற நான்கு பகுதிகளைக் கொண்டிருந்தது.
- கல்வினின் போதனைகளில் மிகவும் முக்கியமானது முன்குறித்து வைத்தல் (pre destination) பற்றியதாகும். அதாவது மீட்பு யாருக்குக் கிடைக்கும் யாருக்கு கிடைக்காது என இறைவன் ஏற்கனவே முன்குறித்து விட்டார். எனவே மனிதன் மீட்புக்காக இவ்வுலகில் எதையும் செய்யத் தேவையில்லை.

- தனது கீழ்ப்படியாமையால் பாவத்தில் வீழ்ந்த மனிதன் மீட்புப் பெறுவது நம்பிக்கையால் மட்டுமே.
- ஆதாமின் வீழ்ச்சியால் மனிதன் தன் சுய மன உரிமையை (free will) இழந்து விட்டதால் அவனால் இனி எந்த நன்மையும் செய்ய முடியாது.
- திருவிலியமே மீட்புப் பற்றிய உண்மைகளின் ஒரே மூலமாக இருக்கிறது.
- திருவிவிலியத்தின் அடிப்படையில் திருமுழுக்கு, நற்கருணை ஆகிய இரு அருளடையாளங்களே உள்ளன.
- நற்கருணை கிறிஸ்துவின் மீட்புச் செயலை நினைவு கூருவதோடு விசுவாசத்துடன் அப்பமும் இரசமும் பெறுபவர்களுக்கு ஆசீர் வாதமும் கிடைக்கும்.
- கத்தோலிக்க திருச்சபையின் திருப்பலி வழிபாட்டு முறையின் அமைப்பை அவர் பின்பற்றினாலும், தேவையற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் விலக்கி, மிகவும் எளிமையான வழிபாடாக அமைத்தார். அதில் இறைவார்த்தைக்கும், மறைபோதகத்துக்குமே முக்கியத்தவம் கொடுக்கப்பட்டன.

### 7.3.2.4 தோமாஸ் முன்ற்சரின் (1488-1525) சீர்திருத்தம்

- தோமாஸ் முன்ற்சர் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் ஆரம்ப காலத்தில், 1488ஆம் ஆண்டளவில், ஜேர்மனியில, ஹாஸ் மலைப் பகுதியிலுள்ள ஸரொல்பேர்க் என்ற குக்கிராமத்தில பிறந்தார்.
- ஆரம்பத்தில் லிப்சிக் பல்கலைக் கழகத்திலும், பின்னர் பிராஸ்பட் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்று, கிரேக்கம், எபிரேயம், இலத்தின் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.
- பின்னர் ஜேர்மனியில் ஒரு குருவாகப் பணியாற்றினார்.
- மார்டின் லூத்தர் தன்னுடைய 95 கோட்பாடுகளை விற்றன்பேர்க் பேராலக் கதவுகளில் ஒட்டிய காலத்தின் போது (31.10.1517) அவர் அங்கு இருந்தார். லூத்தரின் கொள்கையால் கவரப்பட்ட அவர், காலப்போக்கில் அவர் லூதரின் இறையியல் கொள்கைகளை மேலெடுத்துச் சென்று, லூத்தரைவிடத் தீவிர சீர்திருத்தவாதியானார்.
- அவர் குழந்தைகளின் திருமுழுக்கை ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவை ‘‘விசுவசிப்பவர்களுக்குத் திருமுழுக்கு அளியுங்கள்,’’ எனக் கூறியுள்ளார். அவருடைய கொள்கையைப் பின்பற்றியவர்கள் ‘‘அனபப்ரிஸ்ற்’’ (Anabaptists) என அழைக்கப்பட்டனர்.
- அவர் திருச்சபையின் தலைவர்களுக்கு எதிரான ‘‘பிரேக் கோட்பாடு’’ என்ற நூலை ஜேர்மன், இலத்தீன் மொழிகளில் எழுதி வெளியிட்டார்.
- ‘‘ஜேர்மன் வழிபாடு’’ என்ற ஜேர்மன் சபைகளுக்குரிய வழிபாட்டு நூலை எழுதி வெளியிட்டார். தனித் திருப்பலி தடை செய்யப்பட்டது. பாவசங்கீர்த்தனமின்றி, இரு வடிவில் நற்கருணை வழங்கப்பட்டது.
- ‘‘திருவிவிலியமும் தொடரும் வெளிப்பாடும்’’ எனும் கொள்கையில் முன்ற்சர், இறைவாக்கு உயிருள்ளது எனவும், இறைவெளிப்பாடு தொடர்ந்து நடைபெறுகிறது என்றும் நம்பினார்.
- முன்ற்சர் அருட்சாதனங்கள் எல்லாம் வெறும் அடையாளங்களே என்றும், நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் இல்லையென்றும், அது இயேசுவின் தியாகப் பலியின் ஒரு அடையாளம் மட்டுமே என்றார்.
- மரியாளைப் பொறுத்த மட்டில் முன்ற்சர் அவரை ஒரு மிக உன்னத இடத்தில் வைத்தார். அவரைக் குலத்தாயென்றும், தலைமைக் குருவென்றும், அரசியென்றும் அழைத்தார்.
- அவர் இயேசுவின் பிறப்பின் முன்னும், பிறப்பின் போதும், பிறப்பின் பின்னும் கன்னியாக இருந்தாரென விவாதித்தார்.
- கன்னி மரியா தன் தாழ்மையின் மூலம் அலகைக்கு எதிரான போரில் வெற்றி பெற்று, இருளுக்கும் பகலுக்கும், இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே ஒரு இடை நிலையாளராக உள்ளார் எனவும் போதித்தார்.
- மரியாளின் பாடலில் வரும் ‘‘தாழ் நிலையைக் கண்ணோக்கினார்’’ எனும் வார்த்தைகளுக்கு அமைய, பெண்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார்.
- இறுதியில் 27 வைகாசி 1525 இல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

### 7.3.3 அங்கிலிக்கன், மெதடிஸ்ட், பப்படிஸ்ட் திருச்சபைகள்

#### 7.3.3.1 அங்கிலிக்கன் சபை

- 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தம் நடைபெற்ற காலத்தில் இங்கிலாந்திலும் சீர்திருத்தம் நடைபெற்றது.
- லூத்தரின் போதனைகள் இங்கிலாந்திலும் பரவத் தொடங்கின. கல்வினின் சபையினரும் இங்கிலாந்தில் சீர்திருத்தத்தைக் கொணர முயன்றனர். ஆனால் அவர்களுக்கு ஸ்கொட்லாந்து, ஹோலாந்து நாடுகளில் கிடைத்த வரவேற்பும் ஆதரவும் இங்கிலாந்தில் கிடைக்கவில்லை.
- இங்கிலாந்து அரசர் 8ஆவது ஹென்றியும், மக்களும் உரோமைத் திருச்சபையின் போதனைகளுக்கும், அதிகாரத்துக்கும் மிகவும் விசுவாசமும், பிரமாணிக்கமும் உள்ளவர்களாக இருந்தார்கள். சீர்திருத்தவாதிகளின் மனதிலிருந்த சந்தேகங்களும், பிரச்சினைகளும் அவர்களுடைய மனதில் எழவில்லை.
- ஹென்றி அரசர் கத்தோலிக்க மதத்தில் அதிக ஈடுபாடு கொண்டு, பேதகர்களின் சம்மட்டியாக இருந்தார்.
- திருச்சபையின் ஏழு அருட்சாதனங்களை மறுத்த லூத்தருக்கு எதிராக, "ஏழு அருட்சாதனங்களின் இயல்புகள்" என்ற மடலை வரைந்தார். இதனால் திருத்தந்தையால் இவருக்கு 1521இல் "விசுவாசத்தைப் பாதுகாப்போன்" என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.
- இங்கிலாந்தின் அரசன் 8ஆவது ஹென்றி தன் அண்ணனின் மனைவி கத்தரினை திருமணம் செய்து வாழ்ந்த 17 வருட வாழ்க்கையில் ஆண் வாரிசு இல்லாத காரணத்தினால் அவளை விவாகரத்து செய்து வேறு பெண்ணை (ஆன் பொலின்) மணம் செய்ய அனுமதிக்குமாறு திருத்தந்தை 7ஆம் கிளமெக்டிடம் (சாந்தப்பர்) அனுமதியை நாடினார்.
- அரசர் 8ஆம் ஹென்றி-கத்தரினின் விவாகரத்திற்கு திருத்தந்தையோ, திருச்சபையின் அதிகாரிகளோ இணங்கவில்லை.
- அதேவேளையில் அரசர் 8ஆம் ஹென்றி 1531இல் குருக்கள் மகாநாட்டைக் கூட்டி, அதில் "அரசரே இங்கிலாந்து திருச்சபையின் தலைவர்" எனத் தீர்மானம் எடுத்தார்.
- திருச்சபைச் சட்டங்கள் இங்கிலாந்து சபை மக்களைப் பாதிக்குமெனில் அரசரின் அங்கீகாரமின்றி அவற்றை இங்கிலாந்தில் அமுல்படுத்துவதில்லை என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.
- மேலும் பாராளுமன்றம் 1532இல் கூடப்பட்டு, இங்கிலாந்து திருத்தந்தைக்கு ஆண்டுதோறும் செலுத்திவந்த பணம் நிறுத்தப்பட்டது.
- திருத்தந்தை 7ஆம் கிளமெண்ட (சாந்தப்பர்) இறுதியாக 1534 பங்குனி 23ஆம் நாள், தன் தீர்க்கமான முடிவை அறிவித்து, "8ம் ஹென்றி அரசன் கத்தரீனை மணந்தது செல்லுபடியான உறுதியான திருமணமாகும். எக்காரணத்தைக் கொண்டும் விவாகரத்து வழங்க இயலாது" எனப் பிரகடனம் செய்தார்.
- எனவே 8ஆம் ஹென்றி 1534 இல் பாராளுமன்றத்தைக் கூட்டி, "அரசரும், அவரது வாரிசுகளும் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவர்கள்" என்ற மேலாண்மைச் சட்டத்தை நிறைவேற்றினார்.
- 1535 இல் 8ஆம் ஹென்றி தன்னை ஆங்கிலத் திருச்சபையின் தலைவராகப் பிரகடனம் செய்தார். அதைத் தொடர்ந்து வழிபாட்டு நூல்கள் எல்லாவற்றிலுமிருந்து திருத்தந்தையின் பெயர் நீக்கப்பட்டது.
- உரோமையுடனான தொடர்பு முழுமையாகத் துண்டிக்கப்பட்டது. 1536இல் பாராளுமன்றத்தினால் "துறவியர் மடச் சிதைப்புச் சட்டம்" நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய துறவற மடங்கள் அனைத்தும் (376) மூடப்பட்டு, ஆயிரக் கணக்கான துறவிகள், கன்னியர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- அரசர் ஹென்றி மனந்திருப்புவார் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த திருத்தந்தை 3வது பவுல், ஏமாற்றமடைந்தவராக 1538இல் அவரை மத நீக்கம் செய்தார்.

- அரசர் 8ஆம் ஹென்றி தான் ஒரு பிரிவினைவாதி (Schismatic) என்பதை ஏற்றுக் கொண்டாலும், இறுதி மட்டும் கிறிஸ்தவ மதப் பாரம்பரிய கோட்பாடுகளுக்குப் பிரமாணிக்கமாய் இருந்தார். அதற்குச் சான்றாக 1539இல் "ஆறு கோட்பாடுகள்" என்ற சட்டத்தைப் பிரகடனம் செய்தார். அதன்படி நற்கருணையில் இயேசுவின் உண்மையான பிரசன்னம், அப்ப அல்லது இரச வடிவில் திவ்விய நற்கருணை பெறுதல், குருக்கள், துறவியரின் பிரமச்சாரியம், துறவற வார்த்தைப் பாடுகள், உத்தரிப்புத் தலம், தனியார் திருப்பலி ஒப்புக்கொடுத்தல், பாவமன்னிப்பு, திருமுழுக்கு, நற்கருணையென்ற அருட்சாதனங்கள், அப்போஸ்தொலிக்க, நிசேயா, அத்தனாசியார் விசுவாச அறிக்கைகள், நம்பிக்கையாலும் பாவ அறிக்கையாலும் பாவ மன்னிப்பு, விசுவாசத்தாலும், நற்செயல்களாலும் நீதிமான்களாகுதல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### 7.3.3.2 மெதடிஸ்ட் சபை

- ஜோண் வெஸ்லி ஒரு அங்கிலிக்கன் சபைக் குருவானவர். அவர் இங்கிலாந்தில் லண்டன்சையர் என்ற இடத்தில் 28 ஆனி 1703 இல் பிறந்தார்.
- 1729 இல் ஒக்ஸ்போரட் திரும்பிய பொழுது, அங்கு அவருடைய சகோதரர் சார்ள்ஸ் வெஸ்லி ஒரு இளைஞர் அமைப்பை உருவாக்கி வழிநடத்துவதைக் கண்டார். பல்கலைக் கழக மாணவர் சிலரைக் கொண்ட அக்குழு, கல்லூரிச் சட்டங்களை மதித்து, பக்தி வாழ்க்கை வாழத் தீர்மானம் எடுத்திருந்த குழுவாகும். அக்குழுவில் அவரும் இணைந்து பின்னர் அக் குழுவுக்குத் தலைவரானார்.
- தினமும் தியானத்திற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒன்றாகக் கூடி கிரேக்க மொழியில் உள்ள புதிய ஏற்பாட்டை வாசித்துத் தியானிக்க வேண்டும். வாரத்தில் மும்முறை அல்லது நான்கு முறை கிரேக்கம், லத்தீன், இலக்கியங்களைக் கற்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளில் மதம் சம்பந்தமான நூல்களை ஆராய்ந்து விவாதிக்க வேண்டும். தங்கள் ஓய்வு நேரங்களை சிறைக் கைதிகளைப் பார்வையிடுதல், அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், அவர்களுக்குப் பொருளுதவி வழங்குதல், சிறு பிள்ளைகளை ஒன்று சேர்த்துக் கல்வி கற்பித்தல் போன்ற பணிகளில் செலவிட்டார்கள்.
- அவ்வாறு அவர்கள் முறைமைகளைக் கைக்கொண்டு வாழ்ந்தபடியால், அக்குழுவினர் "மெதடிஸ்தர்கள்(முறைமைவாதிகள்)" என அழைக்கப்பட்டனர்.
- சிறந்த போதகராகவும், இறையியலாளராகவும் விளங்கிய வெஸ்லி, தெருப் போதகங்களிலும், திறந்த வெளிப் போதனையிலும் ஈடுபட்டு, அக் குழுவை இங்கிலாந்தில் ஒரு மறைபோதக இயக்கமாக மாற்றினார்.
- அவரே முதன்முதலில் அடிமைகளின் உரிமையைப்பற்றிப் போதித்தவரென்பது குறிப்பிடத் தக்கது.
- மக்கள் இயல்பாகவே பாவத்தில் இறந்திருக்கிறார்கள். அதன் விளைவாக இறை கோபத்தின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையின் வழியாக இறைவனுக்கு ஏற்புடையவர்களாகிறார்கள். நம்பிக்கையானது உள்ளார்ந்த, புறம்சார்ந்த பரிசுத்ததனத்தை உண்டாக்குகின்றதெனப் போதித்தார்கள்.
- வெஸ்லியோடு இருந்த அருள் உரையாளர்களை குருக்களாகத் திருநிலைப்படுத்த அங்கிலிக்கன் சபை மறுத்ததால், மெதடிஸ்த சபை அங்கிலிக்கன் சபையிலிருந்து பிரிந்து, ஒரு தனிச் சபையாக அமைக்கப்பட்டது.
- அங்கிலிக்கன் செபப் புத்தகத்தையும், மதக் கோட்பாடுகளையும் திருத்தி எழுதி, அதை அறிமுகம் செய்தார். இவ்வாறாக மெதடிஸ்த சபை ஒரு தனிச் சபையாகச் செயல்படத் தொடங்கியது.
- மெதடிஸ்த சபையினர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அளப்பரிய சேவை ஆற்றினர்.
- **"தூய்மைவாதிகள்"** என அழைக்கப்பட்ட அவர்களின் புகழ் எங்கும் பரவியது. சபையின் நிர்வாகத்தில், ஆளுகையில் மக்கள் பங்கேற்றதால், சபை துரிதமாக வளர்ந்தது.
- அங்கிலிக்கன் சபையிலிருந்து மெதடிஸ்த சபையில் இணைந்தவர்கள் தாழ் சபையினரென்றும் (Low Church), உரோமன் கத்தோலிக்க சபையின் சம்பிரதாயங்களைப் பின்பற்றிய ஏனையோர் உயர் சபையினரென்றும் (High Church) அழைக்கப்பட்டனர்.

- மெதடிஸ்த சபையினர் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஏனைய இடங்களிலும் சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டனர்.
- சிறுவரை கிறிஸ்துவின் வழியில் வளர்ப்பதிலும், நெறி வாழ்க்கையைப் போதிப்பதிலும், கவனம் செலுத்தினர்.
- றொபர்ட் றேய்க்ஸ் என்பவர் பல எதிர்ப்புகள் மத்தியிலும் 1780 ஓய்வு நாள் பாடசாலையை உருவாக்கினார்.
- அவர்களுடைய பங்களிப்பினால் கிறிஸ்தவ இலக்கியமும் உயிர் பெற்றுத் தழைத்தது. சமயக் கைப்பிரதிச் சங்கம் (Religious Tract Society) லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. 1804 இல் பிரித்தானிய சர்வதேச வேதாகமச் சங்கம் (British and Foreign Bible Society) ஏற்படுத்தப்பட்டது. 1812இல் அமெரிக்க கைப் பிரதிச் சங்கம் (American Tract Society) ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் பல புதிய மிஷனறி (தூதுரைப்புப் பணி) சங்கங்களும் தோன்றின. அவற்றுள் பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்:
  - பப்ரிஸ்ற் மிஷனறி சங்கம் (1792)
  - லண்டன் மிஷனறி சங்கம் (1795)
  - சபை மிஷனறி சங்கம் (1799)
  - இங்கிலாந்து வெஸ்லியன் மிஷனறி சங்கம் (1813)
  - அமெரிக்க மிஷனறி சங்கம் (1819)
  - அமெரிக்க பப்ரிஸ்ற் சங்கம் (1824)
  - ஸ்கொட்லாந்து சபையின் மிஷன் கழகம் (1825)

### 7.3.3.3 பப்ரிஸ்ற் சபை

- பப்ரிஸ்ற் சபையின் இணை தாபகரான வில்லியம் கேரி இங்கிலாந்தில் போலஸ்பரி என்ற கிராமத்தில் 17 ஆவணி 1761 இல் பிறந்தார்.
- அவருடைய பெற்றோர்களான எட்மன்ட் கேரியும் எலிசபேத்தும் நெசவுத் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வில்லியம் அவர்களுடைய ஐந்து பிள்ளைகளில் மூத்தவர்.
- காலப்போக்கில், 5 ஐப்பசி 1783 இல் திருமுழுக்குப் பெற்று, பப்ரிஸ்ற் சபையில் தம்மை இணைத்துக் கொண்டார்.
- 1785இல் மூல்ரன் என்ற கிராமத்துப் பாடசாலையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 1789இல் லெய்செஸ்ரர் பப்ரிஸ்ற் ஆலயத்தின் முழு நேரப் பேதகரானார். அங்கிருந்த காலத்தில் அனைத்துலகிலும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவதில் மிகவும் ஆர்வம் கொண்டார்.
- 1792இல் தமது தூதுரைப் பணி பற்றிய கருத்தை, "புறவினத்தவர்களை மனந்திருப்புவதன் மட்டில் கிறிஸ்தவர்களின் கடமைகள் பற்றிய ஆய்வு" என்ற நூல் வடிவில் வெளியிட்டார். அந்த நூலில் ஐந்து பகுதிகள் இருந்தன.
  1. இறையியல் அடிப்படையில் மறை பரப்புப் பணியை நியாயப்படுத்தல் (மத்.8:18-20).
  2. திருச்சபையின் மறை பரப்புப் பணியின் வரலாறு.
  3. உலக நாடுகளின் சனத் தொகை, மதங்கள் பற்றி கணக்காய்வு.
  4. மறைபரப்பாளர்களை அனுப்புவதற்கு எதிராக வைக்கப்படும் வாதங்களுக்குப் பதில்
  5. பப்ரிஸ்ற் மறைபரப்புச் சபையை உருவாக்குதலும், அதன் தாபரிப்பும்.
- பின்னர் அவற்றின் அடிப்படையில், எசா.54:2-3 வசனத்தைப் பயன்படுத்தி, மறைபரப்புப் பணியை ஆதரித்து,"சாவில்லாத மறையுரை" என்றழைக்கப்படும் மறையுரையை ஆற்றினார்.

- ‘‘கடவுளிடமிருந்து பெருங் காரியங்களை எதிர்பாருங்கள். கடவுளுக்காகப் பெருங் காரியங்களை முயற்சியுங்கள்’’ என்ற அவரது கூற்று மிகவும் பிரபல்யமானது.
- ஐப்பசி 1792 இல் கடவுளை அறியாதோர் மத்தியில் நற்செய்திப் பணி ஆற்றும் சங்கம் நிறுவப்பட்டது. அச்சங்கம் ‘‘பப்ரிஸ்ற் மிஷனறி (தூதுரைப்புச்) சங்கம்’’ என்று அழைக்கப்பட்டது. அச்சங்கத்தின் இணை தாபகர்களாக வில்லியம் கேரி, யோண் றைலன்ட், யோண் சுற்பளிவ், என்போர் பணியாற்றினர்.
- வில்லியம் கேரியும், அவருடைய மனைவியும், அவருடைய மூத்த மகன் பீலிக்ஸ், இளைய மகன் தோமாஸ், அவருடைய மனைவி, மகளுடன் 1793 சித்திரையில் கப்பல் வழியாக இந்தியா புறப்பட்டனர்.
- பெங்காலி மொழியைச் சிறப்பாகக் கற்று, புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். அதேவேளை அவரது தூதுரைப்புக் குழுவுக்கான கொள்கைகள், உழைப்புக்கான வழிகள், சுதேச மக்களைப் பணிக்காகப் பயிற்றுவித்தல் ஆகியவை பற்றிய திட்டங்களை வகுத்தார்.
- 1800 வந்து சேர்ந்த அச்சகத் தொழிலாளி வில்லியம் வாட், பள்ளி ஆசிரியர் ஜோசுவா மார்ஷ்மன் ஆகியோருடன் இணைந்து ஒரு பாடசாலையை நிறுவி, தமக்கும், தம் பணிக்கும் தேவையான வருமானத்தைத் தேடிக் கொண்டனர்.
- மேலும் ஒரு அச்சகத்தையும் அமைத்தனர். இந்திய மொழிகளைக் கற்று, திருவிவிலியத்தை அம் மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டனர்.
- கேரியின காலத்தில் அவர்கள் 44 இந்திய மொழிகளில் திருவிவிலியத்தை மொழிபெயர்த்து, அச்சிட்டனர்.
- சுதேச பணியாளர்களைப் பயிற்றுவிக்கவும், விஞ்ஞானம், கலை ஆகிய பிரிவுகளில் எல்லோருக்கும் கல்வி புகட்டவும், 1818 இல் செரம்பூர் கல்லூரியை ஆரம்பித்தனர்.
- பப்ரிஸ்ற் மறைப் பரப்பளார்களின் தொகை வளரவே, பிரச்சினைகளும், பிரிவினைகளும் வளர்ந்தன. அதனைத் தொடர்ந்து பப்ரிஸ்ற் சபை இன்னும் பல சபைகளாகப் பிரிந்தன.˙.

### 7.3.4 கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தம்

- கிறிஸ்தவ சமய சீர்திருத்தத்தின் விளைவாக கத்தோலிக்க திருச்சபையில் ஒரு பெரிய தாக்கம், பாதிப்பு ஏற்பட்டது.
- எனவே திருச்சபையின் தலைவர்கள் திருச்சபையில் ஒரு உள்ளார்ந்த மறுசீரமைப்பு, சீர்திருத்தம் அவசியம் ஏற்படவேண்டுமென்று உணர்ந்தனர்.
- திருச்சபையின் தலைவர்கள் மட்டுமல்ல, பல பக்தியுள்ள கத்தோலிக்க ஆண்களும், பெண்களும் திருச்சபையானது முழுமையாகச் சீரமைக்கப்பட வேண்டுமென்று காலத்துக்குக் காலம் வலியுறுத்தி வந்துள்ளனர்.
- கிறிஸ்தவ மதம் அல்ல, கிறிஸ்தவ மக்கள், அதாவது திருச்சபையின் தலைவர்களும் விசுவாசிகளுமே சீர்திருத்தப்படவேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாய் இருந்தனர்.
- 13ஆம் நூற்றாண்டிலே திருச்சபையில் பல துறவற சபைகள், குறிப்பாக பிரான்சிஸ்கன், டொமினிக்கன், அகுஸ்தீனியன் சபைகள் போன்ற இரங்கல் சபையினர் தோன்றி, சீர்திருத்த வேலைகளில் ஈடுபட்டனர்.
- 16ஆம் நூற்றாண்டில் **புனித கயித்தான்** இத்தாலியில் இல்லறத்தவர்களையும் குருக்களையும் கொண்ட **‘‘தெய்வீக அன்பின் கழகம்’’** என்ற சபையை ஆரம்பித்து, தங்களின் ஆன்ம அர்ச்சிப்புக்காகவும், பிறரின் ஈடேற்றத்திற்காகவும் உழைத்தார்.
- புனித இக்னேசியஸ் லொயலா கத்தோலிக்க திருச்சபையை உள்ளார்ந்த ரீதியாக சீர்திருத்தவும், சீர்திருத்த சபையினரின் போதனையினால் பிரிந்து சென்ற கத்தோலிக்கப் பிரதேசங்களைத் திருச்சபையின் அதிகாரத்தின் கீழ் ஒன்றுபடுத்தவும் இயேசு சபையைத் தாபித்து, முழுமூச்சாகச் செயல்பட்டார்.
- எனினும் மறுமலர்ச்சியன் விளைவாக ஏற்பட்ட பாதிப்பானது மிகப் பாரதூரமானது.
- எனவேதான் திருச்சபையானது அதைச் செவ்வனே செய்வதற்காக பல ஆயர்கள், துறவற சபைகளின் தலைவர்களின் ஒத்துழைப்பை நாடி, திரிதேந்தின் பொதுச் சங்கத்தைக் கூட்டியது.

**7.3.4.1 திரிதெந்தின் சங்கம்** (1545-1563)

- மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சீரழிவுகளை மறுசீரமைக்க திருச்சபை எடுத்த முயற்சிகளை கத்தோலிக்க சீரமைப்பு (Catholic Reformation) அல்லது மாற்றுச் சீர்திருத்தம் (Counter Reformation) என்று அழைப்பர்.
- அவற்றுள் முக்கியமானது அதற்காகக் கூட்டப்பட்ட திரிதேந்தின் சங்கமாகும்.
- திருத்தந்தை 3வது பவுல் எல்லாத் தடைகளையும் மேற்கொண்டு, மார்கழி மாதம், 13ம் திகதி, 1545ம் ஆண்டு வட இத்தாலியிலிருந்த திரிதேந்து என்ற நகரில், 30 ஆயர்களுடன் திருச்சபையின் திரிதேந்தின் பொதுச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்.
- பாப்பு 4வது பயஸ், சங்கத்தைத் மீண்டும் தொடங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தன்னுடைய இராஜதந்திரத் திறன்களைப் பயன்படுத்தி, அவரே அந்தக் கூட்டத் தொடருக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி, 1563இல் சங்கத்தை ஒரு தகுந்த முடிவுக்குக் கொணர்ந்தார்.

**7.3.4.2 திரிதெந்தின் திருச்சங்கத்தின் தீர்மானங்கள்**

- கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள் மற்றும் குருத்துவ வாழ்வு முறையிலும் சீர்திருத்தங்களை முன்வைத்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

**7.3.4.2.1 கிறிஸ்தவ மறைக் கோட்பாடுகள்**

1. விவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று. இவை இரண்டினையும் விசுவாசிகள் ஏற்றிடல் வேண்டும். பழைய, புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை. ஏனெனில், கடவுளே அவற்றின் ஆசிரியர். திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை. எனவே, அவற்றிற்கு பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உரியது. போதிக்கும் அதிகாரத்தையும் கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கியுள்ளார். வல்கேட் என அழைக்கப்படும் இலத்தீன் விவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.
2. நம்பிக்கையினால் மட்டும் ஒருவர் நீதிமானாகின்றாரென்ற லூதரின் முக்கிய கோட்பாட்டிற்கு எதிராக, மனிதன் சென்ம பாவத்தினால் முற்றுமுழுதாக அழிந்திருக்கிறானென்பதைத் திருச்சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதரின் மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல, எதிர்நோக்கு, அன்பினாலும் இடம்பெறுகிறது. மேலும் அன்பானது பிறர்நலப் பணிகளால் வெளிப்படுத்தப்பட வேண்டும். நற்செயல்களின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.
3. புனித பேதுருவும், அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர். திருத்தந்தை வழுவா வரம் பெற்றவர்.
4. ஏழு திருவருட்சாதனங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை. திருமணம் ஒரு திருவருட்சாதனம். திருமணப் பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று. இரகசிய திருமணங்கள் செல்லுபடியற்றவை.
5. திருச்சபையின் படிமுறை நிர்வாக அமைப்பு (Hierarchic nature) வலியுறுத்தப்பட்டிருக்கிறது.
6. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் உண்மையானது. நற்கருணை ஒரு விருந்து மட்டுமல்ல அது உண்மையான பலி.

**7.3.4.2.2 குருத்துவ வாழ்வுச் சீர்திருத்தம்**

1. திருச்சபையின் கருதினால் குழுவில் அனைத்துலக உறுப்பினருக்கும் பதவி அளிக்க வேண்டும்.
2. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களிலே தங்கி மறைபோதனை நடத்த வேண்டும். ஆயர் தன் மறைமாவட்டத்துடன் திருமணம் செய்யப்படுகின்றார். எனவே ஒன்றிற்கு மேற்பட்ட மறைமாவட்டங்களுக்கு அவர் பொறுப்பு ஏற்கலாகாது. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்திலுள்ள பங்குகளை ஒழுங்காகத் தரிசிக்கவேண்டும். மறைமாவட்டப் பேரவைகள் ஒழுங்காகக் கூட்டப்படவேண்டும்.
3. குருக்கள் தம் பங்கு மக்களை கிறிஸ்தவ மதக் கொள்கைகளில் பயிற்றுவிக்கவேண்டும்.
4. குருத்துவப் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.

5. துறவற சபைகள் புதிய அங்கத்தினரைச் சேர்க்கும்பொழுதும், புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுதும், வார்த்தைப்பாடுகளை அனுசரிப்பதிலும் கடுமையான சட்ட ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.
6. திருச்சபையின் பரிபூரண பலனை வழங்க பிரச்சாரப் போதகம் செய்யும் முறை நீக்கப்பட்டது.

- திரிதெந்தின் சங்கமும், அதன் தீர்மானங்கள் அனைத்தும் 1564இல் திருத்தந்தை 4ஆவது பயசினால் ‘‘பெனடிக்துஸ் டேயுஸ்’’ என்ற மடலினால் அங்கீகரிக்கப்பட்டது.
- மத போதகருக்காக ‘‘திரிதெந்தின் சங்கத்தின் ஞானோபதேசம்’’ என்ற நூலும் திருத்தந்தை 5ஆவது பயசினால் 1566இல் வெளியிடப்பட்டது.
- மறைபோதனையில் அது ஒருமைப்பாட்டினைக் கொணர்ந்தது. கத்தோலிக்க மதக் கோட்பாடுகளுக்கும் புரொட்டஸ்தாந்து மதக் கோட்பாடுகளுக்கும் இடையிலான வித்தியாசங்கள், வேறுபாடுகள் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டன.
- சில குறைபாடுகள் இருப்பினும் திரிதெந்தின் சங்கம் கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாகவிருக்கிறது.

### 7.3.5 மறுமலர்ச்சிக்கு உதவிய துறவற சபைகளின் பங்களிப்பு

#### 7.3.5.1 இயேசு சபை

- புனித லொயோலா இக்னேசியஸ் ஸ்பெயின் நாட்டிலுள்ள ஓர் உயர்குடி குடும்பத்தில் 1491இல் பிறந்தார்.
- பிரான்ஸ் நாட்டினருடன் பம்பலூனா என்னும் இடத்தில் நடந்த போரில் காயமுற்றுப், படுக்கையில் கிடந்தபொழுது, இறையருள் தம்மைத் தழுவுவதை உணர்ந்தார். ஞான வாழ்க்கை பற்றிய நூல்களைப் படித்தார்.
- யாக்கோபுஸ் தே ஒராஜினே இயற்றிய **“புனிதர்களின் வாழ்க்கை”** எனும் நூலும், சாக்சனி நாட்டு லுடால்பு இயற்றிய **“கிறிஸ்துவின் வாழ்க்கை”** எனும் நூலும் இஞ்ஞாசியாருடைய ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஊற்றுக்களாக அமைந்தன.
- பார்சலோனாவுக்கு மேற்கேயுள்ள மொன்செரா என்னும் நகரிலுள்ள ஆசீர்வாதப்பர் துறவற மடத்திற்குச் சென்று, பாவ அறிக்கை செய்து, தனது உடைகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, ஏழ்மை, கற்பு வாக்குறுதிகளை எடுத்து, தனது ஆயுதங்களைக் களைந்து மரியன்னையின் காலடியில் வைத்துத் தன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார்.
- பின்னர் இக்னேசியஸ் அங்கிருந்து மன்ரேசா என்னும் இடத்திற்குச் சென்று, நோன்பிருந்து, உணவுக்காகப் பிச்சையெடுத்து, செபத்தில் ஈடுபட்டு நோயாளிகளைப் பராமரித்தார்.
- மன்ரேசாவில் தனது ஆன்மீக அனுபவங்களை ஆன்மீகப் பயிற்சிகளாகத் தொகுத்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, இஸ்லாமியரை மனந்திருப்புவதற்காகப் புனித பூமிக்குச் சென்றார்.
- பாரிஸ் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இக்னேசியஸ், தனது சகாக்களுடன் புனித பூமிக்குச் சென்று, ஆண்டவருடன் நெருக்கமாக இருக்கவும், அந்நாட்டு மக்களுக்கு இறைவார்த்தையைப் போதிக்கவும் விரும்பினார்.
- லா ஸ்ரோரா எனும் இடத்தில் இக்னேசியஸ் கண்ட காட்சியில் உரோமையில் இறைவன் தமக்குத் துணையாக இருப்பாரென உறுதி பெற்று, உரோமைக்குச் சென்று, திருத்தந்தையைச் சந்தித்தார். அங்கு 1539இல் திருத்தந்தையின் வாய்மொழி அனுமதி அவர்களுக்குக் கிடைத்தது. அடுத்த வருடம், 1540 இல் எழுத்து மூல அங்கீகாரத்தையும் பெற்றனர். அதைத் தொடர்ந்து 1540ஆம் ஆண்டிலேயே இயேசு சபை நிறுவப்பட்டது.
- ஏழ்மை, கற்பு, பணிவு எனும் துறவற வார்த்தைப்பாடுகளை ஏற்றுத் தம்மை அர்ப்பணித்த அவர்கள், தம் ஆன்ம நலனுக்காகவும், திருமறையைப் பரப்புவதற்கு வழிகாட்டியாகவுள்ள திருத்தந்தையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாகவும் மேலதிக வாக்குறுதியையும் எடுத்தனர்.

- சிலுவையில் அறையுண்ட இயேசுவை நெருங்கிப் பின்பற்றுவதும், இறைவனின் உன்னத மகிமைக்காகப் பணியாற்றுவதுமே இயேசு சபை உறுப்பினரது அர்ப்பணத்தின் நோக்கமாகும்.
- திருத்தந்தைக்கு முழுமையாகக் கீழ்படிவதால் இந்நோக்கம் நிறைவேறும். ஏனெனில் திருத்தந்தை இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கிறார் என்பதும், அவர் திருச்சபையின் நலனில் முழுமையான அக்கறை கொண்டுள்ளார் என்பதும் இக்னேசியசின் நம்பிக்கையாக இருந்தது.
- இச்சபையில் இணைந்தவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி, இறையியல், மெய்யியல் என்பன முக்கியமாக்கப்பட்டன.
- பல்கலைக்கழகப் பட்டதாரிகளான தொடக்க உறுப்பினர்களின் அடிப்படைக் கல்வித் தகைமை வலியுறுத்தப்பட்டன.
- அவர்கள் சிறுவருக்கும், கல்வி கல்லாதோருக்கும் திருமறை அறிவைப் போதித்தனர்.
- சீர்திருத்த சபைகள் வளர்ச்சியடைந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியை இயேசு சபை இளம் குருக்கள் முன்னெடுத்தனர்.
- பீற்றர் கனிசியஸ் (1521-1597) எனும் ஒல்லாந்தைச் சேர்ந்த இயேசு சபைக் குரு கல்லூரிகளை நிறுவி, கத்தோலிக்க திருமறையை வளர்த்தார். இவரது மறைக்கல்வி நூல் திரிதேந்தீன் பொதுச் சங்கத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது.
- இயேசு சபைக் குருக்கள் மறைத் தூதுப் பயணங்களை மேற்கொண்டு, பல நாடுகளில் கத்தோலிக்க திருச்சபையைப் பரப்பினர். சீர்திருத்த மறைக் கோட்பாடுகளிலிருந்து பெகேமியா, மொராவியா, போலந்து ஆகிய நாடுகளை விடுவித்தவர்கள் இயேசு சபைக் குருக்களாவர்.

### 7.3.5.2 வின்சென்சியன் சபை

- வின்சென்சியன் சபையானது மறைமாவட்டக் குருக்களுக்காக புனித வின்சென்ற் தே பவுலினால் 1626ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- அவர்கள் ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்ற துறவற வார்த்தைப்பாடுகளை அளித்தார்கள். ஆனால் அவர்கள் துறவிகள் அல்லர், மறைமாவட்டக் குருக்களே.
- 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மறைமாவட்டக் குருக்களின் வாழ்வில் சீர்குலைவுகளும், பின்னடைவுகளும் காணப்பட்டன.
- மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு இரு வழிகள் உணரப்பட்டன. ஒன்று, துறவற சபைகளின் அமைப்பைப் பின்பற்றி மாதிரிக் குருக்களை உருவாக்குதல். இரண்டு, திரிதேந்தின் சங்கத்தின் பரிந்துரைகளைப் பின்பற்றி குருக்களை உருவாக்கும் பொறுப்பை ஒரு துறவற சபையிடம் ஒப்படைத்தல் என்பனவாகும்.
- அதற்கமைய பியேர் டி பெருளே என்ற குரு 1611இல் ஒரு மாதிரிக் குருக்களின் அமைப்பை (Oratories) ஆரம்பித்தார்.
- மேய்ப்புப் பணியில் ஈடுபட்ட இம் மறைமாவட்டக் குருக்கள் ஏனைய குருக்குளுக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்தார்கள். கிறிஸ்துவின் மறை நிகழ்ச்சிகளைத் தியானிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்து, கிறிஸ்துவின் மனிதத்துவத்தின் தன்மையை ஆன்மீக வாழ்வில் இணைத்துக்கொள்ள உதவினார்.
- கிறிஸ்துவின் மனித அவதாரத்தையும், நற்கருணையையும் மையப்படுத்திய வாழ்விற்கு சுயமறுப்பினதும் செபத்தினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.
- 1626இல் புனித வின்சென்ற் தே பவுல் ஒரு மறைமாவட்ட குருக்களின் குழுவை (Congregation of the Priests of the Missions) ஆரம்பித்தார். தென் பிரான்ஸ் பகுதியில் உள்ள ஏழைக் கிராமங்களில் பணியாற்றுவதே இக் குழுவின் நோக்கமாக இருந்தது.

- புனித வின்சென்ற் பாரிசில் இருந்தபொழுது, குடியானவர்களின் கிறிஸ்தவ மதக் கொள்கைகள் பற்றிய அறியாமையையும், தேவ பக்தியற்ற நிலையையும் அவதானித்தார். எனவே இரு இயேசு சபைக் குருக்களுடன் இணைந்து, அருகாமையிலிருந்த கிரமங்களுக்கு வீடுவீடாகச் சென்று, குடும்பங்களைத் தரிசித்து, மறைக்கல்வியைப் போதிக்கத் தொடங்கினார்.
- 4 புரட்டாசி 1626இல் இக்குழு **"மறைபோதகக் குருக்களின் சபை"** என்ற பெயருடன் தாபிக்கப்பட்டது. அச்சபையினர் வின்செந்தியரெனவும் அழைக்கப்பட்டனர். பாரிஸ் நகரப் பேராயர் அந்தச் சபைக்கு அங்கீகாரம் வழங்கினார். பிரான்ஸ் நாட்டு 13ஆவது லூயிஸ் அரசரும் பிரான்ஸ் நாட்டில் அவர்கள் பணிபுரிய அங்கீகாரம் வழங்கினார்.
- அவர்கள் தாங்கள் ஒரு குழுவாக வாழ்ந்து, தங்களை ஏழைக் கிராமவாசிகளின் ஈடேற்றத்திற்காக அர்ப்பணித்து வாழப் போவதாக அறிக்கையிட்டனர்.
- 19ஆம் நூற்றாண்டில் **"மறைபோதக குருக்களின் சபை"** முக்கியமான ஒரு சபையாக வளர்ந்தது. கத்தோலிக்க திருமறையைப் போதித்து மக்களைச் சீர்திருத்துவதும், மறைக் கோட்பாடுகளுக்குப் பதில் அளிப்பதும் அவர்களது பணியாகும்.

### 7.3.5.3 கார்மேல் சபை

- கார்மேல் சபையின் வரலாறு 12ம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் தொடங்கியது. பாலஸ்தீனதிலுள்ள கார்மேல் மலையில் பல தனி வாசம் வாழ்ந்த துறவிகள் (Hermits) இருந்தனர். எருசலேம் பிதாப்பிதா அவர்களுக்கு ஒரு நெறிமுறையை வழங்கினார். அதில் 16 ஒழுங்குகள் இருந்தன.
- அவர்கள் ஆழ்தியானம் செய்பவர்கள். அவர்கள் கடும் தவம் புரிபவர்கள். மட அதிபருக்கு அனைத்திலும் கீழ்ப்படிவர். தனி அறையில் வாழ்வர். எனினும் திருப்புகழ்மாலை செபிப்பதற்கு ஒன்று கூடுவர். மௌனம், செபச் சூழலில் வாழ்வர். ஏழ்மையில் வாழ்ந்து, தம் உணவுக்காக வேலை செய்வர். தங்கள் அன்றாட உணவில் மாமிசத்தைத் தவிர்ப்பர்.
- சாரசேனர் பாலஸ்தீனாவைத் தாக்கிய பொழுது, கார்மேல் மலையில் வாழ்ந்த துறவிகள் தெற்கு, மேற்கு ஐரோப்பாவிற்குச் சிதறுண்டு ஓடினர்.
- பாலஸ்தினாவில் வாழ்ந்த தொடக்க கால துறவிகள் கடும் தவ வாழ்க்கையை ஐரோப்பாவில் வாழ்வது கடினமானதாகவிருந்தது. எனவே சைமன் ஸ்டொக் துறவியரின் கடும் தவ முயற்சிகளைக் குறைத்தார்.
- காலில் எளிமையான மிதியடி அணிதல், மாமிசம் உண்ணுதல் போன்ற மாற்றங்கள் செய்யப்பட்டன. எனினும் நோன்பு இருத்தல், ஒன்றுகூடித் திருப்புகழ்மாலை ஓதுதல் தொடர்ந்து இருந்தன.
- பெண்களின் வேண்டுகோளுக்கு அமைய, 1452 இல் பெண்களுக்கென்று கார்மேல் இரண்டாம் சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து 1476 இல் இல்லறத்தவருக்கென்று கார்மேல் மூன்றாம் சபையும் அமைக்கப்பட்டது.
- சைமன், கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்டு, பாரிஸ் முதலிய பல்கலைக்கழக நகரங்களில் தமது சபையின் மடங்களை நிறுவினார். அவ்வாறே அயர்லாந்திலும், ஸ்கொட்லாந்திலும் மடங்கள் நிறுவப்பட்டன.
- திருச்சபையில் உருவாகிய ஆன்மீகச் சீர்குலைவு, கார்மேல் சபையினரையும் பாதித்தது. எனவே, கார்மேல் துறவற சபையிலும் சீர்திருத்தம் தேவைப்பட்டது.
- கார்மேல் சபையில் ஆங்காங்கே சிற்சில சிறிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அதன் முழுமையான சீர்திருத்தம் புனித அவிலா திரேசாவினால் கொண்டுவரப்பட்டது.
- கார்மேல் சபைத் துறவியான அவிலா திரேசா, தன்னுடைய 25 ஆண்டுகள் துறவற வாழ்க்கை அனுபவத்துடன், பெண்கள் கார்மேல் சபையில் இச்சீர்திருத்தத்தை ஆரம்பித்தார். அவருக்கு உறுதுணையாக ஆண்கள் கார்மேல் சபையைச் சார்ந்த புனித சிலுவை யோவான் இருந்தார்.

- **“நிறை வாழ்வின் வழி”** (The Way of Perfection), **“உள்ளக மாளிகை”** (Interior Castle) என்னும் ஆன்மீக நூல்களை எழுதினார். கார்மேல் சபையின் தொடக்ககால தப வாழ்வும், ஆழ்தியான நிலை வாழ்வையும் மீண்டும் கொண்டு வருவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பலனளித்தன.
- நன்கொடையாளர்களின் உதவியுடன் 1561இல் புது மடம் ஒன்று கட்டி, அங்கு தன் சீர்திருத்தப் பணியைத் தொடங்கினார். **புனித சூசையப்பர் மடம்** என அதற்குப் பெயரிட்டார். திருத்தந்தையின் அங்கீகாரமும் கிடைத்தது.
- அம் மடத்தில் முழு நேர மௌனம் காக்கப்பட்டது. கடுமையான ஏழ்மை இருந்தது. வருமானத்திற்கென்று நிலையான வழி இருக்கவில்லை.
- கன்னியரின் ஆடை ஒருவகை முரட்டு கம்பளியாலானது. காலில் சப்பாத்து அணிவதில்லை. ஆனால் மிதியடி அணிந்தார்கள். சப்பாத்து அணியாதபடியால் அவர்கள் **காலணி துறந்த கார்மேல் சபையினர்** (Discalced Carmelites) என அழைக்கப்பட்டார்கள்.
- தினமும் மரக்கறிச் சாப்பாடு சாப்பிட்டார்கள். இத்தகைய கடுமையான வாழ்க்கையால் துறவிகள் ஆன்மீக வளர்ச்சியைக் கண்டார்கள்.
- புனித அவிலா திரேசாவுக்கு உதவியாகவிருந்த புனித சிலுவை யோவானும் அவரைப் பின்பற்றி, அவரது உதவியுடன், கார்மேல் ஆண்கள் சபைத் துறவிகளுக்கான சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார்.
- அவரும் பல ஆன்மீக நூல்களை எழுதினார். அவை, **“கார்மேல் சபை ஏற்றம்”** (The Ascent of Mount Carmel), **“இருண்ட இரவு”** (The Dark Night), **“ஆன்மீகப் பாடல்”** (The Spiritual Canticle), **“அன்பின் அணையாச் சுவாலை”** (The Living Flame of Love) என்பனவாம்.
- இவர்கள் இருவரதும் ஆன்மிக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்வில் மிகவும் உதவியாக இருந்தன.
- செப வாழ்வு, ஆழ்தியான நிலைச் செபம் (Contemplative Prayer) போன்றவற்றை அனுபவமாக்கும் முறைகள் பற்றிய ஆக்கங்கள் மிகவும் பயனுள்ளவை.
- ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாதது என்னும் அறிவுரையும் பலரால் ஏற்கப்படும் உண்மையாகும். இவற்றிற்கு உதாரணமாகக் குழந்தை இயேசுவின் புனித திரேசா, புனித ஈடித் ஸ்ரெயன் ஆகிய கார்மேல் சபைத் துறவிகள் திகழ்கின்றனர்.

### 7.3.5.4 கப்புச்சின் சபை

- 16ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய துறவறக் குழுக்களில் முக்கியமானது கப்புச்சின் துறவற சபையாகும்.
- இது பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து தோன்றியது. 13ஆம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசீசி ஆரம்பித்த பிரான்சிஸ்கன் துறவற வாழ்க்கை முறையும், சட்ட ஒழுங்குகளும் காலப்போக்கில் தளர்ந்து செல்ல ஆரம்பித்தன. அன்றைய பிரான்சிஸ்கன் சபையினருடைய வாழ்க்கை முறையானது பிரான்சிசுடைய காலத்தில் இருந்த வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்டதாகக் காணப்பட்டது.
- எனவே 1520 இல் புனித பிரான்சீஸ்கு அசீசியின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், தொடக்க கால நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தவும், தனிமை நிலை, தபம் போன்றவற்றை மீண்டும் நிலைநாட்டவும் பிரான்சிஸ்கன் சபை உறுப்பினர்கள் சிலர் தீர்மானித்தனர்.
- இவர்களுக்குத் தலைமை தாங்கியவர் மத்தேயோ செரபீனி டீ பாஷ்ஸி என்பராவர். இவரது சீர்திருத்தப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய வாய்மொழி அனுமதியை திருத்தந்தை 7ஆவது கிளமென்ற் வழங்கினார். திருத்தந்தை 3ஆவது பவுல் 1536இல் கப்புச்சின் சபையை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தார்.

- மத்தேயோவுக்கும், அவரது சகாக்களுக்கும் கமல்டோலீஸ் துறவிகள் தஞ்சம் அளித்தனர். பின்னர் அதற்கு நன்றியாக மத்தேயோவும், அவருடைய சகாக்களும் அவர்களைப்போல் கப்புச்சியோ என அழைக்கப்படும் தலை மூடியை அணிந்து, தாடியையும் வளர்த்துக் கொண்டனர்.
- அந்தத் தலை முடியிலிருந்துதான் கப்புச்சின் என்ற பெயர் இச்சபைக்குக் கொடுக்கப்பட்டது.
- 1528இல் திருத்தந்தை 7ஆவது கிளெமென்ற் அவர்கள் எங்கும் சென்று, ஏழைகளுக்கு மறைபோதகம் செய்ய அனுமதி அளித்தார்.
- நோயாளரைப் பராமரிப்பதினாலும், கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர்.
- புரொட்டஸ்தாந்து சீர்திருத்த வாதிகளுக்கு எதிராகப் போதித்தனர்.
- எளிமையான வாழ்வு வாழ்ந்தனர். சாதாரண மக்கள் மட்டத்தில் நின்று, அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் மறையுரை ஆற்றினர்.
- 1529இல் கப்புச்சின் சபையின் முதல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் சபையின் சட்ட ஒழுங்குகள் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஏகாந்த வாழ்வு கைவிடப்பட்டது.
- ஆனால் வாழ்க்கையானது மிகவும் கடுமையானதாகவும், எளிமையானதாகவும், வறுமையானதாகவும் இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.
- மடங்களோ, சபையோ எதையும் உரிமையாகக் கொள்ளலாகாது. அனைத்துத் தேவைகளும் பிச்சையெடுப்பதின் வழியாகவே பெறப்படும். ஒவ்வொரு மடமும் எட்டுப் பேரைக் கொண்ட சிறிய குழுக்களாக அமையும். திருப்புகழ்மாலை ஓதுவதும், இரண்டு மணித்தியால தனிச் செபமும் இடம்பெறும்.
- வெளிப்புலப் பணியாக ஏழைகள் மத்தியில் மறைபோதகம் செய்வதும், ஆன்மீக பணிகளில் ஈடுபடுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அத்துடன் அவர்கள் பல மறைத் தூதுப் பயணங்களையும் மேற்கொண்டனர்.
- அவர்கள் சென்ற இடமெல்லாம் ஏழைகளுக்கு உதவி செய்து, நோயுற்றோரைப் பராமரித்து, சாதாரண மக்கள் மத்தியில் எளிமையாக வாழ்ந்ததால் மக்கள் அவர்களைப் பெரிதும் விரும்பினர்.
- 1538இல் பெண்களுக்கென்று ஒரு கப்புச்சின் மடமும் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தாபித்தவர் சகோதரி மரியா லொறென்சோ லோங்கோ என்பவராவர். 16ஆம் நூற்றாண்டின் முடிவில் கப்புச்சின் துறவிகள் ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் பரவி, அளப்பரிய பணிபுரிந்தனர்.

**உசாத்துணை நூல்கள்:**


- FR. P.C. Thomas, ***A Compact History of the Popes,*** Panta, Bompay, India.
- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, ***திருச்சபை வரலாறு,*** நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***கிறிஸ்தவ வாழ்வு,*** அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா.
- பிலிப்ஸ் இயேசுதாசன், ***கடுகுமரம்,*** அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.

**தேர்ச்சி 8.0 :** சமுதாய முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவ சிந்தனைகள், கல்வி, கலைகள் அளித்த பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1 :** கிறிஸ்தவத்தின் கல்விப் பணியை அறிந்து தமது அறிவை விருத்தி செய்து சமூக முன்னேற்றத்திற்காகத் தம்மை அர்ப்பணிப்பார்.

**பாடவேளைகள் :** 14

**கற்றல் பேறுகள் :**

- மத்திய காலத்தில் கல்வி முன்னேற்றத்திற்காகக் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- கல்வி முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவர்கள் உழைத்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- கல்வியறிவு குறைந்தவர்களுக்குக் கல்வியை வழங்க முன்வருவார்.
- சமூக முன்னேற்றத்திற்காக மற்றவர்களோடு இணைந்து செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம் :**

**8.1.1 கல்வி மேம்பாட்டிற்கு கிறிஸ்தவத்தின் பங்களிப்பு**

- எந்தவொரு மக்கள் குழுமத்தின் அல்லது இனத்தின் நாகரிக வளர்ச்சிக்கு அவர்களின் கல்வி அறிவு முக்கியமான பங்களிப்பை வழங்கும் என்பது கண்கூடாகும்.
- திருச்சபையின் ஆரம்பத்திலும் கிறிஸ்தவ மறைக்கோட்பாடுகள் திருத்தூதர்களால் போதிக்கப்பட்டும், விளக்கமளிக்கப்பட்டும் வந்தபோதிலும், கலாபனைக் காலத்தில் சத்தியத்தின் பாதுகாவலர்கள் கிறிஸ்தவ மறைக்கோட்பாடுகளை மென்மேலும் தெளிவுபடுத்தி விசுவாசத்தில் ஆழப்படுத்தினர்.
- பின்னர் துறவற சபைகளினால் வலுவூட்டப்பட்டு அலெக்சாந்திரியா, அந்தியோக்கியா இறையியல் சிந்தனைக் கூடங்களில் இறையியல் சிந்தனைகளுடன் கற்பிக்கப்பட்டன.
- திருச்சபையின் வரலாற்றில் தப்பறைகள் தோற்றம் பெற்றபோது இறையியல் சிந்தனையாளர்களால் இறையியல் கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டதன் மூலம் கல்வி நடவடிக்கைகள் முன்னேற்றம் கண்டன.
- கி.பி. 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் உரோமைப் பேரரசு ஐரோப்பிய பழங்குடியினரின் படை நடவடிக்கைகளால் அழிவிற்குட்பட்டபோது திருச்சபையின் நிறுவனங்கள் சீர்குலைந்து சென்றன. இதனால் ஐரோப்பிய நாடுகளின் அறிவுத்துறை பாதிக்கப்பட திருச்சபை ஒன்றே நிலைத்திருந்தது.
- எனவே திருச்சபையானது ஐரோப்பிய பழங்குடியினரைச் சீர்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு கல்வி அறிவூட்டிச் சிறந்த ஒழுக்க விழுமியங்களை வளர்த்து அவர்களை நாகரிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. குறிப்பாக பெனடிக்ற் துறவற சபையினர் இம்முயற்சியில் ஈடுபட்டுச் சிறந்த ஐரோப்பிய நாகரிகத்திற்கு வழிவகுத்தனர்.
- இவர்களுடன் ஏனைய துறவற சபைகளும் இணைந்து ஐரோப்பாவில் பல்வேறுபட்ட கோத்திரங்களினால் உருவாக்கம் பெற்று பலம் பெற்றிருந்த சுதந்திர நாடுகளிடையே சென்று கல்வி நிலையங்களை அமைத்துக் கல்விப்பணி ஆற்றினர்.

(உ+ ம்) ஜெர்மனி – புனித பொனிப்பாஸ்

அயர்லாந்து – புனித பத்திரிசியார், புனித பிறிஜற், புனித கொலம்பா

இங்கிலாந்து – புனித கன்ரபெரி அகஸ்தினார்

ஸ்கொட்லாந்து – புனித கொலம்பா

பிரான்ஸ் – புனித கொலம்பா

வடதேசம், டென்மார்க், சுவீடன், ஸ்கன்டினேவியா – புனித ஆன்ஸ்கா

- மேற்குறித்த இடங்களில் மடாலயங்களையும், மடப்பாடசாலைகளையும் நிறுவிக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்தனர். இக்கல்வி நிலையங்களே பிற்காலத்தில் சிறந்த பங்குப் பாடசாலைகளாகவும், கதீற்றல் பாடசாலைகளாகவும், பல்கலைக்கழகங்களாகவும் வளர்ச்சியடைந்தன.

- எனவே சிறந்த நாகரிகத்தை உருவாக்குதல், ஆட்சியமைப்பு முறையைப் பேணுதல், எழுத்தறிவை விருத்தி செய்தல், ஆரம்பக்கல்வி முறையைப் பங்கு மட்டங்களில் ஏற்படுத்தல், பண்டைய கிரேக்க, உரோமைய இலக்கிய அறிவை மேம்படுத்தல், தத்துவ சிந்தனைகளை விளக்குதல், சட்டம், மருத்துவம் வணிகம் தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகள் அனைத்துக்கும் மூலகாரணமாகத் துறவிகளே விளங்கினர்.

- மேலும் மொழி, இலக்கணம், வாக்கலங்காரம், அளவையியல், எண்கணிதம், சங்கீதம் ஓவியம், சிற்பம், கைத்தொழில் முறைகள், அரசியல், நிர்வாகம், போன்ற துறைகள் வளர்ச்சியடைவதற்கும் கிறிஸ்தவ கல்வியாளர்களே காரணக்கர்த்தாக்களாக விளங்கினர். மேலும் பிரதியாக்கக்கலைகள் போன்றவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் நூலகங்கள் அமைப்பும், அதனைப் பேணப்படும் தன்மைக்கும் கிறிஸ்தவர்களே காரணமாய் விளங்கினர்.

### 8.1.1 அ. பங்குப் பாடசாலைகள்

- ஒரு பிள்ளையை நற்பண்புகளிலும் ஒழுக்க விழுமியச் சீர்மையிலும் சிறந்த அறிவிலும் வளர்த்தெடுக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். இதனால் குடும்பமே ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவையான சமூக நற்பண்புகளை வளர்த்தெடுக்கும் முதல் பள்ளியாக அமைகின்றது.

- கிறிஸ்தவ குடும்பங்களில் ஒரு பிள்ளை திருமுழுக்கின் மூலம் பெற்றுக் கொண்ட நம்பிக்கையைத் தகுந்த விதத்தில் வளர்த்துக் கடவுளை அறிந்து கொள்ளவும், அவரை வழிபடவும், தம்மை அடுத்திருப்பவரை அன்பு செய்து வாழவும் வேண்டிய பயிற்சியைக் குடும்பத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடிகின்றது. அடுத்த நிலையில் தமது விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி வாழும் முறையைத் திருச்சபையினரின் உதவியுடன் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் திருச்சபையில் இத்தகைய செயற்பாடுகள் துறவற சபையினரால் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக பெனடிக்ற் சபையினர் முதன்முதலில் தமது பணியைத் தொடங்கிய பணித்தளங்களில் பங்குப் பாடசாலைகளை அமைத்துப் பணியாற்றினர்.

- கி.பி. 529இல் பிரான்சில் வைசோன் (Vaisson) என்னும் இடத்தில் கூட்டப்பட்ட சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய கி.பி. 538இல் கசியோடோறஸ் என்பவர் விவியர்ஸ்ஸில் இருந்த ஒரு மடத்தைப் பங்குப் பாடசாலையாக மாற்றி ஒழுங்கான கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். தொடர்ந்து புனித கன்ரபெரி அகஸ்தினார், புனித பற்றிக், புனித பொனிபாஸ் போன்ற மறைபரப்பாளர்கள் தமது பணித்தளங்களில் பங்குப் பாடசாலைகளை நிறுவி முறையான கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டனர்.

- இப்பங்குப் பாடசாலைகளுக்கு பங்குத்தந்தையே பொறுப்பாக இருந்தார். இவ்வாறான பங்குப் பாடசாலைகளில் கிறிஸ்தவ வாழ்வு, வழிபாடுகள் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன. மேலும் இசைக்கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இக்கல்வி நிலையங்களில் கல்வி கற்ற சிறுவர்களிலிருந்தே குரு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

- கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பேரரசன் சார்லமென் (பெரிய சார்ளஸ்) ஐரோப்பிய நாடுகளில் இருந்து பேரறிஞர்களையும், கல்விமான்களையும் தமது அரண்மனைக்கு வரவழைத்து கலை அறிவியல் மன்றத்தை ஏற்படுத்தினார். இவர்களுள் அலகுயின், எயின் காட்டு ஆகிய இரு துறவிகளும் முக்கியமானவர்களாவர். இவ்விருவரினதும் ஆலோசனையின் பேரில் பங்குப் பாடசாலைகளின் தரம் உயர்வடைந்ததுடன் காலப்போக்கில் சில பங்குப்பாடசாலைகள் பேராலயப் பாடசாலைகளாகத் (கதிற்றல்) தரமுயர்ந்தது.

### 8.1.1 ஆ. கதீற்றல் பாடசாலை (பேராலயப் பாடசாலை)

- மன்னன் சார்லமெயின் ஆணைப்படி கி.பி. 800ஆம் ஆண்டளவில் ஆரம்பக் கல்வித்துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியானது வைகிங்குகளின் படை நடவடிக்கையினால் பாதிப்பை ஏற்படுத்தினாலும் நகரப்பகுதிகளில் இருந்த கல்வி நிலையங்கள் வளர்ச்சி பெற்றுக் கல்வியில் முன்னேற்றம் கண்டன.
- பங்குப் பாடசாலைகளில் கல்வி பயின்ற குருமாணவர்களில் உயர்கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கு நகரப் பாடசாலைகளிலேயே வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வகையில் வளர்ச்சியடைந்து வந்த நகரங்களில் அமைந்திருந்த கதீற்றல் பாடசாலைகள் ஐரோப்பியக் கல்வியின் தலைமைத் தளங்களாகின.
- பேரரசன் சார்லிமெயினின் ஆணைப்படி எல்லா ஆயர்களும் தமது பேராலயத்திற்கு அருகில் கதீற்றல் பாடசாலைகளை ஆரம்பித்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதற்கு திருத்தந்தையின் ஆதரவும் கிடைக்கப் பெற்றது. ஏழைகளும், செல்வந்தர்களும் பணம் செலுத்தாமல் கல்விபெறும் வாய்ப்பும் அமைந்தது.
- ஆரம்பத்தில் கதீற்றல் பாடசாலைகள் குருக்களுக்கு வேண்டிய அடிப்படைப் பயிற்சியை வழங்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. அதற்கேற்ப திருச்சபையின் சட்டங்கள், செபங்கள், இறையியல், வாக்கலங்காரம், தத்துவம், இலத்தீன், கிரேக்க இலக்கியங்கள் போன்றவை பாடத்திட்டங்களாக அமைந்தன.
- ஆனால், கி.பி. 1100இல் மத நிறுவனங்களிலும், உலக நாடுகளிலும், அரசுகளிலும் ஏற்பட்ட அபிவிருத்தியின்படி மேற்குறித்த பாடத்திட்டங்களில் பற்றாக்குறை இருந்தமை உணரப்பட்டு மேலதிகமாக அரச சட்டங்கள், மருத்துவம், இலத்தீன்மொழி, இலக்கியம், இலக்கணம், அரசியல், பொருளாதாரம் போன்ற பாடத்திட்டங்களும் கலைத்திட்டமாக்கப் பட்டன.
- இதனால் செல்வந்தர்கள், பிரபுக்கள் மற்றும் அரசர்களின் பிள்ளைகளும் சமூக அந்தஸ்துக் கருதி இக்கல்வி நிலையங்களில் கல்வியைப் பெற்றுக்கொள்ள விருப்பத்துடன் இணைந்தனர். எனவே அதற்குரிய ஆசிரியர்களும் மதத்துறை சாராதவர்களாக இருந்தனர். காலப்போக்கில் இவ்வாறான கல்வியை மட்டும் நோக்காகக் கொண்ட பல பாடசாலைகள் நகரங்களில் தோற்றம்பெற்றன.
- **இதனால் ஏற்பட்ட விளைவுகள்:**
  - இதுவரை மதத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த கல்விமுறை பன்முகப்படுத்தப்பட்ட ஆன்மீகக் கல்வியுடன் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், மருத்துவம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.
  - ஒவ்வொரு பிராந்திய மொழியிலும் (சுயமொழி) கல்வி கற்கும் வாய்ப்பு உருவாக்கம் பெற்றதுடன் மேலும் மேலும் அறிவுத்துறையில் வளர்ச்சி பெறவேண்டிய ஆர்வத்தை ஏற்படுத்தியது.
  - சுதந்திர சிந்தனைப் போக்குகள் அதிகரித்ததுடன் பொது நிலையினருக்கும் கல்வி கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.
  - துறைசார்ந்த நிபுணர்கள் உருவாக்கம் பெற்றனர். (விஞ்ஞானம், சட்டம், மருத்துவம், கலை)
  - பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றன.
  - இத்தகைய வளர்ச்சிப் போக்கே **“12ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சி”** எனக் குறிப்பிடப்படுகின்றது.

### 8.1.1 இ. பல்கலைக்கழகங்கள்

- ஆங்கிலத்தில் 'UNIVERSITY' என்று நாம் அழைப்பது "UNIVERSITAS" என்ற இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் **"கூட்டு நிறுவனம்"** (CORPORATION) அல்லது **"சங்கம்"** (GUILD) என்பதைக் குறிப்பதாகும்.
- ஐரோப்பிய வரலாற்றில் 12ம் நூற்றாண்டில் கல்வித்துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியின் விளைவாகவே ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் தோற்றம் பெற்றன.
- இவ்வாறு ஐரோப்பாவில் மிகப்பழமையான கல்வி நிலையங்களாக ஸ்பானியாவில் ரொலிடோ, கோர்டோவா நகரங்களில் அமையப் பெற்ற கல்லூரிகளும், இத்தாலியில் சலேர்னா, பொலஞ்ஞா கல்லூரிகளும், பாரிஸ் கல்வி நிறுவனமும் சிறப்பு பெற்றுக் காணப்பட்டன.
- 12ஆம் நூற்றாண்டுகளின் முடிவில் சலேர்னா, பொலஞ்சா நகர மாணவர்கள் சட்டபூர்வமாகத் தம்மை இணைக்கவேண்டும் என்ற நோக்கில் தொழிற் சங்கங்கள் போன்ற கூட்டமைப்பினை உருவாக்கிச் செயற்பட்டனர். அவ்வாறே பாரிஸில் ஆசிரியர்களும் கூட்டுத்தாபனம் போன்று அனைத்து அதிகாரங்களையும் தமது கைப்பிடிக்குள் கொண்டு செயற்பட்டனர்.
- இத்தகைய செயற்பாட்டுத் தன்மைகளுக்கு ஒத்தவையாகவே இடைக்கால பல்கலைக்கழகங்களின் நோக்கங்கள் அமைந்திருந்தமையால் "UNIVERSITY" என்ற சொல்லால் இந்நிறுவனங்கள் அழைக்கப்பட்டன.
- சாதாரண கதீற்றல் பாடசாலைகளினால் வழங்க முடியாதிருந்த உயர்கல்வியின் சிறப்புப் போதனைகளை வழங்கும் நிறுவனங்களாக இவை காணப்பட்டன. இந்நிறுவனங்களில் தாராளக் கலைகளும் (இலத்தின் இலக்கணம், வாக்கலங்காரம், அளவையியல், எண்கணிதம், கேத்திரகணிதம், இசை, வானசாஸ்திரம்) மெய்யியல், இறையியல், சட்டம் (அரசியல், திருச்சபை) மருத்துவம் போன்ற பீடங்களையும் கொண்டு காணப்பட்டன.

#### I பொலஞ்ஞா பல்கலைக்கழகம் (இத்தாலி –1088)

- வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி கி.பி. 1088இல் இந்நிறுவனம் தோற்றம் பெற்றதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முதல் பல்கலைக்கழகம் என்றும் இது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
- 1364 இல் இறையியலும், 15ஆம் நூற்றாண்டில் கிரேக்க, எபிரேய மொழிகளும் கற்பிக்கப்பட்டன. 16ஆம் நூற்றாண்டில் இயற்கை விஞ்ஞானம் கற்பிக்கப்பட்டது.
- மெய்யியலாளரான ''பியற்றோ மொம்பனாஸி ''இயற்கைச் சட்டத்தினைக் கற்பிக்க ஊக்கப்படுத்தினார் (நன்மை தீமை இயல்புகளைப் பகுத்தறிதல்) இது மெய்யியலுக்கும், இறையியல் பாரம்பரியத்திற்கும் தடையாக அமைந்தது.

#### II பரீஸ் பல்கலைக்கழகம் - (பிரான்ஸ் 1160 – 1170)

- அல்ப்ஸ் மலைக்கு வடக்கே மிகப் பழைமை வாய்ந்ததும் பிரான்சில் நீண்டகாலமாகத் தனித்துவம் பெற்றதுமான பல்கலைக்கழகமாக இது விளங்குகின்றது. இது நோத்திரடாம் (NOTRE DAME) பேராலயத்தைச் சேர்ந்த பல கதீற்றல் பாடசாலைகள் ஒன்றிணைந்து 11ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமைத்த சங்கமே இப்பல்கலைக்கழகம் ஆகும்.
- ஆரம்பத்தில் ''ஆசிரியர் - அறிஞர்களின் சங்கம்'' என்று அழைக்கப்பட்டது. கி.பி. 1160-1170ற்கும் இடைப்பட்ட காலத்தில் பாரீஸ் நகர ஆயர் இதனைப் பல்கலைக்கழகமாகப் பிரகடனம் செய்தார். இப்பல்கலைக்கழகம் நான்கு பீடங்களைக் கொண்டுள்ளது. இறையியல் பீடம், மருத்துவப் பீடம், சட்டப் பீடம், கலைப் பீடம் என்பன அவையாகும்.
- கி.பி. 1257இல் பிரான்ஸ் நாட்டவரான றொபட் டீசொர்போன் என்பவர் **"இறையியல் கற்கும் வறிய மாணவர்களின் குழுமம்"** என்ற பெயரில் ஒரு கல்லூரியை நிறுவினார். 14ஆம் நூற்றாண்டில் (LAWSOR BONNE) **லாசார்போன்** என்று இக்கல்லூரி அழைக்கப்பட்டது.

- மறைக்கோட்பாடுகளும் (DOGMA) திருச்சபையின் சட்டங்களும் (CANON LOW) இங்கு சிறப்பிடம் பெற்றிருந்தன. இக்கல்லூரியின் நிர்வாகிகள் பரீஸ் அக்கடமியினால் நியமிக்கப்பட்டனர்.
- இப்பல்கலைக்கழகத்தில் பல்நாட்டு புகழ்பெற்ற ஆசிரியர்கள் கற்பித்தனர்.

| | | |
|---|---|---|
| (உ+ம்) | பீற்றர் | - இத்தாலி |
| | அலக்சாந்தர் | - இங்கிலாந்து |
| | விக்ரர், அல்பேட் | - ஜெர்மனி |
| | பொனவென்சர், தோமஸ் அக்குவைனஸ் | - இத்தாலி |
| | யோன்டன்ஸ் | - அயர்லாந்து |
| | றிச்சாட் | - ஸ்கொட்லாந்து |

### III கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் - (இலண்டன்)

- கி.பி. 1209இல் ஒக்ஸ்போட் நகரில் பொதுமக்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட " TOWN and GOWN " பிரச்சனையினால் வெளியேற்றப்பட்ட மாணவர்களும், புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களும் கேம்பிரிட்ஜ்க்கு வந்து அங்கு விடுதிகளில் தங்கியிருந்தனர். தமக்குள் ஒருவரைத் தலைமை ஆசிரியராகத் தெரிவு செய்து சாதாரண பாடநெறிகளைக் கற்றனர். தமக்கு தலைமை வகிக்க தலைமை வேந்தரைத் தாமே தெரிவு செய்தனர்.
- ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விதிமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றினர். பாடங்கள் வாசிப்பின் மூலம் விளக்க முறைகளாகவும் இருந்தன. பரீட்சைகள் வாய் மொழி மூலம் நடாத்தப்பட்டன.
- கி.பி. 1231இல் 3ஆம் ஹென்றி அரசன் இம்மாணவர்களைப் பொறுப்பேற்று அவர்களுக்கு வேண்டிய விடுதி வசதிகளைச் செய்து கொடுத்ததுடன் விரிவுரையாளர்களையும் அரசரே நியமித்தார்.
- விரிவுரைகள் துறவற மடங்களிலும், ஆலயங்களிலும் நடைபெற்றன. தர்க்கம், கணிதம், சங்கீதம், கேத்திரகணிதம், வானியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. காலப்போக்கில் உலகியல் நாட்டம் ஏற்பட்டது. சிவில் சட்டம், இறைமை / அரசியல், எபிரேய, கிரேக்க மொழிகள், பௌதீக விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1520 இல் பல்கலைக்கழக அச்சகம் (பதிப்பகம்) ஆரம்பிக்கப்பட்டது.

### IV சலமன்கா பல்கலைக்கழகம் (ஸ்பெயின்)

- ஸ்பெயின் நாட்டில் மட்றீட்டுக்கு மேற்கில் போர்த்துக்கல்லுக்கு அருகில் சலமன்கா நகரத்தில் மிகப்பழமையான பல்கலைக்கழகமாவும் இது காணப்படுகின்றது.
- கி.பி. 1218இல் ஸ்பானிய அரசன் 9ஆம் அல்போன்ஸ் இதனை அரசின் பொதுப்பாடசாலையாக நிறுவினார். பின்னர் 1254இல் திருத்தந்தை 4ஆம் அலெக்சாந்தர் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இதனையும் பல்கலைக்கழகமாகப் பிரகடனம் செய்தார். அரசன் 3ஆம் பேர்டினன்டன் பல்கலைக்கழக உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தார்.
- நிர்வாகம் ஆயர்களின் கீழ் இருந்தது. பாதுகாப்பாளர்களை நியமித்தல், பீடாதிபதிகள், வேந்தர்களை நியமித்தல், பல்கலைக்கழகத்தைச் சிவில் நிர்வாகத்திடமிருந்து விடுவித்தல், பேராசிரியர்களுக்குரிய வேதனத்தை நிர்ணயித்தல் ஆகிய உரிமைகள் வழங்கப்பட்டன.
- மொழிகள், கலைகள் கற்பிக்கப்பட்டன. அத்துடன் நோய்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் இப்பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

### 8.1.2 விஞ்ஞான வளர்ச்சிக்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு

- நவீன உலகின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பல கிறிஸ்தவ விஞ்ஞானிகள் ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்களின் ஆக்கங்களும் கண்டுபிடிப்புக்களும் உலகை நவீனமயப்படுத்துவதுடன் மானிட சமூகத்தின் சமூக, பொருளாதார, ஆன்மீக வாழ்வையும் வளம் பெறச்செய்கின்றன.

- மத்திய யுகத்தில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் பல விஞ்ஞான ஆய்வுகூடங்களாகவும், தொழினுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையங்களாகவும் செயற்பட்டுள்ளன. இவர்களின் உருவாக்கத்தில் பல விஞ்ஞானிகள் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்பிடிப்புக்களை மேற்கொண்டனர். இவர்களுள் அருட்பணி ரெயார்ட்டி சார்டேன், அலெக்சாந்தர் கிரஹம்பெல், ஐசக் நியூட்டன், அல்பர்ட் ஐன்ஸ்டின், அலெக்சாந்தர் பிளமின் ஆகியோர்களின் கண்டுபிடிப்புக்களையும் பயன்பாடுகளையும் நோக்குவோம்.

#### I அருட்பணி ரெயார்ட்டி சார்டேன் (1881 – 1955) "Pierre Tehard De Chardin"

- மனிதனின் பரிணாமத்தைப் பற்றிய ஆன்மீக ரீதியான தத்துவத்தை விளக்கிய சிந்தனையாளர்களுள் அருட்பணி ரெயார்ட்டி சார்டேன் முக்கிய இடத்தை வகித்துள்ளார்.

- இவர் கி.பி. 1881இல் பிறந்தார். இவர் நோத்திரடாமில் இயேசு சபையினரின் முன்பள்ளியில் பயின்று தமது 19ஆம் வயதில் இயேசு சபையில் இணைந்து கி.பி. 1911இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

- கல்லினுள் படிந்த படிமங்கள் பற்றியும், மானிட விஞ்ஞானம் பற்றியும் கற்ற இவர், மனிதனின் முற்கால அமைப்பை ஆராயும் ஒருவராகச் சீனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு சென்று அகழ்வாராய்ச்சிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார்.

- மிக முக்கியமான மானிட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் ஒன்றான "சினன்திரோபுஸ் பெகின்னோன்ஸிஸ்" (Sinanthropus pekinnensis) என்னும் பீகிங் மனித வர்க்கத்தின் மண்டையோட்டைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

- பூமியின் அமைப்புப் பற்றியும், புதைந்து கிடக்கும் புராதன மிருகங்கள், தாவரங்களின் எஞ்சிய பகுதிகள் பற்றியும் ஆய்வு செய்த இவர் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு அதற்கு இறையியல் அடிப்படையில் விளக்கமளித்தார்.

- மனிதனின் பரிணாமத்தை பற்றிய ஆன்மீகத் தத்துவத்தை விளக்கி ஒரு நூலை எழுதினார். இதில் சார்டேனின் தத்துவத்தைக் காணலாம்

- இவர் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளராகவும் பிரான்ஸ் விஞ்ஞான நிலையத்தின் அங்கத்தவராகவும் கௌரவிக்கப்பட்டார்.

**"சார்டேனின் தத்துவம்"**

- மனுக்குலத்தின் பரிணாமத்திற்கு விசேட திட்டமும் நோக்கமும் உள்ளது. பரிணாமத்தில் உயிர்ப்பு நிலை பெறுவது வல்லமை ஒன்றினால் ஆகும்.

- அவ்வல்லமையே "அகாபே அன்பு". இவ் அன்பிற்கு, வல்லமைக்கு முழு உலகின் சகல வல்லமையையும் இணைக்கும் திறன் உள்ளது.

- மனிதனை தன்னுடனும், மனிதனை உலகுடனும், மனிதனை இறைவல்லமையுடனும் இணைக்கும் வல்லமை அதுவாகும். இதுவே பரிணாமத்தின் உச்சக்கட்டம் ஆகும். இதனையே ஒமேகா கட்டம் என்று அழைத்தார்.

- இக்கட்டத்தில் மனிதன் கிறிஸ்துவின் இயல்பைப் பெறுகின்றான். ஆகவே முழு மனுக்குலமும் இக்கட்டத்தை நோக்கியே பயணிக்கின்றது. இப்பிரபஞ்சத்தின் முழுமை அதிலேயே தங்கியுள்ளது.

## II அலெக்சாண்டர் கிரஹாம்பெல் (1847 – 1922)

- ஸ்கொட்லாந்தில் எடின்பரோ நகரில் கி.பி. 1847இல் பிறந்த இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.
- மனித நேயம் கொண்ட இவர் செவிப்புலன், கட்புலன் குறைந்த மாணவர்களுக்குப் பயன்படத்தக்கதான பல உபகரணங்களைக் கண்டுபிடித்தார். இக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கும், அக்கருவியினைக் கையாளுவதற்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விசேட பாடசாலைகளை ஒழுங்கு செய்வதில் முன்னோடியாக இருந்தார்.
- பொஸ்டன் நகரில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கான பல்கலைக் கல்லூரி ஒன்றையும் உருவாக்கினார்.
- 1876இல் தொலைபேசிக்கருவியைக் கண்டுபிடித்ததுடன் முதன்முறையாக இக்கருவி வழியாகச் செய்தி பரிமாறப்பட்டது.

## III சேர் ஐசாக் நியூட்டன் (1643 – 1727)

- இங்கிலாந்தில் வுலஸ்தேவ் என்னும் கிராமத்தில் கி. பி 1643 இல் பிறந்த இவர், நவீன யுகத்தின் தத்துவ ஞானியாகவும், இறையியலாளராகவும், பௌதீக விஞ்ஞானியாகவும் போற்றப்படுகின்றார்.
- உலோக வகைகளைப்பற்றி அறிவு பெற்று புவியீர்ப்பு விசை, நிறங்கள் அறிதல், சூரிய மண்டலம் பற்றிய தகவல்கள், பிரதி விம்பம் காட்டும் தொலைநோக்குக் கருவி, கடலில் ஏற்படும் ஏற்ற இறக்கம் பற்றிய பல தகல்களை ஆய்வு செய்து வெளிப்படுத்தினார். சலனம் (MOTION) பற்றிய மூன்று விதிகள் இவரால் முன்மொழியப்பட்டன.
- இவர் திருவிவிலியம், விஞ்ஞானம் பற்றிய கற்கை நெறிகளைப் பயின்று அவை பற்றிப் பல நூல்களும் எழுதினார். திருவிவிலியத்தில் உள்ளவற்றை விஞ்ஞானத் தரவுகளூடாக ஆய்வு செய்து நூல்களை எழுதினார்.

## IV அல்பேர்ட் ஐன்ஸ்டயின் (1879 – 1955)

- ஜேர்மனியில் யூத கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த இவர், நவீன பௌதிகவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.
- மின்சக்தி, காந்த சக்தி, புவியீர்ப்புச் சக்தி ஆகியன ஒரே மூலத்திலிருந்தே உருவாகின்றன என்பதை ஒப்பீட்டு வாதத்தின் மூலம் எண்பித்தார்.
- 1947இல் பௌதீகத்திற்கான நோபல் பரிசினையும் பெற்றுள்ளார்.

## V அலெக்சான்டர் பிளமிங் (1881 – 1955)

- ஸ்கொட்லாந்தில் அயேஷர் நகரில் லொஜ்பீல்ட் என்னும் ஊரில் கி.பி. 1881இல் பிறந்த இவர் எழுதுவினைஞராகக் கடமையாற்றி அதிலிருந்து சேமித்த பணத்தைக் கொண்டு மருத்துவம் பயின்றார்.
- இங்கிலாந்தில் புனித மேரி வைத்தியசாலையுடன் இணைந்து மருத்துவப் பல்கலைகழகத்தில் கல்வி கற்று சத்திர சிகிச்சை நிபுணராக விளங்கினார்.
- கிருமித்தடுப்பு, நோய்த்தடுப்பு இயல்பு கொண்ட பதார்த்தங்களை ஆய்வு செய்த இவர், 1929இல் பென்சிலின் என்னும் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து உதவினார். கி.பி. 1945இல் அதற்கான நோபல் பரிசும் கிடைக்கப் பெற்றார்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

1. கல்விச் செயற்பாடுகளுக்குத் திருச்சபை அர்ப்பணிப்புடன் பணியாற்றியது என்பதை ஆதாரங்களுடன் முன்வைக்கச் செய்தல்.
2. ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சிக்குப் பங்குப் பாடசாலைகள், கதிட்டல் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் செல்வாக்கு செலுத்தியுள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.
3. பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் திருச்சபை ஆற்றிய பங்களிப்பைக் கலந்துரையாடச் செய்தல்.
4. விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை ஏற்று அவர்கள் தொடர்பான விடயங்களைப் பட்டியலிடச் செய்தல்.
5. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூலம் இறை மகிமையும் நாகரிகமும் சிறப்புப் பெற்றன என்பதை உணர்ந்து கொள்ளச் செய்தல்.

**உசாத்துணை நூல்கள்:**


- பிலிப்ஸ் இ. யேசுதாசன் அ.ம.தி, **புளிப்புமா,** உப்புவெளி திருகோணமலை.
- சமாதிலிங்கம் சத்தியசீலன், **நாகரிங்களுக்கு ஓர் அறிமுகம்**, அகிலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.
- M. S. ஜேசுதாஸ் தங்கசாமி M.A.B.T, **உலகத் திருச்சபை வரலாறு,** நாஞ்சில் பதிப்பகம் தமிழ்நாடு.

**தேர்ச்சி 8.0 :** சமுதாய முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவ சிந்தனைகள், கல்வி, கலைகள் அளித்த பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.2 :** புதிய சிந்தனைக்கு வழிவகுத்த கிறிஸ்தவ சிந்தனையாளர்களை அறிந்து செயற்படுவார்.

**பாடவேளைகள் :** 08

**கற்றல் பேறுகள் :**

- திருச்சபையில் புதிய சிந்தனைக்கு வழிவகுத்த சிந்தனையாளர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- புனித அகஸ்தினார், புனித தோமஸ் அக்குவைனஸ் என்போர் புதிய சிந்தனைக்கு வழிவகுத்தனர் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருச்சபையின் புதிய சிந்தனை மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.
- குழுச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கெடுப்பார்.

**விடய உள்ளடக்கம் :**

### 8.2.1 புனித அகஸ்தினாரின் வாழ்வும் ஆக்கங்களும்

- கிரேக்க மெய்யியல் சிந்தனையின் பிற்கூற்றில் ஒழுக்க சமயச் சார்புடைய சிந்தனைகள் வளர்ந்தன. குறிப்பாக மத்திய காலப் பகுதியில் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய செல்வாக்குகள் குறிப்பிடத்தக்க வகையில் மெய்யியலில் ''தாக்கம்'' செலுத்தின. கடவுள் பற்றிய சிந்தனைகளும் ஒழுக்க விழுமியங்களும் இக்காலச் சிந்தனையில் காத்திரமான பங்களிப்பை வழங்கின.
- இவ்வாறு கிறிஸ்தவ மெய்யியல் சிந்தனையில் புனித அகஸ்தின், புனித அன்சலம், புனித தோமஸ் அக்குவைனஸ், புனித பொனவெஞ்ஞர் ஆகியோர் சிறப்பிடம் வகிக்கின்றனர். இவர்களுள் புனித அகஸ்தினார் மற்றும் புனித தோமஸ் அக்குவைனஸ் ஆகியோரின் சிந்தனைகள் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன.

### 8.2.1.1 புனித அகஸ்தினார் :- (St. Augustine of Hippo) (354 – 430)

- வட ஆபிரிக்காவின் தகாஸ்தே என்னும் இடத்தில் கி.பி. 354இல் பிறந்த இவர் இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களில் சிறப்பு மிக்கவராகவும், இறையியலின் மறைவல்லுனராகவும் போற்றப்படுகின்றார்.
- கி.பி. 370இல் கார்த்தேர்ஜ் பல்கலைக்கழகத்தில் இணைந்து சட்டப் படிப்பை மேற்கொண்ட இவர் சிசரோ எழுதிய ''ஹொரேன்சியுஸ்'' என்னும் நூலைப் படித்து உண்மை ஞானத்தை அறிய முயற்சித்தார். இதனால் மனிக்கேய பேதகத்திலும் நாட்டம் கொண்டார்.
- சில காலத்தின் பின்னர் மிலான் நகர் ஆயராய் இருந்த புனித அம்புறோசியாரை அணுகி திருச்சபையின் மறைக் கோட்பாடுகளையும், திருவிவிலிய விளக்கங்களையும் தெளிவாகக் கற்றதுடன் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் இணைந்து கொண்டார்.
- இந்நிலையில் பிளேற்றோவின் மெய்யியல் சிந்தனைகளின் அடிப்படையில் கிறிஸ்தவக் கோட்பாடுகளை தெளிவுபடுத்தி மனிக்கேயத் தப்பறைகளுக்கும் பெலாஜியம், தொனாத்தேயம் ஆகிய தப்பறைகளுக்கும் கண்டனம் தெரிவித்து பல விளக்கவுரைகளை எழுதியுள்ளார்.
- ஏறத்தாழ 113 நூல்களையும் 500 மறையுரைகளையும் 218 திருமுகங்களையும் எழுதி திருமறையின் விசுவாச உண்மைகளைப் பாதுகாத்தார்.

### 8.2.1.2 புனித அகஸ்தினாரின் ஆக்கங்கள் :-

#### I வாழ்க்கை அறிக்கை / தன்னிலை ஏற்பு (CONFESSIONS OF ST. AUGUSTINE)

- இதில் தம் முன்னைய பாவ வாழ்க்கை நிலையையும், அத்தீய வாழ்வில் இருந்து தாம் மனமாற்றம் பெற்று தூய வாழ்வை மேற்கொண்ட தன்மைகளையும் விபரித்து, அதனூடாக இறைவன் தம்மில் அரும்பெரும் செயல் புரிந்தமைக்கு நன்றி தெரிவித்து நிற்கின்றார்.

#### II இறைவனின் நகரம் (THE CITY OF GOD)

- கி.பி. 410இல் வண்டல் கோத்திரத்தாரின் தாக்குதலினால் உரோமை நகரம் கைப்பற்றப்பட்ட போது இதன் அழிவிற்குக் காரணம் கிறிஸ்தவர்களே என்ற குற்றச்சாட்டிற்கு தூய அகஸ்தினார் கூறும் பதிலாக இந்நூல் அமைந்துள்ளது.
- இதில் இறையருளைத் தேடி அன்பையும் மன்னிப்பையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூகத்தை கட்டி எழுப்புபவர்களே நற்செய்தியின் அடிப்படையிலான இறைவனின் நகரத்தைக் கட்டி எழுப்புவோராவர் என்று குறிப்பிடுகின்றார்.
- மேலும், உரோமை நகரமானது மனிதர்களால் உருவாக்கம் பெற்ற நகரமேயன்றி நற்செய்தி விழுமியங்களை வாழ்க்கை முறையாகக் கொண்ட நகரமல்ல. இதனால் உரோமையில் நடைபெறும் சமூக அநீதிகளும், ஊழல்களுமே உரோமைய அழிவிற்கு காரணம் ஆகும். அதற்கு மாறாக உண்மையான இறை நகரம் என்பது நிலைவாழ்வைக் கொண்டதாக கிறிஸ்தவ விழுமியங்களுடன் அருட்சாதனங்களில் பங்கேற்று பிறர் நலனில் அக்கறை கொண்டு வாழும் போது புதிய இறைவனின் நகரத்தைத் தோற்றுவிக்கலாம் என்னும் தத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

#### III மூவொரு இறைவன் (DE TRINITATE)

- திருச்சபையின் வரலாற்றில் முதல் 3 நூற்றாண்டுகளில் மூவொரு இறைவனைப் பற்றி எழுந்த தப்பறைகளுக்கும், மூவொரு இறைவன் விவாதங்களுக்கும் விடையளிக்கும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டது.
- இந்நூல் மூவொரு இறைவன் பற்றி அழகிய ஆழமான உரையாடலைக் கொண்டுள்ளது.
- இறைவன், இறைத்தன்மை, இறைவல்லமை, இறை ஆள்தன்மை, பிறப்பு என்பவற்றைத் தெளிவாக காட்டியுள்ளார்.

### 8.2.2 புனித தோமஸ் அக்குவைனசின் (1224 – 1274) வாழ்க்கை

- அக்குவைனஸ் தமது ஆரம்பக்கல்வியை மொன்ரோ கசினோவில் பயின்றபின் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்தில் இணைந்து மெய்யியல் கல்வியைக் கற்றார்.
- மிகுந்த அறிவுக்கூர்மையுடன் அறிவுத் தெளிவும் உடையவரான இவர், அரிஸ்டோட்டலின் மெய்யியலில் அதிக நாட்டம் கொண்டவராகவும் விளங்கினார்.
- இவர் டொமினிக்கன் துறவற சபையினரின் வாழ்க்கை முறையினால் கவரப்பட்டு அத்துறவற சபையில் இணைந்து பணியாற்றினார். பாரீஸ் நகரில் பெரிய அல்பேட் என்பவரின் வழிகாட்டலுடன் அவரது பரிந்துரையால் பாரீஸ் பல்கலைக்கழகத்திலும் உரோமை, மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.
- இன்று திருச்சபையின் மறைவல்லுனராகவும், கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கும், அறிவியலாளர்களுக்கும் பாதுகாவலராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

### 8.2.2.1 புனித தோமஸ் அக்குவைனசின் ஆக்கங்கள் :-

**திருவழிபாட்டு ஆக்கங்கள்**

- 1261 – 1264 வரை உரோமையில் 6ஆம் ஊர்பன் திருத்தந்தையின் ஆலோசகராகவும் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழாவுக்கான (நற்கருணைப் பெருவிழா) திருப்பலியையும், புகழ்மாலையையும் எழுதினார். அத்தோடு **"லவுடா சியோன்"** (புகழ்வாய் ஜெருசலேம்), **"பாஞ்ஞே லிங்குவா"** (பாடுவாய் எந்நாவே), **"வேர்பும் சுப்பேர்னும்", "சாக்றிஸ் சொலெம்னியிஸ்", "அக்டோறோ தே"** எனும் நற்கருணைப் பாடல்களையும் எழுதினார்.

**இறையியல் ஆக்கங்கள்**

- நேபிள்ஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் போது டொமினிக்கன் துறவற சபையினரின் உரோமை மாகாணத்திற்கான இறையியல் பாடத்திட்டத்தைத் தயாரித்தார்.
- இவரது பல நூல்களில் மிகச் சிறப்பான இரண்டு நூல்களை இங்கு குறிப்பிடலாம்.

**அ. சும்மா கொன்த்ரா ஜென்திலேஸ் ("Summa Contra Gentiles")**

- அரேபிய மெய்யியலாளர்களுக்கு எதிராக கிறிஸ்தவ விசுவாச உண்மைகளைப் பற்றி எழுதப்பட்டது. ஸ்பெயினில் பணியாற்றிய டொமினிக்கன் துறுவற சபை மறைப் பணியாளர்களுக்காக எழுதப்பட்டது. கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு இறைவனைப் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. மனித அறிவுச் சிந்தனையின் உதவியுடன் படைப்பைப் பற்றியும், முடிவில்லா வாழ்வைப் பற்றியும் விளக்கியுள்ளார்.

**ஆ. சும்மா தியலோஜிஏ ("Summa Theologiae")**

- பல நூற்றாண்டுகளாக இறையியல் மாணவர்களின் பாடநூலாக இந்நூல் சிறப்புப் பெறுகின்றது. விசுவாசம், அறநெறி பற்றிய திருச்சபையின் படிப்பினைகளை மூன்று பாகங்களாக இந்நூல் கொண்டுள்ளது.

    1. கடவுளின் தன்மை அனைத்தும் இறைவனிடமிருந்தே தோற்றம் பெறுகின்றன.
    2. சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்கள் கடவுளிடமே இறுதியில் சங்கமம் ஆகின்றனர்.
    3. சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவே வழியாகவுள்ளார் என்னும் விசுவாச படிப்பினைகளை விளக்கியுள்ளார். இவரது தனித்துவமான இறையியல் சிந்தனை முறையானது ஸ்கொலாஸ்டிசம் (Scholaticism) என அழைக்கப்படுகின்றது. மனித அறிவுத்திறனால், மெய்யியல், இறையியல் உண்மைகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பாதுகாத்து விளக்கும் படிமுறையே ஸ்கொலாஸ்டிசமாகும். இது மூன்று அடிப்படைப் பகுதிகளைக் கொண்டுள்ளது.

        I. வினாவை முன்வைத்தல்

        II. சார்பான, எதிரான விவாதங்களைக் கொணருதல்.

        III. அறிவுபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய முடிவை வழங்குதல்.

- இக் ஸ்கொலாஸ்டிச முறையானது இறையியல் இறைவெளிப்பாட்டையும், திருச்சபையில் கற்பிக்கும் பாரம்பரியத்தையும் வரையறையாகக் கொண்டுள்ளது.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. திருச்சபை வரலாற்றில் புதிய சிந்தனைகளை உருவாக்கிய சிந்தனையாளர்களைப் பற்றிய விபரங்களைத் தொகுக்கச் செய்தல்.
2. புனித அகஸ்தினாரின் வாழ்க்கையையும் பணிகளையும் ஆக்கங்களையும் பற்றிய விடயங்களைத் தேடித் தொகுக்கச் செய்தல்.
3. புனித தோமஸ் அக்குவைனசின் வாழ்க்கையையும் பணிகளையும் ஆக்கங்களையும் பற்றிய விடயங்களைத் தேடித் தொகுக்கச் செய்தல்.
4. இச்சிந்தனையாளர்களின் சிந்தனைகள் கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை அறிந்து பட்டியலிடச் செய்தல்.

**உசாத்துணை நூல்கள்:**


- பிலிப்ஸ் இ. யேசுதாசன் அ.ம.தி, **புளிப்புமா,** உப்புவெளி திருகோணமலை.
- சமாதிலிங்கம் சத்தியசீலன், **நாகரிங்களுக்கு ஓர் அறிமுகம்**, அகிலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.
- M. S. ஜேசுதாஸ் தங்கசாமி M.A.B.T, **உலகத் திருச்சபை வரலாறு,** நாஞ்சில் பதிப்பகம் தமிழ்நாடு.

**தேர்ச்சி 8.0 :** சமுதாய முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவ சிந்தனைகள், கல்வி, கலைகள் அளித்த பங்கினை அறிந்து கிறிஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.3 :** கலை மேம்பாட்டிற்குக் கிறிஸ்தவம் ஆற்றிய பங்களிப்பை அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- கிறிஸ்தவ இலக்கிய நூல்களால் எழுந்த புதிய சிந்தனைகளைக் கோவைப்படுத்துவார்.
- கலை மேம்பாட்டிற்குக் கிறிஸ்தவம் பங்களிப்பு செய்துள்ளது என்பதை ஏற்பார்.
- சேகரித்த தரவுகளை ஆக்கமாக முன்வைப்பார்.
- கலை மேம்பாட்டிற்காகத் தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவார்.
- குழுச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கெடுப்பார்.

**விடய உள்ளடக்கம் :**

**8.3.1 கிறிஸ்தவ இலக்கிய நூல்கள்**

- கிறிஸ்தவ நாகரிக வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த காரணிகளுள் மிகப் பிரதான இடத்தை வகிப்பது கிறிஸ்தவ இலக்கிய நூல்களாகும்.
- கிறிஸ்தவ இலக்கியக் கலை, கிறிஸ்தவ ஆய்வுப் பொருள்கள் பற்றிய எழுத்தாக்கங்களைக் கிறிஸ்தவ உலகக் கண்ணோட்டத்தில் எமக்கு அளிக்கின்றது. அவை கிறிஸ்தவ உண்மைகள், ஒப்புவமைகள், புனை கதைகள், கவிதைகள், நாடகங்கள் என்ற வேறுபட்ட வடிவில் காணப்படுகின்றன.
- கிறிஸ்தவர்களின் முதன்மையான நூலாகிய திருவிவிலியம் ஓர் இலக்கிய நூலாக இருந்தாலும் பொதுவாக அது இலக்கிய நூலாகக் கருதப்படுவதில்லை. எனினும் அதன் இலக்கியத்தன்மை ஆராயப்பட்டு பாராட்டப்படுகின்றது.
- காலத்தின் தேவைக்கேற்ப எழுதப்பட்ட விவிலிய மொழிபெயர்ப்புக்களையும் நாம் இலக்கியங்களாகக் கொள்ள முடியும். அந்த வகையில் புனித ஜெரோமின் திருவிவிலிய மொழிபெயர்ப்பான இலத்தீன் வல்கேற் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- திருச்சபைத் தந்தையர்கள் காலத்தில் எழுதப்பட்ட பல்வேறு நூல்களும் இலக்கியக் கலைக்கு ஆதாரமாகக் கொள்ளக் கூடியவையாகும்.
- கிங்ஸ் ஜேம்சுடைய விவிலிய மொழிபெயர்ப்பானது ஒரு சிறந்த ஆங்கிலக் கவிதையாகக் கருதப்படுகின்றது.
- திருவிவிலியத்தின் அல்லது அதன் சில பகுதிகளின் வேறு பல மொழிபெயர்ப்புக்களும் அதன் இலக்கியச் சிறப்பை வலியுறுத்தும் நோக்குடன் எழுதப்பட்டவையாகக் கருதப்படுகின்றன.
- மத்திய காலத்திலும் மறுமலர்ச்சிக் காலத்திலும் எழுதப்பட்ட நூல்களின் பங்களிப்பை இங்கு நோக்குவது சிறப்பானதாகும். டான்ரே அலிகியேரி, தோமஸ் ஆ கெம்பிஸ், புனித அவிலா திரேசா, தூய சிலுவை யோவான் ஆகியோரின் ஆக்கங்கள் இங்கு நோக்குதற்குரியன.

**8.3.1.1 டான்ரே அலிகியேரி (Dante Alighieri) (கி.பி. 1265-1231)**

- இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் பிறந்த இவர் இத்தாலி மக்களின் தாய்மொழியான இத்தாலி மொழியில் பல நூல்களை எழுதியுள்ளார்.
- மத்திய யுகம் வரை இலக்கிய நூல்கள் யாவும் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன. ஆனால், டான்ரே (தாந்தே) இப்பாரம்பரியத்தை முறியடித்து இலக்கியங்களில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தார். இத்தாலியின் தேசிய மொழிக்குச் சேவையாற்றிய இவர் **"இத்தாலி மொழியின் தந்தை"** (Father of the Italian Language ) என அழைக்கப்பட்டார்.

- தெய்வீக நகைச்சுவை நாடகம் (The Devine Comedy) என்ற இவரது நூல் இலக்கிய நூல்களின் துணை இலக்கிய நூலாகக் கருதப்படுகின்றது. இதுவே இவர் எழுதிய முதன்மையான பெரிய இலக்கிய நூலாகும்.
- பிரசித்தி வாய்ந்த கவிஞரான வேர்ஜில் என்பவருடன் இணைந்து நரகம், உத்தரிப்பு ஸ்தலம் மோட்சம் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்தது போன்ற அனுபவத்தைக் கற்பனையாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.
- பெற்றாசோ, பொக்காசியோ ஆகியோரின் முன்னோடியாக இவர் திகழ்கின்றார். மத்திய காலக் கிறிஸ்தவ இலக்கியங்களின் வளர்ச்சிக்குச் சேவையாற்றிய முக்கிய நபராக இவர் கருதப்படுகின்றார்.

### 8.3.1.2 தோமஸ் ஆ கெம்பிஸ் (Thomas a Kempis) (1380-1471)

- மத்திய கால யுகத்தின் இலக்கிய நூல்களை எழுதியவர்களுள் தோமஸ் ஆ கெம்பிஸ் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இக்காலப்பகுதியில் கிறிஸ்தவ மறை தளர்ச்சியடைந்த நிலை கண்டு ‘‘கிறிஸ்தவ வழி வாழ்வு’’ என்னும் நூலை எழுதியுள்ளார். உலகின் மிகச்சிறந்த மறைநூலான விவிலியத்துக்கு அடுத்தபடியான திருநூல் எனப் பாரட்டப்படும் ‘‘கிறிஸ்து நாதர் அனுசாரம்’’ (The Imitation of Christ). திருவிவிலியத்தைப் போல் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் தினந்தோறும் நற்கருணை பெற்றுக் கொண்டு, தகுதியான முறையில் வாழ வேண்டும் என்ற செய்தி தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
- சுவேலி புனித அக்னஸ் மலையில் இருந்த துறவற மடத்தில் 70 ஆண்டுகள் துறவற மட அதிபராகப் பணி செய்த இவர் மடத்தை விட்டு வெளியே செல்லவில்லை. ‘‘நான் தொடர்ந்து வாழும் எனது சிற்றறை இனிமையாக வளர்ந்து வருகிறது. என் இனிய நண்பன் அது என் ஆறுதல் அதுவே’’ என எழுதியுள்ளார்.
- கிறிஸ்துவைப் பின்பற்றித் தனக்குள் மரித்து இறைவனுடன் ஒன்றித்து மீட்புப் பெறுதலே வாழ்வின் தத்துவம் என்பது இவர் கருத்தாகும்.

### 8.3.1.3 புனித அவிலா திரேசா (Tresa of Avila) (1515-1582)

- புனித அவிலா திரேசா ஸ்பெயினின் அவிலா என்னும் இடத்தில் வாழ்ந்த ஒரு பிரபுக் குடும்பத்தில் 28 பங்குனி 1515இல் பிறந்தார்.
- இவர் தனது சிறுவயதில் தன் சகோதரனிடம் ‘‘நாம் இருவரும் வீட்டை விட்டு ஓடி மொராக்கா சென்று வேதசாட்சி முடி பெறுவோம்’’ என்று கூறினார்.
- தான் படித்த சில வீரர்களின் வரலாறு அவரைத் துறவியாக வரத் தூண்டியதால் தனது சொந்தக் கிராமத்திலிருந்த கார்மேல் மடத்தில் சேர்ந்தார்.
- அம்மடங்களில் நிலவிய சட்ட ஒழுங்குகளின் வீழ்ச்சி இவரை உலக வாழ்வில் நாட்டம் கொள்ளச் செய்தது.
- புனித அகஸ்தீன், புனித ஜெரோம், புனித பெரிய கிறகோரியார் போன்றோர் எழுதிய நூல்களைப் படித்ததனால் அவர் கண்கள் திறக்கப்பட முற்றும் துறந்த தவ வாழ்வைத் தனது இலட்சியமாக கொண்டார். சிறப்பாகத் தூய அகஸ்தீனாரின் தன்னிலை ஏற்பு (Confessions) என்னும் நூலை வாசித்து ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்துக் கார்மேல் சபையின் மறுமலர்ச்சிக்காக உழைத்தார்.
- தனது ஆன்ம குருவின் ஆலோசனையின் பேரில் **‘‘சீர்பெற்ற வாழ்வுக்கு வழி’’** என்ற தனது வாழ்வின் சரிதையை எழுதினார்.
- ‘‘**ஆன்மாவின் கோட்டை**’’ என்னும் நூலை இறைவனுடன் ஒன்றிப்பதன் மூலம் அனுபவிக்கும் இனிமையை மையமாகக் கொண்டு எழுதினார். ஆழ்நிலை தியானத்தின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கியுள்ளார்.

- கார்மேல் சபையினைச் சீர்படுத்தி பழைய விதிமுறைகளைப் பின்பற்றச் செய்ய வேண்டும் எனத் திட்டமிட்ட இவர் துறவற வாழ்வின் வரலாறு, செபவாழ்வு, ஐக்கிய செபம் எனும் நூல்களையும் எழுதினார்.
- இவர் எழுதிய நூல்களும், கடிதங்களும் ஸ்பானிய இலக்கியங்களாக கருதப்படுகின்றன. சிறப்பாக அடிப்படைகள் (Foundation), உள்ளக அரண்மனை (Interior Castle) ஆகிய இலக்கிய நூல்களைக் குறிப்பிடலாம்.
- 6ஆம் பவுல் பாப்பரசர் இவரை 1970களில் "திருச்சபையின் மறைவல்லுனர்" (Doctor of Church) எனக் குறிப்பிடுள்ளார்.

#### 8.3.1.4 புனித சிலுவை யோவான் (John of the Cross) (1542 - 1591)

- இவர் கி.பி. 1567இல் புனித அவிலா திரேசாவின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆண்களுக்கான கார்மேல் சபையை ஏற்படுத்தத் திட்டமிட்டார். ஆழ்தியான அனுபவத்தை இவர் புனித அவிலா திரேசாவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.
- இவர் பின்வரும் நூல்களை எழுதி கிறிஸ்தவ இலக்கியத்துக்குப் பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளார்.
  - கார்மேல் மலையேற்றம் (The Ascent of Mount Carmel)
  - ஆன்மாவின் இருள் அடர் இரவு (The Dark night of the Soul)
  - ஆன்மீகக் கீதம் (Spiritual Canticle)
  - தெய்வீக அன்பின் உயிருள்ள சுவாலை ( The living Flame of Divine Love)
- இதில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையே உள்ள உறவு பரமதந்தைக்கும் மகனுக்குமிடையேயுள்ள அன்புப் பிணைப்பைப் போன்றதொரு ஆன்மீகப் பிணைப்பாக அமைய வேண்டும் எனவும், அதற்காக சந்திக்க வேண்டிய துன்பச் சூழ்நிலைகள் இயல்பாக உள்ள ஆசாபாசங்களை அடக்கியாள முயன்று கொண்டேயிருக்க வேண்டுமென்ற கருத்துக்களையும் இறையியல் வல்லுனர் என்ற முறையில் இவர் எழுதியுள்ளார். இறை அனுபவங்களைப் பெறத் தாழ்ச்சி மிக அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.
- இவை தவிர ''புனித பற்றிக்'' பாதுகாப்புப் பற்றி எழுதிய "மார்புக்கவசம்" (Breast Plate), செலானோ தோமஸ் கடைசித் தீர்ப்புக் குறித்து எழுதிய "கோபத்தின் நாள்" (Dies Irae) ஜோண் மில்ரன் மனிதனின் வீழ்ச்சி, மீட்புப் பற்றி எழுதிய "இழந்த இன்பவனம்" (Paradise lost), "மீளப்பெற்ற இன்பவனம்" (Paradise Regained), ஜோண் பனியன் கிறிஸ்தவ ஒப்புவமையை மையமாகக் கொண்டு எழுதிய "யாத்திரிகனின் பயணம்" (The Pilgrims Progress) போன்றனவும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றுடன் ஜே.ஆர்.ஆர். ரொல்கியென், ஜி.கே.ஸேஸ் ரெக்டன் எழுதிய நூல்களைப் புனைகதைகளுக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

### 8.3.2 கிறிஸ்தவ இசை (திரு இசை)

- கிறிஸ்தவ இசை என்பது கிறிஸ்தவ ஆலயங்களில், பேராலயங்களில் அல்லது மக்கள் இறைவனை வழிபடக்கூடும் இடங்களில் நடைபெறும் வழிபாடுகள், சடங்குகளின்போது பாடுவதற்காக இயற்றப்பட்ட பாடல்களாகும். இவை வழிபாடுகளை வளமூட்டுபவையாக அமைந்துள்ளன. இவை கிறிஸ்தவ வாழ்வு, விசுவாசம் பற்றித் தனிப்பட்ட ஒருவரின் அல்லது கிறிஸ்தவ சமூகத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்த எழுதப்பட்டவையாகும். அதன் உருவாக்கம், பாடப்படும் வடிவம், அதன் முக்கியத்துவம் என்பன, கலாசாரம், சமூக சூழலுக்கு ஏற்ப இடத்துக்கு இடம் வேறுபடுகின்றது. கிறிஸ்தவத்தின் ஆரம்பத்திலிருந்தே அதன் வழிபாடுகளில், சடங்குகளில் இசை முக்கியத்துவம் பெற்று வருகின்றது.

#### 8.3.2.1 கிறகோரியாரின் இசை (Plain Chant)

- இசை முதன்முதலில் கி.பி. 500-1000 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியிலேயே முறையாக ஆரம்பிக்கப்பட்டது. இருண்ட யுகமாக கருதப்பட்ட இக்காலப்பகுதியில் திருவழிபாட்டு முறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- புனித பெனடிக்ற் துறவற சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திருவழிபாட்டு முறையை கிறிஸ்தவ மறைக்குப் பொருத்தமான முறையில் திருத்தந்தை முதலாம் கிறகோரியார் (கி.பி. 590-604) ஒழுங்கு செய்தார்.
- கிறகோரியின் காலத்தில் உருவான இசை முறை ''கிறகோரியன் இசை'' (Gregorian Chant) எனப் பிரசித்தி பெற்றது. இவ் இசை முறை தனி இசை முறையாகும். அதாவது அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே தொனியில் (Mono Phonic) எளிய முறையில் பாடுவதற்கும், விளங்குவதற்கும், மனிதனை இறைவன்பால் இட்டுச் செல்வதற்கும் ஏற்றதாக இலகுவாகத் திருத்தங்களைச் செய்து கிறிஸ்தவ வழிபாடுகளிலும் சடங்குகளிலும் பயன்படுத்தும்படி திருத்தந்தை கிறகோரியார் பணித்துள்ளார். இதனால் கிறகோரியாரின் இசை பிரபலமானது.
- உரோம் மதச்சடங்குகளுக்குரிய அதிகாரபூர்வமான இசை அமைப்பு ''கிறகோரியன்'' (Gregorion) எனப்படுகின்றது. இது அதிகாரபூர்வமானதும் அதிசிறந்த இசையமைப்பு முறையாகவும் காணப்படுகிறது.
- சாதாரண பூசைப்பலியில் பாடப்படும் கீதங்கள் மற்றும் திவ்விய நற்கருணை வழிபாடு தூய ஆவியின் விழாக்கள், இறந்தவர்களுக்கான சடங்குகள், திருமணச் சடங்குகள், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு போன்ற விசேட மதவிழாக்களின் போது பாடப்படும் கீதங்களில் இசைக்கப்படும் அதிகாரபூர்வ இசை இதுவாகும்.

#### 8.3.2.2 கலப்பு இசை / பொலிப்போனி இசை (Polyphony)

- 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் கிரகோரியாரின் தனி இசை முறையைவிட வேறு பல இசை முறைகளும் தோன்றின. அவையாவன சேர்ந்திசை, ஒறித்தோறியோ இசை, பாரோக் இசை என்பனவாகும்.
- சேர்ந்திசை இசை முறை பாரிஸ் நோத்திரடாம் பேராலயத்தில் ஆரம்பமானது.
- கி.பி. 1200ஆம் ஆண்டளவில் பாடற்குழுவின் தலைவரான பெறொடின் (Perotin) என்பவர் நான்கு தொனி / குரலோசைகள் இணைந்த சேர்ந்திசை முறையை நிர்மாணித்தார். ரெனர் (Tenor), சுப்ரானோ (Suprano), அல்ரோ (Alto), பேஸ் (Base)

**பொலிப்போனி (Polyphony)**

- பொலிப்போனி (Polyphony) என்ற கிரேக்க சொல்லினால் இவ்விசை பிரசித்தி பெற்றது.
- கிறிஸ்தவ இசை இறைவனைப் புகழ்வது, வழிபடுவது, மனம் இரங்குவது, கண்ணீர் சிந்துவது போன்ற மனித உணர்வுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.
- இவ்விசை முறையின் இனிமையால் சாதாரண மக்களின் மனம் செபத்தைவிட இசையின் பக்கம் திரும்பியது.
- கலாச்சார சூழலுக்கு ஏற்ப இவற்றின் உருவாக்கம், பாடல் வடிவம், அதன் முக்கியத்துவம் என்பன இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்பட்டது.
- திருப்பலியில் பாடப்பட வேண்டிய ஆறு பகுதிகள் சேர்ந்திசை முறையில் பாடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்காலத்திலும் இப்பகுதிகள் திருப்பலியில் பாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.
    - கீரியே (ஆண்டவரே இரக்கமாயிரும்)
    - குளோறியா (உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக)
    - கிறேடோ (நான் விசுவசிக்கிறேன்)
    - சாந்துஸ் (தூயவர்)
    - பெனடிக்துஸ் (ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்)
    - ஆஞ்ஞுஸ் டேயி (உலகின் பாவங்களைப் போக்கும்)

**8.3.2.3 1. விசேட சேர்ந்திசை முறை**

- திரிதெந்தின் பொதுச்சங்கத்தின் பின் தோன்றிய இசை முறைகளுள் இது முக்கியமானதாகும்.
- சீர்திருத்த சபைகளின் புரட்சிக்கு முன் பயன்படுத்திய இசை முறைகளில் சாதாரண மக்கள் பங்குபற்ற முடியாதிருந்தது. திருப்பலி மிக நீண்டுவிட்டது எனச் சிலர் குறை கூறினர். எனவே, இவ்விசேட சேர்ந்திசை முறை தோன்றியது.
- மார்சலஸ் திருத்தந்தையின் இசைத் திருப்பலி (Missa Papae Marcelli) இப்பொதுச் சங்கத்தில் பாராட்டப்பட்டுள்ளது.
- இத்தாலி இனத்தைச் சேர்ந்த கியோவன்னி பியர்துவிஜிடா பலேஸ்ரினா (Giovanni Pierthuviga Da Plestrina) என்பவர் இவ்விசைக்குப் புத்துயிர் கொடுத்தார்.
- நெதர்லாந்து இனத்தைச் சேர்ந்த ஒர்லேன்டுஸ் லெஸ்சுஸ் குழுவினர் பக்தி முயற்சிகளுக்கு இச்சேர்ந்திசை முறையைப் பயன்படுத்தினர். இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல் குரல்வளத்தை மாத்திரம் பயன்படுத்தி அமைக்கப்பட்ட இசைமுறை மிகவும் திறமையானதாகும்.

**2. ஒரத்தோரியோ இசை**

- ஜோர்ச் பிரட்றிக் என்பவர் இவ் இசை முறைக்கு வித்திட்டவர் ஆவார்.
- சமயக் கருத்துகளுக்கு ஏற்றவாறு இவ் இசை அமைக்கப்பட்டது. தியான இசை முறையாக இது கருதப்படுகின்றது.
- இசைக்கருவிகைளையும், குரலொலிகளையும் ஒன்றாகக் கலந்து ஒரு புதிய விசேட சேர்ந்திசை முறையை உருவாகியது. இது ஒரத்தோரியோ இசை முறை என அழைக்கப்படுகின்றது.

**3. திருப்பலிப் பாடல்கள் / பாடல் திருப்பலிகள்**

- 19ஆம் நூற்றாண்டில் பாடல் திருப்பலியும், துக்கப்பாடல் திருப்பலியும் அமைப்புப் பெற்றன.
- லுட்விக்வேன் பிதோவன் (Ludwigvan Beethoven) என்பவரே பாடல் திருப்பலிகளின் ஒருங்கமைப்பாளர்களில் முக்கியமானவரும் முதன்மையானவரும் ஆவார்.
- பிரான்ஸ் இனத்தவரான ஹெக்ட் பர்லியொஸ், கபிரியேல் போரே, இத்தாலி இனத்தவரான குயிசெப்பே வர்டி போன்ற இசையமைப்பாளர்கள் இசைக்குப் பாரிய சேவையாற்றியுள்ளனர்.

**4. பறோக் இசை**

- 19ஆம் நூற்றாண்டின் பின் பறோக் போன்ற புதிய இசை முறைகள் தோன்றின.
- ஒரு முறை பாடுவது இரு முறை செபிப்பதற்கு ஒத்தது. எனவே மனதைக் குழப்பாமல் தியானிப்பதற்கு உதவியாக திரு இசை அமைய வேண்டிய தேவையை உணர்ந்த திருத்தந்தையர்கள் குறிப்பாக திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் இசைக்குக் கட்டுப்பாடுகள், விதிகளை முன்வைத்தார்.
- திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் காலத்தில் சுதேச மொழிகளிலான இசைகள் ஆலயங்களில் பாடப்பட்டன
- ஆர்மோனியம், பியானோ, வயலின், கிற்றார் போன்ற இசைக் கருவிகளின் உதவியுடன் இவை பாடப்பட்டன.
- சில கிறிஸ்தவ சபைகளில் இசைக் கருவிகள் பயன்படுத்தப்படாமலேயே இப்பாடல்கள் பாடப்பட்டன.

### 8.3.3 கிறிஸ்தவ கட்டிடக்கலை

- கிறிஸ்தவம் யூத மறையின் ஒரு கிளையாகக் கருதப்பட்ட காலத்தில் எருசலேம் தேவாலயமே கிறிஸ்தவர்களின் வழிபாட்டு மையமாகக் கருதப்பட்டது.
- ஆனால் உரோமையில் ஏற்பட்ட கலாபனைகளுக்குப் பின் கி.பி. 313இல் கொன்ஸ்தாந்தின் பேரரசனால் கிறிஸ்தவத்திற்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் கிறிஸ்தவ கட்டடக்கலை என்னும் கலையம்சம் ஆரம்பமானது.
- இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் இரு வகையான கட்டிடக் கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. அவையாவன:

    1. **பசிலிக்கா** உரோமைய ஆலய அமைப்பு முறை
    2. **பைசாந்தியன்** அமைப்பிலான ஆலய முறை

### 8.3.3.1 உரோமைய ஆலய அமைப்பு முறை (பசிலிக்கா)

- உரோமையரின் பசிலிக்கா என்றழைக்கப்படும் ஆலயம் மக்கள் ஒன்றுகூடும் பிரமாண்டமான மண்டபங்களை ஒத்ததாக அமைக்கப்பட்டன.
- உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதியில் பிரசித்தி பெற்றதான இக்கட்டடக்கலை அமைப்பு கிறிஸ்தவக் கலையில் முக்கிய இடம் பெற்றது.

**பசிலிக்கா ஆலய அமைப்பின் பிரதான அம்சங்களாவன:**

- அகலத்தை விட நீளம் கூடிய செவ்வக வடிவான கட்டிட அமைப்பைக் கொண்டது.
    - ஆலயத்துக்குள் நுழைந்தவுடன் கண்ணுக்குத் தெரிவது எதிர்பக்கத்தில் அரைவட்ட வடிவிலான குகையில் அமைந்திருக்கும் பலிப்பீடமாகும்.
    - இரண்டு வரிசைகளிலும் அமைந்துள்ள உயரமான தூண்கள் கூரையைத் தாங்கியுள்ளன. இதனால் ஆலய நிலப்பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் அதன் நடுப்பகுதி கப்பல் என்னும் அர்த்தத்தைத் தரும் நேவ் (Nave) என்றும், குறுகிய இரண்டும் குருவிச் சிறகு என்ற அர்த்தம் தரும் அயில் (Aisle) என்றும் அறிமுகமானது.
    - நடுப்பகுதியின் கூரை குறுகிய பகுதியைவிட உயரமானது. அதனால் வெளியே இருந்து பார்க்கும்போது இரண்டு மாடிக் கட்டிடம் போல் காட்சியளிக்கும்.
    - சிறகுப் பகுதிக்கும் நடுப்பகுதிக்கும் இடையில் உள்ள தூண்களில் பொருத்தப்பட்ட ஐன்னல்கள் வழியாக வெளிச்சம் உள்ளே வந்தது.
    - சதுர வடிவான ஆலயங்களும், வட்டமான சுவர்களைக் கொண்ட சிலுவை வடிவான ஆலயங்களும் உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டன.
    - நான்காம் நூற்றாண்டில் உரோமை நகரில் அமைக்கப்பட்ட யோவான் லாத்திரன், புனித மரியா போன்ற ஆலயங்கள் பசிலிக்கா வடிவில் அமைக்கப்பட்ட பிரதான ஆலயங்களாகும். கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்தமையால் இவ் ஆலய அமைப்பு முறை அவசியமானதாக விளங்கியது.

### 8.3.3.2 பைசாந்தியக் கட்டிடக் கலை

- நான்காம் நூற்றாண்டில் உரோமைப் பேரரசு பின்வருமாறு பிளவுபட்டுள்ளது:

    மேற்கு (உரோமை), கிழக்கு (பைசாந்தியன்). இதனால், கட்டிடக் கலையிலும் வேறுபாடுகள் தோன்றின.
- கிழக்கில் பசிலிக்காவுக்குப் பதிலாக வளைந்த வட்ட வடிவிலான அல்லது மைய அமைப்பிலான ஆலயங்கள் தோன்றின. இவை பைசாந்திய கட்டிடக் கலையென அழைக்கப்பட்டது.

- **பைசாந்திய ஆலய அமைப்பின் பிரதான அம்சங்கள்**
  - கிரேக்க சிலுவை (நான்கு பக்கமும் சமன்) வடிவில் அமைக்கப்பட்டது.
  - தட்டையான கூரையைவிட அரைவட்ட முகப்பு அமைக்கப்பட்டுள்ளது.
  - பூரண ஒளியைவிட மங்கலான ஒளியைப் பயன்படுத்தினர்.
  - ஆலயத்தின் மத்திய பகுதி முழுவதிலும் தூணோ, சாய்தளமோ இல்லை.
  - வில்லு வடிவிலான முகப்பும், அரைவட்ட வடிவிலான கூரையும், நீர்க்குமுழி போன்ற கூரையும் (Dome) அமைக்கப்பட்டன.
  - புனித படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆலயத்தின் உட்புறத்தில் பலிப்பீடம் ஆலயத்தின் மையப்புறத்தில் இருந்து ஒரு திரைச்சீலையினால் பிரிக்கப்பட்டிருந்தது. உ+ம் : பேரரசர் யுஸ்தீன் கொண்ஸ்தாந்திநோபிளில் கட்டி இறை ஞானத்துக்கு அர்பணித்த புனித சொபியா ஆலயம்.

### 8.3.3.3 உரோமனெஸ்க் கட்டிடக் கலை

- பேரரசர் பெரிய சாள்ஸ் (சார்லமேயின்) காலத்தில் சிறிய மறுமலர்ச்சி ஏற்பட்டாலும் பின்னர் அரசியல் குழப்பங்களினால் அது தடைப்பட்டது.
- கி.பி. 1000 ஆண்டிலிருந்து கட்டிடக்கலையில் துரித வளர்ச்சி ஏற்பட்டது. பழைய கட்டிட முறைகள் கைவிடப்பட்டன. புதிய கட்டட முறைகள் தோன்றின.
- பழைய பேராலயங்கள், ஆலயங்கள், கோவில்கள் எல்லாம் புனருத்தானம் செய்யப்பட்டு புதிய வடிவங்கள் எடுத்தன.
- வட இத்தாலி, பிரான்ஸ், பர்கண்டி, ஜெர்மனி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கபட்ட புதிய கட்டடக்கலை உரோமனெஸ்க் (Romanesque) கட்டிடக்கலை என அழைக்கப்பட்டது.

**உரோமனெஸ்க் கட்டிடக்கலையின் சிறப்பம்சங்கள்:**

- உருளை வடிவிலான வில்லுகளும், மிகவும் பெரிய சுவர்களும் அவற்றைப் பலப்படுத்த அரண்களும் அமைக்கப்பட்டன.
- அதன் முகடு கற்களால் கட்டப்பட்ட அரை வட்ட வடிவிலான கூரையைக் கொண்டது. அப்பாரமான முகட்டைத் தாங்குவதற்குப் பலமான சுவர்கள் அமைக்கப்பட்டன.
- இரண்டு நூற்றாண்டுகள் இக்கட்டிட அமைப்பு பிரபல்யமானதாக இருந்துள்ளது.
- இக்கட்டிட முறையிலான ஆலயங்களுக்கு லொம்பார்டி மத்திய பிரான்ஸ், மேற்கு ஜேர்மனியிலுள்ள ஆலயங்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

### 8.3.3.4 கோதிக் (Gothic) கட்டிடக் கலை

- 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட பிரான்சில் இது தோன்றியது.
- கோதிக் (Gothic) என்ற பெயர் அக்கலையை மறுதலிப்பதற்காக கூறப்பட்டதாகும். அதாவது பசிலிக்கா, பைசாந்திய கலை அம்சங்களுக்கு "**பொருத்தமற்றது**" என்பதாகும்.
- ஐரோப்பா முழுவதும் இக்கலை பரவியது.

**கோதிக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள்**:

- அரை வட்ட முகப்புகளுக்குப் பதிலாக கூரான முகப்பைக் கொண்டது. அதனால் பாரத்தைக் குறைத்துக்கொள்ள முடிந்தது.
- கட்டடக் கலைஞர்கள் முதலில் மேற்தட்டை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். தேவையான அளவு தூண்களையும் அமைத்தனர். பின்னர் கூரையைத் தாங்குவதற்கு அதன்மேல் நடுவில் கூரான முகப்பைப் பொருத்தினர்.
- கோதிக் ஆலய உட்பகுதி உரோமைய ஆலயத்தைப் போன்று இரண்டு வரிசைத் தூண்களால் ஆனது. ஆலயத்தின் நிலப்பகுதி அகலமான மத்திய மண்டபமாகவும் ஒடுங்கிய இரண்டு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டன.

- கூரான முகப்பும் பூ வடிவான ஜன்னலும் (Rose Window) இவ்வாலயங்களின் விசேட அம்சமாகும்.
- நிறக்கண்ணாடிப் பாவனையும் சமநிலையைப் பாதுகாக்க மூலைகளைப் பொருத்துவதும் சிற்ப அலங்காரங்களைச் செய்வதும் இதன் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும்.

  உ+ம் : பாரிசில் உள்ள நோத்திரடாம் ஆலயம். (Notre Dame)

### 8.3.3.5 மறுமலர்ச்சிக் காலக் கட்டிடக்கலையின் சிறப்பம்சங்கள்

- கி.பி. 14-16 நூற்றாண்டுகளில் மக்களின் சிந்தனைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. 15ஆம் நூற்றாண்டில் இத்தாலி, புளோறன்ஸ் ஆகிய இடங்களிலும், வட ஐரோப்பாவிலும் மக்கள் பழைய சிந்தனைகள், கருத்துக்கள், முறைகளுக்குத் திரும்பிச் சென்றனர். அதன் விளைவாகத் தோன்றிய கட்டிடக்கலை பழைய கிரேக்க, உரோமைக் கட்டிடக் கலையை ஒத்ததாக அமைந்தது.
- சரியான ஒழுங்குகள், அளவுகள், விகிதத்துக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- அதிக தூண்களும், அதற்குப் பாதுகாப்பாக சிறிய சதுரத்தூண்களும், முக்கோண வடிவான முன் தோற்றமும், சதுர வடிவான லின்ரர்களும், மேல் வளைவுகளும் குவிந்த கூரைகளும், சுவர் மாடங்களும், சிலைகளும் இக்காலக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள் ஆகும்.
- பிலிப்போ புறநெலச்சி என்பவரே முதல் மறுமலர்ச்சிகால கட்டிடக் கலைஞர் எனக் கருதப்படுகின்றார். 16ஆம் நூற்றாண்டுகளில் இக்கட்டிடக் கலையானது கோதிக் கட்டிடக் கலைக்கு மாற்றான கட்டிடக் கலையாகக் கருதப்பட்டது.

### 8.3.3.6 பறோக் கட்டிடக் கலை

- மறுமலர்ச்சிக் காலக் கட்டிடக் கலையின் தொடர்ச்சியாக 17ஆம் நூற்றாண்டில் உரோமை, இத்தாலி ஆகிய இடங்களில் ‘‘பறோக்’’ கட்டிடக் கலை உருவானது.
- **பறோக்** என்றால் ‘‘**அலங்காரம்**’’ எனப் பொருள்படும்.

**பறோக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள்**

- இக்கட்டிடக்கலையைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட ஆலயத்தின் உட்புறம் சுருபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- உட்கூரையும் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- ஆலயங்கள் கலையரங்குகள் போல் காட்சியளித்தன.
- இதில் திருச்சபையினதும், அரசினதும் வீர, வெற்றி, புதிய வாக்கலங்காரம், நாடகம், சிற்பங்கள், சித்திரங்கள் போன்றன வெளிப்படுத்தப்படுகின்றன.

### 8.3.4 கிறிஸ்தவ சிற்பக்கலை

- மனித வரலாற்றில் சிற்பக்கலை தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. ஆனால், கிறிஸ்தவத்தின் வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் இக்கலை காணப்படவில்லை என்றே கூறலாம்.
- கலாபனைகளால் இக்கலை தடை செய்யப்பட்டிருக்கலாம். ஆயினும், கல்லறைகள் சுரங்கங்களில் காணப்பட்டவை அஞ்ஞான சிற்பிகளிடமிருந்து பெறப்பட்டன.
- கி.பி 4ஆம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ மறைக்கு அங்கீகாரம் கிடைத்தபின் ஆரம்பமானது.
- இவை கட்டிடங்களை அலங்கரிக்கும் கலையாகவே ஆரம்பிக்கப்பட்டன. அதாவது கட்டிடக் கலையின் ஓர் அம்சமாகக் கருதப்படுகின்றது.
- முக்கியமாக இயேசுவினதும், புனிதர்களினதும் உருவங்கள், கதவுகளைக் காவல் செய்யும் நோக்குடன் செதுக்கப்பட்டன.
- கோபுர உச்சிகளை அலங்கரிக்க வானதூதர்கள், புனிதர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டன.
- மழை நீரை வெளியேற்றும் பீலிகளாக மனிதன் அல்லது மிருகங்களின் வாய் போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தினர். செபக்கூடங்களில் பழைய, புதிய ஏற்பாடுகளின் கதைகளை வெளிப்படுத்தும் உருவங்கள் இருந்தன. இவற்றின் ஒரு பகுதி சுவருடன் பொருத்தப்பட்டிருந்தது.

**சிற்பக்கலை சுயாதீனமடைதல்**

- கிரேக்க மறுமலர்ச்சியின் பயனாகக் கிறிஸ்தவ சிற்பக்கலை சுயாதீனமுள்ள கலையாக உலகில் அறிமுகமானது. இதை அறிமுகம் செய்தவர் மைக்கல் ஆஞ்சலோ ஆவார்.

### 8.3.4.1 மைக்கல் ஆஞ்சலோவின் சிற்பங்களும் சிறப்பம்சங்களும்

- **பியற்றா** : மரித்த இயேசுவை அவருடைய தாயார் மடியில் தாங்கிய வண்ணமாகவுள்ள காட்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இது பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. பார்ப்போரின் உள்ளத்தை உருகச் செய்யுமளவிற்குத் தத்ரூபமானது.
- ஆரம்பத்தில் களிமண், மாபிள் கற்களில் செதுக்கப்பட்ட சிலைகள் பின்னர் பொன், வெள்ளி, வெண்கலம் போன்ற உலோகங்களிலும் செதுக்கப்பட்டன.
- பிரான்சின் சாள்ஸ் அரசரின் தலைநகரம் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்டபோது தாவீதின் உருவச் சிலை இவரால் செதுக்கப்பட்டது. மோசேயின் உருவச்சிலையையும் இவரது செதுக்கற் கலைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- ஏராஸ்மோசின் சிந்தனையின் விளைவாக சித்திரக்கலையில் தாக்கம் ஏற்பட்டது. மானிடத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உடற்கூறுகள் செதுக்கப்பட்டன.

### 8.3.4.2 ஜியான் லோரென்சோ பெர்ன்னி (Giant Renzo Bernini கி.பி.1598-1680)

- பறொக் பாரம்பரியத்தில் உருவாகிய பெர்னின் படைப்புக்களில் மிகப் பிரசித்தி பெற்ற படைப்புக்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்
    - உரோமை புனித பேதுருவின் பசிலிக்காவின் பலிப்பீடத்திற்கு மேல் அமைக்கப்பட்ட வெண்கல மேடை.
    - புனித பேதுருவின் பெசிலிக்கா சதுக்கத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட நான்கு பெரிய தூண்களும் சதுரங்கமும்.
    - ‘‘தியானத்தின் புனித திரேசா’’ என அழைக்கப்படும் சிற்பம். இது விசேட கலைப் படைப்பாகவும் ஆன்மீகத் தன்மையுடையதாகவும் காணப்படுகிறது.
- சிற்பக் கலைஞர்களுக்குள் சிறப்பிடம் வகிப்பவர்களுள் பின்வருவோரையும் குறிப்பிடலாம். டொனாரெல்லோ, வெறொச்சியோ, லியர்னாடோ டாவின்சி

### 8.3.5 சித்திரக்கலை

- திருச்சபையின் வரலாற்றில் கி.பி. 100ஆம் ஆண்டிலிருந்துதான் கிறிஸ்தவ சித்திரத்தைப் பற்றி நாம் பேசக் கூடியதாயுள்ளது.
- கிறிஸ்தவ சித்திரங்கள் கல்லறைகள், சுரங்கங்களிலேயே ஆரம்பமானது. கி.பி. 200-300 ஆண்டுகளில் கிறிஸ்தவம் தடைசெய்யப்பட்ட மதமாக இருந்தமையால் சித்திரங்களை வரைவது கட்டுப்படுத்தப்பட்டது.
- தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் அநேகமாக ஏழை வறியவர்களாக இருந்தமையால் அவற்றை வரைவதற்குப் பணம் இல்லாத காரணத்தால் அஞ்ஞான சித்திரங்களைப் பயன்படுத்தி அவற்றுக்கு கிறிஸ்தவ அர்த்தங்களைக் கொடுத்தனர். பின்னர் தங்களுக்குரிய அடையாளங்களை அறிமுகம் செய்தார்கள்.

- கிறிஸ்தவர்கள் மாத்திரம் விளங்கிக் கொள்ளக்கூடிய இரகசியமான கிறிஸ்தவ அடையாளங்களைப் பயன்படுத்தினார்கள். இது சுரங்கக் கல்லறைகளில் வரையப்பட்டமையால் அவை "நிலச்சுரங்க சித்திரங்கள்" என அழைக்கப்பட்டன.
  - மீன் - கிறிஸ்து (IXTHUS)
  - புறா - ஆன்மா
  - மயில் - நித்திய காலம்
  - கழுத்தில் ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் - நல்ல ஆயன்
  - கை உயர்த்திய வண்ணம் இருக்கும் மனிதன் - செபத்தில் இறைவனோடு உறவு கொள்வது
- 1931ஆம் ஆண்டு உரோமையில் கண்டுபிடிக்கப்பட்ட டொமிற்றில்லாவின் கல்லறையில் சுவர்ச்சித்திரங்கள், ஓவியங்கள் சிலவும் காணப்பட்டன. அதில் விவிலிய நிகழ்வுகள், கதைகள் வரையப்பட்டுள்ளன.

  உ+ம்: ஆதாமும் ஏவாளும்.

  மோசே கற்பாறையிலிருந்து தண்ணீர் வரச் செய்தல்.

  யோனா மீனின் வயிற்றிலிருந்து காப்பாற்றப்படுதல் (கிறிஸ்துவின் இறப்புக்கும் உயிர்ப்புக்கும் இடைப்பட்ட காலம்).

  சிங்கத்திடம் இருந்து தானியேல் பாதுகாக்கப்படல்.

  இயேசுவும் திருத்தூதர்களும்.
- கிறிஸ்தவர்களின் அடையாளமான சிலுவை இங்கு தவிர்க்கப்பட்டது அதற்குப் பதிலாக நங்கூரம் பயன்படுத்தப்பட்டது. இவை தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த துன்பகரமான வாழ்வைப் பிரதிபலிப்பவையாக அமைந்தன.

#### 8.3.5.1 மொசாயிக் சித்திரக்கலை

- பைசாந்தியன் கட்டடக்கலை கொண்டுவரப்பட்ட போது அதன் ஓர் அங்கமாக மொசாயிக் என்ற சித்திரக்கலை அறிமுகம் செய்யப்பட்டது. இதனைக் கண்ணாடிச் சித்திரக் கலையென்றும் அழைப்பர். இவை சிறிய கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டவை ஆகும். வீடுகளிலும், ஆலயங்களிலும், கூரைச் சுவர்களிலும், நிலம் என்பவற்றை அலங்கரிப்பதற்கும் இம்முறை பயன்படுத்தப்பட்டது. சித்திரங்கள் அழகானவையாகவும், ஒளியுள்ளவையாகவும் இருந்தன. ஆனால், அவை சிறிய கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டபடியால் சித்திர உருவங்கள் கரடுமுரடானவையாகக் காணப்பட்டன. அணிந்துள்ள ஆடைகளில் சுருக்கங்கள் காணப்படவில்லை.
- இவற்றில் ஆன்மீகத்தன்மையும், பக்தியும் காணப்பட்டதுடன் ஆணின் முழுமையான தன்மைமையையும் காணமுடிகின்றது. சித்திரங்களில் இயற்கைத் தன்மையைவிடக் கம்பீரத் தன்மைக்கு முதலிடம் அளித்தனர்.
- கிறிஸ்துவை அனைத்துக்கும் அதிபதியாக ஆக்கினர். அவற்றைப் பக்தியுடன் பார்ப்பவருக்கு அச்சித்திரங்கள் நித்திய காலத்தையும் உலக முடிவையும் தெளிவாகக் காட்டுகின்றன.

#### 8.3.5.2 அயிக்கோன் (ICON) சித்திரக் கலை

- மொசாயிக் சித்திரக் கலையைத் தொடர்ந்து அதை ஒத்ததாக பூச்சுச் சித்திரக்கலை முறையொன்று உருவாகியது. இதுவும் பைசாந்தியச் சித்திரக் கலையின் ஒரு அம்சமாகவே கருதப்பட்டது. இதில் படங்கள் மை பூசப்பட்ட சிறிய பலகைத் துண்டுகளில் வரையப்பட்டுள்ளன.
- இயேசு, மரியாள், புனிதர்களின் உருவங்கள் சிறிய பலகைத் துண்டுகளினால் பிரதி செய்யப்பட்டன.
- எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய இச்சித்திரங்கள் கிரேக்க மொழியில் "அயிக்கோன்"(ICON) என அழைக்கப்பட்டன. சிறிய பலகைகளில் மைப்பூச்சினால் வரையப்பட்ட இச்சித்திரங்களின் பின்னணி எப்போதும் பொன்னிறமாயிருக்கும்.

#### 8.3.5.3 வர்ணக் கண்ணாடி சித்திரக்கலை

- கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வட பிரான்சில் கோதிக் முறையிலான கட்டிடக்கலை தோன்றிய பொழுது அதன் ஒரு சிறப்பு அம்சமாக வர்ணக் கண்ணாடிச் சித்திரக்கலை (Stained Glass) தோன்றியது.
- பெரிய யன்னல்களில் இருந்த கண்ணாடிகளில் இச்சித்திரங்கள் வரையப்பட்டன. இவை பெரும்பாலும் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டன. யன்னல்கள் வட்டமான மலரைப் போன்ற அமைப்பை உடையதாகக் காணப்பட்டன.
- இச்சித்திரங்களின் சிறப்புத்தன்மை கண்ணாடிக்குள் நிறம் விட்டு வரையப்பட்டுள்ளமையாகும். இவை மொசாயிக் சித்திர முறையிலும் பார்க்கக் கடினமானதாகும்.
- கண்ணாடிக்குள் நிறம், சாயம் இடும் இம்முறையினைக் கோதிக் சித்திர கலைஞர்கள் இரகசியமாக வைத்திருந்தமையால் காலப்போக்கில் இப்பழைய முறை மறைந்து போய்விட்டது. நவீன வர்ணக் கண்ணாடிச் சித்திரக்கலை தோன்றியிருப்பினும் பழைய முறைக்குச் சமமானதெனக் கொள்ள முடியாது.

### 8.3.5.4 மத்திய காலச் சித்திரக்கலை

**கியோற்றோ டீ பொர்டோனே (Giotto di Bordone) (கி.பி 1266-1377)**

- ''நிகழ்காலச் சித்திரக் கலையின் தந்தை'' என கியோற்றோ போற்றப்படுகின்றார்.
- பிரெஸ்கோ (Fresco) என்பவர் புதிய சுவர்களில் பூச்சுக் காய்வதற்கு முன்னர் ஓவியம் வரையும் முறையைக் கண்டுபிடித்தார்.
- இத்தாலியில் கோதிக் முறையிலான ஆலயங்கள் இருக்கவில்லை. ஆதலால் ரோமனஸ்க் என்ற மத்தியகால உரோமன் ஆலயங்களின் கனமான சுவர்களில் இவர் ஓவியம் வரைந்தார்.
- இவரின் பிரஸ்கோ ஓவியங்களுள் பிரசித்தி பெற்ற ஓவியமாகப் புளோரன்ஸ் நகரத்தில் உள்ள புனித பிரான்சிஸ் அசீசியாரின் ஆலயத்தின் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களைக் கொள்ளலாம்.
- அவ் ஓவியங்களில் பின்வரும் பண்புகள் காணப்படுகின்றன.
  - உயிரூட்டமுள்ள மனிதர் மரங்கள், இலைகளினால் பின்னணி அலங்கரிக்கப்பட்டமை.
  - பல வர்ணச் சிறகுகளுடைய பறவைகளை வரைந்து இயற்கை இரசனையை ஏற்படுத்தியுள்ளார். பாதுவா ஆலயம் ஒன்றில் கிளோற்றோவினால் வரையப்பட்ட கிறிஸ்துவின் வரலாற்றுக் கதைகளின் காட்சிகள் மிக இயற்கையாகவும், தத்துரூபமாகவும் உள்ளன.

#### 8.3.5.5. மறுமலர்ச்சிக்காலச் சித்திரக்கலை

- கி.பி 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலமாகக் கருதப்பட்டது. இக்காலத்தில் வாழ்ந்த ஓவியர்கள் மறுமலர்ச்சிக் கால ஓவியர்கள் என அழைக்கப்பட்டார்கள்.
- இத்தாலியின் புளோரன்ஸ் நகரை மையமாகக் கொண்டு நிகழ்ந்ததால் இக்கலை மரபு '**புளோரன்ஸ் கலை மரபு**' என அழைக்கப்பட்டது.
- இக்கால ஓவியர்களுள் பேட்டி செல்லி, பியாட்டோ டக்சியோ, வசாரி மசக்கியோ புறுாணலிச்சி, மைக்கல் ஆஞ்சலோ, லியனாடோ டாவின்சி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**அ. லியோனாடோ டாவின்சி (கி.பி 1452 -1519 )**

- இவரை நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உபகரணங்களைத் தயாரிப்பதற்கு முன்னோடியாகக் கருதலாம். ஏனெனில் மோட்டார் வாகனம், விமானம், பரசூட், ஹெலிகொப்டர் போன்றவற்றை, அவை கண்டுபிடிக்கப்பட முன்பே ஓவியமாக வரைந்தார். மனித உடற்கூறுகளையும் பார்த்து வரைந்தார்.
- இவர் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்துள்ளார்.
- இவர் **'தெய்வீக ஓவியர்'** (Divine Painter ) என அழைக்கப்படுகின்றார். கபிரியேல் தூதன் மங்கள வார்த்தை சொன்ன நிகழ்வைத் தத்ரூபமாக வரைந்துள்ளார்.
- 1495இல் சாந்த மரியா மடாலயச் சுவரில் இவர் வரைந்த இறுதி இராவுணவு ஓவியம் முக்கியமான ஓவியமாகும். ஒருமைப்பாடு, சமநிலை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு இது வரையப்பட்டதாகும்.
- லியானாடோ டாவின்சி வரைந்த மொனாலிசா ஓவியம் கிறிஸ்தவ நோக்கத்தைக் கொண்டிராவிடினும் அச்சித்திரம் உலகப் புகழ்பெற்ற சித்திரமாகும்.

**ஆ. மைக்கல் ஆஞ்சலோ (கி.பி. 1475 – 1564)**

- இவர் மிகச் சிறந்த சிற்பியும் ஓவியனும், கவிஞனும், கட்டடக் கலைஞனும் ஆவார்.
- கி.பி. 1508இல் சிஸ்ரையின் சிற்றாலயத்தில் (Sistine Chapel) அதாவது, திருத்தந்தையின் பிரத்தியேக சிற்றாலயத்தில் வரைந்த ஓவியங்கள் மிகவும் முக்கியமானவையாகும். இங்கு வரையப்பட்ட சித்திரங்களுள் உலகப்படைப்பு (The creation of Adam ), நடுத்தீர்வை, பரிசுத்த குடும்பம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.
- உலகப்படைப்பு சித்திரத்தில் இறைவன் தமது நீட்டிய கரத்தினால் ஆதாமின் நீட்டிய கரத்திற்கு உயிர் கொடுக்கும் காட்சி மிகவும் உயிரோட்டமுள்ளதாக வரையப்பட்டுள்ளது.
- இறுதித் தீர்ப்பு ஓவியம் பார்ப்போரின் மனதை சஞ்சலப்படுத்துவதோடு, அங்கே வரையப்பட்ட மனிதர்களின் தோற்றம் அமைதியற்ற நிலையில் இருப்பது போல காட்சியளிக்கின்றது.
- இவரின் உலகப் புகழ் பெற்ற சித்திரங்கள் இன்றும் காணக்கூடியதாக உள்ளன.

**இ. இறபாயல் சன்சியோ (கி.பி. 1483 – 1520 )**

- 1504இல் இவர் வரைந்த கன்னி மேரியின் திருமணக்காட்சி, கன்னி மேரியும் புனிதக் குழந்தைகளும் ஆகிய ஓவியங்கள் சிறப்பு வாய்ந்தவையாகும்.
- இரண்டாம் யூலியஸ் பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க அவரது உத்தியோக இல்லத்தில் வரையப்பட்ட இவ் ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும்.
- "பிரஸ்கோ"(Prasco) எனப்பட்ட சிமேந்து பூசப்பட்ட புதிய சுவரில் இவ் ஓவியங்கள் வரையப்பட்டன.
- இத்தாலி மக்களிடையே புகழ் பெற்ற மெடோனா (Medonna) என்ற இறை அன்னையின் சித்திரத்தை வரைந்தவராக இறபாயேல் திகழ்கின்றார்.
- இறபாயேலின் சித்திரங்களுள் மிகவும் அதிசயமானதும் பிரபல்யமானதுமான சித்திரமாக "கதிரை மாதா"(Medonna Chair) சித்திரம் குறிப்பிடத்தக்கது.
- இவரின் ஓவியங்களில் டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ ஆகியோரின் பாதிப்பு உள்ளது.
- இவரது படைப்புக்கள் உரோமில் காணப்படுகின்றன.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. கிறிஸ்தவ நாகரீகத்தின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய கிறிஸ்தவ இலக்கிய நூல்களையும், அவற்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த நூலாசிரியர்களையும் பட்டியல் ஒன்றின் மூலம் வெளிப்படுத்துக.
2. கிறிஸ்தவ ஆலயங்களின் அமைப்புமுறை காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குக.
3. கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளில் கிறகோரியாரின் இசை முறை ஏற்படுத்திய தாக்கங்களை ஆராய்க.
4. மைக்கல் ஆஞ்சலோ, லியனாடோ டாவின்சி, இறபாயேல் சென்சியோ போன்றவர்கள் கிறிஸ்தவ கலைக்கு வழங்கிய பங்களிப்பை மதிப்பிடுக.

**உசாத்துணை நூல்கள்:**


- Nihal Abeyasingha, **History of Chirsitianit**y, S.Godage & Brothers ( Pvt) Ltd Colombo10.
- M.S. இயேசுதாஸ் தங்கசாமி **திருச்சபை வரலா**று, MABT – நாஞ்சில் பதிப்பகம்.
- அருட்பணி பிலிப் யேசுதாசன் அ.ம.தி, **கடுகு மரம்**, அமல உதயம், உப்புவெளி, திருமலை.
- அருட்பணி பிலிப் யேசுதாசன் அ.ம.தி, **புளிப்பு மா**, அமல உதயம், உப்புவெளி, திருமலை.
- கிறிஸ்தவ நாகரிகம், தரம் 13 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009.
- ஞானமுத்து பிலேந்திரன், **கிறிஸ்தவமும் நாகரிகங்களும்**, கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம் 2008.

**தேர்ச்சி 9.0 :** ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்ற வரலாற்றைக் கற்பதனூடாகச் சமய, சமூக, கலாசார மேம்பாட்டிற்குத் தம்மை அர்ப்பணிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஆசிய நாடுகளில் கிறிஸ்தவத்தின் வரலாற்றை அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவிய விதம் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- ஆரம்ப காலத்திலேயே ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவியுள்ளது என்பதை ஏற்பார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- நற்செய்தியை ஏனையோருக்குக் கொண்டு செல்வார்.
- குழுச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்கம் :**

**அறிமுகம்**

- கிறிஸ்தவம் ஓர் ஆசிய மதம். அது ஆசியாக் கண்டத்திலே குறிப்பாக தென்மேற்கு ஆசியாவின் கடலோரமாக அமைந்திருக்கும் பலஸ்தினாவிலே தோன்றியது.
- திருத்தூதரான தோமா வழியாகக் கிறிஸ்தவம் கிழக்கு நோக்கி, குறிப்பாக இந்தியா நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.
- ஆசியாவிலே கிறிஸ்தவத்தைத் தம் நாட்டு மதமாக ஏற்றுக்கொண்ட முதல் நாடு ஆர்மேனியாவாகும்.
- கி.பி 431இல் இடம்பெற்ற எபேசு பொதுச் சங்கத்தையடுத்துத் தோன்றிய நெஸ்தோரிய பிரிவினைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை இந்தியா, இலங்கை, மொங்கோலியா போன்ற நாடுகளுக்கும் சீனாவிற்கும் எடுத்துச் சென்றனர்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் கிறிஸ்தவத்தை தூர கிழக்கு நாடுகளுக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக, 1498இல் போர்த்துக்கேய மாலுமி வஸ்கொடகாமாவின் தலைமையில் இந்தியா சென்ற பிரான்சிஸ்கன் சபையினைச் சேர்ந்த ஆன்மீகக் குரு மறை போதகம் செய்தார். அதனைத் தொடர்ந்து டொமினிக்கன் சபை, இயேசு சபை, அகுஸ்தீன் சபை போன்ற துறவற சபைகள் மறைப்பணிகளை மேற்கொண்டன.
- கிறிஸ்தவ சீர்திருத்தத்தின் பின்னர் திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாகக் கீழைத்தேய நாடுகளான சீனா, கொரியா, யப்பான், பிலிப்பைன்ஸ், இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் மறைபரப்பாளர்கள் எவ்வாறான வாஞ்சையுடன் மறைபணியை ஆற்றியுள்ளனர் என அறிந்து கொள்ளலாம்.

### 9.1.1 இந்தியாவில் கிறிஸ்தவம்

- இந்திய மக்கள், சனத்தொகையில் இந்துக்கள், முஸ்லிம்களுக்கு அடுத்த தொகையினராக கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர்.
- இந்தியாவிற்குள் கிறிஸ்தவம் வெவ்வேறு காலகட்டங்களின் போது கொண்டு வரப்பட்டது. அவையாவன:

  1. 1ஆம் நூற்றாண்டில் (கி.பி. 52இல்) திருத்தூதரான தோமா வழியாகக் கொண்டுவரப்பட்டது. தோமா தென் இந்தியாவில் மலபார் கடற்கரையோரமாகவுள்ள கிரங்கனூரை வந்தடைந்து, அங்கு ஏழு கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கி நற்செய்தியை அறிவித்துப் பல இந்தியர்களை மனந்திருப்பி விசுவசித்தவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்.

2. கி.பி. 345இல் கானான் நாட்டுத் தோமாவின் தலைமையில் ஏறக்குறைய 300 – 400 குடும்பங்கள் கிரங்கனூர்த் துறைமுகத்தில் வந்திறங்கி அங்கு ஒரு பட்டணத்தையும் ஆலயத்தையும் கட்டிக் குடியேறினர்.
3. 9ஆம் நூற்றாண்டில் 823இல் மாசாபோர், சப்பிரிசோ என்பவர்களால் பேர்சியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது.
4. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேய மறைபரப்பாளர் வழியாகக் கொண்டுவரப்பட்டது.

- ''உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்'' என்ற இயேசுவின் பணிப்புரைக்கேற்ப அவரது திருத்தூதர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று மறையைப் பரப்பி மக்களைக் கிறிஸ்தவர்கள் ஆக்கினர்.
- கிறிஸ்தவம் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்த மறைப்பரப்பாளர்களால் இந்தியாவிற்குள் கொண்டு வரப்பட்டு வெவ்வேறு சமூகங்களிலும் வாழப்பட்டு வந்திருக்கிறது.
- புனித தோமா வழியாக இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவமானது ''**சீரிய கிறிஸ்தவர்கள்**'' அல்லது ''**தோமையார் கிறிஸ்தவர்கள்**'' என அழைக்கப்பட்டனர்.
- அவர்கள் கிழக்கு சீரிய கிறிஸ்தவர்களுடன் வழிபாட்டு முறைகள், ஆன்மீகம், இறையியல் ஒழுங்கு சட்டங்கள் போன்றவற்றில் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். அவர்களுடைய ஆயர்கள் கிழக்கு சீரிய பிதாப்பிதாவினாலேயே நியமிக்கப்பட்டனர்.
- 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா வந்த போர்த்துக்கேயக் கிறிஸ்தவ மறைப்பரப்பாளர்கள் அவர்களுடைய கருத்துக்களிலும் வழிபாட்டு முறைகளிலும் வித்தியாசத்தை அவதானித்து, அவர்களை நெஸ்தோரிய பிரிவினைக் கிறிஸ்தவர்களெனச் சந்தேகித்தனர்.
- எனவே, போர்த்துக்கேயர் அவர்களை அணுகி தங்களுடைய பத்றோவாடோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அனைத்து சீரிய கிறிஸ்தவர்களும் திருத்தந்தையின் ஆளுகையின் கீழ் வரவேண்டும் எனவும், இலத்தீன் மரபு வழிபாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் வற்புறுத்தினர். அதன் விளைவாக சீரிய கிறிஸ்தவர்கள் மத்தியில் பிளவுகள் தோன்றின. அதன் வழியாகத் தோற்றம் பெற்ற மூன்று திருச்சபைகளுமே இன்று இந்திய கத்தோலிக்கத் திருச்சபையில் அங்கம் வகிக்கின்றன. அவை முறையே:

1. சீரோ மலபார் திருச்சபை
2. சீரோ மலங்கரா திருச்சபை
3. இலத்தீன் திருச்சபை

**1. சீரோ மலபார் திருச்சபை**

- திருத்தந்தையின் வழிகாட்டலை ஏற்று இலத்தீன் வழிபாட்டு முறைகளை ஏற்க மறுத்தவர்கள் ஒன்றிணைந்து சீரிய கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கினர். இச்சமூகமே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் **சீரோ மலபார் திருச்சபை** என்ற உத்தியோகபூர்வ பெயரைப் பெற்றுக் கொண்டது.
- இத்திருச்சபையானது கத்தோலிக்க திருச்சபையில் இருந்து கொண்டே தனித்தியங்கக் கூடிய சீரிய மரபாக உருவெடுத்தது.
- 1992இல் சட்டவாக்கம் நிறைவேற்றுதல், நீதிமன்ற பணிக்குரிய அனைத்தையும் கொண்ட முழு நிறைவான திருச்சபையாக உருவாக்கம் பெற்றது.
- இதன் தலைமைத்துவமானது கீழைத்தேய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் முறையை ஒத்ததாகவும், சங்க அமைப்பைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.
- இன்று அவர்கள் மத்தியில் மீண்டும் சீரிய வழிபாட்டு முறைகளுக்குள் நுழைய வேண்டுமென்ற கருத்துக்கள் வளர்ந்து வருகின்றன.
- இதுவே தோமையார் கிறிஸ்தவர்களின் சபைகளில் தனித்தியங்கும் மிகப் பெரிய சபையாக இருக்கிறது.

## 2. சீரோ மலங்கரா திருச்சபை

- திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொள்ள மறுத்து, சீரிய கிறிஸ்தவர்களின் தலைமையின் கீழ் தொடந்து இயங்கியவர்கள் ‘‘**யாகோபித்த சீரிய சபையினர்**’’ (Jacobites) என்று அழைக்கப்பட்டனர்.
- இவர்களுக்கு ஆயர்கள் அந்தியோக்கிய பிதாப்பிதாவினால் நியமிக்கப்பட்டு அங்கிருந்தே அனுப்பப்பட்டனர். பல ஆண்டுகளாக அவர்களுக்கென்று ஒரு ஆயர் இருக்கவில்லை. அது பல பிரச்சனைகளைக் கிளப்பியது.
- அருட்தந்தை ஜிவர்கீஸ் என்ற வைதிகக் குரு ‘‘கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்’’ என்ற பெயருடன் ஒரு துறவற சபையை ஆரம்பித்தார். இவர் 1920இல் மார் இவானிஸ் என்ற பெயருடன் ஓர் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- 1926இல் கூட்டப்பட்ட ஆயர் பேரவையின் தீர்மானத்திற்கு ஏற்ப, ஆயர் மார் இவானிசை ‘‘யாக்கோபித்த சீரிய சபையினரை’’ உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இணைப்பதற்கு பொறுப்பளிக்கப்பட்டது.
- அதன் பயனாக 1930இல் அதிக அளவிலான குருக்கள், இறைமக்களோடு கத்தோலிக்க திருச்சபையில் இணைந்து கொண்டனர். இச்சமூகத்தினரே **‘‘சீரோ மலங்கார திருச்சபையினர்’’** என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மேற்கு சீரிய மரபோடு தொடர்புடையவர்கள்.

## 3. இலத்தீன் திருச்சபை

- திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொண்டவர்கள் **‘‘இலத்தீன் திருச்சபையினர்’’** என அழைக்கப்பட்டனர்.
- இந்தியாவிலுள்ள அனைத்துத் திருச்சபைகளுள் ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்டு முழு இந்தியாவிலும் இயங்கும் தனிப்பெரும் திருச்சபை இதுவாகும். இன்று தொழில் நிமித்தம் இடம்பெறும் இடப்பெயர்வுகளால் இத்திருச்சபையின் மக்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.
- இதன் ‘‘**அமைப்பு முறையானது**’’ பங்கு என்று அழைக்கப்படுகின்றது. பங்கின் தலைவராக, அதன் ஆன்மீக வழிகாட்டியாக பங்குத்தந்தை செயற்படுவார். பல பங்குகள் ஒன்றிணைந்து ஒரு மறைமாவட்டத்தை உருவாக்குகின்றன. அதன் தலைவராக ஆயர் செயற்படுவார்.
- 1988 தொடக்கம் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் வழிகாட்டுதலின் கீழ் இந்திய இலத்தீன் திருச்சபைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இத்திருச்சபையின் **‘‘வழிபாட்டு முறையானது’’** மேலைத்தேய மரபு முறைகளைச் சார்ந்ததாகும். இவர்கள் வழிபாடுகளுக்கும் பக்தி முயற்சிகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.
- இவர்களின் திருவழிபாட்டில் திருப்பலி முக்கியத்துவம் பெறுவதுடன் புனிதர் வணக்கம், திருப்பயணங்கள் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.
- 2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து இந்திய இலத்தீன் திருச்சபையானது அதன் வழிபாட்டிலும் ஏனைய விடயங்களிலும் இந்திய பண்பாட்டு மயமாக்குவதில் கவனம் செலுத்துகிறது. இன்று இப்பணியானது இந்திய இறையியலிலும், குருக்கள், துறவிகளின் வாழ்க்கை முறையிலும் திருத்தூதுப்பணியிலும் தாக்கம் செலுத்துகிறது. மேலும் இந்திய நாட்டின் கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கும் பெரும் பங்காற்றி வருகிறது.
- இம்மூன்றினதும் (இலத்தீன் திருச்சபை, சீரோ மலபார், சீரோ மலங்கார) ஆரம்பம், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை நோக்கும் போது, அவை ஒன்றை ஒன்று பாதிக்காமல் தாமாகவே சுதந்திரமாக இயங்கி, கத்தோலிக்கத் திருச்சபையின் ஒற்றுமையைப் பேணி வளர்ப்பதைக் காணலாம்.

**வைதீக சீரிய திருச்சபைகள்**

- 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேய மறைபரப்பாளர் இந்தியா வந்தபோது அங்கு சீரிய திருச்சபையுடன் நெருங்கிய உறவு வைத்திருந்த, 'தோமையார் கிறிஸ்தவர்கள்' இருக்கக் கண்டனர்.
- எனவே, போர்த்துக்கேயர் தங்களுடைய "பத்ரோவாடோ"அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைத் திருத்தந்தையின் தலைமையின், வழிநடத்தலின் கீழ் வரும்படி அழைத்தனர்.
- பலர் அவ் அழைத்தலை ஏற்றுக்கொண்டனர். அவர்களே சீரோ மலபார் திருச்சபையினர் என்றும் சீரோ மலங்கரா திருச்சபையினர் என்றும் பார்த்தோம். ஆனால் அவ்வழைத்தலை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் ஒன்றிணைந்து, 1653இல் மட்டன்சேரி என்னும் இடத்தில் தமக்கு நிர்வாக சுதந்திரம் கேட்டு உண்டாக்கிய "**கூணன் சிலுவை ஆணை**" என்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து, பிரிந்து தனியே சென்று "**வைதீக சீரிய திருச்சபையை**" உருவாக்கினர்.
- பல ஆண்டுகளாக அவர்களுக்கென்று ஒரு தலைவர், ஆயர் இருக்கவில்லை. பல கீழைத்தேய சபைகளுக்கு உதவிக்காக விண்ணப்பித்தனர். ஆனால் எவரும் முன்வரவில்லை.
- இறுதியில் சீரிய அந்தியோக்கிய பிதாப்பிதா அவர்களுக்கு உதவ முன்வந்தார். அச்சபையானது 1912 வரைக்கும் அந்தியோக்கியப் பிதாப்பிதாவின் நேரடி அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தது.
- அதன் விளைவாக பல ஆண்டுகளாக பலவிதமான பிரச்சனைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டி இருந்தது. நீண்ட காலப் பிரச்சனையின் பின் 1912இல் அது இரண்டு சபைகளாகப் பிளவுபட்டது. அவையாவன:
  1. மலங்கார சீரிய வைதீக திருச்சபை (யாக்கோபித்தர்)
  2. மலங்கார வைதீக சீரிய திருச்சபை (கீழைத்தேய கத்தோலிக்கர்)
- இவர்களுக்கிடையிலான பிளவு இன்றும் தொடர்கிறது.

**1. மலங்கார சீரிய வைதீக திருச்சபை (யாக்கோபித்தர்)**

- இத்திருச்சபையானது அந்தியோக்கிய பிதாப்பிதாவின் கீழ் இயங்குகின்றது. அதன் உறுப்பினர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். இன்று இந்தியாவில் 1.4 மில்லியன் மக்கள் அங்கத்தவராகக் காணப்படுகின்றனர்.

**2. மலங்கார வைதீக சீரிய திருச்சபை (கீழைத்தேய கத்தோலிக்கர்)**

- திருச்சபையானது கீழைத்தேய கத்தோலிக்கரால் நிர்வகிக்கப்படுகிறது. அதன் செயற்பாடானது 1934இல் மேற்கொள்ளப்பட்ட சட்ட மன்றத்திற்கு ஏற்ப இயங்குகின்றது. அதனடிப்படையில் மலங்கார சீரிய கிறிஸ்தவ அமைப்பினால் அது வழிநடத்தப்படுகிறது. அவ் அமைப்பினால் தெரிவு செய்யப்படுகின்ற ஆயர் அதன் தலைவராக இருக்கின்றார். இன்று இந்தியாவில் இத்திருச்சபையில் இரு மறைமாவட்டங்களும் 2.6 மில்லியன் விசுவாசிகளும் காணப்படுகின்றனர்.

**மார் தோமையார் திருச்சபை**

- இத்திருச்சபையானது புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தத்தைத் தொடர்ந்து இந்தியா வந்தது. 1806ஆம் ஆண்டு பிரித்தானிய ஆளுநர் ஒரு அங்கிலிக்கன் குருவை இந்தியாவிலுள்ள பழமை வாய்ந்த தோமையாரின் ஆலயம் பற்றி ஆராய்ச்சி செய்ய அனுப்பினார்.
- கேரளம் வந்த அங்கிலிக்கன் மறைபரப்பாளருக்கும் தோமையார் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நல்லுறுவு ஏற்பட்டது.
- இதன் விளைவாக இருவரும் இணைந்து கோட்டயத்தில் ஒரு இறையியல் குருமடத்தைக் கட்டினர். ஆனால் அங்கிலிக்கன் மறைபரப்பாளர் தங்கள் புரட்டஸ்தாந்து பேதகங்களைக் குருமட மாணவர்கள் மேல் திணிக்கத் தொடங்கவே, மலங்கார திருச்சபையினர் அங்கிலிக்கன் சபையுடனான தங்கள் உறவை முறித்துக்கொண்டனர். இது இவர்களின் சபைக்குள்ளே பிளவுகளைக் கொணர்ந்தது.
- ஒரு சிறிய பிரிவினர், தங்கள் சபையை விட்டு விலகி, அங்கிலிக்கன் சபையுடன் முற்றுமுழுதாக இணைந்து கொண்டனர்.
- இன்னொரு பெரிய பிரிவினர், தங்களுக்கு ஒரு சீரமைப்பும் வேண்டாம் என்று கூறி பழைய மலங்கார வைதீகத் திருச்சபையில் தொடர்ந்து இருந்தனர்.
- மற்றொரு பிரிவினர், தங்கள் சபையின் வழிபாட்டிலும், வாழ்க்கையிலும் பெரிய சீரமைப்புக்களைப் புகுத்தத் தொடங்கினர். ஐம்பது ஆண்டுகளாக சபையினுள் இருந்து முரண்பாடுகளைத் தோற்றுவித்த அவர்கள், 1836இல் மலங்கார திருச்சபையில் இருந்து வெளியேறி **"மார் தோமா திருச்சபை**" என்ற பிறிதொரு சபையைத் தாபித்தனர். இன்று இச்சபையில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.
- ஜேர்மன் லூத்தரன் சபையே இந்தியாவிற்கு முதன்முதல் வருகைதந்த புரட்டஸ்தாந்து சீர்த்திருத்தச் சபையாகும். இவர்கள் 1706ம் ஆண்டு வருகை தந்தனர். அதனைத் தொடர்ந்து 18ம் 19ம் நூற்றாண்டில் ஏனைய பல புரட்டஸ்தாந்து திருச்சபைகள் இந்தியாவிற்குள் வருகை தந்தன. (அவையாவன அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்ற் திருச்சபை, பப்ரிஸ்ற் திருச்சபை, பிறெஸ்பிற்றேரியன் திருச்சபை, வட இந்தியத் திருச்சபை, தென் இந்தியத் திருச்சபை, இரட்சணிய சேனை, பெந்தகோஸ்தே திருச்சபை என்பனவாகும்).

### 9.1.2 சீனாவில் கிறிஸ்தவம்

- சீனாவில் கிறிஸ்தவம் 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் பரவியது.
- சீனாவில் மறைபோதகப் பணியில் முக்கிய இடத்தை வகித்தவர் இத்தாலியைச் சேர்ந்த இயேசு சபைக் குருவான மத்தேயு ரிச்சியாவார். இவர் கி.பி. 1552இல் பிறந்தார்.
- கி.பி. 1583இல் சீனாவில் மறைப்பணியை ஆற்றுவதற்காக சீன அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு கென்டன் பிரதேசத்திற்கு அருகில் வாழ்ந்து வந்தார்.
- அங்கு பழமையை ஆராய்ந்து அதன் உண்மையை விளக்கிக் கூறி, சீன மக்கள் கொன்பூசியசை இறைவனாக அல்ல, மாறாக ஒரு சிறப்பான அறிஞராக ஏற்றுக் கொள்ளச் செய்தார்.
- இவர் சீனப் பண்பாட்டை, கலாசாரத்தை மதிக்கும் ஒருவராகக் காணப்பட்டார்.
- சீன அறிஞர்களின் ஆடையை அணிந்து சீனப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார். சீன மொழியை நன்கு கற்று அதில் பாண்டியத்தியம் பெற்றார்.
- கணிதம், வானசாஸ்திரம், நில இயல், இசை, தத்துவ நூல்களை சீன மொழியில் எழுதினார்.
- சீன மொழியில் **"உண்மை இறைக்கோட்பாடு"** என்ற நூலை எழுதினார். அது சிறந்த சீன இலக்கியமாகக் கருதப்படுகின்றது.

- சீன தத்துவஞானி கொன்பூசியசின் தத்துவங்களை தமது மறைபோதகத்தில் பயன்படுத்தி, பழமை வாய்ந்த சீனக் கலாசாரத்தை மதித்து, அதன் சில முறைகளை தம் மறையின் ஒழுங்கு வழிபாட்டு முறைகளுடன் சேர்த்துக் கொண்டார்.
- உலகப்படைப்பு பற்றிய சீனரின் புராதன கதைகளைப் பயன்படுத்தி விவிலியத்திலுள்ள படைப்பு கதைகளுக்கு விளக்கமளித்துள்ளார்.
- கி.பி. 1610இல் 6000ற்கும் மேற்பட்ட சீனர்கள் கத்தோலிக்க மதத்தை தழுவியிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

### 9.1.3 பிலிப்பைன்ஸில் கிறிஸ்தவம்

- 1521இல் ஸ்பானிய மாலுமிகள் பிலிப்பைன்சுக்குள் நுழையும்போது சூழு, மிந்தநாவோ போன்ற இஸ்லாமிய பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த பிலிப்பைன்ஸ் சமூகங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட, நிர்வாகமற்ற, சுதந்திரமான மிகச் சிறிய தனித் தனிக் கிராமங்களாக இருந்தன.
- அவர்களுக்கு என்று மூதாதையர் வழிபாடு காணப்பட்டது. ஒழுங்கமைக்கப்பட்ட மதப் பாரம்பரியங்கள் எதுவும் காணப்படவில்லை.
- எனவே, பெரும்பாலானோரை ஸ்பானிய மறைபரப்பாளர்கள் எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவாக கத்தோலிக்கராக மனந்திரும்பக் கூடியதாக இருந்தது. ஆனால் ஸ்பானிய மறைப்பரப்பாளர்கள் முஸ்லிம்களை மனம் திருப்புவதில் வெற்றி காணவில்லை. அதற்கு முக்கிய காரணம் **ஸ்பெயின் நாட்டு மதக்கலாசாரத்தின் தாக்கமாகும்.**
- அதாவது ஸ்பானிய மறைபரப்பாளர்கள் பயன்படுத்திய ஆடம்பரக் கொண்டாட்டங்களும், குருக்களின் உடைகளும், சுரூபங்களும், செபங்களும், வழிபாடுகளும் மக்களைக் கவர்ந்தன. சிறிய சிறிய தனிக் கிராமங்களாக இருந்தவர்களை ஒன்றுகூட்டிக் கிறிஸ்தவ நகரங்களில் குடியேற்றினர்.
- நகரங்களில் அமைக்கப்பட்ட தேவாலயங்களில் பாவமன்னிப்பு வழிபாடுகளும், திருமுழுக்குச் சடங்குகளும், இறந்தோரை அடக்கம் செய்யும் சடங்குகளும் நடைபெற்றன.
- 1898இல் ஸ்பானியரின் காலனித்துவ ஆட்சி முடிவடைந்த போது முழு நாடுமே கிறிஸ்தவ மயமாகவிருந்தது.
- அக்காலத்திலே கிறிஸ்தவ துறவிகளுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிலிப்பைன்ஸ் நாடு அமெரிக்கரின் ஆட்சியின் கீழ் வந்தது.
- இதன் விளைவாக மட்டுப்படுத்தப்பட்ட கல்வியறிவு அனைவருக்கும் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக பல பாடசாலைகளும், கல்லூரிகளும் அமைக்கப்பட்டன. அதற்கெனப் பல ஆசிரியர்கள் அமெரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் புரட்டஸ்தாந்து மதத்தினராகக் காணப்பட்டனர்.
- அவர்களில் சிலர் கத்தோலிக்க மதத்திற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி, மாணவர்கள் மத்தியில் அதன் மட்டில் வெறுப்பை வளர்த்தனர்.
- திருச்சபையும் அரசும் வேறாக்கப்பட்டது. ஜனநாயகம் சுதந்திரம் போன்ற கருத்துக்களே முதன்மை பெற்றன. சமயச் சார்பற்ற கல்வி முறையானது விசுவாச வாழ்வில் அறியாமையைத் தோற்றுவித்தது.
- 1912 – 1941ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கத்தோலிக்கத் திருச்சபையில் ஏற்பட்ட பிளவின் காரணமாக அங்கிலிக்கன் திருச்சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இன்று பிலிப்பைன்ஸ் திருச்சபையில் ஜெகோவாவின் சாட்சிகள், செவன்டே அட்வென்றிஸ்ற் போன்ற பல சிறிய அடிப்படைப் பிரிவினைச் சபைகளும் காணப்படுகின்றன.
- கிழக்காசியாவிலே கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு பிலிப்பைன்ஸ் ஆகும். அங்கு 90% கிறிஸ்தவர்களாகவும், 5% இஸ்லாமியராகவும், மற்ற 5% ஏனைய மதத்தினராகவும் உள்ளனர்.

### 9.1.4 ஜப்பானில் கிறிஸ்தவம்

- 16ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திலே அதாவது போர்த்துக்கேயரின் வருகையுடன் ஜப்பானுக்குள் கிறிஸ்தவம் கொண்டு வரப்பட்டது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது.
- எனினும் அண்மைக்கால சில வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கிறிஸ்தவமானது அதற்குப் பல நூற்றாண்டுக்கு முன்னதாகவே ஜப்பானில் காணப்பட்டதாகக் கூறுகின்றனர்.

  **ஆதாரம்** :-

  1. நாரா நகரத்திற்கு அருகாமையிலுள்ள கியோற்றா என்ற இடத்திலுள்ள ஒரு புத்த விகாரையில் கண்டெடுக்கப்பட்ட பழைய சீனமொழியில் எழுதப்பட்டிருக்கும் புனித மத்தேயு எழுதிய நற்செய்தியையும், மலைப்பொழிவின் விளக்கங்களையும் குறிப்பிடுவர்.
  2. அக்காலத்தில் அதிகமான புத்த விகாரைகள், அழிக்கப்பட்ட பழைய கிறிஸ்தவ ஆலயங்களின் மேலேயே கட்டப்பட்டன.
  3. ஜப்பானிய ஆராய்சியாளர்களின் கருத்துப்படி நெஸ்தோரிய கிறிஸ்தவ பிரிவினைச் சபையினரே 5ஆம் நூற்றாண்டளவில் முதன் முறையாகக் கிறிஸ்தவத்தை ஜப்பானுக்குள் கொண்டு வந்துள்ளனர். அக்காலத்தில் கிறிஸ்தவமானது **"ஒளி வீசும் மதம்"** என அழைக்கப்பட்டது.

- ஜப்பானில் முதன்முதலில் கிறிஸ்தவத்தைப் போதிக்க வந்த மறைப்பரப்பாளர்கள், இயேசு சபையைச் சார்ந்த Nihal Abeyasingha, **History of chirsitianit**y , S.Godage & Brothers ( Pvt) Ltd Colombo10 புனித பிரான்சிஸ்கு சவேரியார், கொஸ்மே தெ ரொறெஸ், யோன் பேர்னான்டஸ் என்ற குருக்களாவர்.
- இயேசு சபை மறைப்பரப்பாளர்கள் நாகசாக்கி நகரத்தை தம் பணித்தளத்தின் மையமாகக் கொண்டனர். அவர்கள் வெகு விரைவில் மக்களின் நல்லாதரவைப் பெற்று பெரும் எண்ணிக்கையிலான மக்களை மனந்திருப்பித் திருச்சபையில் சேர்த்தனர்.
- 1601இல் நாகசாக்கி நகரில் இருந்த அனைத்து மக்களுமே கத்தோலிக்கராயினர். இம் முன்னேற்றம் நீண்ட காலம் நீடிக்கவில்லை.
- மன்னர் ஒடா நொவுநகாவின் (Novunaza) ஆட்சியின் கீழ் அரச ஆதரவைப் பெற்ற இயேசு சபையினர், ஆட்சி மாற்றத்தின் பின்னர் மன்னர் ரொயோரோமி கிடேயோசியின் சந்தேகத்திற்கு ஆளாகினர்.
- மன்னர் தைக்கோசாமா ஆட்சியின் கீழ், 1587இல் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வேத கலாபனை ஆரம்பமாகி 50 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது.
- 1597இல் 26 ஜப்பானியக் கத்தோலிக்க மறைபோதகர்களும் விசுவாசிகளும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு, நாகசாக்கியிலுள்ள ஒரு மலையில் சிலுவையில் அறையப்பட்டு மறைசாட்சிகளாகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர்.
- 1612 இல் கிறிஸ்தவ மதம் தடை செய்யப்பட்டது. இயேசு சபையின் மறைபோதகக் குருக்கள் நாட்டில் இருந்து விரட்டப்பட்டனர். கிறிஸ்தவர்கள் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இந்நிகழ்வுகளுக்கு உட்பட்டவர்கள் ''சவேரியார் மறைசாட்சிகள்'' என அழைக்கப்பட்டனர்.
- எஞ்சிய கிறிஸ்தவர்கள் தம் மதத்தைப் பகிரங்கமாக மறுதலிக்க வற்புறுத்தப்பட்டனர். இதனால் அவர்கள் ஒழிந்து மறைந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.
- பெரும் துன்பகரமான ஒரு நிகழ்வும் இடம்பெற்றது. அதாவது ஜப்பானுக்குள் வரும் வணிகரோ, அயல் நாட்டினரோ தன் காலின் கீழ் ஒரு திருச்சிலுவையைப் போட்டு மிதிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். எனினும், கிறிஸ்தவ மதத்தை அவர்களால் முற்றாக அழிக்க முடியவில்லை.
- 1861இல் புரட்டஸ்தாந்து சபையினர் ஜப்பானுக்கு வருகை தந்ததன் விளைவாக ஜப்பானிய மொழியில் புரட்டஸ்தாந்து நற்செய்தி நூல் மொழிபெயர்க்கப்பட்டது.

- 1871இல் ஜப்பானில் மதச்சுதந்திரம் அறிமுகம் செய்யப்பட்டு எல்லா மதத்தினரும் சட்ட பூர்வமாக ஜப்பானில் தங்கவும், தங்கள் மதங்களைப் போதிக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. (200 ஆண்டுகளுக்குப் பின்னர் கிறிஸ்தவ மறைபோதகர்கள் மீண்டும் அங்கு செல்ல முடிந்தது).
- கிறிஸ்தவப் போதகர்கள் திரும்பவும் நாகசாக்கி நகரத்திற்குச் சென்று கிறிஸ்தவ ஆலயங்களை நிறுவி அங்கு மறைபரப்பாளர்களை நியமித்தார்கள்.
- கிறிஸ்தவ மறைபரப்பாளர் கல்வித்துறையில் பெரும் பங்காற்றினர். உயர்ந்த கல்வித்திட்டத்தைத் தயாரித்து அமுல் செய்தனர். தொழில்நுட்பம் தொடர்பான கல்வியையும் அளித்தனர்.
- இவர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் பிற்காலத்தில் ஜப்பானிலுள்ள பெரிய உயர்தரப் பாடசாலைகளாகப் பிரசித்தி பெற்று மிக உயர்ந்த பல்கலைக்கழகங்களாக வளர்ந்தன.
- 1937இல் ஜப்பானிய வேதாகமச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### 9.1.5 இலங்கையில் கிறிஸ்தவம்

- இலங்கையில் கிறிஸ்தவ வரலாற்றை நாம் 5 முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம்.
  1. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்
  2. போர்த்துக்கேயர் காலம் - (1505 – 1658)
  3. ஒல்லாந்தர் காலம் - (1658 – 1796)
  4. ஆங்கிலேயர் காலம் - (1796 – 1948)
  5. சுதந்திரத்திற்குப் பின்
- பொதுவாகப் போர்த்துக்கேயரின் வருகையுடனேயே அதாவது (16ஆம் நூற்றாண்டுடன்தான் இலங்கைக் கிறிஸ்தவத்தின் வரலாறு ஆரம்பமாகிறது எனக் கொள்வர்).
- அதனால் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவம் இருக்கவில்லை என நாம் முடிவு செய்துவிட முடியாது.
- போர்த்துக்கேயரின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் எனக் கூறும் பல ஆதாரங்களுடனான சான்றுகளும் உள்ளன.

#### 9.1.5.1 போர்த்துக்கேயரின் வருகைக்கு முன், இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான ஆவணச் சான்றுகளும் அகழ்வாராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும்

- கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஒரு கிறிஸ்தவ சமூகம் இருந்தமைக்கான சான்றுகளும் ஆதாரங்களும் உள்ளன.
  - i. இவ்வஷாப் அபுசாயிப், பென்சமின் ரபாய் போன்ற வெளிநாட்டு எழுத்தாளர்கள் அனுராதபுரக் காலத்தில் இலங்கையில் யூதேயக் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்குச் சான்று பகர்கின்றனர்.
  - ii. இந்திய கப்பலோட்டி என அழைக்கப்படும் கொஸ்மஸ் இன்டிக்கோ பிளிஸ்டஸ் என்ற கிரேக்க வர்த்தகப் பயணி கி.பி 535 இல் எழுதிய **“கிறிஸ்தவ சபைகளின் விவரணம்”** என்ற நூலில் இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தது என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். “இந்தியாவிற்கு அப்பாலுள்ள தீவாகிய தப்றபேனிலும் (கிரேக்கர் இலங்கையை அழைத்த பெயர்) குருக்கள் விசுவாசிகளுடன் கூடிய ஒரு திருச்சபையும் இருந்தது.... அத்தீவில் அங்கே குடியேறியிருந்த பாரசீக கிறிஸ்தவர்களின் ஆலயமொன்றும், பாரசீகக் குரு ஒருவரும், ஒரு திருத்தொண்டரும் இருக்கின்றனர்.”
  - iii. 5ஆம் நூற்றாண்டில் இலங்கை பற்றிய வரலாற்று தகவல்களை தருகின்ற மகாவம்சம் என்ற நூலில் சிங்கள அரசர்களின் படையில் மைகார” என்ற ஒரு இந்தியக் கிறிஸ்தவர் படைத்தளபதியாகக் கடமையாற்றியதும் சான்றாக அமைகிறது.

iv. 1912இல் இடம்பெற்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட அனுராதபுரக் காலத்தைச் சேர்ந்த கட்டிடச் சிதைவுகளும், கருங்கல்லில் செதுக்கப்பட்ட பாரசீக நெஸ்தோரிய சிலுவையும் ஆதாரத்துடன் உறுதி செய்கின்றன.

v. 1972 இல் பேராசிரியர் செனரத் பரணவிதாரண என்பவரது ஆய்வின்படி காசியப்பர், மொகல்லான என்ற அரசர்களின் காலத்தில் கிறிஸ்தவப் படைவீரர்கள் இலங்கையில் இருந்திருக்கின்றனர் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

vi. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சிகிரியா கால அரச சபையில் நான்கு கிறிஸ்தவ அமைச்சர்கள் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.

vii. வவுனியா தொல்பொருள் நிலையத்தில் கல்லினால் ஆக்கப்பட்டிருக்கும் திருமுழுக்கு நீர் பாத்திரம் ஒன்று உள்ளது. இப்பாத்திரம் ஒரே கல்லினால் செய்யப்பட்டிருக்கின்றது. இப்பாத்திரத்தினைப் பார்க்கும் போது அனேக மக்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கிறார்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

- புனித தோமா வழியாக இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவமானது எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை ஆராய்க.

- சீரோ மலபார் திருச்சபை, சீரோ மலங்கரா திருச்சபை, இலத்தீன் திருச்சபை என்பவற்றின் தோற்றத்தை பற்றிய கலந்துரையாடலை நடத்துக.

- கிறிஸ்தவ சீர்திருத்தத்தின் பின்னர் திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாகக் கீழைத்தேய நாடுகளில் ஆற்றிரப்பட்ட மறைபணியை ஆழமாக அறிந்து கொள்க.

**தேர்ச்சி 9.0 :** ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்ற வரலாற்றைக் கற்பதனூடாகச் சமய, சமூக, கலாசார மேம்பாட்டிற்குத் தம்மை அர்ப்பணிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 9.2 :** ஐரோப்பியரின் வருகையினால் இலங்கையில் கிறிஸ்தவம் வளர்ந்த வரலாற்றை அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்ட முறை பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலக் கல்வி, கலைப் பணிகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வார்.
- குழுச்செயற்பாடுகளில் அர்ப்பணிப்போடு ஈடுபடுவார்.

**விடய உள்ளடக்கம் :**

## 9.2 போர்த்துக்கேயர் காலத் திருச்சபை (1505-1658)

### 9.2.1 போர்த்துக்கேயர் வருகைக்கான காரணங்கள்.

- கீழைத்தேச வர்த்தகத்தில் ஆதாயத்தையும், ஏகபோக உரிமைகளை அராபியரிடமிருந்து முற்றிலும் கைப்பற்றித் தமதாக்கிக் கொள்ளல்.
- பொருளாதார ரீதியாக இலாபம் பெறுதல்.
- கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
- தமது ஆட்சியைப் பல்வேறு நாடுகளில் விஸ்தரித்தல்.

#### 9.2.1.1 போர்த்துக்கேயரின் இலங்கை வருகை (1505)

**அரசியல் பின்னணி:-**

- போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது இலங்கை கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, கோட்டை அரசே தலைமைத்தானத்தில் இருந்தது.

| அரசு | அரசன் | தலை நகர் |
|---|---|---|
| கோட்டை (1489-1513) | 9ஆம் தர்மபராக்கிரமபாகு | (ஜயவர்த்தனபுர) கோட்டை |
| கண்டி (1469-1511) | சேனா சம்பத் | கண்டி |
| யாழ்ப்பாணம் (1478-1519) | பரராஜ சேகரன் | நல்லூர் |

- 1521ஆம் ஆண்டு நடைபெற்ற விஜயபாகு கொலையினால் கோட்டை மூன்று பிரிவுகளாகப் பிளவுண்டு காணப்பட்டமையால் போர்த்துக்கேயர் தம் ஆதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்ட இலகுவாக இருந்தது.

| அரசு | அரசன் |
|---|---|
| கோட்டை | 7ஆம் புவனேகபாகு |
| றைகம | பரராஜசிங்க |
| சீதாவாக்கை | மாயாதுன்ன |

**சமயப் பின்னணி :**

- இலங்கையில் தென்பகுதியில் பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு காணப்பட்டது. பௌத்த சமயத்தைப் பின்பற்றிய மக்களே அதிகமாகக் காணப்பட்டனர். பௌத்த விகாரைகளே கிராமங்களின் மையங்களாகக் காணப்பட்டன. பௌத்த பிக்குகள் மிகுந்த செல்வாக்குடனும், மதிப்புடனும் போற்றப்பட்டனர்.
- விகாரைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஏராளமாய்க் காணப்பட்டன. அவற்றிலிருந்து பெருமளவு வருமானம் பெறப்பட்டது. போர்த்துக்கேயர் வந்தபின் பல விகாரைகள் அழிக்கப்பட்டு அவை பெற்ற வருமானங்களும் நிறுத்தப்பட்டன. இதே நிலை யாழ்ப்பாண அரசிலும் நிலவியது.
- தமிழ் பேசும் மக்கள் இந்து சமயத்தை பின்பற்றுபவர்களாகக் காணப்பட்டனர். இக்காலத்தில் பல இந்து பிராமணக் குருக்கள் இலங்கையை விட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். பல இந்து ஆலயங்களில் வழிபாடுகள், சடங்குகள் நடாத்துவதற்கு இந்துக் குருக்கள் இல்லாத நிலை காணப்பட்டது. இவ்வாறு சுதேச சமயங்கள் படிப்படியாக வலுவிழந்து காணப்பட்டன.
- உள்நாட்டுக் குழப்பங்களில் இருந்து பாதுகாப்பையும், தம் அரச பதவிகளைத் தக்க வைக்கவும் பல அரசர்களும், அரச அதிகாரிகளும் போர்த்துக்கேயரின் உதவியை நாடி பௌத்த மதத்தைக் கைவிட்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். இதனால் பல பௌத்த மக்களும் அரச உயர் அதிகாரிகளைப் பின்பற்றி தம் மதத்தை மாற்றிக்கொண்டனர். போர்த்துக்கேயர் ஏனைய சமயங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டாமையினால் சுதேச சமயங்கள் வீழ்ச்சியடைந்தன.
- வீழ்ச்சியுற்ற பௌத்த சமயத்தை மீண்டும் கட்டியெழுப்ப கோணப்பு பண்டார (டொன் ஜுவான்) கத்தோலிக்க சமயத்தைக் கைவிட்டு 1ஆம் விமலதர்மசூரிய என்ற பௌத்த நாமத்தை சூடிக்கொண்டு பௌத்த சமயத்தைத் தழுவி ஆட்சிப்பீடமேறினான்.
- சீதாவாக்கையின் தெல்கம விகாரையில் இருந்து புனித தந்தத்தைக் (பற்சின்னத்தை) கண்டியில் பிரதிஷ்டை செய்தான்.
- மேலும், பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து, உபசம்பதா வைபவத்தை மேற்கொண்டான்.
- மேலும், பழைய விகாரைகளைப் புனரமைப்பு செய்து வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த மதத்தை எழுச்சியுறச் செய்தான்.

### 9.2.1.2 போர்த்துக்கேயர் கால மறைபரப்பாளர்கள்

**போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் ஆற்றிய பணி**

- 1505இல் டொன் லோறென்சோ டி அல்மெய்டாவுடன் இலங்கை வந்த முதல் மறைபரப்பாளர் அருட்திரு பிறே வின்சென்ரே அடிகளாவார். இவரே கொழும்பு துறைமுகத்தில் கட்டப்பட்ட புனித லோறன்ஸ் சிற்றாலயத்தில் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.
- 1543இல் கோட்டை அரசனான 7ஆம் புவனேகபாகு தம் அரசில் கிறிஸ்தவத்தைப் போதிக்க சில குருமாரை அனுப்பும்படி மன்னன் டொன் யுவானிடம் விண்ணப்பித்ததையடுத்தே பின்வரும் துறவற குழுக்கள் தம் பணியை ஆரம்பித்தனர்.

**பிரான்சிஸ்கன் மறைபரப்பாளரது பணிகள்**

- புவனேகபாகுவின் மரணத்தையடுத்து அவரது பேரன் தர்மபால மகா பண்டார கோட்டை அரசனானார். அவர் 1556இல் பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த யுவான் விலா கொன்தே அடிகளாரின் கரங்களினால் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவியதைத் தொடர்ந்து நற்செய்திப் போதனை தடையின்றி அரசு முழுவதும் மிகத் துரிதமாகப் பரவியது.
- மடங்கள், கல்லூரிகள், ஆலயங்கள் கட்டுவதற்கான நிலபுலன்கள், நிதியுதவிகள் தாராளமாக அரசனால் கொடுக்கப்பட்டது.
- கொழும்பு படிப்படியாக ஒரு கிறிஸ்தவப் பட்டணமாக மாறியது. பல பங்குகளும், பக்தி சபைகளும், துறவற மடங்களும் ஆரம்பிக்கப்பட்டன.
- 1597இல் டொன் யுவான் தர்மபாலா இறந்தபோது கோட்டை அரசில் பெரும்பாலான கத்தோலிக்கரும், தேவாலயங்களும் இருந்ததெனக் கூறப்படுகிறது. இவையெல்லாம் பிரான்ஸிஸ்கன் சபையினரின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்புள்ள பணியின் பயன்களுமாகும்.

**இயேசு சபையினரின் பணிகள்**

- இவ்வாறு கத்தோலிக்கத் திருச்சபை வளர்ச்சியடைந்து வந்த வேளை பிரான்சிஸ்கன் சபையினர் வேறு சபைகளில் இருந்தும் மறைபரப்பாளர்களை உதவிக்கு வரவழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
- 1602ஆம் ஆண்டு அருட்திரு தயோ கோ டா குன்கவின் தலைமையில் இயேசு சபையினர் நால்வர் இலங்கைக்கு வந்தனர். மஹா ஓயாவிற்கு வடக்கேயுள்ள பிரதேசங்களை இவர்களிடம் ஒப்படைத்தனர்.
- திருமலை, மட்டுநகர், யாழ்ப்பாணம் வரையான வட பகுதி இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.
- இயேசு சபையினர் கொழும்பில் ஒரு கல்லூரி கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் துறவற இல்லங்களை அமைத்து அப்பிரதேச மக்களுக்கு சேவையாற்றினர். ஒவ்வொரு துறவற இல்லத்திற்கும் அருகே ஆலயங்கள் கட்டப்பட்டன.
- கம்மல், சிலாபம், கற்பிட்டி, மாதம்பே போன்ற இடங்களில் பங்குகள் அமைக்கப்பட்டன. மொறட்டுவ, வலிகம்பிட்டி, உடுகம்பொல போன்ற இடங்களில் இயேசு சபை இல்லங்கள் அமைக்கப்பட்டன.
- மூன்று பெரிய ஆலயங்களும் சிற்றாலயங்கள் சிலவும் இரண்டு வைத்தியசாலைகளும் அமைக்கப்பட்டன.
- 1643இல் இயேசு சபையினர் மன்னாரில் எட்டுத் தேவாலயங்களைக் கட்டிப் பணிபுரிந்தனர்.
- சிலர் சுதேச மொழியினைக்கற்று நூல்களை மொழி பெயர்த்து கிறிஸ்தவ மறை வளர்ச்சிக்குப் பெரிதும் சேவையாற்றினர்.

**டொமினிக்கன் சபையினரின் பணிகள்**

- கி.பி. 1605ஆம் ஆண்டு டொமினிக்கன் சபை மறைபரப்பாளர் இலங்கைக்கு வந்தனர். அவர்களுக்கு மறையைப் பரப்ப சப்ரகமுவ பிரதேசம் கிடைத்தது. இச்சபையினர் கொழும்பு செபமாலை மாதா ஆலயத்தை அமைத்தனர்.
- மேலும், இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சப்ரகமுவ பிரதேசத்தில் 12 ஆலயங்களும் காலியில் இரு ஆலயங்களும் அமைத்து மகத்தான மறைப்பணி ஆற்றினர்.

**அகுஸ்தீன் சபையினரின் பணிகள்**

- கி.பி 1606ஆம் ஆண்டு அகுஸ்தீன் சபையினர் இலங்கைக்கு வருகை தந்தனர்.
- பார்தோலமே சம்பாயோ, இக்னாசியுஸ் கொன்ஸ்தந்தினு த கா போன்ற அகுஸ்தீனார் சபை அருட்தந்தையர் இந் நாட்டில் மகத்தான சேவையாற்றியுள்ளனர். இவர்களால் அத்தனகல்ல, மாபிடிகம, வலிவேரி, நாரஹென்பிட்டி போன்ற ஆலயங்கள் கட்டப்பட்டன.

#### 9.2.1.3 மன்னார் மறைசாட்சிகள்

- போர்த்துக்கேயர் காலத்தில் மன்னார், யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது.
- யாழ்ப்பாண அரசைப் (சங்கிலியன்) பரராசசேகரன் ஆண்டு வந்தான். மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியதை கேள்விப்பட்ட இந்துக் குருக்கள் கோட்டை அரசு போன்று யாழ்ப்பாண அரசும் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படும் என்றும், இந்து ஆலயங்கள் அழிபடுமெனவும் பிரச்சாரம் செய்தனர்.
- மேலும் மன்னார் கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண அரசை விடுத்து போர்த்துக்கேய அரசை ஆதரிப்பார்கள் என்ற தப்பான கருத்துக்களையும் பரப்பினர்.
- இச்செய்தியை அறிந்த சங்கிலியன் கோபமும் பயமும் கொண்டு, படைவீரர்களைத் திரட்டி, அவர்களுக்குத் தானே தலைமை தாங்கி மன்னாருக்குச் சென்றார். கிறிஸ்தவர்களை கிறிஸ்தவத்தைக் கைவிட்டு இந்துக்களாக வரும்படி கட்டளையிட்டார். அப்படி வரத்தவறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என எச்சரித்தார்.
- மன்னார் மக்கள் தம் விசுவாசத்தில் உறுதியான நிலையில் இருந்தனர். எனவே அரசர் சங்கிலியனின் கட்டளைப்படி யுவான் டி லிஸானோ அடிகளாருடன் ஏறக்குறைய பெண்கள் குழந்தைகள் உட்பட 700 பேர் 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் தோட்டவெளி எனும் இடத்தில் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவர்களையே நாம் மன்னார் மறைசாட்சிகள் என்கிறோம்.
- மன்னார் கிறிஸ்தவர்கள் சிந்திய இரத்தம் திருச்சபையின் வித்தாக மாறியது. இச்செய்தியைக் கேள்வியுற்று கொழும்பில் அரசன் தர்மபாலாவும், பெருந்தொகை மக்களும் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

#### 9.2.1.4 போர்த்துக்கேயர் காலத்தில் கல்விப்பணி

- பாடசாலைகளை நிறுவி கல்வி வழங்கும் அதிகாரம் போர்த்துக்கேயருக்கு வழங்கப்பட்டது. எனவே போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் மதப்பரப்புதலுக்குக் கல்வியை ஒரு காத்திரமான ஊடகமாகப் பயன்படுத்த விரும்பினர்.
- கல்வித்துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்த துறவற சபைகளான பிரான்சிஸ்கன், இயேசுசபை, டொமினிக்கன், அகுஸ்தின் ஆகிய சபையினர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக செயற்பட்டதன் காரணமாக கல்விக் கூடங்கள் சமய அறிவையும் வழிகாட்டல்களையும் வழங்கின. இக்காலத்திலேயே மேற்கத்திய கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டது. இது இலங்கைக் கல்வி வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம்.

**பிரான்சிஸ்கன் சபையினரின் கல்விப் பணி**

- பிரான்சிஸ்கன் சபையினர் கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் மூன்று வகையான பாடசாலைகளை நிறுவினர்.

**1. கோவில் பற்று பாடசாலைகள்.**

- ஒரு பங்கிற்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் அமைத்தனர். இங்கு செபம் செய்தல், மறையறிவு பற்றிய வினா விடை முறைகள், சுதேச மொழிகளில் நடாத்தப்பட்டன.
- போர்த்துக்கேயக் குருமாரால் எழுத்து, வாசிப்பு, போர்த்துக்கேயப் பண்பாடு, கத்தோலிக்க நெறி, கத்தோலிக்கச் சமய கீதங்கள் போன்றன கற்றுக் கொடுக்கப்பட்டன.

**2. உயர் கல்லூரிகள்**

- இங்கு உயர் நிலை கல்விமுறை கடைப்பிடிக்கப்பட்டது. ஐரோப்பிய கல்வி முறையை ஒத்ததாகக் காணப்பட்டது.
- இக் கல்லூரி முறை கல்வி சமய சார்புடையதாகவும், மதகுருக்களாக வர விரும்புவோருக்கும் அளிக்கப்பட்டது.
- இவை போர்த்துக்கேய மொழியிலேயே இயங்கி வந்தன. சமயம், வேதசட்டம், வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், சங்கீதம், இலத்தீன், நற்பழக்கங்கள் ஆகியன போதிக்கப்பட்டன.

### 3. அரசர்களுக்கான கல்விக்கூடம்

- போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது அவர்களிடம் சரணடைந்த அல்லது கல்வி பயிலுவதற்காக அரசர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட அரசர்கள், இளவரசர்கள் இங்கு கல்வி பயின்றனர்.
- போர்த்துக்கேய மொழியிலேயே இவை இயங்கி வந்தன.
- எழுத்து, வாசிப்பு, இலத்தீன், அரசர்களுக்கான கலை போன்றவை இங்கு கற்பிக்கப்பட்டன.

### இயேசு சபையினரின் கல்விப்பணி

- இயேசு சபையினர் மூன்று வகையான கல்வி நிலையங்களை அமைத்துப் பணிபுரிந்தனர். அவையாவன: ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை என மூன்று பிரிவுகளாகக் காணப்பட்டன.

### 1. ஆரம்பப் பாடசாலைகள்

- இங்கு காலையிலும், மாலையிலும் சிங்களத்திலும், தமிழிலும் மறைக்கல்வி அளிக்கப்பட்டது.

  மனப்பாடம் செய்தல், வினா-விடை முறையும் பின்பற்றப்பட்டது. பொதுவாக வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் செபங்கள், பாடல்கள் கற்பிக்கப்பட்டன.
- இப்பாடசாலைகளில் நெடுங்கணக்கு, வாசிப்பு, எழுத்து, பாட்டு, நற்பழக்கவழக்கங்கள், கிறிஸ்தவக் கோட்பாடுகள் என்பனவும் கற்பிக்கப்பட்டன.
- இலத்தீன் மொழியில் வழிபாடும், தமிழ் சிங்கள மொழிகளில் சமய போதனைகளும், போர்த்துக்கேய மொழியில் எழுத்தறிவும் கற்பிக்கப்பட்டன.

### 2. இடைநிலைப் பாடசாலைகள்

- ஆரம்ப நிலைப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட முறையே இங்கும் பயன்படுத்தப்பட்டது.

### 3. உயர்நிலைப் பாடசாலை

- உயர்நிலைப் பாடசாலைகளில் இறையியல் கற்பிக்கப்பட்டது. இங்கு முதிர்ச்சி பெற்ற மாணவர்கள், மதக் குருக்களாக வரவிருக்கும் பிள்ளைகள், சிங்கள பிரமுகர்களின் பிள்ளைகள் மற்றும் சாதாரண குடும்பத்துப் பிள்ளைகளுக்கும் இடம் அளிக்கப்பட்டது.

## 9.2.1.5 போர்த்துக்கேயர் கால கலைப்பணி

- ‘கலை’ என்பது மனிதன் தன் உள்ளார்ந்த சிந்தனைகளை, எண்ணங்களை, உள்ளக் குமுறல்களை, உள்ளுணர்வுகளை, புலன்களால் காணக்கூடிய, கேட்கக்கூடிய, அறியக் கூடிய முறையில் வெளிப்படுத்த எடுக்கும் முயற்சியைக் குறிக்கிறது.
- அது இலக்கியம், இசை, சங்கீதம், நடனம், சித்திரம், ஓவியம், சிற்பம், கட்டிட அமைப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.
- கலையின் உருவாக்கத்தில் சமயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் கிறிஸ்தவ சமயம் கலை வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு செய்துள்ளது எனலாம்.
- மேலைத் தேசத்தவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமையினால் மேலைத்தேசக் கலை வெளிப்பாட்டு அம்சங்களான:

  1. இலக்கியக்கலை
  2. சித்திரக்கலை
  3. சிற்பக்கலை
  4. கட்டிடக்கலை
  5. நாடகக்கலை
  6. சங்கீதக்கலை என்பன இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

#### 9.2.1.5.1 போர்த்துக்கேயர் கால இலக்கியக் கலை

| இலக்கிய வகை | நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| சிங்கள கிறிஸ்தவ இலக்கியங்கள் | சிங்கள இலக்கண நூல் Ars chingalensis linguae | அருட்பணி எம்மானுவேல் கொஸ்தா (யே.ச) |
| | சிங்கள இலக்கண நூல் Artu E Grammatica de linquwa chingala | அருட்பணி பியரேபேகு (யே.ச) |
| | 26 புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, மறைக்கல்வி நூல், கிறிஸ்துவின் பாடுகள் | அருட்பணி பேதோ பிரான்சிஸ்கோ (யே.ச) |
| | கவிதை, நாடகம் பாடல்கள் | பிரான்சிஸ்கன் சபை மறைபோதகர் அருட்பணி அந்தோனியோ பேக்ஷாவோ |
| | நற்செய்தி, சவுலின் திருமுகம் | தொன் ஜெரோனிமோ (அழகிய வண்ணன் முகத்தல்) |
| தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் | சந்தியோகுமையோர் அம்மானை | தெல்லிப்பளை பேதுருப் புலவர் |
| | ஞானப்பள்ளு | தெல்லிப்பளை பேதுருப் புலவர் |

#### 9.2.1.5.2 போர்த்துக்கேயர் காலச் சித்திர, சிற்ப, கட்டிடக்கலை

- கல்லினால் ஆன போர்த்துக்கேயரின் சின்னம் 'இலாஞ்சனை', கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்குக் கீழ் உள்ள பிரதேசத்தில் (ஹேர்டன் தோட்டம்) அமைக்கப்பட்டுள்ளது.
- புனித அன்னாள் திரை: 1666ஆம் ஆண்டைச் சேர்ந்த நவகமுவ புனித அன்னம்மாள் ஆலயத் திரையில் உள்ள இச்சித்திரம் இன்று தேவத்தை அருங்காட்சியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- யாழ். சங்கானையில் உடைந்த ஒரு கிறிஸ்தவ ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கிளாலி சந்தியோகுமையோர் ஆலயம், தெல்லிப்பளை பேதுரு பவுலு ஆலயம், வட்டுக்கோட்டை CSI கத்திற்றல் என்பன இவற்றிற்குச் சான்றாக அமைகின்றன.

#### 9.2.1.5.3 போர்த்துக்கேயர் கால அரங்கியற் கலை (நாட்டிய, நாடகக்கலை)

- போர்த்துக்கேயர் காலத்தில், குறிப்பாக இயேசு சபைக் குருக்கள் மேலைநாட்டுப் பாணியிலான நாடகங்களை மேடையேற்றினர்.
- மத்திய காலத்தில் உருவாக்கப்பட்ட மறைஞான நாடகங்கள், அற்புத நாடகங்கள், ஒழுக்கம், பண்பு போன்ற நாடகங்களை தாம் அறிந்த ஸ்பானிய போர்த்துக்கேய மரபுகளுடன் இங்கு பயன்படுத்தியுள்ளனர்.
- மரபு ரீதியான கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்கள் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் ஆரம்பமாகி வளர்ச்சியடைந்துள்ளன. மன்னார் நானாட்டானைச் சேர்ந்த பெஞ்சமின் செல்வம் என்பவர் எழுதிய ''மன்னார் மாவட்ட தமிழ்ப் புலவர்கள் சரித்திரம்'' எனும் நூலில் மன்னார் மாதோட்டப் பகுதியைச் சேர்ந்த லோறன்சுப்பிள்ளை புலவரே முதன்முதலில் ''மூவிராசாக்கள் வாசாப்பு'' எனும் நாடகத்தைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இது தென்பாங்கில் பாடப்பட்டுள்ளது.
- மறைப்பணியாளர்கள் தமது சமய படிப்பினைகளைப் போதிப்பதற்காக நாடகத்துறையைப் பயன்படுத்தி, நாடகங்களை அரங்கேற்றுவதற்காக ஆலயங்களுக்கு அருகில் நாடக மேடைகளை அமைத்தார்கள். இவற்றிற்குப் பின்வருவன உதாரணங்களாகும்.

**போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் நாடகங்கள் மேடையேற்றிய சந்தர்ப்பங்கள்**

| ஆண்டு | இடம் | சந்தர்ப்பம் | நாடகம் |
|---|---|---|---|
| 1604 | கொழும்பு | இயேசு சபைக்கு சொந்தமான ஆலயப் பெருவிழாவின் போது | ''உடன்படிக்கையும் அன்னை மரியாளும்'' |
| 1613 | கம்மல்(ள) | சாதாரண மக்கள் பலர் கிறிஸ்தவத்தைத் தழுவிய போது | ''கிறிஸ்து பிறப்பு'' (கயமவிம) |
| 1617 | சிலாபம் | புதிதாகக் கட்டப்பட்ட ஆலயம் ஆசிர்வதிக்கப்பட்டபோது | ''பேரரசன் கொன்ஸ்ரன்ரைனின் மன மாற்றம்'' |
| 1636 | மாத்தறை | | இயேசு, ஆதாம், ஏவாள், ஆகியோரின் வாழ்க்கை வரலாறு |

### 9.2.1.6 போர்த்துக்கேயரின் வருகை இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம்

- மக்களிடையே காணப்பட்ட சாதி அமைப்பு முறைகள் குறைக்கப்பட்டன.
- திருமணங்கள் முறைப்படி பதியும் சட்டபூர்வமான முறை ஆரம்பிக்கப்பட்டது. இது ''தோம்பு முறை'' எனப்பட்டது.
- மேலைநாட்டு வைத்திய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- மக்களிடையே போர்த்துக்கேயமொழி பரவலாகப் பேசப்பட்டு வந்தது. இன்றும் பல போர்த்துக்கேய சொற்பதங்கள் பாவனையில் உள்ளன.

  உதாரணம்:- அலவாங்கு, சப்பாத்து, துவாய், விறாந்தை
- மேலும் போர்த்துக்கேய உணவுப் பழக்கவழக்கங்கள் (பாண், வைன், சலாது, அச்சாறு, பஸ்தோல்), பெயர்கள் (சில்வா, பெரேரா, மென்டீஸ், அல்மேதா, வாஸ்), இசை (கப்பிறிஞ்ஞா, பைலா) போன்றன இன்றும் இலங்கை மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை செலுத்துகின்றன.
- ஒருதாரப் பழக்கவழக்கம், ஞான உறவுமுறைகள் பேணப்பட்டன.
- தொழில் வேறுபாடுகள் நீக்கப்பட்டது.

## ஒல்லாந்தர் காலம் (1658-1796)

### 9.2.2 ஒல்லாந்தர் காலத் திருச்சபை

- இலங்கையில் ஒல்லாந்தர் வருகையின் போது கத்தோலிக்க சமயம் வேரூன்றிக் காணப்பட்டது. கத்தோலிக்கருக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே நெருங்கிய உறவும், தொடர்பும் காணப்பட்டது.
- இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியும், றோமன் கத்தோலிக்க திருச்சபையும் எவ்வளவு நெருங்கிப் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தது என்றால், அவற்றில் ஒன்றை அழிக்காமல், மற்றயதை வெளியேற்ற முடியாத நிலை காணப்பட்டது.
- 16ஆம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட மாட்டின் லூதரின் சீர்திருத்தக்கொள்கையின் விளைவாகப் பல சீர்திருத்தக் கொள்கைகளும், சீர்திருத்த சபைகளும் தோன்றின. ஒல்லாந்தர் கல்வினிஸ்த சபையைச் சார்ந்தவர்களாயும், போர்த்துக்கேயர் கத்தோலிக்க திருச்சபையை சார்ந்தவர்களாயும் இருந்தபடியால் இரு நாடுகளுக்குமிடையே போட்டியும் பூசலும் இருந்தது. ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய பொழுது இத்தாக்கம் இங்கும் எதிரொலித்தது.

### 9.2.2.1 ஒல்லாந்த சீர்திருத்த மதம் - பிலிப்பி பல்தேயுஸ் பாதிரியார்.

- கல்வினிஸ்த மதத்தை இலங்கையில் பரப்புவதற்கு எடுத்த முயற்சியில் முக்கிய பங்கு வகிப்பவர் வண. பிலிப்பிஸ் பல்தேயுஸ் பாதிரியாராவார். காலியில் ஒல்லாந்த இராணுவ படையினருக்கு 1656இல் பணிசெய்ய அனுப்பப்பட்ட இவர், பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்த முதல் கல்வினிஸ் மத மறைபோதகர் ஆவார். இவர் 1658-1665 வரை இலங்கையில் பணியாற்றினார்.
- கத்தோலிக்கரை மனந்திருப்பி சீர்திருத்த திருச்சபையில் சேர்க்கும் பணியை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பித்தார். பெற்றோர்களும், வளர்ந்தவர்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயத்திற்கு வரவழைக்கப்பட்டனர். ஆசிரியர்கள் என்ன படிப்பிக்க வேண்டும் என பாதிரியார் சொல்லிக்கொடுத்தார். பாதிரியாரால் மறைபோதகமும், வழிபாடுகளும் நடாத்தப்பட்டன.
- ‘‘நற்செய்தியைப் போதிப்பதற்குச் சிறந்த பயனுள்ள வழி மக்களுக்கு எம் மொழியைக் கற்பிப்பதைவிட நாம் அவர்களின் மொழியைக் கற்று அறிவதே’’ என்பது இவரது கொள்கையாகும். எனவே, மறைபரப்புதலுக்குத் தேவையான தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார்.
- மறைபரப்புதலுக்குத் தேவையான பல நூல்களைச் சுதேச மொழிக்கு எழுதி மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டார். இவற்றில் முக்கியமானது ‘‘எம் மதத்தின் முக்கிய கட்டளைகள்’’ என்ற மறைக்கல்வி நூலாகும்.
- மறையாசிரியர் பற்றாக்குறையை நீக்க செமினரி பாடசாலையை ஆரம்பித்து மறையாசிரியர்களைப் பயிற்றுவித்தார். மறைப்பாடசாலைக்கு வராத மாணவர்களை ஊக்குவிக்க பரிசில்கள் கொடுத்தார்.
- ஒல்லாந்த கிழக்கிந்திய கம்பனியின் நோக்கம் இலாபம் ஈட்டுவதும், குறைந்த செலவில் கூடிய வருமானம் பெறுதலுமேயாகும். மறைப்பணியில் அதிகம் ஆர்வம் காட்டாத இக் கம்பனிக்கும், மறைபரப்பும் பணியில் ஆர்வம் கொண்ட பாதிரியாருக்குமிடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதனால் பாதிரியார் தம் பணியைக் கைவிட்டு தம் தாய் நாட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

### 9.2.2.2 ஒறத்தோறியன் சபையின் மறைப்பணி

- ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க சமயம் தடைசெய்யப்பட்ட நிலையில் பல கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் தம் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். கத்தோலிக்கர் பகிரங்கமாகவோ, இரகசியமாகவோ தம் வழிபாடுகள் நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. பல கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டன. பல கத்தோலிக்கர் கல்வினிஸ்த மதத்தை பின்பற்றினர். இவ்வாறு 30 ஆண்டுகளாக பல்வேறு துன்பங்களை அனுபவித்த கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கு ஒளியூட்ட ஒறத்தோறியன் சபைக் குருக்கள் இலங்கை வந்து மறைப்பணியை ஆரம்பித்தனர்.

**புனித யோசப்வாஸ்**

- புனித யோசப்வாஸ் 1686 இல் கோவாவில் இருந்து இலங்கை வந்தார். யாழ்ப்பாணத்தில் சில்லாலை எனும் இடத்தைத் தம் பணியின் மையமாகக் கொண்ட இவர் ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் திருப்பலி நிறைவேற்றி, மறைபோதகம் செய்து, திருவருட்சாதனங்களை நிறைவேற்றி, கத்தோலிக்கரின் ஆன்மீகத் தேவைகளை ஆர்வமுடன் நிறைவேற்றினார்.
- அடிகளாரின் முன்மாதிரிகையான வாழ்க்கையும் அவரில் மிளிர்ந்த கிறிஸ்தவப் பண்புகளும் மக்களை மிகவும் கவர்ந்து பலரை கத்தோலிக்க சமயத்தின்பால் ஈர்த்தது. குறிப்பாக அவருடைய உலகப்பற்றற்ற வாழ்க்கை, மரியாதையான நடத்தை, உபவாசம், உணவுப் பழக்கவழக்கம், இச்சையடக்கம் போன்றன கத்தோலிக்கரின் வாழ்வில் பல மாற்றங்களையும், விசுவாசத்தில் உறுதிப்பாட்டையும் தோற்றுவித்தது.

- 1690 இல் மார்கழி 25இல் இயேசு பிறப்பு நாள் திருப்பலியை மூன்று இடங்களில் நிறைவேற்ற ஆயத்தம் செய்து, முதல் திருப்பலியை முடித்து இரண்டாம் திருப்பலிக்கு செல்ல இருந்த வேளை ஒல்லாந்தப் படையினர் அந்த இடங்களை முற்றுகையிட்டனர். யோசப்வாஸ் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டார்.
- பின்னர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது ஆபத்து என உணர்ந்த அடிகளார் அங்கிருந்து புத்தளம் சென்று கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் அங்கு பணியாற்றி 1692இல் கண்டிக்குப் பயணமானார்.
- கண்டிக்குள் நுழைவதற்கு அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அடிகளாரைப் போர்த்துக்கேயருக்கு உளவு பார்க்க வந்த உளவாளி என நினைத்து சிறையிலிட்டனர். பின்னர் அரசன் 2ஆம் விமலதர்மசூரியன் யோசப்வாசின் கீழ்ப்படிவான அமைதியான குணத்தைக்கண்டு அவரை விடுதலை செய்து சுதந்திரமாகப் பணியாற்ற அனுமதி கொடுத்தான்.
- கண்டியில் அதிக வறட்சிநிலை ஏற்பட்டபோது, இரண்டாம் விமலதர்மசூரியனின் வேண்டுகோளுக்கிணங்க யோசப்வாஸ் அடிகளார் ஆழ்ந்த விசுவாசத்துடன் இறைவனை நோக்கிச் செபித்ததினால் மழை கிடைக்கச் செய்தார்.
- கி.பி 1697இல் கண்டியில் ஏற்பட்ட ''வைசூரி'' என்ற தொற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று தியாகத்துடன் பணியாற்றினார்.
- வாஸ் அடிகளார் சுதேச சமயங்களையும், பழக்கவழக்கங்களையும் மதித்தார். சிங்கள, தமிழ் மொழியை நன்றாகக் கற்று தம் மறைப்பணியில் பயன்படுத்தியதோடு ஏனைய மறைபரப்பாளர்களையும் சுதேச மொழிகளைக் கற்க ஊக்குவித்தார்.
- தேசிய கலாசார பண்புகள் மரபுகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்த முயற்சி செய்த இவர் தமிழ், சிங்கள மொழியை நன்கு கற்று இம்மொழிகளில் செபிப்பதற்கும், தேசிய பாடல்களையும், இசைக்கருவிகளையும் பயன்படுத்திக் கத்தோலிக்க வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்கலைப் புகுத்தினார். தமிழில் பல செபப் புத்தகங்களையும், நூல்களையும் எழுதியுள்ளார்.
- அவரது மறைபரப்புப் பணி யாழ்ப்பாணம், புத்தளம், கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, பேருவளை போன்ற பிரதேசங்களிலும் பரவியமை குறிப்பிடத்தக்கது.
- ''இலங்கையின் அப்போஸ்தலர்'' என்ற நாமம் பெற்ற இவர் 24 வருடங்கள் இலங்கையில் பணியாற்றியபின் கி.பி. 1711இல் இறையடி சேர்ந்தார். 2015.01.14இல் திருத்தந்தை 1ஆம் பிரான்சிஸினால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**அருட்பணி கொன்சால்வேஸ் அடிகள்**

- இலங்கையில் கிறிஸ்தவ கலாசாரத்தை உருவாக்குவதற்கு முன்வந்த இவர் கி.பி 1676இல் திவாரி என்னும் இடத்தில் பிறந்தார்.
- அசாதாரண அறிவும், சங்கீதத் திறன், பன்மொழி பயிலும் ஆற்றலும் கொண்டு விளங்கிய இவர் தன் பட்டப்படிப்பை முடித்து குருவாக வரவிரும்பி ஒறத்தோறியன் சபையில் இணைந்து 1700ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமனம் பெற்ற போது பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குக் கற்றுக் கொடுப்பதைவிட கிறிஸ்தவத்தை அறியாத பாமரமக்களுக்கு மறைக்கல்வி கற்றுக் கொடுப்பதையே மிகவும் விரும்பினார்.
- யோசேப்வாஸ் அடிகளாரின் அழைப்பின் பேரில் தனது பேராசிரியர் பதவியை ராஜினாமா செய்து விட்டு 1705இல் ஆவணி 30ஆம் திகதி அருட்திரு மிகுவேல் டி மெல்லோ, யோசே டே சமாரியா, மனுவேல் டே மிரண்டா என்னும் குருக்களுடன் இலங்கைக்கு வந்தார்.
- யாழ்ப்பாணத்தில் மெனெசெஸ் அடிகளாருடன் பணிபுரிந்து தமிழில் சிறந்த தேர்ச்சி பெற்றுக் கொண்டார். கண்டியில் பெத்ரோ கஸ்கன் என்ற ஆசிரியரின் கீழ் சிங்கள மொழியைக் கற்று அதிலும் தேர்ச்சி பெற்றார்.

- தம் வாழ்நாளில் சிங்களம், தமிழ், இலத்தீன், போர்த்துக்கேயம், ஸ்பானியம், டச்சு மொழி போன்ற பன்மொழிகளில் பேச, வாசிக்க, எழுதத் தேர்ச்சிபெற்றிருந்த கொன்சால்வேஸ் அடிகளார் தம் அறிவையும், ஆற்றலையும் மறைபரப்புப் பணிக்குத் திறம்படப் பயன்படுத்தினார்.
- அடிகளார் சிங்களத்திலும், தமிழிலும், உரை நடையிலும், கவி நடையிலும், உயர்ந்த இலக்கிய மொழியிலும், சாதாரண மக்கள் பேசும் மொழியிலும் எழுதிய நூல்களைக் கத்தோலிக்கரும், பிற மதத்தினரும் ஆவலுடன் வாசித்தார்கள்.
- “இலங்கைத் தமிழ் சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை” யான இவர் 42ற்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். 22 நூல்கள் சிங்கள மொழியிலும், 15 நூல்கள் தமிழ் மொழியிலும், 4 நூல்கள் போர்த்துக்கேய மொழியிலும், 01 நூல் ஒல்லாந்த மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இதைத்தவிர போர்த்துக்கேயம் - தமிழ் - சிங்கள மொழியிலும் அகராதி எழுதியுள்ளார்.
- தேசிய மொழிகளைக் கற்ற இவர் திருவழிபாட்டிற்குத் தேவையான நூல்கள், பாடல்கள் என்பவற்றை எழுதினார். தேவாலயங்களில் பாடல்கள், சங்கீதங்களுடன் நடைபெற்ற சுற்றுப் பிரகாரங்கள், அழகான நாடகங்கள், திருப்பாடுகளின் காட்சிகளால் கத்தோலிக்கரின் விசுவாசம் எங்கும் பரவி, வளர்ச்சியடைந்தது. பிற மதத்தினரும் கத்தோலிக்க மதத்தைப் போற்றி மதித்தனர்.
- தேசிய மொழியில் கத்தோலிக்க இலக்கியத்தை உருவாக்கிய மதிப்பும், பெயரும் அவருக்கே உரியது.
- 37 ஆண்டுகள் இலங்கையில் பணியாற்றிய பின் கி.பி. 1742 ஆடி 17ஆம் திகதி அவர் இவ்வுலகை விட்டு உயிர் நீத்தார்.

### 9.2.2.3 ஒல்லாந்தர் காலக் கல்விப்பணி

- போர்த்துக்கேயரைப் போன்று ஒல்லாந்தரின் மறைப்பணியும் பொதுவாகப் பாடசாலைகளை நடுநிலையமாகக் கொண்டே இடம்பெற்றன. ‘‘மறையைப் பிரச்சாரப்படுத்தும் அடித்தளம் பள்ளிக்கூடமே’’ என்பதே அவர்களின் கொள்கை.
- இவர்களின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறை பெரும் வளர்ச்சி கண்டது. போர்த்துக்கேயக் கல்வி முறையைப் போன்று சுதேசிகளைக் கிறிஸ்தவத்தோடு ஒன்றிணைப்பதற்கும், மதப்பரப்புதலுக்கும் கல்வியை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தினர். ஒல்லாந்தர் இலங்கை மக்களின் வாழ்க்கை, சமூக நலனில் அக்கறை கொண்டிருந்ததால், அக்காலக் கல்வியும் அவற்றோடு இணைந்ததாகக் காணப்பட்டது.
- இக்காலத்தில் உயர் கல்வி கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைத்தது. கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆண், பெண் பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகமளிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். போதகர்களும், மறையாசிரியருமே பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றினர்.
- போர்த்துக்கேயர் காலத்தில் மத நிறுவனங்களில் கல்வி முறை நிர்வகிக்கப்பட்டதைப் போல் அல்லாது ஒல்லாந்தர் காலத்தில் அரச கட்டுப்பாட்டின் கீழ் கல்விச் செயற்பாடுகள் முறையானவையாக, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, குறைந்த செலவில் சிறந்த கல்வியை வழங்கக்கூடிய முறைகளைக் கையாண்டனர்.
- அரசு எல்லாச் செலவுகளையும் ஏற்று, ஆசிரியர்களை நியமிப்பது, பயிற்சியளிப்பது, நிர்வாகம், பரீட்சகர்கள் வழியாக பாடசாலைப் பரீட்சைகளை நடத்துதல் போன்றவை ‘‘ஸ்கொலாகல் கொமிஷம’’ என்ற மேற்பார்வைக்குழு வழியாக நிர்வகிக்கப்பட்டது.

**ஒல்லாந்தர் காலத்தில் நான்கு விதமான பாடசாலைகள் இயங்கி வந்தன.**

1. கோவில் பற்றுப் பாடசாலைகள்
2. செமினரிப் பாடசாலைகள்
3. ஒல்லாந்தப் பாடசாலைகள்
4. அனாதை இல்லப் பாடசாலைகள்

1. **கோவில் பற்றுப் பாடசாலைகள்**:

- இப்பாடசாலைகள் போர்த்துக்கேயர் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியிலும் அவர்களால் முன்னெடுத்து நிர்வகிக்கப்பட்டு வந்தன.
- அரச பிரமாணங்கள் வழியாகப் பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்குரிய வேலை நேரம், பயிற்சி, அவர்களின் கடமைகள் அடிக்கடி தெளிவூட்டப்பட்டன.
- இப்பாடசாலைகளில் தலைமை ஆசிரியராக கிறிஸ்தவ, வயது முதிர்ந்த, பிரபல குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்பட்டார். இவரே தோம்பு முறைப் பதிவுகளை மேற்கொண்டார் (பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு, திருமுழுக்குப் பதிவு). இதனால், சமூகத்தில் இவருக்கு மதிப்பும் மரியாதையும் காணப்பட்டது.
- இப்பாடசாலைகளில் சுதேச மொழியைக் கையாண்டனர். கற்பித்தல் முறைகளில் வினா விடை முறை, வாசிப்பு, எழுத்து, கிறிஸ்தவக் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தனர்.
- கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு 8-15 வயது வரை உள்ள பிள்ளைகள் பாடசாலை செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதன் பின்னும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் வாரத்திற்கு இரு தடவைகள் பாடசாலைக்குச் செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- இப்பாடசாலை முறையில் ''மேற்பார்வை'' முக்கிய இடம்பெற்றது. இது வருடத்திற்கு ஒருமுறை அறிவித்தலோடு நடைபெறும். முன்கூட்டிய அறிவித்தலுக்கு இணங்கக் குறிப்பிட்ட தினத்தில் கிராமத்தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் பாடசாலைக்குச் சமூகம் அளித்திருப்பர். அவ்வேளை மாணவர்கள் வாசிப்பு, எழுத்து, சமய வினா விடை, பத்துக் கட்டளைகள், விசுவாச விதிகள், இயேசு கற்பித்த செபம் போன்றவை வினா விடை முறையில் நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

2. **செமினரிப் பாடசாலைகள்**:

- மேற்கத்தையக் கல்விமுறையே இங்கு கையாளப்பட்டன. இப்பாடசாலையில் மாணவர்கள் குருக்களாக, எழுதுவினைஞர்களாக, மொழிபெயர்ப்பாளர்களாக, உபதேசிகளாக பயிற்றுவிக்கப்பட்டனர். உயர் வகுப்புகளில் ஒல்லாந்த (டச்சு) மொழியும் தேவைக்கேற்ப இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளும் கிறிஸ்தவம், தர்க்கவியல் ஆகியனவும் கற்பிக்கப்பட்டன. மாணவர்கள் இங்கிருந்து ஒல்லாந்திலுள்ள ''லேடன்'' (Leyden) பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டனர்.
- செமினரிக் கல்வி முறையானது ஆணைக்குழுவின் கீழ் இருக்கவில்லை. ஆரம்பத்தில் இப்பாடசாலைகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்தில் நல்லூரிலும் காணப்பட்டன. சிறந்த தலைமை ஆசிரியர் இன்மையால் 1732 இல் யாழ்ப்பாணப் பாடசாலை மூடப்பட்டு மாணவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.
- இங்கு டச்சுமொழி, இலக்கணம் ஆகியன அதிகமாகக் கற்பிக்கப்பட்டன. இப்பாடசாலைகளில் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு அனுமதி சட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
- இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் சுதேசப் பாடசாலை ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். மேலும் முதலியார், கிராமத் தலைவர் எனப் பல உயர் பதவிகளையும் பெற்றனர்.
- மேலும் இங்கு பயின்றவர்கள் அரச பதவிகளை மட்டுமல்ல கிழக்கிந்திய ஒல்லாந்த கம்பனியிலும் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

3. **ஒல்லாந்தப் பாடசாலைகள்**:

- ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்தப் பாடசாலைகள் சில இலங்கையில் காணப்பட்டன.
- ஒல்லாந்தப் பிள்ளைகள் இங்கு கல்வி கற்றனர். குருமாரும், உபதேசிமாரும் இங்கு கல்வி கற்பித்தனர். எழுத்து, வாசிப்பு, கணிதம் போன்றவை கற்பிக்கப்பட்டன.
- இத்தகைய பாடசாலைகள் 1737இல் கொழும்பில் நான்கு இருந்தன. அத்தோடு காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இப்பாடசாலைகள் காணப்பட்டன. இங்கு கல்வி கற்ற இலங்கையர்கள் ஒல்லாந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

4. **அனாதை இல்லப் பாடசாலைகள்**:

- ஒல்லாந்தர் காலத்தில் நான்காவது வகைப் பாடசாலையாக அனாதை இல்லப் பாடசாலைகள் காணப்பட்டன. இங்கு ஆண், பெண் இருபாலாரும் கல்வி கற்றனர். எழுத்து, வாசிப்பு, எண்கணிதம், சமயம் என்பன கற்பிக்கப்பட்டன.
- அத்துடன் ஆண் பிள்ளைகளுக்கு வர்த்தகமும், பெண் பிள்ளைகளுக்கு வீட்டு வேலையும், தையல், பின்னல் என்பனவும் கற்பிக்கப்பட்டன. இப்பாடசாலைகள் அரச செலவில் நடாத்தப்பட்டன. மாணவர்கள் தம் பயிற்சியை முடித்து 18-20 வயதில் அங்கிருந்து வெளியேறினர்.

### 9.2.2.4 ஒல்லாந்தர் காலக் கலைப்பணி

#### 9.2.2.4.1 ஒல்லாந்தர் காலக் கிறிஸ்தவ இலக்கியம்

- ஒல்லாந்தரின் இலக்கண நூல், வாக்கிய நூல், அகராதி போன்றவை டச்சு, சிங்கள மொழிகளில் ஆக்கப்பட்டுள்ளன.
- திருப்பாடல்கள், பக்திப்பாடல்கள், திருவழிபாட்டு நூல், ஒல்லாந்த மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- கி.பி 1737இல் முதலாவது பதிப்புரிமை பெற்ற சிங்கள நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் கர்த்தர் கற்பித்த செபம், காலை, மாலைச் செபம், உணவுக்கு முன், பின் செபம், விசுவாச பிரமாணம், பத்துக் கற்பனைகள் என்பன அடங்கியுள்ளன.
- கி.பி 1755இல் கொழும்பு குருமடத்தின் கலாநிதி மண்டலசே அன்ரனி பெரேரா, லுவி த சேரம் என்பவர்களால் இயற்றப்பட்ட பாடல் புத்தகம் உருவாக்கப் பெற்றது. இதற்கான பாடற் குறிப்பு ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒல்லாந்து அரசு கிறிஸ்தவ இலக்கியத்திற்கு அளித்துள்ள முக்கியமான பங்களிப்பானது திருவிவிலியத்தின் புதிய ஏற்பாடு முழுவதும், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமையேயாகும்.
- கி.பி 1705 மே மாதம் 09ஆம் திகதி இலங்கைக்கு வந்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் சிங்கள, தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு மாபெரும் பணியாற்றினார் என்பது இங்கு நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

**அருட்பணி யாக்கோமே கொனசால்வேஸ் எழுதிய நூல்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.**

| தமிழ் | சிங்களம் | தமிழ் - சிங்களம் |
|---|---|---|
| நவதர்க்கம் | தேவ நீதி விசர்ஜனய | கிறிஸ்தியானி ஆலயம் |
| முசல்மான் வேதம் | வேத காவிய | தேவ அருள் வேத புராணம் |
| கடவுள் நிர்ணயம் | புத்த பண ப்ரத்யக்ஷய | சுவிசேஷ விரிந்துரை |
| நாலு வேதம் | புத்தமுல | வியாகுல பிரசங்கம் |
| சிந்துப்பிரார்த்தனை | பேதகாறயங்கே தர்க்கய | தர்ம உத்தியானம் |

**அகராதிகள்**

- மிஷனறிமார் தமிழும் சிங்களமும் படித்துக் கொள்வதற்கு உதவியாக போர்த்துக்கேய - தமிழ் - சிங்கள அகராதி ஒன்றை இயற்றினார். மேலும் சிங்கள - போர்த்துக்கேய அகராதியும், போர்த்துக்கேய - சிங்கள அகராதியும், தமிழ்ச் சொற்றொடர்கள் அகராதியும் எழுதினார்.

**9.2.2..4.2 சித்திரக் கலை**

- குருணாகல் வெள்ளி விகாரையின் தலைமை ஆசனத்தில் கிறிஸ்தவச் சித்திரம் வரையப்பட்டிருக்கும் ஓடுகள் புராதன விஞ்ஞான அமைச்சினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கீழ்க் காணப்படும் விடயங்கள் அதில் காணப்படுகின்றன.
- கிறிஸ்துவின் விண்ணேற்பு, இயேசுவை சிறுவயதில் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல், இயேசு கடல்மீது நடத்தல், இயேசுவின் உருமாற்றம், மார்த்தாளும் மரியாளும் போன்ற புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள் இச்சித்திரங்களில் காணப்படுகின்றன. இயேசுக்கிறிஸ்து ஒல்லாந்தரது ஆடை அணிந்திருப்பது இச்சித்திரங்களின் விசேஷ தன்மையாகும். அவரது தலையைச் சுற்றி ஒளிக்கதிர் அமைக்கப்பட்டிருந்தது.

**9.2.2.4.3 அரங்கியற் கலை**

- ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதம் தடைசெய்யப்பட்டு இருந்தமையால் நாடகங்கள் மேடையேற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்பட்டன. போர்த்துக்கேயர் காலத்தைப்போல் வெளிப்படையாகக் காண்பிக்கப்படாவிட்டாலும், மறைமுகமாக நாடகங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கூத்துக்கள் துன்பியலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டன. இக்காலத்தில் துன்பங்களை எதிர்கொண்ட கத்தோலிக்கரின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், துன்பங்களுக்குக் கைமாறு பெறுவர் எனும் படிப்பினையை அளிக்கவும் புனிதர்களின் வரலாறுகள் நாட்டுக்-கூத்துகளாக மேடையேற்றப்பட்டன. இருந்தும் வன்னிப் பிரதேசங்களில் மறைப்பணியாளர்களுக்குப் பூரண சுதந்திரம் இருந்ததால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய யோசப்வாஸ் அடிகளாரும் தம் சக குருக்களின் உதவியுடன் இணைந்து 1706இல் கோவா ஒறற்றோறியன் சபையில் இருந்து கொண்டுவரப்பட்ட உடை அலங்காரத்தைப் பயன்படுத்தி பாஸ்கா நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்டதாக அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 9.2.2.5 ஒல்லாந்தரின் வருகை இலங்கைச் சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம்

- கைத்தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள் அறிமுகம் செய்யப்பட்டு மக்கள் தம் வருவாயை அதிகரிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. வரண்ட பிரதேசத்தில் நீர் பாய்ச்சப்பட்டு வளமாக்கப்பட்டன.
- வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் நகரங்கள் வளர்ச்சியுற்றன. இந்நகரங்களை இணைத்துப் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. சிறிய ஆறுகள் பாலங்களாலும், பெரியவை வள்ளச் சேவைகளினாலும் பிணைக்கப்பட்டன.
- அச்சுப்பதிவு இயந்திரத்தை முதன்முதலில் இலங்கையில் அறிமுகம் செய்து தமிழ், சிங்கள எழுத்துக்களை வார்த்துப் பல வேத நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர்.
- றோமன் டச்சுச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒல்லாந்த உடைகளுக்கும், அலுமாரி, பொட்டலம், கதிரை, மேசை போன்ற வீட்டுத் தளபாடங்களுக்கு மக்கள் பழக்கப்பட்டனர். மேலும் சுதேச மொழிகளில் ஒல்லாந்த சொற்கள் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன.

  உதாரணம்:- இலாச்சி, கந்தோர், நொத்தாரிசு, சாக்கு
- நோயாளரைப் பராமரிக்க வைத்தியசாலைகளும், விடுதிகளும் தேவையான தாதிகளும், மத்றோனாக்களும் பயிற்றப்பட்டனர்.
- நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு சட்டப்படி விசாரித்தல், தண்டனை வழங்குதல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு நீதி கிடைத்தது.
- கோப்பி, கராம்பு, கறுவா, ஏலம், தென்னை போன்றவற்றின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதுடன் புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடுதல், அவற்றைச் சந்தைப்படுத்தல் போன்றவற்றை விருத்தி செய்து மக்களையும் கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் பங்கெடுக்கச் செய்தனர்.

### 9.2.3 ஆங்கிலேயர் காலத் திருச்பை (1796-1948)

**ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுதல்**

- இந்தியாவில் பிரான்சின் வலிமையை முடிவுக்குக் கொணர்ந்து தம் வலிமையை உறுதிப்படுத்த விரும்பிய ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பனி வங்காள விரிகுடாவில் தமக்குத் தகுந்த ஒரு துறைமுகம் வேண்டும் என்பதை உணர்ந்தது. இலங்கையில் ஒரு துறைமுகத்தை வைத்திருப்பதே எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வாக அமையும் எனத் தீர்மானித்தனர். அவர்களின் கனவெல்லாம் திருகோணமலைத் துறைமுகத்தையே நோக்கி நின்றது.
- 1762இல் பைபஸ் என்ற தம் தூதுவரை கண்டி அரசனிடம் அனுப்பினர். ஒல்லாந்தருடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்த கண்டி அரசன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒல்லாந்தரை இலங்கையில் இருந்து விரட்ட ஆங்கிலேயர் உதவி செய்தால் அவர்கள் கேட்கும் திருகோணமலைத் துறைமுகத்தைத் தருவதாக கூறினார்.
- இக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் மூண்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 1795இல் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னாரையும், 1796இல் கொழும்பையும் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். இவ்வாறு 1796இல் இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சி முற்றுப் பெற்றது.
- ஒல்லாந்தரின் உடமையெல்லாம் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பனியின் கைக்கு மாறின. 1802இல் அனைத்து கரையோரப் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன.
- ஏறக்குறைய 300 ஆண்டுகளாக ஒரே தனிச்சுதந்திர அரசாக இருந்த கண்டி அரசும் 1815இல் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது.

#### 9.2.3.1 மதச்சுதந்திரம்

- ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் சிவில் நிர்வாகம், ஆங்கிலேயப் படையின் தளபதியான கேர்ணல் ஜேம்ஸ் ஸ்டுவார்ட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.
- இலங்கை ஒறொற்ரோறியன் சபை சிரேஷ்டரான வண. டொமிங்கோஸ் மொன்ரெய்றோ அடிகளார் தளபதியைச் சந்தித்து இலங்கைக் கத்தோலிக்கரின் நிலை பற்றி எடுத்துக் கூறினார். 1796இல் ஆங்கிலம், ஒல்லாந்தம், போர்த்துக்கேயம் போன்ற மும்மொழியில் அறிக்கையொன்றை வெளியிட்டு இலங்கையில் இருக்கும் றோமன் கத்தோலிக்கக் குருக்கள் தம் மத முறைப்படி வழிபாடுகளைத் தங்கு தடையின்றி நடத்த அனுமதியளித்து, அதை எவரும் தடைசெய்யக் கூடாதெனவும் கட்டளையிட்டார்.
- 1798இல் பிறெட்றிக் நோத் என்பவர் இலங்கை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். அவரும் கத்தோலிக்கர் தம் மத முறைப்படி திருமுழுக்கு, திருமணம், இறந்தோர் அடக்கம் போன்றவற்றை நிறைவேற்றவும் கத்தோலிக்கர்கள் முழுச் சுதந்திரத்துடன் மதத்தைப் பின்பற்றவும் கத்தோலிக்க குருக்கள் மறைப்பணியாற்றவும் அனுமதி வழங்கப்பட்டது.
- கத்தோலிக்கர் மட்டில் இரக்கம் காட்டிய இவர் 1801ஆம் ஆண்டு கத்தோலிக்க மாணவ மாணவிகளுக்கெனச் சில பாடசாலைகளை அமைக்க அனுமதி அளித்து ஒல்லாந்தரால் கத்தோலிக்கருக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்களை, சட்டப் புத்தகத்திலிருந்து அகற்றினார்.
- 1805இல் தோமஸ் மெயிற்லன்ட் (1805-1811) புதிய கவனராக பதவி ஏற்றார். அவர் கத்தோலிக்க சமய சுதந்திரத்தை 1806.05.27ஆம் திகதி சட்ட பூர்வமாகப் பிரகடனம் செய்தார்.

#### 9.2.3.2 ஆங்கிலேயர் காலக் கல்விப்பணி

- ஆங்கிலமொழி உலக மட்டத்தில் முக்கியம் வாய்ந்ததோர் மொழியாக ஆங்கிலேயர் காலத்தில் கணிக்கப்பட்டது. இப்பின்னணியில் இலங்கையிலும் அதிகமானோர் ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினர்.
- 1798 இல் ஆங்கிலேயர் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது அவற்றை அங்கிலிக்கன், பப்டிஸ்ட், வெஸ்லியன், அமெரிக்கன் மிஷன் குருக்களைக் கொண்ட குழுவினரிடம் ஒப்படைத்தனர்.
- இக்காலத்தில் மூன்று விதமான பாடசாலைகள் இயங்கி வந்தன.

  1. **அரசாங்கப் பாடசாலைகள் :-**

     இவை பெரும்பாலும் தமிழ், சிங்கள மொழிகளில் இயங்கி வந்தன. இவை அங்கிலிக்கன் திருச்சபைக் குருக்களினால் நடாத்தப்பட்டு வந்தன.

  2. **மிஷன் பாடசாலை :-**

     இவை புரட்டஸ்தாந்து மிஷனரிமாரால் நடாத்தப்பட்டு வந்தது.

  3. **பிரிவெனாப் பாடசாலைகள் :-**

     இவை பௌத்த பிக்குகளினால் நடாத்தப்பட்டு வந்தன.

- ஆங்கிலேயர் காலத்தில் சாதி, சமயம் என்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றாகக் கற்க வாய்ப்பு ஏற்பட்டதோடு பெண்களின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தப்பட்டது. 1824இல் பெண்களுக்கென உடுவிலில் பாடசாலை ஒன்று முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இதுவே ஆசியாவில் முதன்முதலில் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட விடுதிப் பாடசாலை ஆகும்.
- இக்காலத்தில் மாணவ மாணவியருக்கு விஞ்ஞான, மருத்துவக் கல்வி புகட்டப்படுவதற்கென முதன்முதலாக மானிப்பாயில் மருத்துவக் கல்லூரியும் நிறுவப்பட்டது.
- கிறிஸ்தவ அறிவை வளர்ப்பதற்கென அமைக்கப்பட்ட கிறிஸ்தவ சபையின் சார்பாக (SPCK) 1801 இல் கிறிஸ்ரியன் டேவிட் என்பவர் இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தம் கல்விப் பணியை ஆரம்பித்தார். (A Society for promoting Christian Knowledge)

- 1912 இல் ஜேம்ஸ் சேபர் என்பவர் தலைமையில் பப்டிஸ்ட் மிஷனரி சபையினர் இலங்கையில் றோயல் கல்லூரியை ஆரம்பித்தனர்.
- 1815 இல் வெஸ்லியன் மிஷனரிமாரால் கொழும்பில் வெஸ்லி மெதடிஸ்த கல்லூரியும், கண்டியில் கிங்ஸ்வூட் கல்லூரியும், காலியில் றிச்மென்ட் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டன.
- 1815இல் வந்த ''சேர்ச் மிஷனரி சபையினர்'' (CMS) பல இடங்களில் சிறப்பாக கிராமப்புறங்களில் பல பாடசாலைகளை அமைத்தனர்.
- 1815இல் ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த கத்தோலிக்கத் திருச்சபைக் குருக்களும், துறவியரும் சுதேசப் பிள்ளைகளின் கல்வியில் தம் பங்களிப்பினைச் செய்துள்ளனர்.
- இலங்கை வந்த அமெரிக்கன் மிஷன் சபையினர் யாழ்ப்பாணத்தில் தங்கள் பணித்தளத்தை அமைத்து சுதேச சிறுவர் கல்வியில் தம் கவனத்தைச் செலுத்தினர். 1823இல் வட்டுக்கோட்டையில் ஒரு மத்திய உயர்தரப் பாடசாலையையும், உடுவிலில் மகளிர் கல்லூரியையும் இன்னும் உடுப்பிட்டி, கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களில் பாடசாலையையும் அமைத்தனர். அறிவாற்றலும், திறனும் வாய்ந்த சுதேச ஆண், பெண் பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து தம் பாடசாலைகளில் கற்பிக்க பயிற்றுவித்தனர். இவர்களின் கடின உழைப்பினால் 20 ஆண்டுகளில் 235க்கும் மேற்பட்ட கல்லூரிகளையும், பாடசாலைகளையும் அமைத்து 10,000ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கல்வி புகட்டினர்.
- 1862 இல் இலங்கை வந்த திருக்குடும்பக் கன்னியர் சபையினர் யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கெனக் கத்தோலிக்க ஆங்கிலப் பெண்கள் பாடசாலையையும் 1873இல் திரு இருதயப் பாடசாலையையும் (St. Jemes), 1890இல் OLR பாடசாலைகளையும் பின்னர் இளவாலை, சில்லாலை, பாஷையூர், பருத்தித்துறை, மாதகல், மயிலிட்டி போன்ற இடங்களில் பாடசாலைகளையும் ஆரம்பித்தனர்.
- ஆயர் பெற்றகினி ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்க 1847இல் இலங்கை வந்த அமலமரித் தியாகிகள் துறவற சபையினர் யாழ்ப்பாணத்தில் 1850இல் புனித பத்திரிசியார் கல்லூரியையும், 1863 இல் கொழும்புத்துறையிலும், 1887இல் திருகோணமலையில் புனித சூசையப்பர் கல்லூரியையும், 1887 இல் மக்கோனாவில் அனாதை சிறுவர்களுக்கென ஒரு பாடசாலையும், இல்லமும் அமைத்து ஆண்பிள்ளைகளை பராமரித்தனர். மேலும் மக்கோனாவில் தொழிற்துறைகள் கற்கும் பாடசாலை ஒன்றையும் அரசின் வேண்டுகோளுக்கிணங்க இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பாடசாலை ஒன்றையும் நிறுவினர்.
- இயேசு சபையினர் மட்டக்களப்பில் 1873இல் புனித மிக்கேல் கல்லூரியையும் காலியில் 1895இல் புனித அலோசியஸ் கல்லூரிகளையும், இரத்தினபுரியில் 1898 இல் புனித அலோசியஸ் கல்லூரிகளையும் நிறுவினர்.
- நல்லாயன் சபைக் கன்னியர் கொழும்பில் 1902இல் புனித பிரிஜட் கல்லூரியையும், 1904 இல் (All Saints) கல்லூரியையும் (புஞ்சி பொறளை) 1869இல் கொட்டாஞ்சேனையில் ஒரு பாடசாலையையும் கண்டி, வெள்ளவத்தை, நீர்கொழும்பு போன்ற இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினர்.
- புனித ஆசிர்வாதப்பர் சபையினர் 1865இல் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித ஆசிர்வாதப்பர் (St.Benedict) கல்லூரியை நிறுவினர்.
- டிலாசால் அருட்சகோதரர்கள் 1905இல் கொழும்பு முகத்து வாரத்தில் டி லா சால் கல்லூரியையும், கிரான்ட்பாசில் புனித வளனார் கல்லூரியையும் ஆரம்பித்தனர்.

#### 9.2.3.3 ஆங்கிலேயர் காலக் கலைப்பணி

- ஆங்கிலேயர் காலத்தில் தமிழ், சிங்கள இலக்கியங்கள் பல தோன்றியதோடு சித்திரம், சிற்பம், அரங்கியல் போன்ற கலையம்சங்களும் வளர்ச்சியடைந்திருந்தன.

#### 9.2.3.3.1 ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள்

- ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமார் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்கள் 1841இல் ''உதய தாரகை'' எனும் பத்திரிகையை ஆரம்பித்தனர். மாதம் இருமுறை இது வெளியிடப்பட்டது. ''நேர்மையுள்ள நாடு உயர்வடையும், பாவம் நிறைந்த எந்த நாடும் இழிவடையும்'' என்பதே இதன் மகுட வாசகமாகும். கிறிஸ்தவ மதத்தைப் பிரச்சாரம் செய்வதே இப்பத்திரிகையின் பிரதான நோக்காகும்.
- 1876இல் ''கத்தோலிக்க பாதுகாவலன்'' கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை வளர்க்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வார ஏடாக வெளிவந்த இப்பத்திரிகை இன்று மாதம் ஒரு முறை வெளிவருகின்றது. இதன் முதல் ஆசிரியராக M.A மர்பி (M.A Murphey) யும், உதவி ஆசிரியராக ஜேம்ஸ் மாட்டீன் அவர்களும் பணிபுரிந்தனர்.

#### 9.2.3.3.2 ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவ சிங்கள இலக்கியங்கள்

- 1866.06.07 **''ஞானார்த்த பிரதீபய''** என்ற சிங்களப் பத்திரிகை வெளியிடப்பட்டது. இதன் முதலாவது பதிப்பாசிரியர் ஜி. யுவாம் பெர்ணாண்டோ ஆவார். அருட்பணி ஜோண் பஹமுனே அ.ம.தி. என்பவரே இதன் முதலாவது ஆசிரியராவார். அதுகல்புர பௌத்த குடும்பத்தில் பிறந்த இவர் தேசிய இலக்கிய மறுமலர்ச்சிக்காக இப் பத்திரிகையைப் பயன்படுத்தினார்.
- 1889இல் ''பக்தி பிரபோதன'' என்ற சிங்கள சஞ்சிகை ஒன்று அமலமரித் தியாகிகள் துறவற சபையினரால் வெளியிடப்பட்டது.

#### 9.2.3.3.3 ஆங்கிலேயர் காலச் சித்திர சிற்பக்கலைகள்

- **பெசலேல் நவரத்ன** என்பவர் பேராதெனியாவில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் மரச்சிற்பங்கள் அடங்கிய ஆலயத்தைச் சிறப்பான முறையில் அமைத்துள்ளார். இவ் ஆலயத்தூணில் கிறிஸ்தவ அடையாளங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- **போல் நவரத்ன** என்பவர் 1939-1940 ஆண்டுகளில் கிறிஸ்து பிறப்புப் பற்றிய சித்திரம் வரைந்துள்ளார். சூசை, மரியா, ஞானிகள் போன்றோர் மேலைத்தேய பாரம்பரிய ஆடை அணிந்தவர்களாகவும், ஆட்டு மந்தைகளுக்குப் பதிலாக யானையும், தூதர்களுக்குப் பதிலாக தேவதைகளும், சைப்பிரஸ் மரத்திற்குப் பதிலாக நாக மரமும் பயன்படுத்தப்பட்டிருப்பது இச்சித்திரத்தில் காணப்படும் சிறப்பம்சங்களாகும்.
- **ஹென்றிக்கஸ்** என்பவர் முகத்துவாரம் புனித யாகப்பர் ஆலயத்தில் சித்திரங்களை வரைந்தார். இவர் வரைந்துள்ள இறுதி இராவுணவில் தம்மையே சீடனாக நினைத்து வரைந்துள்ளார். இது மேலைத்தேய பாரம்பரியக் கலையை ஒத்ததாக காணப்படுகின்றது.

#### 9.2.3.3.4 அரங்கியற் கலை

- ஆங்கிலேயர் காலத்தில் நாட்டுக் கூத்துகளை மேடையேற்றுவதற்கு மிஷனரிமாரிடமிருந்து பலத்த எதிர்ப்புக்கள் காணப்பட்டாலும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.
- சிங்கள நாட்டுக்கூத்து பாரம்பரியம் தோன்றி வளர்ச்சியடையத் தமிழ் நாட்டுக்கூத்ததுக்கள் காரணமாக இருந்தன. உதாரணமாக எஸ்தாக்கி, யோசபாத், சன் நீக்கலார், ஞானசவுந்தரி போன்றவற்றைக் குறிப்பிடலாம். ''மூவிராசாக்கள்'' நாடகமே முதன்முதலில் சிங்களத்தில்

மொழிபெயர்க்கப்பட்ட நாடகமாகும். இதனைச் சிலாபத்தைச் சேர்ந்த கபிரியேல் பர்ணாந்து என்பவரே மொழிபெயர்த்திருந்தார்.

### 9.2.3.4 இலங்கை மக்களின் கலாசாரத்தில் ஆங்கிலேயரின் தாக்கம்

- மரபு ரீதியான முடியாட்சிமுறை மாற்றப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப் பட்டது.
- பழைய நிலப் பிரபுக்கள் வகுப்பினர் இல்லாதொழிந்து புதிய மத்திய தர வகுப்பினர் தோற்றம் பெற்றனர்.
- ஆங்கில மொழி மூலமான மேலைத்தேயக் கல்விமுறை நாட்டில் வேகமாகப் பரவியது.
- போக்குவரத்து மற்றும் தொடர்பாடற்துறை வளர்ச்சியடைந்தது.
- ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகம் செய்தமை.
- போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினால் ஐரோப்பியர் அதிக அளவில் இலங்கைக்கு வருகை தந்தனர். இதனால் விடுமுறைக்கால விடுதிகள், இரவுக் களியாட்ட விடுதிகள் என்பன உருவாகியதன் காரணமாக மேலைத்தேய ஆடையணிகள், பழக்கவழக்கங்கள், வாழ்த்து, வணக்கம் தெரிவிக்கும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

- போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்ட முறை பற்றிய தகவல்களைக் குழுக்களாக இணைந்து திரட்டுக.
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலக் கல்வி, கலைப் பணிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி ஆக்கமாக முன்வைக்குக.
- இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு பல்வேறு காரணிகளை ஆராய்க.

**தேர்ச்சி 9.0 :** ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்ற வரலாற்றைக் கற்பதனூடாகச் சமய, சமூக, கலாசார மேம்பாட்டிற்குத் தம்மை அர்ப்பணிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 9.3 :** இலங்கை சமுதாயத்தின் மனித மேம்பாட்டிற்கான தேவைகளை அறிந்து தமது கடமைகளை நிறைவேற்றுவார்.

**பாடவேளைகள் :** 26

**கற்றல் பேறுகள் :**

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் கல்வி நிலை பற்றிய தகவல்களை சேகரிப்பார்கள்.
- இலங்கைச் சமூகம், கல்வி வளர்ச்சி வழியாக பெற்ற பயனை ஏற்பார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- நலன்புரிச் சேவைகளில் ஈடுபடுவார்.
- தமது ஆற்றல்களைச் சமூக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம் :**

**9.3.1 சுதந்திரத்தின் பிற்காலம்**

**9.3.1.1 கல்வித் துறையில் முன்னேற்றம்**

- சுதந்திர இலங்கையில் ஆயர் பொன்ஜீன் ஆண்டகையின் அயராத முயற்சியினால் 1969ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய கல்வித்துறை மசோதாவின் காரணமாகக் **"கல்விப் பொதுத் திணைக்களம்"** அமைக்கப்பட்டது.
- இதன் காரணமாக அனைத்து மதப் பிரிவினருக்கும் தத்தம் மாணவர்களுக்கெனத் தம் மதப் பாடசாலைகளை அமைக்கச் சந்தர்ப்பம் கிட்டியது.
- கத்தோலிக்கத் திருச்சபையும் இக்கல்வி முறையைப் பயன்படுத்தி இலங்கையின் கிராம, நகர்ப் புறங்களிலும் பல கத்தோலிக்கப் பாடசாலைகளையும், உயர்தரக் கல்லூரிகளையும் சகல வசதிகளுடனும் அமைத்துக் கொடுத்தது.
- இக்கல்லூரிகள் அரசாங்கத்தின் மேற்பார்வையிலும், கிறிஸ்தவ திருச்சபை நிருவாகங்களின் கீழும் இயங்கின.
- இவ்வாறாக கத்தோலிக்க, கிறிஸ்தவ திருச்சபைகளின் நிருவாகத்தின் கீழ் 750ற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்கின.
- கத்தோலிக்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவென மக்கோனா, போலவலானை, கொழும்புத்துறை போன்ற இடங்களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் நிறுவப்பட்டன.
- கத்தோலிக்கத் திருச்சபையின் கல்வி நிறுவனங்களைக் கண்காணிக்க பல ஆண், பெண் துறவற சபைகள் முன்வந்தன. அவையாவன.

1. ஆசீர்வாதப்பர் சபையினர்
2. அமலமரித் தியாகிகள் சபை
3. இயேசு சபையினர்
4. டி லா சால் சகோதரர்கள்
5. மாறிஸ்ட் சகோதரர்கள்
6. திருக்குடும்பக்கன்னியர் சபை
7. நல்லாயன் கன்னியர் சபை
8. பிரான்சிஸ்கன் கன்னியர் சபை
9. அன்புக் கன்னியர் சபை
10. அப்போஸ்தலிக்கக் கார்மேல் கன்னியர் சபை

- அத்தோடு சுதேச மொழிகளில் கல்வித் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக மக்கோனாவிலும், மாத்தளையிலும் புனித பிரான்சிஸ்கு சபை சகோதரர்கள், யாழ் கொழும்புத்துறையில் புனித வளனார் சகோதரர்கள், புனித சவேரியார் அருட்சகோதரிகள் போன்ற சபைகளும் இலங்கையிலே நிறுவப்பட்டன.
- இவ்வாறு கத்தோலிக்க மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறந்த கல்வியானது கத்தோலிக்கத் திருச்சபையில் தரத்தை உயர்த்தி அதை மிக வலிமையுள்ள நிறுவனமாக்கியது.
- மேலும் கிறிஸ்தவர்களை மறை அறிவிலும் உருவாக்கத்திலும், சமூகப் பொருளாதார நலன்களிலும் உயர்ந்தவர்களாக்கி அரச, தனியார்த் துறைகளில் உயர் பதவிகளைப் பெற வழிவகுத்தது. ஏனைய மதத்தவருக்கு இது ஒரு பெரும் சவாலாகவே இருந்தது.

### 9.3.1.2 கிறிஸ்தவக் கல்வியியலாளர்கள் :-

- திருச்சபை கல்வித் துறைக்கு அதிக பங்களிப்புச் செய்து இருக்கின்றது.
- இன்று இலங்கை, தென் கிழக்காசியாவிலேயே படித்தவர்களின் தொகை விகிதாசாரப்படி 92% பெற்று முதலிடத்தில் இருக்கின்றது என்றால், அதில் கிறிஸ்தவ கல்விமான்களினதும் துறவிகளினதும் பங்களிப்பும் உள்ளது எனக் கூறலாம்.

i. ஆயர் பொன்ஜின் அ.ம.தி
ii. அருட்பணி. சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி
iii. அருட்பணி பீற்றர் பிள்ளை அ.ம.தி
iv. ஆயர் எட்மன் பீரிஸ் அ.ம.தி
v. அருட்பணி H.S. தாவீது
vi. அருட்பணி S.G. பெரேரா
vii. திரு வில்லியம் விக்கிரமசிங்க
viii. திரு. R.S.D. சேரம்

### i. ஆயர் பொன்ஜின்

**வாழ்க்கை**

- 1823ஆம் ஆண்டு பிரான்சில் ரியோம் நகரில் பிறந்தார். 1846இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1847இல் பிரான்சில் இருந்து வருகை தந்து இந்தியாவிலுள்ள கோயம்புத்தூரில் பல பங்குகளிலும் பணிபுரிந்தார். அத்தோடு அயர்லாந்து படைவீரர்களுக்கும் பணிபுரிந்தார். இங்கு 9 ஆண்டுகள் மறைமாவட்டக் குருவாகப் பணியாற்றினார். அதன் பின்பு 1957இல் யாழ் நகருக்கு வருகை தந்து, 1858இல் அமல மரித் தியாகிகள் சபையில் இணைந்துகொண்டார்.

**ஆற்றிய பணிகள்:**

- ஆயர் பெற்றக்கினியின் மறைவைத் தொடர்ந்து ஆயர் செமேரியா யாழ்ப்பாணத்தின் திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். பொன்ஜின் அடிகளார் ஆயர் செமேரியாவின் உடன் உழைப்பாளியாக இருந்து பணியாற்றினார்.
- ஆயர் செமேரியாவின் மறைவைத் தொடர்ந்து அருட்பணி பொன்ஜின் திருத்தந்தை 9ஆம் பத்திநாதரால் யாழ்ப்பாணத்திற்கான திருத்தந்தையின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1868இல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கல்வி, அச்சுப்பணி, ஆலயங்களைக் கட்டுதல் போன்ற பணிகளை முன்னெடுத்துச் சென்றார். 1869இல் 1ஆம் வத்திக்கான் சங்கத்தில் கலந்து கொண்டார். 1871 இல் யாழ்ப்பாணத்தில் குருமடத்தை உருவாக்கினார். 1876இல் யாழ்ப்பாணத்தில் "பாதுகாவலன்" என்ற வாராந்தப் பத்திரிகையை ஆரம்பித்து வைத்தார்.
- 58 சுற்றுமடல்களை எழுதியுள்ளார். 1868இல் யாழ்ப்பாணத்தில் 5000 இறைமக்களும் 22 பங்குகளும் 14 மிசனரிமாரும் 31 பாடசாலைகளும் 9 பெண் துறவியரும் காணப்பட்டனர். ஆனால் 1883இல் 80000 இறைமக்களும் 50 பங்குகளும் 23 மிசனரிமாரும் 46 பெண் துறவியரும் (29 சுதேசிகள்) 113 பாடசாலைகளும் 1 கல்லூரியும் 1 குருமடமும் கத்தோலிக்க செய்தி பத்திரிகையும் அச்சகமும் காணப்பட்டது.

- கொழும்பிலே ஆயராக நியமனம் பெற்றுப் பணியாற்றினார். அங்கு புனித பேனாட் குருமடத்தையும், ஆசிரியர் பயிற்சிச் கலாசாலையையும் தோற்றுவித்தார். 1884இல் மக்கோனாவில் (வலுக் குறைந்தோருக்கான) தொழிற் பயிற்சிப் பாடசாலையையும் உருவாக்கினார். 1891 இல் கொழும்பில் புனித யோசப் கல்லூரியின் கட்டடப்பணியை ஆரம்பித்தார். இவருடைய கல்விப் பணியினால் 140 ஆக இருந்த பாடசாலைகள் 200 ஆக அதிகரித்தது. ஆயர் பொன்ஜின் இலங்கையின் கல்வி பற்றி ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளின் பயனாக சுதேச மொழிப் பாடசாலைகளும், அரச நன்கொடை பெறும் மதப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவர் 1892 இல் கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

### ii. அருட்பணி. சுவாமி. ஞானப்பிரகாசர் (அ.ம.தி)

**வாழ்க்கை**

- நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1875 ஆண்டு ராஜசிங்கம் சுவாமிநாதன், தங்கமுத்து தம்பதிகளின் தவப்புதல்வனாக யாழ். மானிப்பாயில் பிறந்தார். அவர்கள் இருவரும் இந்துக்கள். ஆரம்பத்தில் இவர் வைத்திலிங்கம் என்றழைக்கப்பட்டார். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். அதன்பின் இவருடைய தாயார் யாழ். அச்சுவேலியைச் சேர்ந்த தம்பி முத்துப்பிள்ளை என்ற கத்தோலிக்கரை மணந்து கொண்டமையினால், வைத்திலிங்கம் கத்தோலிக்க மறையில் சேர்க்கப்பட்டு ஞானப்பிரகாசர் என்ற பெயரைப் பெற்றார்.
- இவர் தன் பாடசாலைக் கல்வியினை முடித்துக்கொண்டு இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் அரச அலுவலராகப் பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் யாழ் நகரில் பணிபுரிந்து வந்த அருட்தந்தை சாள்ஸ் என்பவரைச் சந்தித்தார். தன் அரச அலுவலர் பணியைத் துறந்து, அமல மரித் தியாகிகள் சபையில் இணைந்து 1901இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**ஆற்றிய பணிகள்:**

- கி.பி. 1902இல் ஊர்காவற்றுறைப் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாக தம் பணியை ஆரம்பித்த அடிகளார் பின் யாழ். மரியன்னை பேராலயத்திலும் பணிபுரிந்து, 1905இல் நல்லூர்ப் பங்கிற்குப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டு மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இந்துக்களை மனமாற்றினார்.
- தமிழ்மொழியில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த சுவாமி ஞானப்பிரகாசர் அம்மொழி பற்றி பல ஆட்சிகளை மேற்கொண்டு அதன் தனித்துவத்தையும், சிறப்பையும் எடுத்துக்காட்டினார்.
- தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் பல நூல்களை எழுதியதோடு, தமிழ் அகராதிகளையும் எழுதியுள்ளார்.
- இவர் தமிழ் மொழியில் எழுதிய சில நூல்களாவன.
    1. யாழ்ப்பாண வைபவ மாலை ஊற்றுக்கள்.
    2. போர்த்துக்கேயக் கால அரசர்கள்.
    3. யாழ்ப்பாண வைபவ விமோசனம்.
    4. யாழ் வரலாற்றுக் கல்வி ஊற்றுக்கள்.
    5. 25 ஆண்டுகள் கத்தோலிக்கத்தின் வளர்ச்சி.
- இவற்றைவிடப் பல தமிழ் அகராதிகளையும் எழுதியுள்ளார். இவர் பல மொழிகளை நன்கு கற்றிருந்தமையினால் “பன்மொழிப் புலவர்” என அழைக்கப்படுகிறார்.
- இவ்வாறாக இவர் தமிழ்க் கலை, கலாசாரத்திற்குப் பல பணிகளைப் புரிந்துள்ளார். 1947ஆம் ஆண்டு இறைபதமடைந்தார்.

### iii. அருட்பணி பீற்றர் பிள்ளை

**வாழ்க்கை**

- அருட்பணி பீற்றர் பிள்ளை அவர்கள் 1904ஆம் ஆண்டு சிலாபத்திலுள்ள வென்னப்புவ எனுமிடத்தில், யாழ் நகரைச் சார்ந்த ஜேக்கப், ஆனாப் பிள்ளை என்பவர்களின் புதல்வராகப் பிறந்தார்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை 1914ஆம் ஆண்டு கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியிலே பயின்றார். 1920ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றார். 1923இல் B.A பரீட்சையில் தேறி, ஒரு கலைப் பட்டதாரி ஆனார். அதன் பின் M.A, MSc பரீட்சைகளிலும் சித்தி பெற்றார்.
- 1934இல் அமல மரித் தியாகிகள் சபையில் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1936 இல் உரோமாபுரியில் இறையியல் கலாநிதிப் பட்டமும் பெற்று ஒரு பெரிய கல்விமானாக இலங்கைக்குத் திரும்பினார்.

**ஆற்றிய பணிகள்:**

- இலங்கையில் தனது முதற் பணியாகக் கொழும்பு மறைமாவட்டத்தில் புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். இவர் இளம் வயதிலே சமூகப்பணியில் மிகவும் ஆர்வம் கொண்ட குருவாகக் காணப்பட்டார். அக்காலப் பகுதியிலேதான் 1936இல் **"கத்தோலிக்கச் சமூகப்பணிக் கழகத்தை"** ஆரம்பித்தார்.
- 1940இல் கொழும்பு மறைமாவட்டத்தில் தூய வளனார் கல்லூரியின் 5ஆவது அதிபராக நியமனம் பெற்றார். தகைமையுடைய அனைத்து உயர்தர மாணவர்களுக்கும் உயர் கல்வி பயிலும் வாய்ப்புக் கிட்ட வேண்டும் என்பதே இவரது நீண்ட கால கனவாக இருந்தது. ஆனால் இலங்கை அரசு போதிய பல்கலைக்கழக வசதி இல்லாத காரணத்தினால் க.பொ.த.(உ/த) பரீட்சையில் அதிக புள்ளி பெற்றவர்களுக்கு மாத்திரமே உயர் கல்வியை வழங்கியது.
- ஆகையால் 1954இல் அக்குவனைஸ் உயர்தரக் கல்லூரியை கொழும்பு பொரளையில் நிறுவி அரச பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தின் ஊடாக உயர் கல்வியைப் பெற வழிசமைத்தார். அவரே அதன் முதல் அதிபராகவும் பணியாற்றினார்.
- சகலராலும் கல்விமானாக மதிக்கப்பட்ட அருட்தந்தையவர்கள், கொழும்பிலுள்ள கல்விமான்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி **"சவேரியன்ஸ்"**(Xaverians) என்றழைக்கப்பட்ட கல்விமான்களுக்கான ஓர் அமைப்பையும் உருவாக்கினார்.
- இவர் சமூக நீதியை மையமாக வைத்து 14ற்கும் குறையாத நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்ல சிறந்த கட்டடக் கலைஞரும், சமூகப் பணியாளரும் சிந்தனையாளருமாவார்.
- இவரின் பணியின் பொருட்டு இலங்கை அரசு இவரது உருவம் கொண்ட முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. இவர் 1964இல் இறைவனடி சேர்ந்தார்.

### iv. ஆயர் எட்மன் பீரிஸ் அ.ம.தி.

**வாழ்க்கை**

- ஆயர் எட்மன் பீரிஸ் அவர்கள் 1887ஆம் ஆண்டு சிலாபத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை சிலாபம் புனித மரியாள் கல்லூரியிலே பயின்றார். 1924ஆம் ஆண்டு அமல மரித் தியாகிகள் சபையிலே குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தனது 42ஆவது வயதிலே 1940ஆம் ஆண்டு சிலாபம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரே இலங்கையின் **முதல் சுதேச ஆயராகவும், முதல் சிங்கள ஆயராகவும்** காணப்பட்டார். இவர் இலண்டன் பல்கலைக்கழகத்திலே கீழைத்தேய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.

**ஆற்றிய பணிகள்:**

- இவர் இலங்கைத் திருச்சபையை அந்நிய கலை, கலாசாரங்களில் இருந்து விடுவித்து இலங்கையின் கலை, கலாசாரங்களுக்கு ஏற்ப அதனை மாற்றியமைத்து வளர்க்க அரும்பாடுபட்டவராவார்.
- இவர் ஒறற்தோறியன் சபைக் குரு யாக்கோமே கொன்சால்வேசால் இயற்றப்பட்ட பல செபங்களை, தேவ காவியங்களை நாட்டின் கர்நாடகத் தாளம், நாட்டுக் கூத்துத் தாளம் போன்றவற்றிற்கு ஏற்ப திருத்தி எழுதினார்.
- இவர் 16 நூல்களையும் 250ற்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள நூல்களில் பெரும்பாலானவை போர்த்துக்கேய, ஒல்லாந்த மொழிகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவையாகும்.
- 1960இல் மத்தேயு நற்செய்தியை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தார். (இது இன்றுவரை சிறந்த மொழிபெயர்ப்பாகத் திகழ்கின்றது).
- இவர் அரச தொல்பொருள் ஆலோசகர் குழு, கொழும்பு பல்கலைக்கழக கீழைத்தேய கல்விக் குழு, கல்வி வெளியீட்டுச் சபை, சிரித் விரித் குழு ஆகியவற்றின் உறுப்பினராய் இருந்தார்.
- இவர் ஆசிய றோயல் ஏசியாடிக் குழுவில் அங்கத்தவராகவும் பணிபுரிந்தார். இவர் இலங்கையின் கலாசாரத்தைப் பற்றி எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் இவர்களது சஞ்சிகையிலே பிரசுரிக்கப்பட்டன.
- கத்தோலிக்க திருச்சபையின் வழிப்பாட்டுச் சங்கீதத்திலே மிகுந்த அக்கறை எடுத்த இவர், பல வழிபாட்டுப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.
- அமல மரித் தியாகிகளால் தொடங்கி நடாத்தப்பட்டு வரும் **“பக்தி பிரபோதன”** என்ற சிங்கள சஞ்சிகையின் ஆசிரியராக 1927 – 1930 களில் கடமையாற்றினார். இதுவே இலங்கையில் வெளியிடப்படும் நீண்ட காலச் சிங்களச் சஞ்சிகையாகும்.
- இவர் 1970களில் பாடசாலைகள் அரச மயமாக்கப்பட்ட போது “சிங்கள மொழியில்” கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் அளித்தார்.
- இவர் 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னரே சுதேச கலாசாரத்திற்கு இணங்க வழிபாடுகள் அமைய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார். இவர் 1989 இல் இறைவனடி சேர்ந்தார்.

## v. அருட்பணி H.S. தாவீது

**வாழ்க்கை**

- தாவீது அடிகளார் பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை என்னும் இடத்தில் ஆபிரகாம் பிள்ளை, எலிசபெத் தம்பதிகளின் தவப்புதல்வனாக 1907ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலே பயின்றார். பாடசாலைக் காலத்திலே அறிவிலும் சிந்தனையிலும் சிறந்து விளங்கினார். இவர் யாழ் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கலைமாணிப்பட்டத்தையும் பெற்றார்.
- தனது பட்டப்படிப்பை நிறைவுசெய்த பின்பு, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராக நியமனம் பெற்றார். அக்காலப் பகுதியிலே சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ்ப் பணியினால் கவரப்பட்டு அவரது ஆலோசனைக்கேற்ப முதலில் சமஸ்கிருத மொழியை நன்கு கற்றார். அதுமட்டுமன்றி 1947-1952 வரையில் இந்தியா சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் பாளி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளில் ஆராய்ச்சி செய்து, அம்மொழிகளில் தேர்ச்சியும் பெற்றார். இவ்வாறு இவர் 35 மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

**ஆற்றிய பணிகள்:**

- 1950 இல் ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றினார். இவர் சிறந்த கல்விமானாகவும் மக்களை நேசித்த ஒரு சிறந்த குருவானவருமாவார்.
- நல்லூர் ஞானப்பிரகாசர் இறந்த பின்பு, அவர் தொடக்கி வைத்த தமிழ் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதிப் பணியைத் தொடர்ந்து ஆற்றினார்.
- தமிழ் மொழி ஆய்வுகளிலே சுவாமி ஞானப்பிரகாசர், அருட்பணி தனிநாயகம் போன்ற பெரியோரைப் போலப் பல ஆய்வுகளை நடத்தியுள்ளார்.
- இவர் தான் தொடங்கிய பணியைத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு தன்வசம் இருந்த ஆயிரக் கணக்கான நூல்களை யாழ் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.
- 1981 இல் யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட கொடிய செய்தியைக் கேள்வியுற்றதும் மாரடைப்பால் உயிர் துறந்தார்.

### vi. அருட்பணி S.G. பெரேரா

**வாழ்க்கை**

- சைமன் கிரகோரி பெரேரா அடிகள் 1882ஆம் ஆண்டு களுத்துறையில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து கொழும்பு புனித வளனார் கல்லூரி, வெஸ்லி கல்லூரியிலும் தன் கல்வியைத் தொடர்ந்தார். பாடசாலைக் கல்வி நிறைவு பெற்றதும் இரத்தினபுரி காணிப் பதிவு அலுவலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது தான் தனது 23ஆவது வயதிலே இயேசு சபையிலே சேர்ந்து தன் குருத்துவக் கல்வியைத் தொடர இந்தியா சென்றார். 1917ஆம் ஆண்டு இயேசு சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவரே இயேசு சபையிலே திருநிலைப்படுத்தப்பட்ட **முதல் சுதேச குருவாவார்.**

**ஆற்றிய பணிகள் -**

- உரோமையுள்ள கிரகோரியன் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.
- காலி மறைமாவட்டத்தில் முதலாவது சிங்கள குருமுதல்வராகப் பணியாற்றினார். அத்துடன் காலி புனித அலோசியஸ் கல்லூரி ஆசிரியராகவும், மாத்தறை புனித சேவாசியுஸ் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றினார்.
- இவர் சிங்களம், ஆங்கிலம் மேலும் சில ஐரோப்பிய மொழிகளையும் நன்கு கற்றறிந்தார். இவர் மொழி பெயர்த்த நூல்களில் சிறப்பானவை, போர்த்துக்கேய மொழியில், பேர்மா டி குவேறோஸ் (Ferma De Queros) என்பவரால் எழுதப்பட்ட நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- இவற்றை விட பல சிங்கள நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சிங்களக் கலை, கலாசாரம், வரலாறு என்பவற்றை உலகறியச் செய்துள்ளார். இவற்றுள் தலைசிறந்தது **"சுபசித்த வமனவ"** என்ற நூலை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்ததாகும்.
- இவர் பல நூல்களையும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய இலங்கை வரலாறு (Ceylon story) என்ற ஆங்கில நூல் நீண்ட காலமாக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுப் பாட நூலாகத் திகழ்ந்தது.
- இவர் இலங்கை இலக்கியப் பதிவேட்டின் ஆசிரியராகவும், இங்கை வரலாற்றுக்குழு றோயல் ஏசியாற்றிக் சொசையிற்றி (Royal Asiatic Scociety) ஆகியவற்றின் அங்கத்தவராகவும் பணிபுரிந்தார்.
- இவர் இலங்கை வரலாற்றில் புரிந்த சேவையைப் பாராட்டி 1983இல் இலங்கை அரசு இவரது உருவம் தாங்கிய தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டது. இவர் 1950 இல் இறைவனடி சேர்ந்தார்.

### vii. அருட்பணி வில்லி விக்கிரமசிங்க

**ஆற்றிய பணிகள்:**

- இவர் கல்விக்காக ஆற்றியுள்ள பணிகள் மகத்தானவை.
- உயர்கல்வியைப் பெற்ற இவர் இந்தியாவில் செரெம்பூர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பெரும் பணியாற்றியுள்ளார்.
- இலங்கை பிலிமத்தலாவையிலுள்ள இறையியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.
- நிறைவான ஒரு ஆளுமையுள்ள மாணவனை உருவாக்குவதற்குக் கல்வியைப் போன்று விளையாட்டும் தேவை என்பதை உணர்ந்த இவர் அதற்காக அயராது உழைத்தார்.
- ஓய்வு பெற்ற பின்னரும் கேரி கல்லூரியின் நிர்வாக முகாமைத்துவ சபையில் அங்கத்துவம் வகித்து கல்விக்காகப் பாரிய பணியினை நிறைவேற்றியுள்ளார்.

### viii. அருட்பணி. R.S.D. சேரம்

**வாழ்க்கை**

- அருட்பணி R.S.D. சேரம் கல்கிசையிலுள்ள பரிசுத்த தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். 1918 இல் இங்கிலாந்திற்குச் சென்ற இவர் ஒக்ஸ்பாட் பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டதாரி ஆனதோடு, பின்பு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பல்வேறு பகுதியிலுள்ள ஆலயங்களில் பணியாற்றிய இவர் கல்விக்காக ஆற்றிய பணி அளப்பரியது.

**ஆற்றிய பணிகள்:**

- கல்கிசையில் உள்ள பரிசுத்த தோமஸ் கல்லூரியில் 1925இல் ஆசிரியராகவும் பின் பிரதி அதிபராகவும் 1923இல் அதிபராகவும் பணியாற்றினார்.
- இவர் பரிசுத்த தோமஸ் கல்லூரியில் பன்முக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புக்களைச் செய்து புதிய கட்டிடங்களைக் கட்டியதோடு மாணவர்களுக்கான விடுதிகளையும் திறந்து வைத்தார். கல்வியின் அனைத்துப் பிரிவுகளுக்கும் கைகொடுத்தார்.
- பல்வேறு விளையாட்டுக்கள், நீச்சல் விளையாட்டுப் போட்டிகள், குத்துச்சண்டை, ரெனிஸ் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதில் உதவி செய்தார்.
- பல்வேறு கழகங்கள், சங்கங்களை ஆரம்பித்ததோடு பேச்சாற்றலைக் கட்டியெழுப்புவதிலும் செயலாற்றியுள்ளார்.
- பாடசாலையின் சூழலை மிகவும் விருப்பத்திற்குரிய இடமாக வைப்பதன் வழியாக மாணவருடைய கல்வியை விருப்பமுள்ள ஒன்றாக நிலைநாட்டுவதற்கு இடையறாது முயற்சிகளை மேற்கொண்டார்.

### 9.3.2 பாடசாலைகள் அரச மயமாக்கப்படல்

- 1960ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய கல்வித்துறை மசோதாவின் காரணமாக அமைக்கப்பட்ட **கல்விப் பொதுத் திணைக்களத்தின் வழியாக** கிறிஸ்தவ திருச்சபை கிறிஸ்தவர்களை மறை அறிவிலும், உருவாக்கத்திலும், அறிவிலும் சமூகப் பொருளாதார நலன்களிலும் உயர்ந்தவர்களாக்கி அரச, தனியார் துறைகளில் உயர் பதவிகளைப் பெற வழிவகுத்தது.
- கிறிஸ்தவ திருச்சபையின் இம்மேன்மையான முன்னேற்றத்தை சகித்துக் கொள்ளாத பெரும்பான்மையினராக இருந்த சமூகத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்தது.
- அதுமட்டுமல்லாது, அக்காலத்தில் ஏற்பட்ட பௌத்த இந்து மத மறுமலர்ச்சியும் காரணமாக இருந்தது.
- இதன் விளைவாக 1954ஆம் ஆண்டு பௌத்த மதத்தை வளர்த்து, அதனை வலிமைப்படுத்த **"பௌத்த ஆணைக்குழுவை"** நியமித்தனர்.

- கிறிஸ்தவப் பாடசாலைகளின் தராதரம் உயர் நிலையில் இருந்தமையால் நாட்டின் உயர் பதவிகளெல்லாம் கிறிஸ்தவர்களுக்கே கிடைத்தது. ஆகவே பல பௌத்த மாணவர்கள் அப்பாடசாலைகளையே நாடினர்.
- பௌத்த ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் 1960இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அதனுடைய அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு 750ற்கும் மேற்பட்ட கத்தோலிக்க, கிறிஸ்தவப் பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டன.

### 9.3.2.1 பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட விளைவுகள்:-

- 700ற்கும் மேற்பட்ட பங்குப் பாடசாலைகள், அதன் காணிகள் கட்டங்கள், தளபாடங்கள் அனைத்தும் எவ்வித நஷ்ட ஈடுமின்றி பறிமுதல் செய்யப்பட்டன.
- கிறிஸ்தவ மாணவர்களுக்குக் கிறிஸ்தவ சூழலில் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.
- ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டன.
- 40 உயர்தர தனியார் பாடசாலைகள் நிதியுதிவியின்றி அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.
- அனேக பாடசாலைகள் எவ்வித மதமுமற்ற, மதச் சூழலற்ற பாடசாலைகளாகக் காணப்பட்டன.
- கிறிஸ்தவ திருச்சபைக்கு தம் மக்களுக்கு தம் மதத்தைக் கற்பித்து, தம் மத முறைப்படி வளர்த்து உருவாக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- தம் மத ஆசிரியர்களை நியமிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- பாடசாலைகளில் மறைக்கல்விக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் குறைக்கப்பட்டது.

### 9.3.2.2 பாடசாலை அரச மயமாக்கப்பட்டமையால் ஏற்பட்ட நன்மைகள்

- பெற்றோர் தம் பிள்ளைகளின் மறைக்கல்வியில் முன்னரிலும் பார்க்கக்கூடிய கரிசனை எடுத்தனர்.
- தேசிய மறைக்கல்வி நிலையம் நிறுவப்பட்டது.
- ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைக்கல்வி நடுநிலையங்கள் அமைக்கப்பட்டு, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மறையாசிரியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்களின் துணையுடன் பெரும்பணி ஆற்றப்பட்டது.
- பங்கு ரீதியில் மறைப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- விவிலிய வகுப்புக்கள், பாசறைகள் கருத்தரங்குகள் போன்ற பல போதனா முறைகளைக் கையாண்டு மறைக்கல்வி கற்பிக்கப்பட்டது.
- நிழற்படக் காட்சிகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள் போன்ற ஊடகங்கள் பெரிதளவில் பயன்படுத்தப்பட்டன.
- புதிய பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.
- பங்குத்தந்தை, பெற்றோர், மாணவர்களுக்கு இடையில் நெருங்கிய உறவு, தொடர்பு ஏற்பட்டது. பொதுநிலையினர் தம் பணிகளை உணர்ந்து செயற்பட்டனர்.

### 9.3.3 இலங்கைச் சமுதாயத்தில் நலன்புரிச் சேவைகள்.

- கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு சமூகத்தின் பொது நன்மைக்காகச் செயலாற்றுவதும் சமூக நலனுக்காகப் பங்களிப்புச் செய்வதும் கிறிஸ்தவ பொறுப்பாகும்.
- சமூக நலனென்பது பௌதீக அபிவிருத்தி மட்டும் முக்கிய இடத்தைப் பெறுவதல்ல. ஒரு மனிதன் முழுமையான மனிதனாகச் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான அம்சங்களை ஒழுங்கமைத்துக் கொடுப்பதாகும்.
- இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் கௌரவத்தை மேலோங்கச் செய்வதற்காகச் செயலாற்ற உதவுவதாகும்.

- இலங்கையின் வரலாற்றிலே விசேடமாக இன்று இந்தக் கண்ணோட்டத்திற்கேற்ப கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு இன, மத, சாதி ஆகிய பேதங்களைக் களைந்து சமூக நலனுக்கும் மனித அபிவிருத்திக்குமான செயல்களில் ஒரு சபையாகவும் பல்வேறு இயக்கங்களாகவும், அமைப்புகளாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- எனினும் மனிதன் ஆன்மாவை மட்டும் கொண்டவனல்ல, உடலையும் கொண்டவன். எனவே ஆன்மீகத் தேவைகளைப் போன்றே உடல் சார்ந்த தேவைகளும் உள்ளன. மனிதத்துவத்திற்குக் கௌரவம் ஏற்படும் வண்ணம் வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் கருத்திற் கொண்டு செயற்பட்டனர்.
- ஆரம்பத்தில் இருந்தே திருச்சபை மனித தேவைகளை நிறைவேற்றுவதற்காக இரக்கச் செயல்களில் ஈடுபடும் பணி புரிந்ததென்பதைக் காணக்கூடியதாக இருந்தது.
- இன்றைய திருச்சபையில் பங்கு மற்றும் கிறிஸ்தவ ஆலய மட்டங்களிலும் துறவறச் சபைகள், குருக்கள், ஆயர்கள் ஆகியோரின் உதவியோடு இவ்வாறான அனேக இரக்கப்பணிகள் நடைமுறையிலுள்ளன. இவை பல்வேறு நிறுவனங்கள் அமைப்புக்கள் வழியாகச் செயற்படுகின்றன.
- இவ்வமைப்புக்களான கிறிஸ்தவ சமூக நலன்புரி இரக்கப்பணி நிறுவனங்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

    1. **கரிதாஸ் இலங்கை செடேக் (SEDEC)**
    2. **புனித வின்சன் டி பவுல் இரக்கப்பணி**
    3. **கிறிஸ்தவ இளைஞர் கழகம் (Y.M.C.A)**
    4. **கிறிஸ்தவ மகளிர் கழகம் (Y.W.C.A)**

### 1. கரிதாஸ் இலங்கை செடேக் (SEDEC)

- அண்மைக்கால வரலாற்றிலே இந்நாட்டின் கத்தோலிக்க அன்புப் பணிகள், சமூக அபிவிருத்தி நலன்புரிச் செயல்கள் என்பவற்றை அவதானிக்கும் போது இலங்கை ஆயர் பேரவையின் கீழ் செயற்படுகின்ற கத்தோலிக்கத் திருச்சபையின் சமூகப்பணிப் பிரிவான கரிதாஸ் (இலங்கை) செடேக் நிறுவனம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
- 1968 இல் நிறுவப்பட்டு சகல மறைமாவட்டங்களிலும் பல்வேறு மனிதநேயச், சமூக, நலன்புரிப் பணிகளை ஆற்றி வருகின்றது.
- குறிப்பான மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகத் தேவைகளை நிறைவு செய்தல், மானிட அபிவிருத்தி, நீதியுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டங்கள், செயற்பாடுகள் வழியாக பங்களிப்புச் செய்கின்றது.

### 2. புனித வின்சன் டி பவுல் இரக்கப்பணி

- சர்வதேச மட்டத்தில் செயற்படும் இந்த இரக்கப்பணி இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மத்திய சபையை முதன்மையாகக் கொண்டு பங்கு மட்டத்தில் செயற்படுகின்றது.
- ஆலய மட்டத்தில் பொதுநிலையினர் ஒன்றிணைந்து அர்ப்பணமுள்ளோரின் உதவிகளின் வழியாக இரக்கச் செயல்களில் ஈடுப்பட்டுள்ளதைக் காணலாம்.

### 3. கிறிஸ்தவ இளைஞர் கழகம் (Y.M.C.A)

- பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் அங்கத்தவர்கள் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள தேசியக் கிறிஸ்தவ சங்கங்களோடு இணைந்து சமூகப் பணிகளிலும் இரக்கப் பணிகளிலும் ஈடுபடும் நிறுவனம் இதுவாகும்.

### 4. கிறிஸ்தவ மகளிர் கழகம் (Y.W.C.A)

- பல்வேறு சமூகப் பணிகளிலும், இரக்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள பல்வேறு கிறிஸ்தவச் சபைகளின் அங்கத்தவர்கள் (பெண்கள்) தேசிய கிறிஸ்தவச் சங்கத்துடன் இணைந்து செயற்படும் ஒரு நிறுவனமாகும்.

### 9.3.3.1 மருத்துவப் பணி

- ஆரம்பத்தில் இருந்தே குணமாக்கல், திருச்சபையின் பணிகளில் ஒன்றாக இடம்பெற்று வருகிறது. அதில் ஓர் அங்கமாகவே திருச்சபையின் பணிகளில் மருத்துவப் பணியும் இடம்பெறுகின்றது.
- **கிறீன் மருத்துவமனை** இலங்கையில் வந்த அமெரிக்க மிஷனரி சபையினர் சமயத்துறையிலும், கல்வித் துறையிலும் தம் பணியை ஆற்றியது மட்டுமன்றி மருத்துவப் பணியையும் ஆரம்பிக்கத் தொடங்கினர்.
- அதனிமித்தம் 1820 இல் பண்டத்தரிப்பில் அவர்களது 1ஆவது மருத்துவமனை நிறுவப்பட்டது. 1847ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து வருகைதந்த வைத்திய கலாநிதி கிறீன் தம் மருத்துவப் பணியை ஆரம்பித்தார்.
- விரைவிலே சமய வேறுபாடுகளின்றி அனேகர் கிறீன் வைத்தியரிடம் வரத்தொடங்கினர்.
- 1848இல் அவர் மானிப்பாயில் நிறுவிய மருத்துவமனை அமெரிக்க மிஷனின் மத்திய மருத்துவமனையாகத் திகழ்ந்தது. அதற்கருகில் மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் **மருத்துவப் பல்கலைக்கழகமாகும்.** இது இன்று கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை என்று அழைக்கப்படுகிறது.

### 9.3.4 சமூக நீதிப்பணி

- ஒரு சமுதாயத்தின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அச்சமுதாயத்தில் பேணப்படும், கட்டியெழுப்பப்படும் அமைதியிலும் புரிந்துணர்விலும் தங்கியுள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில் மனித உரிமைகளைக் களங்கப்படுத்தல், மீறுதல், பறித்தல் போன்ற மனித மாண்பிற்கு முரணான சம்பவங்கள் இடம்பெற்று வருவது யாராலும் மறுக்க முடியாத ஒன்றாகும்.
- இதனை மையமாகக் கொண்டு இலங்கையில் திருச்சபை இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அமைதிக்காகவும், சமத்துவத்திற்காகவும் சகல இனத்தவருக்கும் அறிவுரை கூறி பல்வேறு இன, சமூகக் குழுக்களின் சம உரிமைகளுக்கும், நீதிக்கும் குரல் கொடுத்த சந்தர்ப்பங்கள் பலவாகும். அவையாவன:

  1. 1983இல் நிகழ்ந்த இனக்கலவரத்தின் பின் அமைதிக்கான சவால்கள் தொடர்பாக 1984ஆம் ஆண்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் "இலங்கை மக்களை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கி" என்ற அறிக்கையை வெளியிட்டது.
  2. இலங்கைத் திருச்சபையின் குருநாகல் மாவட்ட ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க அவர்கள் 1983 யூலை மாதத்தில் நிகழ்ந்த வன்முறைகளைப் பற்றி ஆராய்ந்து "கண்ணுக்கு கண் பல்லுக்குப்பல்" என்ற இனப் பழிவாங்கல்களுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்று சுட்டிக் காட்டினார்.
  3. 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் போர் நாளுக்கு நாள் இடம்பெற்று வரும் வன்செயல்கள் ஆகியவற்றிற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து கலந்துரையாடல் வழியாக அமைதியான தீர்வொன்றிற்கு வரும்படி உரிய பகுதியினருக்கு வலியுறுத்திய திருச்சபையின் பரிந்துரைகளும் அறிவுரைகளும் அடங்கிய கோரிக்கைகள் வெளியிடப்பட்டன.
  4. மேலும் போர்க்காலத்தில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் குறிப்பாக அநியாயமாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பதற்கு எதிராகவும் குரல் எழுப்பியது.

5. தொழில்சார் உரிமைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக வேலை இழந்தோர், 1980 யூலை வேலை நிறுத்தம் செய்வோரின் வேலைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக குரல் எழுப்பித் திருச்சபை அவர்களுக்குப் புகலிடம் அளித்தது.
6. சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரிபவர்களின் முக்கியத்துவத்தைத் திருச்சபை மிகத் தெளிவுப்படுத்தித் தொழிலாளர்களின் உரிமைகளை ஆட்சியாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து தொழிலாளர்களின் உரிமைகளுக்காக முன்னின்று உழைத்தது.
7. இக்காலகட்டத்திலே கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு தம் சகோதர மக்களின் நலனுக்காகவும் நற்பணிக்காகவும் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் மனித உரிமைகளுக்காகவும் சமூக நலனுக்காகவும் அர்ப்பணத்துடன் ஈடுபட்ட சில துறவறத்தோரைப் பற்றிக் கீழே நோக்குவோம்.

### i. ஆயர் லியோ நாணயக்கார (1917 – 1982) புனித சில்வஸ்டர் சபை (O.S.B)

**வாழ்க்கை**

- கண்டி மறைமாவட்டத்தினதும் பின்னர் பதுளை மறைமாவட்டத்தினதும் முதலாவது ஆயராகப் பணியாற்றிய இவர், இளம் குருவாகக் கண்டி தூய அந்தோனியார் கல்லூரியில் கடமையாற்றிய போது மாணவர்கள், இளைஞர்கள் தொடர்பான வாழ்க்கைத் தேவைகள் பற்றிய நடைமுறை அனுபவங்களைப் பெற்றிருந்தார்.
- 2ஆம் வத்திக்கான் பொதுசங்கத்தில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்ற இவர் அதன் கொள்கைகளின்படி தனது வாழ்க்கை இலட்சியங்களையும் கொள்கைகளையும் மாற்றிக் கொண்டு மக்களுக்காகப் பயணத்தை ஆரம்பித்தார்.

**சமூகப்பணி**

- பணிக்குருத்துவம் மலைநாட்டுச் சூழலுக்கும் கலாசாரத்திற்கும் அமைவாக 1970இல் பிரதேச மக்களின் பிரச்சனைகளையும் இதயத் துடிப்புக்களையும் அறிந்து கொள்ளும் குருத்துவப் பரம்பரையை உருவாக்கவெனப் பதுளை மறைமாவட்டத்திலே குருத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு என நடவடிக்கை எடுத்தார்.
- இன, மத, குல பேதமின்றி அனைவருக்கும் நல்ல ஆயனாக இருந்து, சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்குத் தோட்டத்தொழிலாளரின் பணியுடன் தொடர்புடைய பிரச்சினைகள், முரண்பாடுகள், தொழில்சார் சவால்கள் மத்தியில் அவர்களுக்கு அடைக்கலமுமானவர்.
- இளைஞரின் நலன் கருதி, தோட்ட தொழிலாளர்களை எழுச்சியுறச் செய்தல், மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, மனித உரிமைகளைப் பாதுகாத்தல், குறைந்த வசதிகளோடு வாழ்வோரின் கல்வி, சுகாதார வசதிகளுக்காக உழைத்தல் ஆகிய பல்வேறு துறைகளுக்குப் பங்களிப்புச் செய்தார். இவர் 1982ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### ii. ஆயர் இலக்ஷ்மன் விக்கிரமசிங்க (1927 – 1983)

**வாழ்க்கை**

- இந்நாட்டின் மனித உரிமைகளுக்காகவும் சமூக நீதிக்காகவும் பயமின்றி குரல் எழுப்பியவர்.
- இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் குருணாகல் மாவட்டத்தின் ஆயராக 1962 இல் நியமிக்கப்பட்டு 1983இல் மரிக்கும் வரை மக்களின் நல்லாயனாக இருந்தார். சமூகத்திலே பல்வேறுப்பட்ட தரங்களில், வாழ்க்கை நிலைகளில் இருந்த சகலரோடும் உறவைக் கட்டியெழுப்பிய இவர் அனைத்து சமயத்தவரோடும் புரிந்துணர்வோடும் உரையாடலோடும் வாழ்ந்து வந்தார்.

**சமூகப்பணி**

- சமூகப் பிரச்சினைகளுக்கும் குழப்பமான சந்தர்ப்பங்களிலும் துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார்.
- 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரின் இழந்த தொழிலை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக வலியுறுத்துதல், அவர்களின் கூட்டங்கள், எதிர்ப்புகளிலும் பங்குபற்றிப் பல்வேறு சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சமயத் தலைவர்களோடு இணைந்து பொது நோக்கத்திற்காகச் செயற்பட்டார். மேலும் விவசாயிகள் அனுபவித்த துன்பங்களுக்காகவும் குரல் எழுப்பினார்.
- 1983இல் யூலை இனவாதப் பிரச்சனைகளின் காரணமாக துன்புறுத்தல்களுக்குள்ளான தமிழ் மக்களுக்காக உரிமைகள் தொடர்பாகத் தெளிவான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு நியாயத்தைக் கேட்டுக் குரல் எழுப்பினார்.
- துன்புறுத்தல்களுக்குள்ளானவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஊக்கப்படுத்தினார்.
- இறையாட்சியின் மதிப்பீடுகளைச் சமூகத்தில் கட்டியெழுப்புவதற்குத் துணை நின்ற தூதுப்பணிக்கான உண்மையான கிறிஸ்தவ சாட்சியாளராகத் திகழ்ந்தார். 1983ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

### iii. அருட்பணி மைக்கல் ரொட்ரிக்கோ (அ.ம.தி)

**வாழ்க்கை**

- 1927இல் தெஹிவளையில் பிறந்தவர். 1954இல் அமல மரித் தியாகிகள் சபையில் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், ஒரு முதிர்ச்சி பெற்ற குருவாகச் சமூகப்பணியிலும் மதங்களுக்கிடையிலான உரையாடலிலும் தனது காலத்தினை செலவழித்தார். பௌத்த சமயத்தில் பாண்டித்துவமும், பாளி மொழியில் புலமையும் பெற்றார்.

**சமூகப்பணி**

- 1981இல் வெல்லஸ்ஸ பிரதேசத்தின் புத்தல என்னும் கிராமத்தில் "**சுப செத் கெதர**" குடிசையில் வாழ்ந்து பௌத்த கத்தோலிக்க மக்களோடு உரையாடும் மிகப் பாரிய பணியில் ஈடுபட்டார்.
- ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து அவர்களின் மனிதத்துவத்தை தேடியறிந்து அவர்களின் சமூகப் பொருளாதார கல்வி நிலையை மேம்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார்.
- கிறிஸ்தவ பௌத்த பன்முக உரையாடலை முன்னெடுத்தார்.
- சுதேச பிரதேச மண் வளத்தை (இயற்கை) மதித்துச் செயற்பட வழிகாட்டினார்.
- பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைக்குப் போகச் செய்தார். அவர்களுக்கு ஆங்கில வகுப்புக்களை ஏற்பாடு செய்து ஒரு வாசிகசாலையையும் தொடக்கி வைத்தார்.
- வேளாண்மைக்கு இயற்கை உரத்தைத் தயாரிக்கக் கற்றுக் கொடுத்தார்.
- பிரதேச மக்களை வாட்டுகின்ற வறுமை, ஆதரவற்ற வாழ்க்கை முறை, குறைந்த வசதிகளுடனான சுகாதாரம், கல்வி, உழைப்பைச் சுரண்டுகின்ற பெரும்பான்மை இனம், தேசிய சங்கங்களுக்கு எதிராக இறைவாக்கினரைப் போன்று குரல் எழுப்பினார்.
- மக்கள் மத்தியில் அவரது குடிகொள்ளுதல், மக்களுக்காகக் குரல் கொடுத்தல், இவற்றின் விளைவாகத் தோன்றக் கூடிய புதிய கலாசாரத்திற்கு எதிரானவர்கள் கூடி அவருடன் முரண்பட்டனர். அதன் விளைவாகப் பல எதிரிகளைத் தேடிக் கொண்டார்.
- 1987 நவம்பர் 10ஆம் நாள் காலையில் திருப்பலி ஒப்புக்கொடுத்துக் கொண்டு இருக்கும் போது எதிரிகளின் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி இறைபதம் அடைந்தார்.

### iv. அருட்பணி மேரி பஸ்தியன்

**வாழ்க்கை**

- மனிதநேயச் சமய, சமூகப், பொருளாதார, அரசியல், விடுதலை நோக்கில் ஒரு முழு மனித விடுதலைக்கான பணியை ஓர் இறைவாக்கினருக்குரிய மனநிலையோடு முன்னெடுத்தார்.
- சமூக அநீதிகள், அடக்கு முறைகளால் ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை வாழ்வு என்னும் தாரக மந்திரத்துடன் தன்னை தற்கொடையாகத் தந்தவர்.
- இவர் 1948இல் வவுனியா தாண்டிக்குளத்தில் பிறந்தார்.
- 1975ஆம் ஆண்டு ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
- இவர் மன்னாரில் வங்காலைப் பிரதேசத்திலே போர்க்காலத்திலே அளப்பரிய பணியாற்றிய ஒரு குருவானவராவார்.

**சமூகப்பணி**

- வேதசாட்சிகளின் இரத்தத்தில் உருப்பெற்ற மன்னார் மறைமாவட்டத்திற்கு மற்றுமோர் வேதசாட்சி என்று அழைக்கப்படுகிறார்.
- போர்க்காலங்களிலே இளைஞர்கள் கொண்டு செல்லப்பட்ட வதை முகாம்களைத் தேடிச் சென்று இராணுவ அதிகாரிகளோடு இரந்து வாதாடி அவர்களைப் பெற்றோரிடம் கையளித்தார்.
- மூளை வளம் குன்றிய சிறுவர்களுக்கான '**ஆர்க்**' நிறுவனம் ஒன்றை தமது மேற்பார்வையின் கீழ் உடுவிலில் கட்டினார்.
- நீதி நேர்மைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்தார்.
- அநியாய உயிரிழப்புக்கள், இளைஞரின் கைதுகள் போன்றவற்றிற்கு எதிராகச் செயற்பட்டவர்.
- **'ஏழைகளின் நண்பன்'** என்ற சஞ்சிகையை மாணவர்களைக் கொண்டு வெளியிட்டு, அப்பணத்தினை ஏழை மாணவர்களின் கல்விச் செலவுக்காகப் பயன்படுத்தும் திட்டமொன்றினை மேற்கொண்டார்.
- கல்வி கற்றோர், குறுநில விவசாயிகள், மாணவர் சமுதாயம் மத்தியில் ஆன்மீகக் காரியங்களில் மட்டுமன்றி மக்களின் சமூகப், பொருளாதார, காலசார வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தி பெரும்பணியாற்றினார்.
- அகதிகளாக்கப்பட்ட மக்கள் இல்லிடமற்று அவதிப்பட்ட வேளையில் வங்காலையின் தெற்குப் பக்கமாக பஸ்ரிபுரி எனும் கிராமத்தை அமைத்து சாதி, சமயப் பாகுபாடு இன்றி அங்கு அகதிகளைக் குடியமர்த்தினார்.
- அதுமட்டுமன்றி, மன்னார் வடக்குப் பக்கத்திலும் சின்னக்கரிசல், பெரிய கரிசல் ஆகிய கிராமங்களுக்கு மத்தியில் ஒரு கிராமத்தை அமைத்து அகதிகளைக் குடியமர்த்தினார்.
- மேலும் நறுவிலிக்குளம் என்னும் கிராமத்தில் மாதா கிராமம் ஒன்றை அமைத்து வறிய மக்களை அங்கு குடியமர்த்தினார்.
- நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் திருச்சபையுடனும் ஆயர்களுடனும் வாதிட்டு அதன் பிரதிகளை 1982 இல் பாப்பரசரின் பிரதிநிதிக்கும் எல்லா ஆயர்களுக்கும் அனுப்பி வைத்தார்.
- 1985 தை மாதம் 06ஆம் திகதி வங்காலையில் ஆயுதம் தரித்த கும்பலினால் தனது 37ஆவது வயதில் படுகொலை செய்யப்பட்டார்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் கல்வி நிலை பற்றியும் மற்றும் பங்களிப்புப் செய்த நபர்களின் தகவல்களையும் குழுக்களாகச் திரட்டுக.
- சேகரித்த தகவல்களை ஆக்கமாக எழுதுக.
- சமூக நலன்புரிச் சேவைகள் பற்றி ஆழமாக அறிந்து கருத்துக்களை முன்வைக்குக.

**உசாத்துணை நூல்கள்:**


- Geraird de Rosairo OMI, **Church in Asia and Mission Inter Gentes**: A study based on FABC Documents, CSR Press, Colombo, 2014.
- ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி., **மனித சமூக மேம்பாடும், கிறிஸ்தவ பங்களிப்பும்,** அமதி வெளியீடு, கொழும்பு. 2010.
- ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி., **ஆசியத் திருச்சபையும் நற்செய்திப் பணியும்,** நம்வாழ்வு வெளியீடு, சென்னை, 2014

**தேர்ச்சி 10.0 :** புதிய நாகரிகம் ஒன்றை உருவாக்கும் கிறிஸ்தவத்தின் பணியில் ஈடுபாட்டுடன் பங்குகொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.1 :** திருச்சபையின் சமுதாய முன்னேற்றம் தொடர்பான படிப்பினைகளை அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றல் பேறுகள் :**

- திருச்சபையின் சமுதாய முன்னேற்றம் பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- ஆசிய ஆயர் மன்றத்தின் சமூகச் சிந்தனைகளை ஏற்றுக் கொள்வார்.
- குடும்பத்தில் ஒவ்வொருவரினதும் கடமைகள் பொறுப்புக்கள், சமுதாயத்தின் கடமைகள் பொறுப்புக்கள் பற்றிக் கோவைப்படுத்திய கருத்துக்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருச்சபையின் மனித மாண்பு பற்றிய படிப்பினைகளை வாழ்வாக்குவார்.
- மனித மாண்பைப் பேணும் செயற்பாடுகளில் பிறரோடு இணைந்து செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம் :**

**10.1.1 திருச்சபையின் சமூக படிப்பினைகள் பற்றிய அறிமுகம்**

- திருச்சபையின் இயல்பு மற்றும் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி சமயம் சார்ந்ததே.
- ஆயினும் திருச்சபைக்கும் சமுதாயத்துக்கும் நேரடித் தொடர்பு இருப்பதால், திருச்சபை சமுதாய முன்னேற்றத்துக்கும், சமுதாய மாற்றத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டிய கடமையைக் கொண்டுள்ளது.
- "வானத்தின் தோற்றத்தைப் பகுத்துணர நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஆனால் காலத்தின் அறிகுறிகளை அறிய உங்களால் முடியாதா?" (மத். 16:3) என்று இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்து வினவினார். இதன்மூலம் காலத்தின் அறிகுறிகள் வழியாகக் கடவுளின் செயலை, கடவுளுக்கு ஏற்புடைய, எதிரான செயலை நாம் அறிய வேண்டும் என்பது இயேசுவின் விருப்பம்.
- தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஏழைய எளியவர்களான விதவைகள், முதியவர்கள், நோயாளர்கள் பராமரிக்கப்பட்டார்கள். திருத்தூதர்களின் படிப்பினையில் அன்றைய சமுதாயத் தேவைகளுக்கும், சமுதாயப் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- எடுத்துக்காட்டாக, கொரிந்திய கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒற்றுமையின்மை, எளியவரைக் கவனியாமை, ஒழுக்கக்கேடுகள் பற்றிய பவுலின் படிப்பினைகள், பிலமோனுக்கு அடிமையை எப்படி நடத்த வேண்டும் எனப் பவுல் எழுதியவை என்பன திருச்சபையின் சமுதாயப் படிப்பினைகளுக்கு ஆதாரங்களாகும்.
- "கிறிஸ்துவின் பணியைச் செயற்படுத்துவதற்குக் காலத்தின் குறிகளைத் துழாவி அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமையாகும்" (இன்றைய உலகில் திருச்சபை, எண். 4).
- காலத்தின் குறிகளைக் கண்டு திருச்சபையின் முதல் சமுதாயப் படிப்பினையை எழுதியவர் திருத்தந்தை 13ஆம் லியோ ஆவார். அவர் 'தொழிலாளரின் நிலைமை' என்ற சுற்றுமடலை 1891ஆம் ஆண்டு எழுதினார். ஆக, திருச்சபையின் சமுதாயப் படிப்பினைகள் ஆரம்பமாகி நூற்று இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

### 10.1.1.2 திருச்சபையின் சமுதாயப் படிப்பினை ஏடுகளில் முக்கியமானவை:

1. தொழிலாளர் நிலைமை (Rerum Novarum), 12ஆம் லெயோ, 1891
2. சமூக ஒழுங்கமைப்பு (Quadragesimo Anno), 11ஆம் பியு, 1931
3. அன்னையும் ஆசிரியையும் (Mater et Magistra), 23ஆம் யோவான், 1961
4. அவனியில் அமைதி (Pacem in Terries) 23ஆம் யோவான், 1963
5. இன்றைய உலகில் திருச்சபை (Gaudium et Spes) 2ஆம் வத்திக்கான் சங்கம், 1965
6. மக்களின் முன்னேற்றம் (Populorum Progressio) 6ஆம் பவுல், 1967
7. அரசியல் அதிகாரம், கருத்தமைவு, சமூக ஈடுபாடு (Octogessima Adveniens) 6ஆம் பவுல், 1971
8. இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு (Evangelii Nuntiandi), 6ஆம் பவுல், 1975
9. மனிதரின் மீட்பர் (Redemptor Hominem), 2ஆம் யோன் பவுல், 1979
10. மனித உழைப்பு, (Laborem Exercens), 2ஆம் யோன் பவுல், 1981
11. திருச்சபையின் சமூக ஈடுபாடு, (Solicitudo Rei Socialis), 2ஆம் யோவான் பவுல், 1987
12. குருத்துவப் பயிற்சியில் திருச்சபையின் சமுதாயப் படிப்பினைகள், கத்தோலிக்க கல்விப் பேராயம், 1988
13. நூறாவது ஆண்டு (Centesimus Annus), 2ஆம் யோன் பவுல், 1991
14. அன்பே கடவுள் (Deus Caritas Est), 16ஆம் பெனடிக்ற், 2005
15. இறைவனுக்கே புகழ் (Laudato Si) திருத்தந்தை பிரான்சிஸ், 2015

### 10.1.1.3 சமுதாயப் படிப்பினைகள் சுருக்கம்:

- 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் இயந்திரத் தொழிற் புரட்சியின் விளைவாகத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். தொழிலாளர்கள், உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகக் கருதப்பட்டார்கள். தொழிலாளர்களின் மாண்பு, அடிப்படை உரிமைகள் மதிக்கப்படவில்லை. அவர்களின் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டன. இதற்கு எதிர்க்குரல் கொடுத்த சோசலிசமும் மனிதனை ஒரு பரந்த குழுவின் உறுப்பினராகவே கருதியது. தொழிலாளரின் இந்நிலையைக் காலத்தின் குறியாகக் கணித்துத் திருத்தந்தை 13ஆம் லியோ **'தொழிலாளர் நிலைமை'** என்ற சுற்றுமடலை 1891இல் எழுதினார்.
- 1920ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத் தேக்கத்தினால் வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டது. இப்பிரச்சினை சமூகப் பொருளாதார அடித்தளங்களை அசைவுகாணச் செய்தது. இத்தகைய ஒரு நிலை உருவாகுவதற்குத் துணைநின்ற முதலாளித்துவ அமைப்பை விமர்சித்து **'சமூக ஒழுங்கமைப்பு'** என்ற சுற்றுமடலைத் திருத்தந்தை 11ஆம் பயஸ் 1931இல் எழுதினார்.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலக நாடுகள் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை உலகளாவிய பிரச்சினைகளாகக் கருதின. குறிப்பாக வளரும் நாடுகளின் பிரச்சினைகள் வளர்ந்த நாடுகளின் கவனத்தை ஈர்த்தன. பணக்கார நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையேயுள்ள சமநிலையற்ற தன்மை என்ற பிரச்சினை காணப்பட்டது. இக்கட்டத்தில் **'அன்னையும் ஆசிரியையும்'** என்ற சுற்றுமடலைத் திருத்தந்தை 23ஆம் யோவான் 1961இல் எழுதினார். இம்மடல் முதன்முறையாக வேளாண்மை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை உலகளாவிய பிரச்சினையாக முன்வைத்தது. பொருளாதார வளர்ச்சி என்பது வளர்ச்சியின் பயனைச் சரியாகவும் நியாயமாகவும் பகிர்ந்து கொள்வதில்தான் உள்ளது என இம்மடல் வலியுறுத்தியது. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளின் முன்னேற்றத்துக்கு உதவிபுரிய வேண்டும் எனவும் வலியுறுத்தியது. மேலும், பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றத்தோடு இணைந்து செல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சி எல்லா மக்களின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்த வேண்டும் என இம்மடல் சுட்டிக்காட்டியது.

- உழைப்பு மனிதனுக்காக உளதேயன்றி, மனிதன் உழைப்புக்காக அன்று என்ற மையக்கருத்துடன் **'மனித உழைப்பு'** என்ற சுற்றுமடலைத் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் 1981இல் எழுதினார். முதலீட்டைவிட உழைப்பே முதன்மை வாய்ந்தது, முதலீடு உழைப்பிற்கு உதவ வேண்டும், முதலீட்டை பெருக்கவதற்காகவே உழைப்பு என்று எண்ணுவது தவறு, பொருள்களை விட மக்களே முதன்மை வாய்ந்தவர்கள், உழைப்பு மனித மாண்பை செழுமைப்படுத்த வேண்டும் போன்ற கருத்துக்கள் இம்மடலில் வலியுறுத்தப்படுகின்றன.
- 1987இல் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் **'திருச்சபையின் சமூக ஈடுபாடு'** என்ற சுற்று மடலை எழுதினார். முன்னேற்றத்தை வெறும் பொருளாதார அம்சமாகப் பார்க்கக் கூடாது; முன்னேற்றத்தை அறநெறிப் பார்வையில் பார்க்க வேண்டும். முன்னேற்றத்துக்கு அறநெறி, ஆன்மீகம், கலாசாரம் என்ற அம்சங்களும் உண்டு, முன்னேற்றம் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் அனைத்து உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும். முன்னேற்றம் மனித கூட்டொருமைக்கு அடித்தளமாக அமைய வேண்டும் போன்ற கருத்துக்கள் இம்மடலில் முக்கியமானவையாகும்.
- 1991இல் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் **'நூறாவது ஆண்டு'** என்ற மடலை, 'தொழிலாளர் நிலைமை' என்ற மடலின் நூறாம் ஆண்டு நினைவாக எழுதினார். தொழிலாளரின் உரிமைகளை மதித்தல், மனித, சமூகச் சுற்றுச் சூழலைக் கருத்தில் கொள்ளல், நற்செய்தியின் சமூகச் செய்திகள், சமூக நீதி, அமைதிக்கான பணியின் அடித்தளமாக வேண்டும் ஆகிய கருத்துக்களை இம்மடலில் காணலாம்.
- 2015இல் திருத்தந்தை பிரான்சிஸ் **'இறைவனுக்கு புகழ்'** என்ற சுற்றுமடலில் இயற்கைச் சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

### 10.1.2. 2ஆம் வத்திக்கான் சங்க ஏடு: இன்றைய உலகில் திருச்சபை (Gaudium et Spes)

- 2ஆம் வத்திக்கான் சங்கம் (1962-1965) திருத்தந்தை 23ஆம் யோவானினால் ஒன்று கூட்டப்பட்டது. திருச்சபை உலகோடு உறவாடும், உலக மக்களின் பிரச்சினைகளில் ஈடுபாடுள்ள திருச்சபையாக இருக்க வேண்டும் என்பது திருத்தந்தையின் நோக்கமாகும். இதற்கமைய 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற மறைப்பணிக் கொள்கை விளக்கம் சமூக வாழ்க்கை பற்றிய திருச்சபையின் புதிய அணுகுமுறையை அறிமுகம் செய்கின்றது. அதாவது, உலக சமூகத்தின் எல்லாப் பிரிவினரையும் அழைத்துப் பேசுவதும், அவர்களுடன் உரையாடலில் ஈடுபட்டு ஒத்துழைப்பை வளர்ப்பதும் அதன் அணுகுமுறையாகும்.
- இவ்வேடு, திருச்சபையின் சமுதாயப் படிப்பினையைப் புதிய பார்வையில் விளக்கி உரைக்கின்றது. மானிடரின் அனுபவத்தை மையப்படுத்திச் சமூகப் பிரச்சினைகளை ஆய்ந்து முக்கியமான அறநெறிகளைக் கற்பிக்கிறது. மானிட உலகை இழிந்ததாகக் கருதுவதோ, மனித வாழ்க்கை அழிவை நோக்கிச் செல்கிறது என எண்ணுவதோ இச்சங்க ஏட்டின் நோக்கமல்ல. மாறாக, இவ்வேட்டின் முன்னுரைப் பகுதி (எண். 1-10) உலக நிலைமையை அலசி விளக்குகின்றது. உலகின் நிலையையும் நிகழ்வுகளையும் 'காலத்தின் குறிகளாகச்' சங்கம் கணிக்கின்றது.
- மேலும், அதன் அணுகுமுறையில் புதிய இறையியல் பார்வையும் உண்டு. அதாவது, இவ்வேடு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்கிறது. ஆக, திருச்சபை மனித உலகைத் தன் தலைவரும் வழிகாட்டியுமான இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றி அணுகவும், பணிபுரியவும் முயல்கிறது. உலகைப் புதுப்பிக்கும் ஆவியின் ஆற்றலால் இயக்கப்படும் திருச்சபை காலத்தின் குறிகளைத் துளாவி அறிந்து, நற்செய்தி மற்றும் மனித அனுபவ ஒளியில் அவற்றைப் புரிந்து செயற்பட இவ்வேடு அறிவுரை அளிக்கின்றது (எண். 3-4).

- இவ்வேடு இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

  **அ.** முதற்பகுதியில் மனித மாண்பு விளக்கப்படுகிறது.

  **ஆ.** இரண்டாம் பகுதியில் சில அவசரப் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அவையாவன:

    - குடும்பம்-திருமணம்
    - மனிதப் பண்பாடு
    - சமூகப் பொருளாதார அரசியல் வாழ்க்கை
    - உலக அமைதியும் அதற்கு எதிரான போரும்

### 10.1.2.1 மனித மாண்பு (எண். 12-22)

**மனித மாண்பின் கூறுகளும் வெளிப்பாடுகளும்**

- இந்த ஏட்டில் மனித மாண்பின் கூறுகளும் வெளிப்பாடுகளும் விளக்கப்படுகின்றன. அவையாவன:

  1. எல்லா மனிதரும் கடவுளின் உருவிலும், சாயலிலும் ஆக்கப்பட்டவர்கள்.
  2. இதனால் கடவுள் அளிக்கும் சுதந்திரம், அவர்களது பிறப்புரிமையாகிறது.
  3. அவர்கள் அறிவும், அறநெறி உணர்வும் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.
  4. அனைத்திலும் ஆழ்பொருள் தேடும் ஆர்வம் அவர்களில் இயல்பாக உள்ளது.
  5. அவர்கள் அவர்களது மனச்சான்றின் ஒளியில் நல்லதையே தேடி, தீயதைத் தவிர்த்து நடக்கும் ஆற்றலைப் பெற்றவர்கள்.

**மனித மாண்பின் பண்பும், விளைவும்**

- மேலும் மனித மாண்பின் பண்புகள் விளக்கப்படுகின்றன. மாண்புடன் ஆக்கப்பட்ட மனிதர்கள் எவரும் தனி மரமாக வளர்ந்து தழைத்திட இயலாது. மனிதர் கடலில் மிதக்கும் தனித்தீவுகள் அல்ல. அவர்கள் மாண்புடன் ஆக்கப்பட்ட மனிதர்கள்.
- சமூகமாக வாழ்வது முக்கிய பண்பாகும். மனிதரின் சமுகப் பண்பிலிருந்து அவர்கள் சமத்துவமாக வாழும் தன்மை பிறக்கின்றது. மனிதர் சமத்துவமாக வாழ்வது இயல்பு என்பதால், பின்வருபவை பேணப்பட வேண்டும் என்று சங்கம் விளக்குகின்றது.

  1. மனித மாண்பிலிருந்து மனித அடிப்படை உரிமைகள் தோன்றுவதால், அவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.
  2. பால், இனம், நிறம், சமூகநிலை, மொழி, சமயம் ஆகியவை காரணமாகக் காட்டப்படும் எந்தப் பாகுபாடும் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியதாகும்.

### 10.1.2.2 குடும்ப வாழ்வு (எண். 47-52)

- இன்றைய உலகில் திருமணம் - குடும்பம் எவ்வாறு உள்ளன எனச் சங்கம் சிந்தித்தது. சங்கம் திருமணத்தை, குடும்பத்தை அடிப்படை மனித உறவாகப் பார்த்து, அதனை அன்புச் சமூகம் என வரையறுத்தது. அதில் மனித மைய, ஆள்நிலை அன்புறவு இன்றியமையா இடம்பெறுவதை ஏற்றது. இதனால் திருமணம் மற்றும் குடும்பம் பற்றிய இறையியலிலும், அறவியலிலும் புதிய புரிந்துணர்வும், அணுகுமுறையும் தோன்றியது. பின்வருபவை அவற்றுள் சிலவாகும்.
- திருமண அன்பினால் உருவாகும் நெருங்கிய உறவுச் சமூகம் குடும்பமாகும். அதனை படைப்பின் கடவுள் ஏற்படுத்தினார்.
- திருமண அன்பில் ஆள்நிலை சார்ந்ததும், பின்வாங்கக் கூடாத இசைவிலும் உருவானதே குடும்பம்.
- இறைதிட்டத்துக்கு ஏற்ப சமுதாயத்தின் முன்னிலையில் நீடித்து நிற்கும் ஓர் அமைப்பே குடும்பம். குடும்பம்தான் சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கிறது.

- ஞானத்தை அதிகமாகப் பெறவும், மனித உரிமைகளைச் சமூக வாழ்வுத் தேவைகளோடு இணைக்கவும், பல தலைமுறைகள் ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழும் இடமாகக் குடும்பம் உள்ளது.
- குடும்பம் மனிதப் பண்பை வளமுறச் செய்கின்ற பள்ளியாகும்.
- மனித உயிரை வழிவழியாக வழங்கும், காக்கும் உயரிய கடமையைக் கடவுள் திருமணம் வழியாகக் குடும்பத்திடம் ஒப்படைத்துள்ளார்.
- திருமணமானோர் திருமண அன்பில் பிரமாணிக்கமாக வாழ்வதால் இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக வெளிப்படுத்தப்பட்ட இறையன்புக்குச் சாட்சியம் பகர்கின்றனர்.
- திருமணம் - குடும்பத்தின் மாண்பைப் பேணி வளர்த்தலுக்குச் சங்கம் முக்கியத்துவம் அளித்து, பின்வருவனவற்றை முக்கிய குறிக்கோளாக முன்வைத்தது:
    1. திருமணம் - குடும்பத்தின் தூய தன்மையைப் பேணுதல்.
    2. திருமண அன்பைக் களங்கமின்றி, பிளவுபடாத் தன்மையுடன் வாழ்தல்.
    3. திருமண அன்பு தம்மியல்பிலேயே பிள்ளைகளைப் பெற்று, பயிற்றுவிப்பதற்கென்று அமைக்கப்பட்டுள்ளது.
    4. திருமண அன்பு மனித உயிர் மட்டில் மதிப்பும், உயிரைக் காக்கும் கடமையைக் கொண்டது.
    5. திருமணத்தையும், குடும்பத்தையும் பேணி வளர்த்தல் யாவருக்கும் உரிய கடமையாகும்.

### 10.1.2.3 பண்பாடு (எண்: 54-62)

- பண்பாடு என்பது மனிதரின் பகுத்தறிவுப் பண்பிலிருந்தும், அவர்களது சமூக இயல்பிலிருந்தும் படிப்படியாகப் பிறக்கும் ஒன்று எனச் சங்கம் வரையறுக்கின்றது. பண்பாடு பற்றிய சங்கத்தின் பார்வையில் பின்வருபவை முக்கியமானவையாகும்:
    - பண்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்கள் மனிதரே என்பதால், பண்பாடு மீறவியலாத் தன்மையுடையது.
    - பண்பாடு வளர்ச்சியடைய நியாயமான சுதந்திரமும், தன்னுரிமையுடன் செயல்படும் வாய்ப்பும் தேவைப்படுகின்றது.
- இத்தன்மையைப் பாதுகாக்கும் போது, பொது நலனின் எல்லைக்குட்பட்டுத், தனிமனித, தனிப்பட்ட உரிமைகளும், சமூகத்தினுடைய உரிமைகளும் பாதிக்கப்படாத வகையில் செயல்பட வேண்டும்.
- பண்பாட்டு வாழ்க்கையை வளர்க்க ஏதுவான சூழ்நிலைகளையும், உதவிகளையும் பொது அதிகாரிகள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.
- பண்பாடு தனக்குரிய குறிக்கோளிலிருந்து பிறழ்ந்து, அரசியல், பொருளாதார ஆதிக்கத்திற்கு அடிமை ஆக்கப்படாதிருக்கக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- பண்பாடு என்பது மனித ஆளின் முழு நிறைவுக்கும், சமூகத்தினுடைய நன்மைக்கும், மனித சமுதாயம் அனைத்துடைய நலனுக்கும் பணிபுரிவதாக இருக்க வேண்டும்.
- அதற்கு மனித உள்ளம் பண்படுத்தப்பட வேண்டும்.
- விழிப்புணர்வு கொள்ளல், உள்ளூர அறிதல், ஆழ்ந்து தியானித்தல், சொந்தமாக மதிப்பீடு செய்தல், சமய உணர்வு, அறநெறி உணர்வு, சமூக உணர்வு ஆகியவற்றை வளர்த்தல் போன்றவற்றை ஊக்குவிக்க மனித மனத்தைப் பண்படுத்த வேண்டும்.

- மீட்பு நற்செய்திக்கும், மனித பண்பாட்டுக்கும் இடையே பலவகையான தொடர்புகள் உண்டு. இதற்குக் காரணம் பல்வேறு வழிகளில் தம்மை வெளிப்படுத்திய இறைவன் வெவ்வேறு காலங்களில் நிலவிய பண்பாட்டு முறைகளில் பேசினார்.
- திருச்சபைக்கும் பண்பாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. ஏனென்றால், வரலாற்றில் வெவ்வேறு சூழ்நிலைகளில் திருச்சபை பல்வேறு பண்பாட்டுக் கருவூலங்களையும் பயன்படுத்தியே செயல்பட்டு வந்துள்ளது.
- பண்பாட்டுக் கல்வியை ஊட்டி வளர்க்கும் தாய் போன்று செயற்படுவது முதன்முதலில் குடும்பமாகும்.
- முழுமையான மனித பண்பாட்டுக்கான கல்விமுறை வளர்க்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- நிலப்பகுதிகளின் பண்புகளுக்கு ஏற்ப இக்கால மக்களுக்குப் பொருத்தமான புதுக் கலைப் பாணிகளை திருச்சபை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- கிறிஸ்தவ மக்கள் தம் காலத்தில் வாழும் பிற மனிதரோடு நெருங்கி ஒன்றித்து வாழ வேண்டும். பண்பாட்டின் வழியாய் அவர்கள் வெளிப்படுத்துகின்ற சிந்தனை முறைகளையும். உணர்வுப் பாணிகளையும் புரிந்துகொள்ள முயல வேண்டும்.
- புதிய அறிவியல்கள், கொள்கைகள், மிக அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் ஆகியவை கொணர்ந்துள்ள அறிவு வளர்ச்சியைக் கிறிஸ்தவ அறநெறியோடும், கிறிஸ்தவ படிப்பினையோடும் இணைத்திட நம்பிக்கை கொண்டோர் முயல வேண்டும்.
- இவ்வாறு மனித பண்பாட்டைக் கிறிஸ்தவத்தோடு இசைவுற இணைக்க வழிசெய்ய வேண்டும்.

### 10.1.2.4 சமாதானமும், ஒருமைப்பாடும் (எண்: 77-78)

**சங்கம் பின்வரும் புரிந்துணர்வுடன் சமாதானம், ஒற்றுமை பற்றிப் பேசுகின்றது.**

- போரின் விளைவுகளால் கடுந்துயர் ஏற்பட்டுள்ளது. மனிதத் தன்மை வாய்ந்ததொரு உலகினை உருவாக்குவது மனித குலத்தின் பணியாகும். அமைதி, ஒற்றுமை பற்றிய விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது. இச்சூழலில் எல்லாரும் புத்துணர்வு பெற்ற உள்ளத்தோடு தம்மையே உண்மையான அமைதிக்கென அர்ப்பணிக்க வேண்டும்.
- போரின் பிற்பட்ட காலத்தில் எழுந்துள்ள மனித குலத்தின் உயர்வான நாட்டங்களும், எதிர்பார்ப்புகளும், “அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்” (மத்..5:9) எனும் நற்செய்தியால் ஒளிபெறும்.

**அமைதியின் இயல்பு**

- அமைதி என்பது போர் நிகழாதிருக்கும் நிலைமை மட்டுமல்ல. ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளிடையே சமநிலையை ஏற்படுத்துவதும் அமைதி அல்ல. அமைதி அடக்கியாளுகின்ற ஆட்சி முறையிலிருந்து பிறப்பதில்லை. மாறாக, அமைதி என்றால் ‘நீதியால் விளைவது’ (எசா.32:17) ஆகும்.
- அமைதியானது அன்பின் கனியாவும் இருக்கிறது. அன்போ நீதியால் எதை வழங்க முடியாதோ அதையும் விஞ்சிடும் தன்மையது.
- மனித சமுதாயத்துக்கு அடித்தளம் அமைத்தவரான கடவுள் அச்சமுதாயத்தில் ஒரு ஒழுங்கு முறையையும் பொறித்து வைத்தார். இந்த ஒழுங்கு முறையின் முதிர்ந்த கனியாகப் பிறப்பதுதான் அமைதி ஆகும்.
- இந்த ஒழுங்கு முறை, நீதியை என்றும் அதிக நிறைவாக நாடித் தேடுகின்ற மனிதர்களால் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.
- மனித இனத்தின் பொதுநலனை அடிப்படையாக கொண்டிருந்தால் மட்டுமே அமைதியை ஏற்படுத்துவது நிலையான சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என அறியலாம்.
- ஆகவே, அமைதி என்பது உறுதியாக அடைந்துவிட்ட ஒன்றாக ஒருபோதும் இருப்பதில்லை.

**அமைதி - ஒற்றுமை நிலவ வழிகள்**

- மனித உள்ளம் வலுவற்றதாகவும், பாவத்தால் புண்பட்டதாகவும் இருப்பதால், ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சிப் போக்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- சட்ட முறையான ஆட்சியாளர்கள் விழிப்பாயிருக்க வேண்டும்.
- தனி மனித நலன் பாதுகாக்கப்பட வேண்டும்.
- மனிதர்கள் தங்கள் அருள்நெறி வளங்களையும், படைப்பாற்றல் மிக்க திறமைகளையும் தங்களுக்குள்ளே மனமுவந்து, நம்பிக்கையோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- பிறரையும் அவர்களுடைய மாண்பையும் உறுதியான உள்ளத்தோடு மதித்தல், சகோதர உறவைப் பேரார்வத்துடன் கடைப்பிடித்தல் அமைதியைக் கட்டி எழுப்ப இன்றியமையாதவை ஆகும்.
- கிறிஸ்தவர்கள் "அன்பின் அடிப்படையில் உண்மை பேசி" (எபே. 4:15), உண்மையிலேயே அமைதி வழியைத் தழுவிய மனிதரோடு ஒன்றுசேர்ந்து, அமைதிக்காக வேண்டவும், அதை நிலைநாட்டவும் வேண்டும்.
- பறிபோன உரிமைகளை நிலைநாட்டுவதற்காகச் செயற்படும்போது, வன்முறைச் செயல்களை ஒதுக்கிவிட்டு, வலுவற்ற நிலையிலுள்ளோருக்கும் கைகூடுமான பாதுகாப்பு வழிகளையே பயன்படுத்த வேண்டும்.
- சமூகத்தினுடைய உரிமைகளையும். கடமைகளையும் தீங்குக்கு உட்படுத்தாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 10.1.3 ஆசிய ஆயர் மன்றத்தின் தோற்றம்

- .ஆசிய ஆயர் மன்றம் தோற்றம் பெறுவதற்கு 1970ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுலைச் சந்திக்க பிலிப்பைன்ஸ் நாட்டின் மனிலா நகரில் ஒன்றுகூடிய ஆசிய ஆயர்களிடையே நடந்த உரையாடல் காரணமாயிற்று.
- ஆசிய ஆயர்கள் இவ்வொன்றுகூடலில் தத்தம் மேய்ப்புப்பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். தம் மறைமாவட்டங்களில் மக்களின் பொதுவான சமூக, அரசியல், பொருளாதார, சமயப் பிரச்சினைகளைப் பற்றி பேசினார்கள். மக்களின் பொதுநலனுக்காக செயல்பட வேண்டிய தேவைபற்றிக் கலந்துரையாடினார்கள்.
- ஆசிய மக்கள் பல இனங்கள், சமயங்கள், கலாசாரங்களைக் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் ஆசியர்கள் என்ற தனித்தன்மை கொண்டவர்கள். ஆசிய சமூகங்களின், சமயங்களின், கலாசாரங்களின் விழுமியங்கள் பொதுத்தன்மை கொண்டவையாக இருப்பதால் அவற்றுக்கு உண்மைத் தன்மையுடன், அவற்றின் அடித்தளத்தில் மேய்ப்புப்பணியை முன்னெடுக்கலாம் எனச் சிந்தித்தார்கள்.
- இயேசு அறிவித்த இறையாட்சி இலக்கை அடைய ஆசியாவில் இயேசுவைப் பின்பற்றி மேய்ப்புப் பணியின் பயன் மக்கள் அனைவரையும் சென்றடையும் வழிகளில் ஆற்றப்பட வேண்டிய தேவையை முன்வைத்தார்கள்.
- இதனைத் தன்னார்வத்துடனும், கூட்டொருமையுடனும், ஒருவர் ஒருவரின் ஒத்துழைப்புடனும் செய்வதற்கு ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்தார்கள்.

- 1971இல் கொங்கொங் நாட்டில் ஒன்றுகூடியபோது ஒரு அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான வரையறையை கலந்துரையாடினார்கள். 1972இல் திருத்தந்தை 6ஆம் பவுலின் ஆசியுடன் ஆசிய ஆயர் மன்றம் தோற்றம் பெற்றது.
- ஆசிய ஆயர் மன்றத்தில் தெற்காசிய (இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காள தேசம்), தென்கிழக்காசிய (இந்தோனேசியா, லாவோஸ்-கம்போடியா, மலேசியா-சிங்கப்பூர்-புரூனே, மியான்மார், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்னாம்), கிழக்காசிய (யப்பான், தென்கொரியா, தாய்வான்) நாடுகளின் ஆயர் மன்றத்தினர் முழு அங்கத்துவம் பெறுகின்றனர்.
- இன்னும் பதினொரு நாட்டைச் சேர்ந்த ஆயர் மன்றங்கள் (கொங்கொங், கிறிக்கிஸ்தான், மக்கோ, மொங்கொலியா, நேபாளம், சிபோரியா, தஜிகிஸ்தான், டேக்மெனிஸ்டான், உஸ்பெஸ்கிஸ்டான், கிழக்குத் திமோர்) இணை அங்கத்துவம் பெற்றுள்ளன.

**சமூக நோக்கம்**

- ஆசிய சமூகங்களின் பொது நலனுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் தன்னார்வத்துடனும், கூட்டுப் பொறுப்புடனும் செயற்படுவது ஆசிய ஆயர் மன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்நோக்கை அடையப் பல சமயத்தவர்களதும் பண்பாட்டினரதும் ஒத்துழைப்புடனும், அவர்களுடன் இணக்கத்துடனும் செயற்பட ஆசிய ஆயர் மன்றம் முயல்கிறது.
- சமூக நலனுக்கான பணியில் ஆசியாவின் ஏழைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. 1971இல் நடைபெற்ற முதல் பொது அமர்விலும், 1990இல் நடைபெற்ற ஐந்தாம் பொது அமர்விலும் ஆசியாவின் ஏழைகளின் பன்முகத் தன்மை கலந்துரையாடப்பட்டு ஏழைகளுக்குப் பணி செய்வதை ஆயர்கள் தம் அடிப்படை அர்ப்பணமாக அறிவித்தார்கள்.
- ஏழைகள் முழுநல வாழ்வைப் பெற செயற்படும் ஆசிய ஆயர் மன்றம் "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்தேன்" (யோவா.10:10) எனும் இயேசுவின் வாக்கை தமது மேய்ப்புப் பணி விருது வாக்காகக் கொண்டுள்ளது.
- 'சமூகப்பணி ஆசிய ஆயர்கள் அமைப்பு' (Bishops' Institute for Social Action) மூலம் 1974 முதல் ஏழைகளுக்கான நிறைவாழ்ப்புப் பணியில் அக்கறை செலுத்தி வருகின்றது.
- இவ்வமைப்பு வருடந்தோறும் ஆசிய ஆயர்களைக் குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலைகளுக்கு அழைத்து, அவர்களுக்கு நடைமுறைச் சமூகப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வூட்டுகின்றது.
- அவர்கள் பெற்றுக்கொண்ட சமூக விழிப்புணர்வை நற்செய்தியின் ஒளியில் சிந்திக்கச் செய்து, தம் மேய்ப்புப் பணித் திட்டத்தை வடிவமைக்க வழிகாட்டுகின்றது.
- ஆசிய ஆயர் மன்றத்தின் ஆசிய ஏழைகள் பற்றிய கணிப்பு இதுவாகும். ஆசிய மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகளாவர். ஆசிய பாரம்பரியங்கள், கலாசாரங்கள், மானிட விழுமியங்கள், சமயங்களின் ஆன்மீகக் கண்ணோட்டங்கள் ஆகியவற்றால் ஆசிய மக்கள் 'ஏழைகள்' அல்ல, அவர்கள் வளமான செல்வத்தைக் கொண்டவர்கள். ஆனால் அவர்கள் பின்வரும் காரணிகளால் ஏழைகளாய் இருக்கிறார்கள்.
    1. அவர்களது நலமான இயல்பு வாழ்வுக்குத் தேவையான இயற்கை வளங்களை பயன்படுத்தும் வாய்ப்புப் பறிக்கப்படுதல்.
    2. அவர்களது நாளாந்த அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நுகர்வுப் பொருட்களைப் பெறும் வாய்ப்பைப் பறித்தல்.
    3. இதனால் மக்கள் அடிப்படையில் சுரண்டப்படுகிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள்.

4. அவர்கள் நிறுவனமயமாக்கப்பட்ட பொருளாதார, சமூக, அரசியல், அநீத அமைப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
5. ஆசியாவில் காணப்படும் சமய அடிப்படைவாதத்தினரும் அவர்கள் செய்யும் கிளர்ச்சிகள், வன்முறைச் செயல்களால் ஆசியாவின் ஏழைகள் தோற்றம் பெறக் கரரணமாய் உள்ளனர்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. திருச்சபையின் சமுதாயப் படிப்பினைகளால் அவர்கள் பெற்ற சமூக விழிப்புணர்வைக் குழுவாகப் பகிர்ந்து கொள்வார்.
2. மனித மாண்பு இன்றைய சூழலில் பேணப்படுகிறதா? சீரழிக்கப்படுகிறதா? எனக் கலந்துரையாடுவார்.
3. (இஉதி 3), இதன் அடிப்படையில் தம் சமூகப் பணிக்கான திட்டத்தை முன்வைப்பார்.
4. போரின் பின் தத்தம் சூழலில் குடும்பங்களின் நிலைமை பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
5. ஆசிய கண்ணோக்கில் ஏழைகளின் தோற்றத்துக்கான காரணிகளை ஆய்ந்து, ஏழைகளின் வாழ்வு மேம்பட அவர்களது ஈடுபாட்டை வெளிப்படுத்துவார்.

**உசாத்துணை நூல்கள்:**


- வ. பவுல் லியோன் (பதி. ஆசி), **இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்**, தேடல் வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 2001.
- சு. தே. செல்வராசு, **புத்துலகம் படைக்கவே,** திரு அவையின் சமுதாயச் சிந்தனைகள், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 2006.
- பிலிப்ஸ். யேசுதாசன் அமதி, **இன்றைய உலகில் திருச்சபை,** கிறிஸ்தவம், க.பொ.த.உயர்தரம்.
- ஆ. அலங்காரம், **ஆசிய மக்களின் இயேசு கிறிஸ்து**, நம்வாழ்வு-அருட்கடல் வெளியீடு, சென்னை, 2008.
- ஜெராட் டீ ரொசய்ரோ அமதி, **ஆசியத் திருச்சபையும் நற்செய்தி அறிவிப்புப் பணியும்**, நம்வாழ்வு வெளியீடு, சென்னை, 2014.
- ஜெராட் டீ ரொசய்ரோ அமதி, **மனித-சமூக மேம்பாடும் கிறிஸ்தவ பங்களிப்பும்,** அமதி வெளியீடு, கொழும்பு, 2010.
- Geraird de Rosairo OMI, **Church in Asia and Mission Inter Gentes**: A study based on FABC Documents, CSR Press, Colombo, 2014.

**தேர்ச்சி 10.0 :** புதிய நாகரிகம் ஒன்றை உருவாக்கும் கிறிஸ்தவத்தின் பணியில் ஈடுபாட்டுடன் பங்குகொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.2 :** கிறிஸ்தவ சபை நிறுவனங்களின் சமூகப் படிப்பினைகளையும் வழிகாட்டல்களையும் அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**பாடவேளைகள் :** 14

**கற்றல் பேறுகள் :**

- உலகக் கிறிஸ்தவ சம்மேளனம்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார். ஆசியக் கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் அமைப்பு முறைகளைத் தேடி அறிந்து கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பார்.
- உலகக் கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் வெளியீடுகளைப் பகிர்ந்து கொள்வார்.

**விடய உள்ளடக்கம் :**

**10.2.1 உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் (உகிச - WCC) தோற்றம் - சமூக நோக்கம்**

**10.2.1 அ) உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் (உகிச) தோற்றம்**

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்குலக நாடுகளின் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளிலிருந்தும், வெவ்வேறு மிசனரி சங்கங்களிலிருந்தும் (missionary movements) ஏனைய நாடுகளுக்கான மறைபரப்புப் பணி பேரளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.
- 1810 இல் பப்டிஸ்ட் திருச்சபையின் ஸ்தாபகரான வில்லியம் கேரி என்பவர் இவ்வாறு வெவ்வேறு நாடுகளில் பணிபுரியும் மிசனரிப் பணியாளர்களை (missionaries) ஒன்றுகூட்டி உலக மாநாடு ஒன்றை நடத்த முயற்சித்தார்.
- அப்பொழுது கைகூடாத அம்முயற்சி, 100 வருடங்களின் பின் இங்கிலாந்தில் எடின்பர்க் என்னும் இடத்தில் 1910 இல் ஒன்றுகூடிய முதலாவது உலக மிசனரி மாநாட்டின் (World Missionary Conference) மூலம் கைகூடியது.
- 1920 இல் கீழைத்தேய வைதீகத் திருச்சபையின் கிறிஸ்தவத்தின் ஒன்றிப்புக்குப் பொறுப்பாய் இருந்த பிரதம குரு(Ecumenical Patriarch of the Eastern Orthodox Church), கொன்ஸ்தாந்திநோபிளின் ஜேர்மனுஸ் V என்பவர் 'உலகெங்கும் காணப்படும் கிறிஸ்துவின் திருச்சபைகள் அனைத்திற்கும்' என்று முகவரியிட்டு கடிதம் ஒன்றை எழுதினார். பிரிந்திருக்கும் கிறிஸ்தவர்கள் கூட்டிணைந்து செயற்பட அக்கடிதத்தில் பரிந்துரைத்து, '**திருச்சபைகளின் கூட்டமைப்பு**' (League of Churches) ஒன்றை ஆரம்பிக்க முன்மொழிந்திருந்தார்.
- 1937 இல் உலக நாடுகளின் திருச்சபைத் தலைவர்கள் 'உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம்' (World Council of Churches) நிறுவுவதற்குச் சம்மதம் தெரிவித்தனர். உகிச தை நிறுவுவதற்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த அமெரிக்காவில் இயங்கிய 'நம்பிக்கை ஒழுங்குக்குமான இயக்கம்' (Faith and Order Movement), சுவீடனில் இயங்கிய லூத்தரன் திருச்சபையின் 'வாழ்வும் பணிக்குமான இயக்கம்' (Life and Work Movement) ஆகிய இரு அமைப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டன. ஆனாலும் அக்காலத்தில் ஆரம்பித்த இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவாக உகிச ஆரம்பிப்பது பின்போடப்பட்டது.

- யுத்தம் முடிவடைந்த பின் 1948 ஆகஸ்ட் 23ஆம் திகதி உலகக் கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் (உகிச) நெதர்லாந்தில் அம்ஸ்டர்டம் என்னும் நகரத்தில் "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைக் கடவுளாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஐக்கியமாக" உருவாக்கமடைந்தது. இந்தத் திருச்சபைகளின் ஐக்கியத்திற்கு மேற்கூறப்பட்ட நம்பிக்கை ஒழுங்குக்குமான இயக்கம், மற்றும் வாழ்வும் பணிக்குமான இயக்கம் ஆகியவற்றைக் கூட்டிணைக்கும் வைபவக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 147 கிறிஸ்தவ சபைகளிலிருந்து பிரதிநிதிகள் அம்ஸ்டர்டம் நகரத்தில் கூடினர்.
- இதனைத் தொடர்ந்து இந்த ஐக்கியத்தை வலுப்படுத்துமுகமாக 1950இல் லுன்ட் என்னும் இடத்தில் கூடிய இரண்டாம் கூட்டத்தொடரில் 'திருச்சபையின் தன்மை' பற்றிப் பிரதானமாக ஆய்வு செய்யப்பட்டது. அதனை அடுத்து வந்தக் கூட்டத்தொடர்களில் 1961 இல் சர்வதேச மிசனரி சங்கம் (International Missionary Council), 1971 இல் கிறிஸ்தவ கல்விக்கான உலகச் சங்கம் (World Council of Christian Education) ஆகிய அமைப்புகள் முறையே கூட்டிணைந்தன.
- கிறிஸ்தவ கல்விக்கான உலகச் சங்கமானது 18ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஓய்வுநாள் பாடசாலை இயக்கத்தின் வளர்ச்சி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
- உகிச ஒரு தனி திருச்சபையுமல்ல, திருச்சபைகளுக்குக் கட்டளையிடும் நிறுவனமும் அல்ல. மாறாக வெவ்வேறு கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒற்றுமைக்கும், புதுப்பிப்புக்கும் இணைந்து சகிப்புணர்வுடனும் புரிந்துணர்வுடனும் செயற்படுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் ஓர் அமைப்பாகும்.
- பல்வேறு காரணங்களை முன்வைத்து, வரலாற்று ரீதியில் பிரிந்து நிற்கும் கிறிஸ்தவ திருச்சபைகளிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்கு உருவாகிய திருச்சபை ஒன்றிப்புக்கான இயக்கங்களில் இருந்து உகிச தோற்றம் பெற்றது என்பதை மேலே பார்த்தோம்.
- இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்ட உகிச இல் அங்கம் வகிக்கும் பிரதான சபைகளாவன: அனேகமான வைதீக திருச்சபைகள், அங்கிலிக்கன் திருச்சபைச் சமூகம், சில பப்டிஸ்ட் திருச்சபைகள், பல லூத்தரன், மெதடிஸ்ட், பிரஸ்பிடேரியன் ஆகிய புரொட்டஸ்தாந்து திருச்சபைகள், ஏனைய சீர்திருத்தச் சபைகள், சில பெந்தேகொஸ்தே சபைகள், உட்பட சில பழைய கத்தோலிக்க சபைகள். உகிச இல் அங்கம் வகிக்க நாட்டம் காண்பிக்காத சபைகள் ஒன்றிணைந்து உலக இவாஞ்சலிகல் கூட்டமைப்பு (World Evangelical Alliance) என்ற அமைப்பை ஆரம்பித்தனர்.
- 1948இல் ஆரம்பித்த கூட்டத்தொடரை அடுத்து ஒவ்வொரு ஏழு அல்லது எட்டு வருடங்களுக்கு ஒரு முறை பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுகூட்டங்களுக்கு இடையில் இந்த சம்மேளனத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பல செயற்குழுக்கள் அமைக்கப்படும். ஆரம்பத்தில் இருந்து 2017ஆம் வருடம் வரை உகிச பத்து கூட்டத் தொடர்களை நடத்தியுள்ளது:

| | |
|---|---|
| 1. அம்ஸ்டர்டம் (நெதர்லாந்து) | 22 ஆகஸ்ட் - 4 செப்டெம்பர் 1948 |
| 2. எவான்ஸ்டன் (இல்நொயிஸ்) | 15 – 31 ஆகஸ்ட் 1954 |
| 3. புதுடில்லி (இந்தியா) | 19 நவம்பர் - 5 டிசம்பர் 1961 |
| 4. உப்சலா (சுவீடன்) | 4 – 20 யூலை 1968 |
| 5. நைரோபி (கென்யா) | 23 நவம்பர் - 10 டிசம்பர் 1975 |
| 6. வன்கூவர் (கனடா) | 24 யூலை – 10 ஆகஸ்ட் 1983 |
| 7. கன்பரா (அவுஸ்திரேலியா) | 7 – 21 பெப்ரவரி 1991 |
| 8. கராரே (சிம்பாப்வே) | 3 – 14 டிசம்பர் 1998 |
| 9. போர்டோ அலிக்ரே (பிரெசில்) | 14 – 23 பெப்ரவரி 2006 |
| 10. பூசான் (தென் கொரியா) | 30 ஒக்டோபர் - 8 நவம்பர் 2013[1] |

- உகிச இன் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணி ஒன்றுடனொன்று நெருங்கிச் செல்லும் இரு அணுகுமுறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விரு அணுகுமுறைகளை நம்பிக்கை ஒழுங்குக்கான இயக்கமும் வாழ்வும் பணிக்குமான இயக்கமும் பிரதிநித்துவப்படுத்துகின்றது. உகிச தனது இவ்விரு பரிமாணப் பணியினை பல ஆணைக்குழுக்கள் மூலம் மேற்கொள்கின்றன. அவற்றுள் சில பின்வருமாறு:
  - வாலிபருக்கான ஆணைக்குழு (18 – 30 வயது) (Echos- Commission on Youth)
  - சேவைக்கும் அபிவிருத்திக்குமான திருச்சபைகளின் ஆணைக்குழு (Commission of the Churches on Diakonia and Development)
  - இறையியல் கல்விக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பில் வளருதலுக்குமான ஆணைக்குழு (Commission on Education and Ecumenical Formation)
  - சர்வதேச நடவடிக்கைகளுக்கான திருச்சபைகளின் ஆணைக்குழு (Commission of the Churches on International Affairs)
  - நீதி, அமைதி மற்றும் படைப்புக்கான ஆணைக்குழு (Commission on Justice, Peace and Creation)
  - உலக நற்செய்திப் பணித் தூதுப்பணிக்கான ஆணைக்குழு (Commission on World Mission and Evangelism)
  - நம்பிக்கை ஒழுங்குக்குமான ஆணைக்குழு (Faith and Order Commission)
  - வன்முறைகளை மேற்கொள்வதற்கான தசாப்த குழு (Reference Group on the Decade to Overcome Violence)
  - உகிச – றோமன் கத்தோலிக்க (வத்திக்கான்) சபை இணைச் செயற்பாட்டுக் குழு (Joint Working Group WCC – Roman Catholic Church [Vatican])
  - சமயங்களுக்கிடையேயான உறவு சார்ந்த குழு – (Reference Group on Inter-Religious Relations)
  - உகிச தில் வைதீக திருச்சபைகளின் பங்கேற்புச் சார்ந்த விசேட குழு – (Special Commission on Orthodox Participation in the WCC)

### 10.2.1 உலக கிறிஸ்தவச் சபைகளின் சம்மேளனத்தின் (உகிச - WCC) சமூக நோக்கம்

### 10.2.1 ஆ.(1) சமய வன்முறைக்கு எதிராகச் சமூக அமைதிக்கான முயற்சி

- சமயம் என்னும் போர்வைக்குள் மறைந்து உலகின் பல பாகங்களிலும் காலத்துக்கு காலம் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டுப் பேரழிவை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது.
- சமயங்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் இப்பேரழிவு தற்காலத்தில் தோன்றிய ஒன்று அல்ல என்பது வரலாற்றை ஆய்வு செய்யும் போது நாம் அறிந்து கொள்வோம். உதாரணமாக கிறிஸ்தவத்தினதும் இஸ்லாம் சமயத்தின் ஆரம்ப கால வளர்ச்சியும் ஒரு வன்முறைச் சூழலில் ஏற்பட்டது. இவ்வாறான வன்முறைகளைத் தவிர்த்து சமூகத்தில் நீதியையும் அமைதியையும் வளர்த்து, மனித மாண்பை வலுப்படுத்துவது உகிச தின் பிரதான சமூக நோக்கமாகும்.
- சமயங்களுக்கிடையேயான புரிந்துணர்வும் அமைதியும் உலக நாடுகளுக்கிடையேயும் சமூகங்களுக்கிடையேயுமான புரிந்துணர்வையும் அமைதியையும் வளர்க்கும் என்ற அடிப்படைக் கருத்துடன் உகிச தனது இந்த சமூக நோக்குச் சார்பாகச் செயற்படுகின்றது.

- வெவ்வேறு சமயங்களிடையே நல்லுறவும், பிணக்கும் மாறி மாறி நிலவியமை வரலாற்றில் நாம் கண்ட உண்மை.
- சமயங்களிடையேயான பிணக்குகளை இரண்டு பிரதான பிரிவாக நாம் காணலாம்: ஒன்று தத்தம் சமயப் போதனைகளின் அடிப்படையில் ஏனைய சமயங்களின் போதனைகளை மதிப்பிட்டு அச்சமயங்களை நிராகரித்தல் அல்லது துன்புறுத்துதல் போன்ற செயற்பாடுகளினால் ஏற்படும் பிணக்கு. மற்றையது சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகளை முன்வைத்து சமயங்களிடையே ஏற்படும் பிணக்கு.
- இவ்வாறான சமயப் பிணக்குகள் இன்றும் உலகின் சில நாடுகளில் அவ்வப்போது ஏற்படுகின்றது. ஆனாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்காத விதத்தில் சமயங்களின் தலைமைத்துவங்கள் செயற்பட்டு, சமயப் போதனைகளை முன்வைக்கின்றன.
- வெவ்வேறு கிறிஸ்தவ சமயப் பிரிவுகளிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்குத் திருச்சபைகள் முன்வந்துள்ளது போல், ஏனைய சமயங்களைக் குறித்துக் கிறிஸ்தவ திருச்சபைகள் நல்மனப்பாங்குடன் செயற்பட வேண்டும் என்பதிலும் கருத்தாய் இருக்கின்றன.
- இம்முயற்சி 'பல்சமய உரையாடல்' என்று அழைக்கப்படுகிறது. சமயங்களுக்கிடையேயான உரையாடல் என்பது ஆழ்ந்த பொருள் கொண்டுள்ளது. அது வெறும் கலந்துரையாடல் மாத்திரம் அல்ல கலந்துரையாடலுடன் புரிந்துணர்வோடு ஒரு சமயம் மற்றைய சமயத்தை மதித்து வாழும் நிலையையும், கூடுமான சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து செயற்படும் தன்மையையும் குறிக்கின்றது.
- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து உகிச பல்சமய உரையாடல் குறித்த சிந்தனையை உகிச தில் அங்கத்துவம் வகிக்கும் திருச்சபைகளின் மத்தியில் பகிர்ந்து வருகின்றது. பிற சமயத்தவர் சார்பாக எவ்வாறான நடத்தையைக் (Christian response to people of other faiths) கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி மேலைத்தேயப் புரட்டஸ்தாந்து மிசனரி சங்கங்கள் (Western Protestant Missionary Movements) மீள்சிந்தித்ததன் விளைவாகப் பல்சமய உரையாடல் என்னும் கருத்துத் தோன்றலாயிற்று.
- உகிச இன் பல்சமய உரையாடலின் தன்மைக்கும் மற்றும் தொன்மைக்கும் தற்காலத்தில் எழுதப்படும் பல நூல்கள் சான்று பகருகின்றன. அதற்கு உதாரணமாகப் பின்வரும் சில நூல்களைக் குறிப்பிடலாம்:
- 1991இல் வெஸ்லி அரியராஜா அவர்களால் வெளியிடப்பட்ட ''இந்துக்களும் கிறிஸ்தவர்களும்'': ஒரு நூற்றாண்டுகாலப் புரட்டஸ்தாந்து ஒருமைப்பாட்டுச் சிந்தனை.
- ஜூட்டா ஸ்பர்பர் 2000ஆம் ஆண்டில் எழுதிய ''கிறிஸ்தவர்களும் இஸ்லாமியரும்'' : உலகக் கிறிஸ்தவச் சம்மேளனத்தின் பல்சமய உரையாடல் செயற்பாடுகள்
- ஜேன் கென்றிக் ப்ராங்கர் 1994இல் எழுதிய ''பல்சமய உரையாடல் பற்றிய கலந்துரையாடல்'' : 1967 - 1979இல் உலகக் கிறிஸ்தவ சம்மேளனமும் பல்சமய நிலையின் அறைகூவலும்.[3]
- பல்வேறு அரசியல், பெருளாதார, சமூகக் காரணிகளை முன்வைத்துப் பெரும் யுத்தங்கள் வரை சென்று பிரிவையும் பேரழிவையும் உலகம் சந்திக்கும் நிலையை மாற்றி அமைப்பதில் சமயங்களின் பங்கு உணரப்பட்டது.
- அதற்கு மேலாகச் சமயங்களின் பெயரில் யுத்தமும் தீவிரவாதமும் வளர்ச்சி அடைவதையும் தடுக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. மேலும் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகள், சமயங்களைத் தவறாகப் பயன்படுத்தி தமது தவறான இலக்கை அடைய முற்படுவதனால் ஏற்படும் அழிவையும் தடுப்பது அவசியமாகும்.
- சமூக மேம்பாட்டுக்கான இம்முயற்சி கிறிஸ்தவர்கள் மத்தியில் பல்சமய உரையாடலை ஆரம்பிக்கவும் பல்சமய நல்லுறவு வளரவும் வழிவகுத்தது.[4]

**பல்சமய நல்லுறவுக்கான உகிச இன் படிப்பினை**

- ஏனைய சமயங்களைத் தமது சமயத்துக்குப் போட்டியாகவும் அச்சுறுத்தலாகவும் பார்க்காது தமது அயலவராகப் பார்த்தல்.
- வரலாற்றில் வளர்ச்சி அடைந்த சமயங்களிடையேயான கசப்புணர்வு, சந்தேகம் போன்றவற்றை அகற்றிப் பல்சமயங்களுடன் கூட்டுறவோடு சமூகத்தின் மேன்மைக்காகச் செயற்பட முன்வரல்

**பல்சமய நல்லுறவுக்ககான உகிச இன் முயற்சிகள்**

- உகிச இன் கொள்கைத் தீர்மானமெடுக்கும் பொதுக்கூட்டங்களுக்கு ஏனைய சமயத் தலைவர்களைப் பார்வையாளராக அழைத்தல்.
- உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் பொஸ்சே நகரத்தில் திருச்சபைகளின் ஒன்றிப்பு கல்வி மையத்தில் (World Council of Churches' Ecumenical Institute in Bossey) வருடாந்தம் நடத்தப்படும் கற்கை.
- ஜெனிவா பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் உயர் கல்விக்கான சான்றிதழுக்கான (Certificate of Advanced Studies [CAS]) இக்கற்கையின் சில செயற்பாடுகள்: கற்கைக்கான பிரதான கருத்துச் சார்ந்த சமயத் திருமறைகள் சார்ந்த பிரதிபலிப்புகளைப் பகிரல், விரிவுரைகள், வேலைத்தளங்கள் ஆன்மீக வெளிக்களப் பயணங்கள் போன்றன.
- உகிச இன் ''சமயங்களுக்கிடையேயான கலந்துரையாடலும் ஒத்துழைப்பும்'' என்ற அமைப்பு இஸ்லாமியரினதும் யூதர்களினதும் சமயங்களுக்கிடையேயான உறவு சார்ந்த அமைப்புகளுடன் இணைந்து இக் கற்கையை நடாத்துகின்றது.
- இந்த ஆறு வார முழுநேரக் கற்கையைப் பயிலுவோர் 20 – 35 வயதுக்குட்பட்டோராகவும், தத்தமது சமய அறிவு நன்கு உடையவர்களாகவும், சிறந்த சமயப் பற்று உள்ளவர்களாகவும், இக்கற்கையின் பின்னர் மக்களின் சிந்தனையை நல்வழிப்படுத்தும் திறனை உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.
- 2016ஆம் வருடத்திற்கான கற்கை – கடவுள் நம்பிக்கை உள்ள மக்கள் என்ற ரீதியில், நாம் சந்திக்கும் அதிகரித்த வன்முறை, முரண்பாடுகள் போன்ற சவால்களுக்குப் பிரதிநடத்தை காண்பித்து அவற்றை எவ்வாறு மேற்கொண்டு, இதர சமூகத்தினரை மதித்து அவர்களுடன் இணைந்து செயற்படல் என்பதை அடிப்படையாகக்கொண்டு ஏனைய சமூகத்தினருக்குப் பொறுப்பு கூறும் சமூகத்தை ஒன்றிணைந்து கட்டி எழுப்புவது எவ்வாறு என்பதைப் பிரதானமாக ஆய்வு செய்தனர். இக்கற்கையில் முப்பது இளம் கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத வாலிபர்கள் உலகின் வெவ்வேறு நாடுகளில் இருந்து பங்குபற்றினர்.[5]
- கருத்தரங்குகள் மூலம் சமயங்களுக்கிடையேயான நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் வளர்க்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது. சில கருத்தரங்குகளை உகிச மாத்திரம் ஒழுங்கு செய்யாது வேறு சமய நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்வதன் மூலம் சிறந்த பலனைப் பெற்றுள்ளது. 2016ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18 முதல் 22 வரை அல் அசார் எகிப்திய இஸ்லாமிய மையம் (சமயத்தலமும் பல்கலைக்கழகமும்) உடன் உகிச இணைந்து ஒரு கருத்தரங்கை எகிப்தில் கைரோ நகரில் நடத்தியது.
- இன்றைய உலகின் மத்திய கிழக்கு நாடுகளில் மாத்திரமல்ல, ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்காவிலும் சமயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் பதற்ற நிலை, வன்முறை ஆகியவற்றால் வாலிபர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

- இந்தப் பாதிப்பைத் தவிர்ப்பதற்கும், அவற்றிலிருந்து வாலிபர்ளை மீட்டு எடுப்பதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்யவும், சமயங்களுக்கிடையேயான புரிந்துணர்வை வளர்க்கவும் இக்கருத்தரங்கு பேருதவியாக அமைந்தது. அங்கு ஆய்வு செய்யப்பட்ட கருப்பொருட்களாவன:
    - சமயம், ஆன்மீகமும் அரசியலும்
    - பிரஜைத்துவம் (சமய, இன, தேசிய அடையாளங்கள்)
    - சமயப் போதனைகளும் வன்முறையும்
    - வாலிபர்களும் சமயத் தீவிரவாதமும் (religious extreemism)
    - அமைதியை ஏற்படுத்துவதில் சமயங்களின் வகிபங்கு
    - சமூக நீதி மற்றும் அமைதியைக் கட்டி எழுப்புவதில் வாலிபர்களின் பங்களிப்பு
- இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சமய அறிஞர்களினதும், அரசியல் பகுப்பாய்வாளர்களினதும் உரைகளுடன் பங்கு பற்றிய வாலிபர்களின் அனுபவப் பகிர்வும் இக்கருத்தரங்கில் பிரதான இடத்தை எடுத்திருந்தது.

**மத்திய செயற்குழுவுக்கான கருத்தரங்கு**

- ஆய்வை ஆரம்பிப்பதற்காக முன்தோன்றிய வினாக்களாவன, அடிக்கடி வன்முறையைத் தோற்றுவிக்குமளவிற்கு சமயத்தில் என்ன காரணி செல்வாக்குச் செலுத்துகின்றது? சமய உந்துதலினால் தோன்றும் வன்முறை, சமயப் பற்றுடையோருக்கு எதிரான வன்முறை அல்லது சமயக் குழுக்களுக்கிடையான வன்முறை போன்ற சந்தர்ப்பங்களில் சமயத்துக்கும் வன்முறைக்கும் இடையில் உருவாகும் இந்த ஆபத்தான தொடர்பை எவ்வாறு இனங்கண்டு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்? இந்த வினாக்களுக்கு விடை தேடுமுகமாக உகிச இன் செயற்குழு அங்கத்தவர்களின் ஆய்வுக்கான ஒரு நாள் கருத்தருங்கு 2016ஆம் வருடத்தில் யூன் மாதம் 26ஆம் திகதி நோர்வே நாட்டில் நடத்தப்பட்டது.
- இக்கருத்தரங்கிற்கான கருப்பொருள், ''சமயம் போருக்கான வழி அல்லது அமைதிக்கான வழி.'' உகிச இன் கொள்கைத் திட்டமிடலுக்கு வழிகாட்டும் நோக்கில் சமயம் மற்றும் வன்முறையில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல், சமயங்கள் மற்றும் இறையியல் காரணிகள் போன்றவற்றை இக்கருத்தரங்கில் பகுப்பாய்வு செய்தனர்.

**சமயத்துக்கும் வன்முறைக்கும் இடையேயான தொடர்பை ஆய்வு செய்த இக்கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகளாவன:**

- உகிச தனது நீதிக்கும் அமைதிக்குமான பயணத்தில் கிறிஸ்தவ திருச்சபைகள் ஒன்றித்துச் சரியான திட்டமிடல் மூலமாகச் செயற்பட வேண்டும்.
- வரலாற்று ஆய்வு மூலம் சமயத்துக்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பு புதிய ஒன்று அல்ல என்பது தெளிவாகின்றது. எனினும் வன்முறை தற்காலத்தில் மிகவும் பாரதூரமாகியுள்ளது. சமய அடிப்படைவாதம் உலகில் பல முக்கியமான இடங்களில் மிகவும் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் விதத்தில் மாறியுள்ளது என்பது உணரப்பட வேண்டும்.
- கடவுளின் பெயரால் மேற்கொள்ளப்படும் இவ்வன்முறை இறைவனின் விருப்பமாகவோ அல்லது இறைவனின் செயலாகவோ இருக்காது. எனினும் அதன் சாபக்கேடு எம்மைச் சூழ்ந்துள்ளது. எனவே கடவுளை அறிந்து கடவுளுக்காகப் பணியாற்றும் நாம் இவ்வழிவைத் தடுக்கச் செயற்பட வேண்டும்.
- கிறிஸ்தவம் வன்முறை சூழலில் தோன்றி வளர்ந்ததை நாம் நினைவுகூரும் அதேவேளையில் இன்றைய காலகட்டத்தில் பல சர்வதேச நிறுவனங்களும், ஐக்கிய நாடுகளின் மன்றமும் வன்முறைக்கான தீர்வைத் தேடுவதில் சமயத் தலைவர்களை உள்வாங்குவதற்கான பிரதான நோக்கம் முரண்பாடுகளின் தீர்வில் அவர்களின் அனுபவமும் தேர்ச்சியும் அல்ல, மாறாக பல சந்தர்ப்பங்களில் உலகை அழிவுக்கு இட்டுச் செல்லும் பயங்கரவாதம் சமயத்தை ஒரு மறைப்பாகத் தமக்கு பயன்படுத்துதலாகும்.

- மத்திய ஆபிரிக்காவில் ருவான்டா என்னும் நாட்டில் கிறிஸ்தவர்கள் வன்முறையில் பேரளவில் ஈடுபட்ட வரலாற்றை நாம் அறிந்து, திருச்சபைகள் அதனைப் பின்பற்றாது, முரண்பாடுகளைத் தவிர்க்கவும், உறவுப் பாலங்களை அமைக்கவும் தமது செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டும்.

- சிறுபான்மையினரை ஒதுக்கிவைப்பதையும், துன்புறுத்துவதையும் நாம் எதிர்த்துச் சமயங்களுக்கான சுதந்திரத்தை ஆதரிக்கவேண்டும். சமயத்தின் பெயரால் மக்களை ஒதுக்கிவைத்தல், துன்புறுத்துதல், வன்முறையைக் கட்டவிழ்த்தல் போன்றவை இறைவிருப்பாக ஒருபோதும் அமையாது.

### 10.2.1 ஆ.(2) ஆப்பிரிக்காவில் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த உலகளாவியப் பிரச்சாரம்

- உகிச தற்போது முன்னெடுத்துச் செல்லும் சமூக முயற்சிகளுள் ஆபிரிக்காவில் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தவும், எயிட்ஸ் நோயாளருக்கு ஆதரவு நல்கவும் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கும் பிரச்சாரப் பணியும் மிகவும் முக்கியமானதாகும்.

### 10.2.1 ஆ.(3) குடும்ப, சமூக வன்முறைக்கு எதிரான விழிப்பூட்டல்: வன்முறைக்கெதிரான தசாப்தம்

- குடும்பத்திலும் சமூகத்திலும் அதிகரித்து வரும் வன்முறையைக் கட்டுப்படுத்துமுகமாக விழிப்புணர்வை ஊட்டுவதற்காகப் பத்து வருடக் காலப்பகுதியைப் பிரகடனப்படுத்திப் பல முயற்சிகளை எடுத்துவருகின்றது (read further).

### 10.2.1 ஆ.(4) சூழல் சார்ந்த முயற்சி

- நீதி, அமைதி, படைப்புக்கான ஆணைக்குழு மூலம் உகிச அழிவு, மாசடைதல் போன்ற சூழல் சந்திக்கும் பாதிப்புக் குறித்து மக்களை அறிவூட்டவும், சூழலைப் பாதுகாக்க மக்களை வழிநடத்தவும் உலகின் பல நாடுகளிலும் முயற்சி எடுத்து வருகின்றது.

- நீதி, அமைதி, படைப்பு ஆகிய இம்மூன்றுக்கும் இடையே காணப்படும் ஒன்றுக்கொன்றுடனான தொடர்பைப் பகுப்பாய்வு செய்தல், அமைதியின் கலாசாரத்தை ஏற்படுத்துதல், இளைஞர்கள், பெண்கள், நாடுகளின் பூர்வீகக் குடிகள், இன, மொழி ரீதியில் ஒடுக்கப்படும் மக்களை இனங்கண்டு அவர்களின் மேன்மைக்காகச் செயற்படல் என்ற கோட்பாட்டோடு இவ்வாணைக்குழு இயங்குகின்றது.

- உலகமயமாக்கல், பொருளாதாரம், சூழல், பூர்வீகக் குடிமக்கள், அமைதி, மாற்றுத்திறனுடையவர்கள், இனக்குரோதம், பெண்கள், இளைஞர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றது.

- ஊடகங்களுக்கான எழுத்தாக்கங்கள் வன்முறையையும் பகைமையையும் வளர்க்காது அமைதியை வளர்க்கும் வகையில் எழுதப்படவேண்டும் என்ற மனப்பாங்கை வளர்த்து வரும் 'அமைதி ஊடக எழுத்தியல்' (Peace Journalism) இல் உகிச பங்கேற்பதுடன் அதற்கான மிகுந்த ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது.

### 10.2.1 ஆ.(5) இடப்பெயர்வும் சமூக நீதியும்

- மக்களின் இடப்பெயர்வு என்பது மனித வரலாற்றில் எப்போதும் நடைபெறுகின்ற ஒன்று. ஆனாலும் இன்றைய உலகமயமாக்கப்பட்ட உலகில் அது புதிய பொருளாதார, அரசியல், கலாசார சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது.

- வியாபார ரீதியில் அநீதியான முறையில் மக்களை இடம்பெயரச் செய்தல், அபிவிருத்தி என்ற பேரில் இடம்பெயரச் செய்தல் போன்ற புதிய வழிமுறைகளைக் கையாளவும் ஆரம்பித்துள்ளனர்.

- அகதிகளாய் மக்கள் குடிபெயரும் நிலையும் இன்றைய உலகில் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இடப்பெயர்வு என்பது திருச்சபையின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

- ஐக்கிய இராச்சியத்துக்குள் இவ்வாறு தவறான வழியில் குடிபெயர்வு நடைபெறுவதை அந்நாட்டில் 52 வீதமானோர் ஐக்கிய இராச்சியம் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பதை அறிய நிதழ்த்தப்பட்ட வாக்களிப்பில் எதிர்த்து வாக்களித்தனர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.
- இவ்வாறான இடப்பெயர்வினால் தேசிய, இன, கலாசாரத்திற்குப் பாதிப்பு ஏற்படும் அதேவேளையில் முறையற்ற விதத்தில் குடிபெயரும் பெருந்திரளான மக்களின் வாழ்வும் பேராபத்தைச் சந்திக்கின்றது.
- மேற்கூறப்பட்ட நிலைமையினால் அகதிகளின் குடிபெயர்வு, கட்டாயப்படுத்தப்பட்ட குடிபெயர்வு உகிச இன் கவனத்தை ஈர்த்துள்ளது. கட்டாயப்படுத்தப்பட்ட குடிபெயர்வு தொடர்பாக உகிச உலக நாடுகளுக்குக் கடிதம் மூலம் தமது கருத்தைத் தெரிவித்தது.
- 2016ஆம் வருடம் ஜுன் மாதம் திகதியிடப்பட்ட இக்கடிதத்தில் அவ்வாறான குடிபெயர்வு சம்பந்தமாகச் சர்வதேசச் சட்டம், அகதிகள் சட்டம், மனித உரிமை, புகலிடம் நாடுவோரின் உரிமை என்பவற்றை உலக நாடுகள் மதித்து நடக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவ்வாறே குடிபெயர்வோர்க்குக் கிறிஸ்தவத் திருச்சபைகள் தமது சேவைப் பணியை ஆற்ற வேண்டும் என்றும் உகிச பரிந்துரைத்தது.
- உகிச இன் அறிக்கையானது இவ்வாறான பெருந்தொகையானவர்களை ஏற்கும் நாடுகளிலும் சமூகங்களிலும், திருச்சபைகளிலும் ஏற்படும் பயம், நிச்சயமற்ற தன்மை என்வற்றை உகிச புரிந்து கொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தது.
- மேலும் அப்பயம், சந்தேகம் என்பவற்றின் மத்தியில் அனைவரிலும் காணப்படும் கடவுளால் கொடுக்கப்பட்ட மனித மாண்பை மதித்து நடக்க வேண்டும் என்றும், திக்கற்றோர், அனாதைகள் முதலியோரைப் பராமரிப்பதற்கான திருச்சபையின் கடமையையும், அந்நியரை உபசரித்தல் பற்றிய இயேசுவின் போதனையையும் நினைவுபடுத்தி இவ்வேண்டுகோளைத் திருச்சபைக்கு விடுத்திருக்கின்றது.

### 10.2.1 ஆ.(6) நாடற்றோர்

- எந்த ஒரு நாட்டின் சட்டத்தின் மூலம் பிரசையாக அங்கீகரிக்கப்படாதவர்கள் நாடற்றோர் என்ற கருதப்படுவார்கள். உலகில் இவ்வாறு தமது இருப்பு பதியப்படாது 10 மில்லியன் வரையிலானவர்கள் இருப்பதாக 2013ஆம் வருடத்தில் மதிப்பீட்டுக் கணக்கு தெரிவிக்கின்றது. உலகில் தொடர்ந்தும் நாடற்ற அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றது.
- நாடற்றோர் என்பது சர்வதேசச் சட்டத்திற்கு எதிரானது. 1954, 1961 ஆகிய வருடங்களில் கைச்சாத்திட்ட சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய உலகில் பிறந்த அனைவருக்கும் ஏதோ ஒரு நாட்டில் குடியுரிமை இருக்க வேண்டும்.
- நாடற்றோர் என்பது ஒரு உலகளாவிய மனித உரிமை மீறல் ஆகும். அந்நிலை மக்களுக்கு ஏற்படுவதற்கான பிரதான காரணம் மக்கள் அகதிகளாக வெவ்வேறு நாடுகளுக்குச் செல்லுவதாகும்.
- நியாயமற்ற தேசியச் சட்டங்கள் பல நாடுகளில் தாயின் பிரஜா உரிமை பிள்ளைகளுக்கு கிடைக்கப் பெறுவதைத் தடுக்கின்றது. தந்தையின் பிரஜா உரிமையைப் பிள்ளைக்கு உறுதி செய்து கொடுப்பதற்கு அங்கு சட்டம் இல்லை அல்லது முன்வரவில்லை என்றால், பிறந்த பிள்ளை நாடற்ற நிலைக்குத் தள்ளப்படும்.
- இன ரீதியிலும் மக்களை நாடற்றவர்களாக்கும் நிலையும் உலகில் சில நாடுகளில் காணப்படுகின்றது.
- தேச எல்லைகளை முரண்பாடுகளின் நிமித்தம் மீள வகுக்கும் போதும் ஓரிரவில் பெருந்தொகையான மக்கள் நாடற்றவர்களாகலாம். இவ்வாறான நிலை 1991 இல் சோவியத் நாடுகள் பிரிவுற்றுத் தனித்தனி நாடுகளாகித் தமது எல்லையை மீள வகுத்தபோது அனேகருக்கு ஏற்பட்டது.

- நாடற்ற நிலை என்பது ஆவணங்களில் ஒருவரின் இருப்புக்கான பதிவு இல்லை என்பதற்கும் மேலாக ஒரு நாட்டில் மற்றவர்கள் அனுபவிக்கும் பல உரிமைகளையும் சலுகைகளையும் பெறாத நிலை தோன்றும். எனவே உகிச மனித உரிமையை நிலைநாட்ட நாடற்றவர்கள் குறித்துச் செயற்படுகின்றது.

- நாடற்றோர் என்ற நிலையை முழுமையாக 2024இல் அகற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் (UNCHR) இணைந்து உகிச செயற்படுகின்றது. அதற்காகப் பிறப்புகள் அனைத்தும் முறையாகப் பதியப்பட வேண்டும், நியாயமற்ற குடியுரிமைச் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும், குடியுரிமை தொடர்பாகச் சர்வதேச சட்டங்களை ஒவ்வொரு நாடும் கடைபிடிக்க வேண்டும் என்று உகிச பரிந்துரை செய்கின்றது. அத்தோடு திருச்சபைத் தலைவர்களையும், சமூகத் தலைவர்களின் பிரதிநிதிகளையும் நாடற்றவர்கள் சார்பாகச் செயற்படுவதற்குப் பிராந்தியப் பயிற்சிப் பாசறைகளை நடாத்துகின்றது.

- 2015ஆம் வருடத்தில் பெய்ரூட்டில் இவ்வாறான ஒரு பாசறை நடாத்தப்பட்டது. நாட்டுரிமை பற்றி மக்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் உகிச ஈடுபட்டுள்ளது.

- அடிமட்ட நிலையில் கல்வி மூலம் ஏற்படும் அறிவு, மனப்பாங்கு மாற்றத்தின் மூலம் நாடற்றோர் நிலையை மாற்றலாம் என்று உகிச கருதிச் செயற்படுகின்றது.

- தாய்மாரின் பிரஜா உரிமை பிள்ளைகளுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும் 27 நாடுகள் சார்பாகவும் உகிச செயற்பட்டுவருகின்றது. கிறிஸ்தவ கண்ணோட்டத்தோடும், மனிதர்களின் மாண்புக்காகவும், நீதிக்காகவுமான இறைவிருப்பை நிலைநாட்டும் நோக்கத்திற்காகவும் நாடற்றோர் குறித்து உகிச 2010 ஆம் வருடத்தில் செயற்பட ஆரம்பித்து, 2012 ஆம் வருடத்தில் ஐக்கிய நாடுகளுடன் (UNCHR) சேர்ந்து பணிபுரிந்து வருகின்றது.[10]

### 10.2.1 ஆ.(7) இனவாதத்தை மேற்கொள்ளல்

- உகிச பல தசாப்தங்களாக இனவாதத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தாலும், தொடர்ந்தும் புதிய வடிவங்களில் இனவாதம் தலைதூக்குவதால் இனத்துவ வன்முறை உலகில் அதிகரித்துள்ளது.

- அண்மைக்காலத்தில் ஐக்கிய அமெரிக்காவில் அதிகரித்துள்ள இனப் படுகொலைக்கு எதிராக உகிச அறிக்கைகளை வெளியிட்டும், அதனைக் கட்டுப்படுத்த திருச்சபைக்கும், சமூகத்திற்கும் கடந்த சில வருடங்களாக அழுத்தம் கொடுத்தும் வருகின்றது.[11]

### 10.2.2 அ. ஆசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றம் (ஆகிச)

- ஆகிச என்பது ஆசியாவில் காணப்படும் 15 தேசிய கிறிஸ்தவ சபைச் சம்மேளனங்களினதும் 100 ற்கு மேற்பட்ட திருச்சபைப் பிரிவுகளினதும் (வெவ்வேறு கிறிஸ்தவ திருச்சபைகள்) திருச்சபை ஒருமைபாட்டு நிறுவனமாகும்.

- இந்த சபைச் சம்மேளனங்களும், திருச்சபைகளும் இறைபணி, தலைமைத்துவம், அபிவிருத்தி, திருச்சபை ஒருமைபாட்டு உறவு, சமூக நீதி சார்ந்த விடயங்கள் போன்றவற்றில் இணைந்து செயற்படுகின்றது.

- திருச்சபைகள், தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் 1957ஆம் வருடம் இந்தோனேசியாவில் ப்ராபட் என்னும் இடத்தில் கூடிய கூட்டம் ஒன்றில் 'கிழக்கு ஆசிய கிறிஸ்தவ மாநாடு' என்பதை நிறுவத் தீர்மானம் எடுத்தனர்.

- அந்தத் தீர்மானத்துக்கு அமைய அதேவருடம் மலேசியாவில் கோலாலம்பூரில் கிழக்கு ஆசியாவின் கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் முதலாவது மாநாடு கூட்டப்பட்டது. 'ஒன்றிணைந்து சான்றுபகர்தல்' என்பது அந்த முதலாவது கூட்டத்துக்கான கருப்பொருளாக அமைந்தது. 1973இல் சிங்கப்பூரில் கூடிய 5ஆவது மாநாட்டில் அதனை **ஆசியக் கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம்** என்று பெயரை மாற்றி மேலும் விரிவுபடுத்தினர்.

- 1957 இல் ஆரம்பித்த இந்த அமைப்பு உலகின் முதலாவது கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்புக்கான பிராந்திய அமைப்பு என்னும் புகழைப் பெற்றுள்ளது.
- நியுசிலாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், ஹொங்கொங், சீனா, இந்தியா, இந்தேனேசியா, ஈரான், ஜப்பான், கொரியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் தீவுகள், இலங்கை, தாய்வான், தாய்லாந்து, கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளின் திருச்சபைகளும், தேசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனங்களும் ஆகிச இல் அங்கத்துவம் வகிக்கின்றன.
- ஆசியாவில் திருச்சபைகள், திருச்சபைகளின் தேசிய மன்றங்கள் என்பவற்றுடன் இணைந்து, உகிச தின் கொள்கைகளுக்கு அமையச் செயற்படும் நோக்கத்தைக் கொண்டுள்ளது
- ஆகிச இப்பணியில், ஆசியாவில் திருச்சபைக்கு கடவுளின் திட்டமானது, திருச்சபைகள் ஒன்றிணைந்து ஆசியாவில் இறைபணியில் ஈடுபடவேண்டும் என்ற நம்பிக்கையுடன் ஆகிச செயற்படுகின்றது.
- ஆகிச இல் அங்கத்துவம் பெறும் சபைகளும், சபை அமைப்புகளும் திருமறையின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும் கடவுளாகவும் அறிக்கை செய்து, அதனோடு தந்தை, மைந்தன், தூய ஆவி என்னும் திரியேகக் கடவுளின் பொதுவான விருப்பை நிறைவேற்றுபவையாக இருக்கவேண்டும்.
- ஆகிச ஆரம்பத்தில் இருந்து இன்று வரை பத்துக்கும் மேற்பட்ட பொதுக்கூட்டத் தொடரை வெவ்வேறு கருப்பொருளின் கீழ் நிகழ்த்தியுள்ளது.
- ஆசிய நாடுகளில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராகக் காணப்பட்டாலும் ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் ஆராயப்பட்ட விடயங்கள் ஆகிச இன் ஆசிய கண்டம் பற்றிய பொது நோக்கத்தையும், மக்களின் சமூக நிலை குறித்த கரிசனையையும், ஆசியாவின் பல்சமயத் தன்மை பற்றிய முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றது.
- திருமறையில் வாக்களிக்கப்படும் ''முழுமை வாழ்வு'' என்பது கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமன்று, ஆசியாவின் அனைத்து மக்களுக்கும், குறிப்பாக ஆசியாவில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும், ஓரங்கட்டப்பட்டவர்களுக்கும் உரியது என்பது ஆகிச இன் சிந்தனைகளை அண்மை வருடங்களில் வழிநடத்தியுள்ளது. இதைக் கருத்தில் எடுத்து பூகோளமயமாதல் மத்தியில் விரைவாகத் தொழிற்சாலை மயமாகி (Industrialisation) வரும் ஆசியா, அதன் விளைவாக அதிகரித்து வரும் சமூகப், பொருளாதார அநீதி பற்றி ஆகிச கலந்துரையாடுகின்றது.
- **ஆகிச இன் அன்மைக்காலப் பணிகள் சில**:
  - ஆசியத் திருச்சபைகள், கிறிஸ்தவ சமூகங்கள் என்பவற்றிற்கிடையே உறவைப் பலப்படுத்துதல்.
  - திருச்சபையிலும் சமூகத்திலும் ஏற்பட்டுள்ள பிரிவின் வடுக்களைக் குணப்படுத்துதல்.
  - திருச்சபை ஒன்றிப்புச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
  - திருச்சபை ஒன்றிப்பு செயற்றிட்டங்களில் றோமன் கத்தோலிக்க சபையையும், இளம் சபைகளையும் உள்வாங்கி ஆசியாவில் திருச்சபை ஒன்றிப்புச் செயற்றிட்டத்தை விரிவுபடுத்தி ஆசியாவில் சவால்களைச் சந்தித்தலும், உலகில் ஆசியாவின் இடத்தை வலுப்படுத்துதலும்.

- **ஆகிச இன் பணிகள் பின்வரும் பிரதான பிரிவுகளுக்குட்படும்:**
  - நம்பிக்கை (Faith)
  - திருப்பணியும் ஐக்கியமும் (Mission and Unity)
  - திருச்சபை ஒன்றிப்பு (Ecumenical Formation)
  - பாலியல் நீதியும் வாலிபர் வலுவூட்டலும் (gender justice and youth empowerment)
  - நீதி (Justice)
  - சர்வதேச விடயங்கள் (Internationl Affairs)
  - அபிவிருத்தியும் சேவையும் (Development and Service)

  ஆசியாவில் உள்ள 55 மில்லியன் கிறிஸ்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 17 நாடுகளில் காணப்படும் 95 திருச்சபைகளும் 16 தேசிய கிறிஸ்தவ மன்றங்களும் ஆகிச இல் அங்கத்துவம் பெற்றுள்ளன.

**10.2.2 ஆ. ஆசிய கிறிஸ்தவச் சபைகளின் சம்மேளனத்தின் சமூக நோக்கம்**

- ஆகிச இன் நிகழ்ச்சிகள் பரிபாலனத்திற்காக மூன்று பிரதான தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,
  1. திருச்சபை ஒருமைப்பாடும், பாலியல் நீதியும், வாலிபர் வலுவூட்டலும்
  2. நம்பிக்கை, திருப்பணி, ஐக்கியம்
  3. நீதி, சர்வதேச நடவடிக்கை, சேவை
- இத்தொகுதிகளுக்கு உள்ளடக்கப்படாமல், சிறப்பு நிகழ்ச்சித்திட்டமாக (HIV/AIDS) எயிட்ஸ் நோயைக் குறித்தும் சூழலைக் குறித்தும் கவனம் செலுத்திவருகின்றது.
- ஆகிச இன் நிகழ்ச்சித்திட்ட தொகுதிகளும் சிறப்பு நிகழ்ச்சித்திட்டமும் அதன் சமூக ஆர்வத்தையும் கரிசனையையும் வெளிப்படுத்துகின்றது.
- அன்மைக்காலத்தில் ஆகிச இன் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்திய ஆய்வுக் கருத்தரங்குகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், வெளியிட்ட புத்தகங்கள் பல.

**சூழல் நீதி**

- ஆசிய திருச்சபைகளின் பொறுப்பு என்ற பொருளில் கலந்தாய்வு ஒன்றை 2012ஆம் வருடத்தில் இந்தோனேசியாவில் நடத்தினர். இக்கலந்தாய்வில் சூழல், பொருளாதாரம் மற்றும் பொறுப்புக்கூறல் பற்றி ஆய்வு செய்தனர்.
- உலகிலேயே அதிகளவில் சூழலியல் அச்சுறுத்தலையும் பாதிப்புகளையும் அதிகம் சந்திக்கும் நாடுகள் ஆசியாவில் காணப்படுகின்றமையால் இவ்வாய்வுக் கருத்தரங்கு ஆசியாவுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.
- சுனாமி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, நெடிய வறட்சி போன்ற பாரிய இயற்கை அனர்த்தங்கள் பேரளவில் இப்பகுதியில் இடம்பெறுவதால் ஆகிச சூழலைப் பற்றிச் சிந்திக்கலாயிற்று.
- பச்சை வீடுகளின் (Green House) தாக்கத்தினால் உலர் பிரதேசங்களில் அதிகரிக்கும் வெப்பநிலை, அதிகரித்த மழை வீழ்ச்சி, ஒழுங்கற்ற மழை வீழ்ச்சி, உலகக் கடல் மட்டத்தின் உயர்ச்சி, போன்றவற்றால் ஆசியாக் கண்டத்தின் ஏழைகளும், ஓரங்கட்டப்பட்டவர்களும், வசதி குறைந்தவர்களுமே அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர்.
- இவ்வாறான இயற்கைப் பாதிப்புகளுடன் தொடர்புற்று தேவையில் இருக்கும் இம்மக்களின் உழைப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளால் சுரண்டப்படுகின்றது.
- போதிய அளவு சூழல் சட்டங்கள் இன்மையும் ஆசிய மக்கள் சுரண்டப்படுவதற்கு இன்னொரு காரணமாகின்றது.
- எனவே உலக மக்கள் அனைவரும் இணைந்து இயற்கையையும் சூழலையும் பாதுகாக்க முன்வர வேண்டும் என்பதை ஆகிச வலியுறுத்தி வருகின்றது.

**ஆகிச இன் சூழலியல் கொள்கைகளைக் கடைபிடிக்கப் பின்வரும் சில செயற்றிட்டங்களை முன்வைத்துள்ளது.**

1. சூழல் சார்ந்த பிரச்சினைகளின் விளைவு குறித்த அறிவைத் திருச்சபை மக்களுக்குக் கொடுத்தல்.
2. சூழல் பற்றிய கரிசனையுடன் செயற்படுவதற்கான முதற்படியைச் திருச்சபையின் வாழ்விலும் திருப்பணியிலும் நடைமுறைப்படுத்துதல்.
3. சூழல் அழிவுகள் அதிகரிப்பதனால் 'பச்சைத் திருச்சபை' என்னும் கொள்கையை வளர்த்தல்.
4. 'சூழல் சீர்திருத்தங்களை' திருச்சபை, சமூக வாழ்வில் ஆரம்பித்தல்.
5. காடழிப்பு, பாரிய அணைக்கட்டுகள் அமைத்தல், அணு சக்தி நிலையங்கள் அமைத்தல், நிலத்தின் கீழ் உள்ள வளங்களை அகழ்ந்தெடுத்தல் போன்ற மனித செயற்பாடுகளால் ஏற்படும் சூழற் பாதிப்பைத் தடுத்து நிறுத்துதல்.
6. ஆசியாவின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் செயற்படும் பல்தேசிய நிறுவனங்களுக்கு முதலீடு செய்வதை எதிர்த்தல்.
7. உள்நாட்டு வளங்களை முறையாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
8. 'சூழல் நீதியை' நிலைநாட்டுவதன் மூலம் முழுப் படைப்பையும் பராமரிக்கும் கிறிஸ்தவப் பங்கினை வலியுறுத்துதல்.

**மனித உரிமை**

- ஆசியாவின் நாடுகளில் பல வடிவங்களில் மீறப்படும் மனித உரிமை பற்றி ஆகிச கவனத்தை ஈர்க்கின்றது.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுள்ளவர்களின் உரிமை மீறல் பற்றிச் செயற்படும் ஆகிச 2012ஆம் வருடம் அரேபிய நாடுகளில் பணிபுரியும் வெளிநாட்டவர்களின் உரிமை பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக இந்தியாவில் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்தது. அதில் வேலை வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள், வேலைக்கு அனுப்பும் நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமை பற்றிச் செயற்படும் திருப்பணியாளர்கள், ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பணியாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளிட்ட 30 பேர் இதில் கலந்துகொண்டனர்.
- உலகில் 80 மில்லியன் வரையான வெளிநாட்டுப் பணியாளர்கள் இருக்கின்றார்கள் என்று அன்மைக்கால தரவுகள் தெரிவிக்கின்றன.
- 2010இல் வெளிநாடுகளில் தஞ்சம் பெற்று பணிபுரியும் அகதிகள் உட்பட 105.4 மில்லியன் என வெளிநாட்டுப் பணியாளர்களின் தொகை மதிப்பிடப்பட்டது.
- இன்றைய உலகில் இவ்வாறு புலம்பெயர்தல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.
- புலம்பெயர் பணியாளர்களை அனுப்பும் நாடுகளும் பெறும் நாடுகளும் அப்பணியாளர்கள் மூலம் நன்மையைப் பெறுகின்றனர்.
- இதனை இன்று தடுத்து நிறுத்த முடியாது.
- இந்நிலையில் அப்பணியாளர்கள் சந்திக்கும் உரிமை மீறல்களையும் நாம் பொருட்படுத்தாது இருக்க முடியாது. எனவே ஆகிச இப்பணியாளர்களின் உரிமை பற்றிச் செயற்படுகின்றது.

- அக்கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகள்:
    1. 1990ஆம் வருடத்தில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பின் பரிந்துரைகளை நாடுகள் ஏற்றுக் கைச்சாத்திட ஊக்குவித்தல்.
    2. தேசிய மனித உரிமை அமைப்புகள் மூலம் பரிந்துரைகளை மேற்கொள்ளல்.
    3. மனித உரிமை சார்பாகத் தேவையான பிரசாரங்களை மேற்கொள்வதற்குச் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், சட்ட உதவிப் பொறிமுறைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஆகியவற்றுடன் ஆகிச இணைந்து செயற்படல்.
    4. புலம்பெயர் தொழிலாளர்களுக்கு முன்அறிவூட்டல் மற்றும் பயிற்சி வழங்குதல் மொழி, சட்ட அமைப்பு விதி, தொழில் சார்ந்த பயிற்சி.
    5. பணியாளர்கள் புறப்படுவதற்கு முன் அவர்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதலும், அவர்களுடைய உரிமை பற்றிய விளக்கத்தையும் கொடுத்தல்.
    6. புலம்பெயர் பணியாளர்களைக் கொண்டுள்ள திருச்சபைகளின் தலைவர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குதலும் புலம்பெயர் பணியாளர்களின் தேவைகளை அரேபிய நாடுகளில் திருச்சபை மக்கள் மத்தியில் விளக்குதலும்.

**பொருளாதாரம்**

- உலகின் பொருளாதார கட்டமைப்பில் ஏற்படும் அநீதியைக் குறித்து ஆராய்ந்து அதனை வெளிப்படுத்தி, மக்கள் மத்தியில் புரிந்துணர்வைச் சிறப்பாக ஆசியாவில் ஏற்படுத்துவதிலும் ஆகிச பங்களிப்பு வகிக்கின்றது.
- ஒருவருக்கு நீதியாவும் நியாயமாகவும் உரித்தாகின்ற சொத்து அல்லது அதிகாரத்திற்கு மேலாக பெற்றுக்கொள்வதற்கான முயற்சியைப் பேராசை என்று ஆகிச விளக்குகின்றது.
- முதலாளித்துவப் பேராசையில் திகழும் நாடுகள், பல்தேசிய நிறுவனங்கள் போன்றவற்றின் பிடியில் இருந்து வறிய நாடுகளையும், மக்களையும் விடுவிப்பதற்கான அறிவையும் ஆலோசனையையும் முன்வைக்கின்றது.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு.

- உலகக் கிறிஸ்தவ சம்மேளனம் பற்றி திரட்டிய தகவல்களை ஆக்கமாகத் தருக.
- ஆசியக் கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் அமைப்பு முறைகளைத் தேடி அறிக.
- உலகக் கிறிஸ்தவ சம்மேளனம், ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம் ஆகியவற்றின் வெளியீடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்க.

**தேர்ச்சி 10.0 :** புதிய நாகரிகம் ஒன்றை உருவாக்கும் கிறிஸ்தவத்தின் பணியில் ஈடுபாட்டுடன் பங்குகொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 10.3 :** கிறிஸ்தவ சபைகளோடும், பல் சமயங்களோடும் உரையாடிப் புரிந்துணர்வுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இணைந்து வாழ முற்படுவார்.

**பாடவேளைகள் :** 16

**கற்றல் பேறுகள் :**

- கிறிஸ்தவ சபைகளோடும், பிறசமயங்களோடும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளைக் கோவைப்படுத்துவார்.
- கிறிஸ்தவ சபைகளோடும், பிறசமயங்களோடும் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை ஆக்கமொன்றினால் முன்வைப்பார்.
- கிறிஸ்தவ சபையினரோடும், பிறசமயத்தவரோடும் ஒற்றுமையாக வாழ்வார்.
- பிற சமயத்தவர்களின் நல்ல செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்கம் :**

**10.3.1 கிறிஸ்தவ ஒன்றிப்பும் பல்சமய உரையாடலும்**

- புதிய கலாசாரம் ஒன்றை உருவாக்கும் பணியில் கிறிஸ்தவம் ஈடுபாடு கொண்டுள்ளது. பல்வேறு வழிகளில் வளர்ந்துவரும் இன்றைய மானிட உலகில் பல்வேறு கலாசாரங்களையும், சமயங்களையும் கிறிஸ்தவம் மதிக்கின்றது. அவற்றில் காணப்படும் நல்லவற்றையும், உண்மையானவற்றையும் கிறிஸ்தவம் ஏற்கிறது. இதன் மூலம் அவற்றில் காணப்படும் வேறுபாடுகளுக்கு மத்தியில் அவற்றுடன் நல்லிணக்கத்துடன் வாழ முற்படுகிறது. அத்தகைய நல்லிணக்க வாழ்வின் வழியாக புதிய நாகரிகம் ஒன்றை உருவாக்க முயல்கின்றது.
- இம்முயற்சியில், முதலில் அனைத்துக் கிறிஸ்தவ திருச்சபைகளுடனும் ஒன்றிப்பை வளர்த்து, தொடர் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் பல்வேறு சமயங்களும், அனைவரதும் பொதுக்கதியான இறைவனை அடையும் வழிகள் என்பதை ஏற்று அவற்றுடன் உரையாடி இணக்கத்துடன் வாழ முயல்கின்றது.
- இம்முயற்சியில் உலக கிறிஸ்தவ சம்மேளனத்தினதும், (WCC), இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினதும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான படிப்பினைகளும், முயற்சிகளும் இப்பாடத்தின் விடய உள்ளடக்கமாகின்றது. அத்துடன் பல்சமய உரையாடல் பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகளும், ஆசிய ஆயர்கள் மன்றப் படிப்பினைகளும் உள்ளடங்குகின்றன.

**10.3.1.1 உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான படிப்பினைகளும் முயற்சிகளும்**

- கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரிவினைகள் ஏற்பட்ட காலத்தில் இருந்து ஒன்றிப்புக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வழியில் ஒன்றிப்பு முயற்சிகளுக்கு உகிச மும் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டது.
- கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிக்கும் பணியில் 1990ஆம் வருடங்களில் 'உகிச இன் பொதுவான புரிந்துணர்வும் தொலைநோக்கும்' என்ற பொருளில் உகிச ஓர் ஆய்வினை மேற்கொண்டது. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றி பின்வரும் கருத்தை இவ் ஆய்வு வெளிப்படுத்தியது. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான இயக்கமானது உகிச இன் ஒழுங்கமைப்புக்குட்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சியைவிடப் பரந்ததாக இருக்கின்ற நிலையில், உகிச அந்த ஒன்றிப்பு இயக்கத்தின் ஒரு பிரதான கருவியாகச் செயற்படுகிறது என்பதாகும்.

- உகிச இன் பொதுவான புரிந்துணர்வும் தொலைநோக்கும் என்ற ஆய்வு அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு உகிச திருச்சபைகளின் ஒன்றிப்பை ஊக்குவிக்கும் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டது. அவ்வாறான பணிகளுள் சிலவற்றை நாம் இங்கு நோக்கலாம்:
- வைதீக திருச்சபைகள் (Orthodox Churches) உகிச இல் பங்கேற்பது எப்படி என்பது பற்றி ஆராய்வதற்காக ஒரு சிறப்புக் குழு நியமித்து நடவடிக்கை எடுத்து முயற்சி கைகூடியது.
- 2002ஆம் வருடத்தில் உகிச இல் பல திருச்சபைகள் மத்தியில் தீர்மானங்கள் எடுக்கும் போது வாக்களிக்கும் முறைக்குப் (parliamentary procedure) பதிலாக ஒருமனப்பட்ட தீர்மானத்திற்கு வரும் முறையை (consensus decision making procedure) ஊக்கப்படுத்தினர்.
- திருச்சபைகளின் ஒன்றிப்பை ஊக்குவிக்கும் முகமாக 21ஆம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் இரண்டு உலக மாநாடுகளை நடாத்தினர்.
- ‘21ஆம் நூற்றாண்டில் திருச்சபைகளின் ஒன்றிப்பு’ என்ற தொனிப்பொருளில் கூடிய மாநாடு திருச்சபை ஒன்றிப்பு இயக்கத்தை மீளவடிவமைப்பது பற்றி ஆராய்ந்தது.
- இன்னுமொரு மாநாடு ‘21ஆம் நூற்றாண்டில் திருச்சபை ஒன்றிப்பைத் தொடர்ந்தெடுக்கும் செயற்குழு’ என்ற தொனிப்பொருளில் கூடித் திருச்சபை ஒன்றிப்புக்கான தற்காலச் சவால்கள் பற்றி ஆராய்ந்தன. இம் மாநாட்டில் உகிச, பிராந்திய திருச்சபை ஒன்றிப்பு இயக்கங்கள் (regional ecumenical organisations), தேசிய கிறிஸ்தவ சங்கங்கள், உலக கிறிஸ்தவ அமைப்புகள், திருச்சபைகளுக்கிடையேயான வாலிபர் இயக்கங்கள் (ecumenical youth movements), கிறிஸ்தவ ஐக்கியத்தை வளர்ப்பதற்கான றோமன் கத்தோலிக்க அமைப்பு (The Pontifical Council for Promoting Christian Unity), திருச்சபைகள் போன்ற அனைத்து கிறிஸ்தவ அமைப்புகளுக்கும் ஆலோசனைகளை முன்வைத்தன.
- 2013ஆம் வருடத்தில் நடைபெற்ற உகிச பொது மாமன்றக் கூட்டத்தில் இவ் ஆலோசனைகள் கலந்துரையாடப்பட்டன.

#### 10.3.1.2 இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான படிப்பினைகளும் முயற்சிகளும்

- இயேசுவால் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபையின் இன்றியமையாப் பண்பு ஒன்றிப்பாகும். ஆனால் திருச்சபை மேலைத்தேய, கீழைத்தேய கத்தோலிக்க திருச்சபைகள் என்றும், அங்கிலிக்கன், மெதடிஸ், பப்டிஸ்ட், பிரஸ்பிடேரியன் எனப் பல கிறிஸ்தவ திருச்சபைகள் எனவும் பிளவுபட்டுக் காணப்படுகின்றது.
- மறைக்கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், அருட்சாதனங்கள், ஆட்சி-நிர்வாக அமைப்பு, மறைபணிச் செயற்பாடுகள் என்பவற்றில் அவை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்பதே இப்பிளவுக்குக்கான காரணமாகும்.
- திருச்சபையில் பிளவு காலத்துக்குக் காலம் ஏற்பட்ட ஒன்றாகும்.
- திருத்தூதர்களின் காலத்திலேயே தோன்றியுள்ளது (1கொரி.1:10-11).
- கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய ஆரியுஸ், நெஸ்தேரியுஸ் போன்றவர்களின் கிறிஸ்தியல் கருத்து வேறுபாடுகளினால் திருச்சபையில் பிளவு ஏற்பட்டது.
- கி.பி. பதினொராம் நூற்றாண்டில், திரித்துவம் மறைக்கோட்பாட்டில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் கத்தோலிக்க திருச்சபை கீழைத்தேய, மேலைத்தேய திருச்சபைகளாகப் பிரிந்தன. இப்பிரிவினை இன்றுவரை காணப்படுகின்றது.
- கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமயச் சீர்திருத்தத்தின் பின்பு மாட்டின் லூதர், கல்வின், சுவிங்லி ஆகியோரின் தலைமையில் திருச்சபைகள் தோற்றுவிக்கப்பட்டன.
- கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில், 8ஆம் ஹென்றி மன்னன் தனது சகோதரனின் மனைவியை மறுமணம் செய்வதில் திருத்தந்தையின் கருத்துக்கு முரண்பட்டதால் இங்கிலாந்து (அங்கிலிக்கன்) திருச்சபை தோன்றியது.

- திருச்சபையின் இப்பிளவுபட்ட நிலை அனைத்துக்கும் மேலாக, திருச்சபையை ஆரம்பித்த இயேசுவின் நோக்கத்துக்கு உடன்பாடு அற்றதாகும் (யோவா.10:16, 17:1...).
- இப்பிளவுபட்ட நிலை கிறிஸ்தவ விசுவாசிகள் மத்தியில் ஒருவகைப் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. திருச்சபையின் நற்செய்திப் பணிக்கு இது தடையாக உள்ளது. நற்செய்தியை ஆர்வமுடன் மக்கள் கேட்டுக் கடைப்பிடிப்பதற்கும் இடைஞ்சலாக உள்ளது.

**கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான காரணங்கள்:**

1. கிறிஸ்தவ விசுவாசத்துக்கு அடித்தளமாயிருப்பது இறைவன் இயேசுகிறிஸ்து வழியாகச் செய்த வெளிப்பாடாகும் (எபி.1:1).
2. இயேசுவின் வழியாக அருளப்படும் மீட்பு வாழ்வே அனைவரும் தேடியடையும் வாழ்வாகும் (கலா.2:20; 1பேது.2:21).
3. அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் முதற்கொடையும், புதுப்பித்தல் அளிப்பவரும் தூய ஆவியானவராவார். தூய ஆவியின் ஆற்றலால் நாம் இறைவனை 'அப்பா தந்தையே' என அழைக்கின்றோம் (உரோ. 8:23).
4. கிறிஸ்தவர்கள் அனைவரும் இயேசுவின் பாஸ்கா மறை நிகழ்வில் பங்குகொண்டு, எதிர்நோக்கால் உறுதி பெற்று, புதுவாழ்வை நோக்கிப் பயணிக்கின்றோம் (பிலி.3:10; எபி. 11:2).
5. கொரிந்தியத் திருச்சபையில் ஏற்பட்ட பிளவின்போது, புனித பவுல் அவர்கள் இயேசுவின் நாமத்தில் பெற்ற திருமுழுக்கையும் (1கொரி.1:10-11), இயேசுவின் திருவிருந்தையும் (1கொரி. 11:26) அவர்களுக்கு நினைவுபடுத்தி ஒன்றிப்பை வலியுறுத்துகின்றார். திருமுழுக்கும், திருவிருந்தும் அனைத்துக் கிறிஸ்தவ சபைகளும் ஏற்கும் திருவருட்சாதனங்களாகும்.

**கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள்**

- திருத்தூதர்கள் காலம் முதல் கிபி 18ஆம் நூற்றாண்டுவரை ஏற்பட்ட பிளவுகளின் பின்னர் ஒன்றிப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், மறைக்கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், அருட்சாதனங்கள், ஆட்சி-நிர்வாக அமைப்பு, மறைபணிச் செயற்பாடுகள் என்பவற்றில் திருச்சபைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நின்றன.
- அங்கிலிக்கன் திருச்சபைச் சேர்ந்த பவுல் வாட்சன் 1908இல் '**கிறிஸ்தவ ஒன்றிப்பு**' வாரத்தை ஆரம்பித்தார். 1916இல் திருத்தந்தை 15ஆம் பெனடிக்ற் 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' வாரத்தை உலகெங்கும் விரிவாக்கினார்.
- 1948இல் 'உலகத் திருச்சபைகளின் சம்மேளனம்' ஆரம்பிக்கப்பட்டது. விசுவாசக் கோட்பாடு, திருமுழுக்கு, திருவிருந்து, கிறிஸ்தவ வாழ்வு பற்றிய அதன் வெளியீடுகள் மூலமாக கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிக்கின்றது. உலக திருச்சபைகளின் சம்மேளனமும், உரோமை கத்தோலிக்க திருச்சபையும் விசுவாசக் கோட்பாடுகள் பற்றிய உரையாடலைத் தொடர்ந்து நடாத்துகின்றன.
- 1949இல் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய சுற்றுமடல் உரோமை கத்தோலிக்க திருச்சபையால் வெளியிடப்பட்டது.
- 1963இல் திருத்தந்தை 23ஆம் யோவான் தலைமையில் ஒன்று கூடிய 2ஆம் வத்திக்கான் சங்கம் 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' பற்றிய விதித்தொகுப்பை வெளியிட்டது.
- 1974இல் தென்னிந்தியத் திருச்சபைகள் ஒன்றிணைந்தன.
- 1965இல் திருத்தந்தை 6ஆம் பவுல் கிறிஸ்தவ பிரிவினைக்காக அனைத்து திருச்சபைகளிடமும் மன்னிப்புக் கோரினார். கீழைத்தேய மறைத்தந்தை அத்தனாகோரைச் சந்தித்து உரையாடினார். திருத்தந்தையர்கள் 2ஆம் யோவான் பாவுல், 16ஆம் பெனடிக்ற், பிரான்சிஸ் ஆகியோரினால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளுக்கு அமைய கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன.
- அனைத்து கிறிஸ்தவ திருச்சபைகளுக்கும் பொதுவான திருவிவிலியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான 2ஆம் வத்திக்கானின் படிப்பினைகள்**

- இவ்விதித் தொகுப்பு கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான மூன்று சிறப்பான கருத்துக்களை முன்வைக்கின்றது.

    1. அனைத்து கிறிஸ்தவ திருச்சபைகளின் கிறிஸ்தவர்கள் மீது அன்பும் மதிப்பும் கொள்ளத் தூண்டுகிறது. திரிபுவாத அல்லது பிரிவினைவாதச் சபைகளாகக் கருதப்பட்ட ஏனைய திருச்சபைகள் 'கிறிஸ்தவ திருச்சபைகள்' என ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 'ஆண்டவரில் இவர்கள் சகோதரர்கள்' என அழைக்கப்படுகின்றனர் (எண். 3).
    2. "கிறிஸ்துவே அனைவருக்கும் ஒன்றிப்பின் மையம்' (எண்.2), 'இயேசுவின் ஆவி அனைத்துச் சபைகளிலும் செயற்படுகிறார்' (எண்.4) என்பது வலியுறுத்தப்படுகிறது.
    3. கிறிஸ்தவப் பிளவுக்கு இருசாராருமே பொறுப்பு என்பது வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது (எண். 3).

- 1974இல் தென்னிந்திய திருச்சபைகள் ஒன்றிணைந்தன. சுருக்கமாக, இவ்விதித் தொகுப்பு கிறிஸ்தவர்கள் ஒருவர் ஒருவர்மீது கொண்டுள்ள மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்கின்றது. ஒரு தொடர் சீர்திருத்தம் எல்லாத் திருச்சபைகளிலும் ஏற்படுவதற்கு அனைத்துத் திருச்சபைகளும் அழைக்கப்படுவது உணர்த்தப்படுகிறது.

### 10.3.1.3 பல்சமய உரையாடல்

**இரண்டாம் வத்திக்கான் சங்கப் படிப்பினை**

**இலங்கைச் சூழமைவில் சமயங்கள்**

- இலங்கை ஏறக்குறைய 65,610 ச.கி.மீ. பரப்பளவுள்ள நாடு. இங்கு வாழும் இருபத்தொரு மில்லியன் மக்கள் தொகையில் 69.1% பௌத்தர்கள், 7.6% இஸ்லாமியர்கள், 7.1% இந்துக்கள், 6.2% கிறிஸ்தவர்கள், 10% அடையாளப்படாதவர்களாவார்கள்.
- இலங்கை சுதந்திரம் பெற்றபின் இன்றுவரை நிகழ்ந்துள்ள இயற்கை அனர்த்தங்கள், இனக்கலவரங்கள், இடப்பெயர்வுகள் போன்ற நிகழ்வுகளின் பாதிப்புகள், பல்பரிமாண இழப்புக்கள் மத்தியிலும் அடித்தட்டு மக்களின் வாழ்வியலில் அவரவர் சமய நம்பிக்கைகள் நாளாந்தம் வாழ்விக்கப்பட்டு வருகின்றன.
- குறிப்பாக, இன்றைய யதார்த்த சூழமைவில் நம் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் பல் பரிமாணத்தைப் பெற்றுவருகின்றன. ஆயினும் ஏதோ ஒருவித இறை நம்பிக்கை இப் பல்சமய மக்களையும் ஆட்கொண்டுள்ளது என்பது மட்டும் உண்மையாகும்.
- இம் மக்களிடம் காணப்படும், தேங்கியுள்ள இறை நம்பிக்கையை நாடிபிடித்து, அவர்கள் அடைய முயலும் இயல்பு வாழ்வுக்கு, அவர்கள் தொலைவில் காணும் நிறைவாழ்வுக்கு அவர்களுடன் பயணிக்க பல்சமயங்களின் இணக்கமும், இசைவும் இன்றியமையாததாகும்.
- சமயங்களின் அடிப்படை அனுபவ நோக்கு, அவரவர் சமய நம்பிக்கையின் ஒளியில் மக்கள் நிறைவாழ்வைப் பெற ஒன்றிப்பிலும், ஒருமைப்பாட்டிலும் அவர்களை வழிநடாத்துவதாகும். இந்நோக்கையிழந்த எந்த மதமும் மக்கள் மதமாகவோ, இன்றைய யதார்த்தத்திற்கு ஏற்ற மதமாகவோ இருக்க முடியாது. ஏனெனில் மதங்கள் தத்தம் இயல்புப் பார்வையையும், அடிப்படைப் பண்பையும் இழந்த பின்னர் அர்த்தமற்றவையாகின்றன.
- எனவே, நம் சூழமைவில் அமைப்புப் பெற்ற சமயங்களின் காழ்ப்புணர்வும், அவற்றின் மேலாண்மையும், ஆதிக்கத் தன்மையும், குறுகிய பார்வையும், சுயநலவிருப்புக்களும், இன்றைய யதார்த்தத்தில் சமயங்களில் கைவிடப்பட வேண்டியவையாகும்.
- இரண்டாம் வத்திக்கான் சங்கம், ஆசிய ஆயர்கள் பேரவை ஆகியவற்றின் படிப்பினைகளின் அடிப்படையில் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கு, பல்சமய நல்லிணக்க உறவின் அவசியத்தைக் கற்று அறிவோம்.

**திருச்சபையின் வரலாற்றில்....**

- திருச்சபையின் வரலாற்றில் தொடக்கத் திருச்சபை கிறிஸ்துவுக்குச் சாட்சியம் பகர்வதையே நோக்காகக் கொண்டிருந்தது. கிறிஸ்தவம் உரோமைப் பேரரசின் மதமான போது, கொன்சாந்தின் அரசனால் திருச்சபை நிறுவனமயமாக்கப்பட்டுத், திருச்சபையின் நற்செய்திப்பணி குறுகிய நோக்குடன் முன்னெடுக்கப்பட்டது.
- திருச்சபைக்குள்ளேயே மீட்பு உண்டு என்பது திருச்சபையின் கருத்தாக்கமாயிற்று. ஆனாலும், திருச்சபையின் தந்தையர்கள், குறிப்பாக ஜஸ்ரின், ஜெரோம், அகஸ்டின் போன்றவர்கள் பிற சமயங்கள் பற்றி நேர்மறைக் கண்ணோட்டம் கொண்டிருந்தார்கள்.
- இருநூறு ஆண்டுகாலச் சிலுவைப் போரினாலும், கிறிஸ்தவம் அரசசமயமாக்கப்பட்டதாலும், திருச்சபையின் பல்சமய உறவு நலிவுற்றது. ஆயினும் கூசாவின் நிக்கலஸ் போன்றவர்கள் இஸ்லாமிய மதத்தவருடன் உறவு கொண்டனர்.
- காலனித்துவ ஆதிக்கம் வளர்ந்த போது திருச்சபை ஐரோப்பாவை மையங்கொண்ட ஓரியக்கமாக மாறியது. சமய சீர்திருத்த காலங்களில் திருச்சபை தன்னைப் பாதுகாக்கும், உறுதிப்படுத்தும் நோக்குடன் இயேசுவை அறியாதவர்கள் எவ்விதம் மீட்புப் பெறுவார்கள் என்பதை விளக்க முனைந்தது.
- திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் எல்லா மதங்களும் சமம் என்ற கொள்கையைக் கண்டனம் செய்தார். இந்நீண்ட வரலாற்றுப் பயணத்தில், 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகள் பிறமதங்கள் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டத்திலும், அவற்றுடனான உறவிலும் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

**2ஆம் வத்திக்கான் சங்கப் படிப்பினைகள்**

- தூய ஆவியின் தூண்டலைப் பெற்ற சங்கத்தின் 'பல்சமய உறவு' பற்றிய படிப்பினைகள் சங்க ஏட்டில் பின்வருவனற்றில் காணப்படுகின்றன.

  1. *'திருச்சபை'* என்ற கோட்பாட்டு விளக்கம்,
  2. *'திருச்சபையின் நற்செய்திப்பணி'* பற்றிய விதித்தொகுப்பு,
  3. *'கிறிஸ்தவமல்லாத மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு'* என்ற விதித்தொகுப்பு,
  4. *'இன்றைய உலகில் திருச்சபை'* பற்றிய கொள்கை விளக்கம் ஆகியவற்றில் சங்கத்தின் படிப்பினைகளைக் குறிப்பாகக் காணலாம்.

**1. *'திருச்சபை'* என்னும் கோட்பாட்டு விளக்கத்தில் பின்வரும் படிப்பினைகளைக் காணலாம்:**

- "நற்செய்தியை இன்னும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் கடவுளின் மக்களோடு பல்வேறு முறைகளில் தொடர்பு கொண்டவர்களே...." எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.
- "படைத்தவரை ஏற்றுக்கொள்ளும் மக்களையும் நிறைவாழ்வுத் திட்டம் உள்ளடக்கி நிற்கிறது... ஏனெனில் அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே" (திப. 17:25-28). மீட்பராகிய அவர் எல்லா மனிதரும் மீட்புப் பெறவேண்டுமென விரும்புகிறார் (1 திமொ.2:4)" எனக் கூறப்படுகின்றது.
- "மனச்சான்றின் குரலில் கடவுளின் திருவுளத்தை அறிந்து ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் நிலைவாழ்வைப் பெறுவர்" என்ற நம்பிக்கை வெளிப்படுகிறது (எண். 16).

**2. *“திருச்சபையின் நற்செய்திப் பணி’”* எனும் விதித்தொகுப்பில் பின்வரும் கருத்துக்களைக் காணலாம்:**

1. “அந்தந்தப் பண்பாட்டின் மனப்பாங்கிற்கும், இயல்பிற்கும் தக்கமுறையில் கிறிஸ்தவ வாழ்வு தழுவியமையும்.
2. “தனிமரபுகளும் அவற்றோடு கூட அந்தந்த மக்களினங்களின் தனிப் பண்பியல்புகளும் நற்செய்தியின் ஒளியில் தெளிவுபெற்று பொது ஒற்றுமையில் ஏற்கப்பெறும்.”
3. இவ்வாறு, பண்பாட்டுக் கூறுகள் ஏற்கப்பட்டு ஒற்றுமையில் வேற்றுமை பேணப்பட வேண்டும் என்பதற்குச் சங்கம் முக்கியத்துவம் அளிக்கின்றது (எண். 2).
4. மேலும், ”நற்செய்திப்பணியாளர்கள் மக்களின் வரலாறு, சமுதாய அமைப்புக்கள், பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை இன்னும் தெளிவாக அறிந்துகொள்வர்; அம்மக்கள் கடவுள், உலகம், மற்றும் மனிதர் பற்றித் தங்கள் தூய மரபுகளின் அடிப்படையில் உருவாகியுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும், மற்றும் அவர்களது அறநெறி அமைப்பையும், சமய விதிமுறைகளையும் நற்செய்திப்பணியாளர்கள் ஆழமாகத் தெரிந்து கொள்வர்...” (எண்.26).
5. இதில் கிறிஸ்தவத்தைச் சாராதவர்களிடம் காணப்படுகின்ற பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள், மரபுகள், இறையியல் பார்வைகள், அடிப்படைகள் முதலியவற்றில் வெளிப்படும் உண்மையும் உயர்வும் அழகும் வாய்ந்த அனைத்தையும் நேர்மையுடன் மதித்துப் போற்றி நல்லனவற்றை ஏற்கிற ஒரு வளர்ந்த மனநிலை கிறிஸ்தவர்களிடம் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

**3. *‘கிறிஸ்தவமல்லாத மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு’* பற்றிய விதித்தொகுப்பில்,**

- மீட்புப் பணியின் நிறைவை நோக்கிய பயணம் செய்யும் திருச்சபை, பல்சமய உறவு உரையாடல், பகிர்வு வாழ்வுப் பாங்கை வளர்த்து, ஒரு மக்கள் இயக்கமாகச் செயற்பட வேண்டிய முனைப்புக்குத் தூண்டலளிக்கின்றது.
- மேலும், சங்க ஏட்டில் விரவிக் கிடக்கும் சங்கத்தின் மையச் செய்திக்கு இவ்வறிக்கை தொடர்பை ஏற்படுத்துகிறது (*திருச்சபை:* எண்கள் 16,17,27; *இறைவெளிப்பாடு*: எண்கள் 14,16,17; *இன்றைய உலகில் திருச்சபை:* எண்கள் 2,4,7,21-24,26,28,36,38).

**4. *‘இன்றைய உலகில் திருச்சபை’* எனும் மேய்ப்புப் பணிக் கொள்கை விளக்கம் பின்வருவனவற்றின் அடிப்படையில் பல்சமய உரையாடலை ஊக்குவிக்கின்றது:**

- மனிதர் வாழும் உலகத்தை அதன் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு நிலைகளோடு இணைத்து ஆய்கின்றது.
- அத்தகைய ஆய்வுக்கு நற்செய்தியும் மனித அனுபவமும் தேவை என்கிறது (எண். 46).
- உலகைப் புதுப்பிக்கும் ஆவியின் ஆற்றலால் இயக்கப்படும் நாம் (எண்கள். 4,11,22), காலத்தின் குறிகளைத் துழாவி அறிந்து, நற்செய்தி மற்றும் மானிட அனுபவ ஒளியில் அவற்றைப் புரிந்து செயற்பட அழைக்கப்படுகிறோம் என விளக்குகின்றது.
- அனைத்து மனிதரும் சமம் என்னும் உண்மையையும், மனித வரலாறு தொடர்ந்து நிகழும் ஒரு பயணம் என்னும் உண்மையையும் சுட்டிக்காட்டப்படுகிறது.
- பண்பாடுகளின் உள்ளீடுகளான சமயங்கள் வாழ்விக்கப்படுவதற்குப் பண்பாடுகள் மதிக்கப்பட்டு, பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
- மேலும், “காப்பாற்றப்பட வேண்டியவர்கள் மனித ஆள்கள், புதுப்பிக்கப்பட வேண்டியது மனித சமுதாயம்... ஏனெனில் அனைத்துக்கும் மையமாக இருப்பவர்கள் மனிதரே ஆவர்” (எண் 3) என்ற படிப்பினையால் கிறிஸ்தவ சமூகத்தை, தலத்திருச்சபையை மக்களின் வாழ்வியலுக்குள் இட்டுச் செல்கிறது.
- மக்கள் வாழ்வியலில் சமய நல்லிணக்க உறவால் மக்களின் நிறைவாழ்வுக்கான வழிகளை உரையாடித் தேடியடைய அழைக்கின்றது.

**சுருக்கமாக, பல்சமய உறவுக்கான வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகள் பின்வருவனவாகும்:**

(அ) ஒவ்வொருவரதும் சமய சுதந்திரம் மதிக்கப்பட வேண்டியது. அதாவது, அவரவர் சமய நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதில் அவரவர்களுடைய மனச்சாட்சி மதிக்கப்படுகின்றது.

(ஆ) ஆயினும், கிறிஸ்துவைப் பிறருக்கு அறியப்படுத்துவதும், கிறிஸ்துவில் கிறிஸ்தவர்கள் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை, நம்பிக்கையை, வாழ்வைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதும் நம் கடமையாகிறது.

(இ) பிற சமயங்கள் மீது நாம் கொண்டுள்ள மதிப்பு, உரையாடல், பண்பாட்டைத் திருச்சபையில் உருவாக்கியுள்ளது.

(ஈ) பிற சமயங்களில் காணப்படும் அருள் வரங்களைக் கண்டு கொள்வதும், அவற்றைப் பாதுகாத்து வளர்ப்பதும் தன் பணியாகக் கொள்கிறது.

(உ) மனிதகுல ஒன்றிப்பையும், ஒருமைப்பாட்டையும் நோக்கி யாவரும் செய்யும் இப்பயணத்தை, தூய ஆவியானவர் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறார். எனவே, இறைவனின் அகில உலக மீட்பின் திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு திறந்த மனத்துடன் ஆன்மீகத் திருயாத்திரையில் ஈடுபட அழைக்கப்படுகின்றோம். சுருங்கக்கூறின் இறை நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒரே ஆவியால் இணைக்கப்பட்டவர்களாக ஒன்றிப்பின் அனுபவம் பெறுகின்றோம்.

**ஆசிய ஆயர்கள் மன்றப் படிப்பினை**

ஆசிய ஆயர்கள் மன்றத்தின் பல்சமய உரையாடல் பற்றிய படிப்பினைகளைச் சுருக்கமாக *'ஆசியத் திருச்சபை'* எனும் ஆசிய ஆயர்மன்ற நிறைவு மறைத்தூது மடலில் காணலாம்.

- இறைவெளிப்பாடு நடந்த நிலமான ஆசியாவில் இறைவனின் தொடர் பிரசன்னமும், செயற்பாடும் பல்வேறு வழிகளில் தொடர்கிறது.
- பௌத்த, இந்து, இஸ்லாமிய ஆன்மீக மரபுகளில் காணப்படும் உண்மையானதையும், புனிதமானதையும், எல்லா மனிதர்களையும் ஒளிர்விக்கின்ற ஒளி அந்த ஒரே உண்மையின் ஒளி என்பதனால், திருச்சபை அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும்போது, நற்செய்தி அறிவிப்புக் கடமை குறைபட்டதில்லை.
- பிற மதத்தவர் பற்றிய திறந்த மனம், அவர்களுக்குக் காது கொடுத்துக் கேட்கும் மனம், அவர்களுடைய வேறுபாடுகளுக்கிடையேயும் அவர்களை மதித்து, புரிந்து கொள்ளும் குணம் உள்ள சூழலில் பல்சமய உரையாடல் உறவுகள் முன்னேற்றமடையும்.
- இந்த உரையாடல், உறவு ஒத்துழைப்பு, இசைவு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடு:**

1. தம் சூழலில் பிறசமயத்தவருடன் தமக்கிருக்கும் அனுபவங்களையும், அவர்களில் காணப்படும் நற்பண்புகளையும் கலந்துரையாடுவார்.
2. தம் சூழலில் பிறசமயத்தவருடன் நல்லிணக்கத்துடன் வாழத் தடையாகவும், சவாலாகவும் உள்ளவற்றைப் பட்டியலிடுவார்.
3. பிறசமயத்தவருடன் ஒத்துழைக்க இருக்கும் வாய்ப்புக்களை எடுத்துக்கூறுவார்.
4. பல்சமய உரையாடலுக்கான தேவைகளைக் கோவைப்படுத்துவார்.
5. கிறிஸ்தவ சபைகளோடு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வழிமுறைகளைக் கலந்துரையாடி, அறிவிப்பார்.
6. கிறிஸ்தவ ஒன்றிப்புக்குத் தம் சூழலில் காணப்படும் தடைகள், சவால்களைப் பட்டியலிடுவார்.
7. கிறிஸ்தவ ஒன்றிப்புக்குப் பங்களிப்புச் செய்தவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் பங்களிப்பைப் பற்றிக் கலந்துரையாடுவார்.

**உசாத்துணை நூல்கள்:**


- இரண்டாம் அருள் சின்னப்பர், **ஆசியத் திருச்சபை**, ஆயர்மன்ற நிறைவு மறைத்தூது மடல், மதுரை ஆனந்த் (தமிழாக்கம்), நம்வாழ்வு வெளியீடு, சென்னை, 2000.
- ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி., **மனித சமூக மேம்பாடும், கிறிஸ்தவ பங்களிப்பும்,** அமதி வெளியீடு, கொழும்பு. 2010, பப. 40-54.
- ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி., **ஆசியத் திருச்சபையும் நற்செய்திப் பணியும்,** நம்வாழ்வு வெளியீடு, சென்னை, 2014.
- வ. பவுல் லியோன் (பதி.), "**கிறிஸ்தவ ஒன்றிப்பு**" விதித்தொகுப்பு, *இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்,*தூய பவுல் இறையில் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 2001.
- Francine Cardman, "**One Treasure Only:** Vatican II and The Ecumenical nature of the Church,"*Vatican II: **The Unfinished agenda**, A Look to the Future,* Lucien Richard, OMI, (ed.), Paulist Press, New York, 1987, pp.174-189.